# Sangathamil சங்கத்தமிழ்

குரல் – 130 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 அக்டோபர் 2026




**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல்
மற்றும் இலவச ஆலோசனைகளும்
வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
282 Consumer Road, Unit 10
North York, ON M2J 1P8
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட
என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

JaaVis TECHNOLOGY
WEBSITE DEVELOPMENT SERVICES
OUR SERVICES
- WEBSITE DESIGNING
- MOBILE APP DEVELOPMENT
- TROUBLESHOOTING & MAINTENANCE
- DIGITAL MARKETING
- WEB ANALYZING AND REPORTING
Build Your Future with Us
CONTACT US
+1 (516) 693-4346

RIGHT AT HOME REALTY INC.
JEY RASATHURAI
MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca


## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyarariviththal@gmail.com
Thuyarpakirvu.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**அனைத்துலகத் தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது போராட்டத்திற்கு தோள் கொடுத்து உதவினால் நாம் இந்தப் போரில் வெற்றி கொள்வது உறுதி. எமது தாயகம் மீட்கப்படுவதும் உறுதி. நாம் தன்னாட்சி பெறுவதும் உறுதி.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.com**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# உயிர்ப்பூட்டியவர்கள்

# லெப். நித்திலா, கப்டன் டோரா, கப்டன் சுந்தரி, கப்டன் கஸ்தூரி, மேஜர் பாராதி

## லெப். நித்திலா


லெப்.நித்திலா

உயர்தர வகுப்புப் படிக்கும் போது இயக்கத்துடனான தொடர்பை ஏற் படுத்திக் கொண்டவள் நித்திலா. பாடசாலைக் கல்வியில் கவனம் செல்லவில்லை. தேசவிடுதலை இயக்கம் பற்றி அறிந்து கொள் வதற்கும், விவாதிப்பதற்கும், தலைமறைவாக இயங்கி வரும் போராளிகளுடன் தொடர்பு கொள் வதற்குமாக படிப்பதற் குரிய நேரத் தையும் சந்தர்ப்பத்தையும் பயன் படுத்திக்கொண்டாள். இவளது கடின உழைப்பால், 1985 தை மாதம் நெல்லி யடிப் பிரதேசத்தில் தேச விடுதலைக்கு ஆதரவாகப் பெண்களை அணிதிரட்டுவதற்கும் அவர்களின் சமூகப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கும் பொறுப்பாக விடப்பட்டாள். 1985 ஆவணி மாதத் தில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப் பறவைகள் இதழின் வெளியீட்டுக் குழுவில் ஒருத்தியானாள்.

1986 இல் பௌதிக விஞ்ஞானப் பட்டப்படிப்புக்காகப் பல்கலைக் கழக அனுமதி கிடைத்தது. தேச விடுதலைக்கான கடமையோடு படிப்பையும் தொடர்ந்தாள்.




அடிக்கடி லீவு போட்டுவிட்டுத் தனது பிரதேசங்களுக்குச் சென்று விடுவாள். மழலைகளின் எதிர்காலம் குறித்து அதிக அக்கறை கொண்டிருந்தாள். இயக்கத்தின் வேலைத்திட்டங்களான இலவசப் பாலர் பாடசாலைகள், தும்பு, பன்னக் கைத்தொழிகள் நிலையங்கள் முதலியவற்றை நிறுவினாள். இவற்றுடன் இணைந்த மாதர் சங்கங்கள், மகளிர் நூல் நிலையங்கள் என் பனவற்றை நிறுவி, மக்களின் குறைகளைக் களைந்ததோடு, இயக்கத்துக்கும் மக்களுக்குமிடையில் மிக நெருக்கத்தை ஏற் படுத்தினாள்.

1987 வைகாசியில் வடமராட்சியில் ஒபரேஷன் லிபரேஷன் நட வடிக்கையின்போது. களத்தில் நிற்கும் போராளிகளுக்கு சுதந் திரப் பறவைகள் உணவு சமைத்து அனுப்பிக் கொண்டிருந் தனர். எமது பக்கம் இழப்புகள் அதிகரிக்க, எதிரி முன்னேறத் தொடங்கினான். பாதுகாப்பற்ற நிலையில் பின்கள வேலையில் நின்றவர்கள் தலைமறைவாகின்றனர். எப்படியோ உயிர் தப்பி விட்டபோதிலும் நித்திலா தன்னுடனிருந்த தோழிகள் சிலரைப் பிரிந்து விட்டாள். எஞ்சியிருந்த நித்திலாவும் மற்றைய இரு வரும் சாதாரணமான குடும்பப் பெண்களைப் போல் வேடம் தரித்து, இரண்டு பெரிய தடைமுகாம்களைக் கடந்து, கால் நடை யாகவே தென்மராட்சியை அடைந்தனர்.

**எமது பக்கம் இழப்புகள் அதிகரிக்க. எதிரி முன்னேறத் தொடங்கினான். பாதுகாப்பற்ற நிலையில் பின்கள வேலையில் நின்றவர்கள் தலைமறை–வாகின்றனர். எப்படியோ உயிர் தப்பி விட்டபோதிலும் நித்திலா தன்னு–டனிருந்த தோழிகள் சிலரைப் பிரிந்து விட்டாள். எஞ்சியிருந்த நித்திலாவும் மற்றைய இருவரும் சாதாரணமான குடும்பப் பெண்களைப் போல் வேடம் தரித்து, இரண்டு பெரிய தடைமுகாம்களைக் கடந்து, கால்நடையாகவே தென்மராட்சியை அடைந்தனர்.**

1987 இல் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் இரண்டா வது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்த நித்திலா தன் படிப்பை நிறுத்தத் தீர்மானித்தபோது, இயக்கம் இயலுமானவரை படிப் பைத் தொடருமாறு சொன்னது. எனவே இவள் படித்துக் கொண்டே யாழ். நகரப் பகுதியில் சமூக அரசியல் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டாள். இயக்கத்தில் இருந்தவாறே படிப்பைத் தொடரும் ஏனைய தோழிகளுக்கு வேண்டிய சகல தேவை களையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.

**வசதியற்ற, தொழில் வாய்ப்பற்ற பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக பன்னவேலை, தையல் வேலை, மனையியல், உணவு பதனிடுதல், பாதுகாத்தல் போன்ற வகுப்புகளைப் பெண்களிடைய நடாத்தி சிறு கைத்தொழில் நிலையங்களையும் உருவாக்கப் பாடுபட்டாள்.**

லெப். கேணல் திலீபன் உண்ணாநோன்பு இருந்த சமயம் மேற் கொள்ளப்பட்ட பாத யாத்திரையில் முக்கிய பங்கு வகித்தாள். 26.06.1989 அன்று பன்றிக்கெய்த குளத்தில் இந்திய இராணு வம் பதுங்கியிருந்து தாக்கியத்தில் பதின்மூன்று தோழர் களுடன் லெப். நித்திலா வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள்.

## கப்டன் டோரா


கப்டன் டோரா

இயக்கங்கள் 1982, 1983 களில் இரகசியமாக வெளியிடும் துண்டுப் பிரசுரங்களிலெல்லாம் வெளிநாட்டு கெரில்லா இயக் கங்களின் பெண்கள் அமைப் புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டன. இதைக் கேள்வியுற்று, நாமும் நமது கெரில்லா இயக்கங்க ளுடன் இணைந்து போராட வேண்டும் என்ற ஆவலில் அவர் களைத் தேடி அலைந்தவர்களில் டோராவும் ஒருவர்.

துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு வருபவர்களுடன் இர கசியமாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டபோது, முதலில் வெளியிலிருந்து உதவிகள் செய்யுமாறும், பின்னர் பெண் பிள்ளைகளை எடுக்கும் போது எடுக்கலாம் எனவும் கூறப் பட்டுது. டோராவும் இரகசியமாக உதவிகள் செய்வதில் ஈடுபட் டிருந்தாள்.

பாடசாலைப் படிப்பு அரைகுறையானது. புரட்சி அறிவு புகுந்த கொண்டது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பொய் சொல்ல வேண்டிவந்தது. புலிகளின் இரகசியமான பிரச்சார வகுப்பு, தையல் வகுப்பு என்று கூறப்பட்டது. ஆயுதம் பற்றிய அறிவைப் பெறும் வகுப்பு சமையல் கலை பயிலும் வகுப்பு எனக் கூறப் பட்டது.

வீட்டுக்கு எல்லாம் தெரிய வந்ததும் அப்பா கட்டுப்பாடுகளை விதித்தார். தேசத்துகாகப் போராடும் உரிமையைப் பெறுவதற் காக டோரா வீட்டுக்குள் போராடினாள், வெற்றியும் கண்டாள். கடைசியில் வெளிப்படையாகவே தனது பணிகளைச் செய்யத் தொடங்கினாள்.

லெப். நித்திலா, கப்டன் டோரா உட்படப் பல இளம் பெண்கள், ஏனைய பெண்கள் மத்தியில் விடுதலைக் கருத்தை விதைத் தார்கள். புலிகளின் பிரச்சார ஏடுகள் கைமாறின. பெண்களுக் கான இரகசியக் கருத்தரங்குகள் கிராமங்களின் மூலை முடக் கெல்லாம் நடாத்தப்பட்டன. சுதந்திரப் பறவைகள் இதழின் உருவாக்கத்திலும் டோரா பெரும் பங்காற்றினாள். வசதியற்ற. தொழில் வாய்ப்பற்ற பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற் படுத்துவதற்காக பன்னவேலை, தையல் வேலை, மனை யியல், உணவு பதனிடுதல், பாதுகாத்தல் போன்ற வகுப் புகளைப் பெண்களிடையே நடாத்தி சிறு கைத்தொழில் நிலை யங்களையும் உருவாக்கப் பாடுபட்டாள்.




சுயமாகவே பல வேலைகளைத் திட்டமிட்டு ஆர்வத்தோடு செயற்படுத்தி வந்த டோரா நெல்லியடி, கரவெட்டி, கரணவாய் போன்ற பிரதேசங்களில் மகளிர் அணிப் பொறுப்பாளராக நிய மிக்கப்பட்டு 1985-1986இல் அப்பொறுப்பிலிருந்து கடமை யாற்றினாள்.

பின்னர் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் இரண் டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்து இந்திய, சிறீலங்கா இராணுவங்களுடனான சண்டைகளில் கலந்து கொண்டாள். இந்திய இராணுவத்தை வெளியேற்றி சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததும் அரசியற் பிரிவில் பணி யாற்றுமாறு அனுப்பப்பட்ட டோரா சுதந்திரப் பறவைகள் இத ழின் ஆசிரியராகப் பணியாற்றினார். சுதந்திரப் பறவை 15 இதழை வெளிக் கொணர்வதில் டோராவின் பங்கு முக்கிய மானது.

1990-11-23 அன்று மாங்குளம் இராணுவமுகாம் தகர்ப்பில் பங்கு கொண்ட டோரா வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.

## கப்டன் சுந்தரி


கப்டன் சுந்தரி

தனது கைகளில் ஆயுதத்தைத் தூக்குவதற்கு முன்பிருந்தே ஒரு சமூகப் பெண்ணாக இருந்து கொண்டு சுந்தரி சுதந்திரப் பறவை களுக்குத் தோள் கொடுக்கத் தொடங்கினாள். வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் கொண்ட இவள் சுதந்திரப் பறவைகள் சஞ் சிகைக்கு ஆக்கங்கள் எழுதவதில் ஈடுபட்டாள், ஆயுதம் ஏந்தி




பெண்ணாக ஒவ்வொரு பெண்ணும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் எனற் நோக்கில், ஆயுதம் தரித்து பயிற்சிப் பாசறைக்குப் புறப்படும்பொழுது தன் மன உணர்வுகளை ஒரு கடித வடிவில் எழுதியிருந்தார். இக்கடிதம் 1987 வைகாசி - ஆனி சுதந்திரப் பறவைகளில் இடம் பெற்றது. இக்கடிதம் இளம் பெண்கள் மத்தியில், வேண்டிய காலத்தில், பொருத்தமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.





01.06.1989 இல் வெளிவந்த சுதந்திரப் பறவைகளில் இவள் எழுதிய **களத்திலிருந்து ஒரு கடிதம்** இலகுநடையில் தெளிந்த கருத்துடன் சுவை குன்றாமல் அமைந்திருந்தது. அக்கடிதத்தில் தன் தோழியை நோக்கி அவள் கேட்டுள்ள,

வீட்டின் சுவர்களுடன் உன் உணர்வுகளை முட்டி மோதவிட்டு, வெளியேற முடியாமல் தவிக்கின்றாய். எவ்வளவு காலந்தான் உன் உணர்வுகளைத் திரைபோட்டு மறைக்கப் போகின்றாய்.!

விடியலுக்காக சிறையை உடைக்கும் வலிமை எனக்கு ஏன் இன்னமும் வரவில்லை!

போன்ற கேள்விகள் உண்மையில் இளம் பெண்கள் சமூதாயத்தின் மீது அவள் தொடுத்த கேள்விக் கணைகளாகும். ஆனால் அக்கோள்விக் கணைகளைக் கூட எழுத்தாற்றலூடாக பசுமரத்தில் ஆணி ஏற்றுவது போல் பதிய வைத்துள்ளாள்.

எந்த இலட்சியக் கனவோடு போராட்டத்தில் தனது உயிரை அர்ப்பணித்து கொண்டாளோ, அந்தக் கனவு அவளின் எழுத்துகள் யாவற்றிலும் ஆழ வேரோடி நிற்பதைக் காணமுடியும்.

பெண் பிள்ளை எனும் பாதிப்பு உங்களைத் தாக்காது என்றே நம்புகின்றேன். நாமும் ஆண் போராளிகளுடன் சரிநிகர் நின்றே போராடி வருகின்றோம் - இதற்கு எம் சகோதரிகளின் ஆயுதம் ஏந்திய போராட்டம் எடுத்துக்காட்டாக அமைகின்றது. நாங்கள் உங்கள் மகள் மட்டுமல்ல, இந்த இனத்தின் மகள், அதனால் கவலைகளுக்கு இடம் கொடுக்காது நீங்கள் இருக்க வேண்டும்! என்பது போன்ற கருத்துகளைத் தனது எழுத்தின் மூலம் வெளிப்படுத்தினாள். இவ்வாறு தனது எழுத்தாற்றல் மூலம் இளம் சமூதாயத்துடன் நெருங்கிநின்ற சுந்தரி விதையாகி வீழந்த போது, தமிழ் கவிஞன் ஒருவனால் பின்வருமாறு பாடப்பெறுகிறாள்.

தமிழீழத்தின் தாகம் சுமந்து
தாவணி போடும் கனவுகள் துறந்து
போர்க்களம் அடிய பெண்புலி ஒன்று
களத்திலே மடிந்து காவியமானாள்.
வேலிகள் சுற்றிய எல்லைகள் மீறி
வேங்கைகள் அணியில் ஏறிய நிலவு.
நிலவாய் இருந்தவள் நெருப்பாய் எழுந்தாள்.
நெருப்பாய் நின்று நெருப்பிலே எரிந்தாள்.
கப்டன் சுந்தரி கண்ணுக்குள் நிற்கிறாள்.
மேடையில் நின்று முழங்கிய கோலம்
ஆயுதம் ஏந்திய அக்கினிக் கோலம்.
எல்லாம் எல்லாம் எதிரே தெரிகிறது.

## கப்டன் கஸ்தூரி




மீண்டும் வாசிக்கச் சொல்கிறார், எல்லாப் போராளிகளும் ஏக்கத்தோடு திலீபன் அண்ணாவைப் பார்க்கச் செல்கிறார்கள், அத்தனை மக்களும் கண்ணீர் மல்க விம்முகிறார்கள், இது கஸ்தூரியின் கவிதைக்கே உரித்தான சக்தி. இந்தக் கவிதைதான் கஸ்தூரியை எமக்கு இனம் காட்டியது.



**எந்த இலட்சியக் கனவோடு போராட்டத்தில் தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்டாளோ; அந்தக் கனவு அவளின் எழுத்துக்கள் யாவற்றிலும் ஆழ வேரோடி நிற்பதைக் காண முடியும்.**

1987 இல் ஆயுதப் பயிற்சி பெற்றுவிட்டு, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான போர்க்களத்தில் நின்ற வேளை 17.01.1989 இல் மாமடு என்னும் தமிழ்க் கிராமத்தில் நடாத்தப்பட்ட சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான தாக்குதல் சம்பவம் ஒன்றைத் தாயகம் மீட்புக்காக என்ற தலைப்பில் கவிதை வடிவில் எழுதினாள். 1989 இன் தொடக்கத்திலிருந்து முடிவுவரை சுதந்திரப் பறவைகள் ஆக்கக் குழுவில் இவள் அங்கம் வகித்தாள். 1989 இல் கல்லச்சுப் பதிப்பில் வெளியான சுதந்திரப் பறவைகள் சஞ்சிகைகள் அனைத்தையும் வெளிக் கொண்டு வருவதற்காக ஆக்கங்கள் பலவற்றை எழுதுவதிலிருந்து, கல்லச்சு வேலைகளைச் செய்து சஞ்சிகைகளை வெளியிடவதுவரை காட்டுக்குள்ளிருந்து கடும் பணியாற்றினாள்.

நல்லூர் வீதி 1987 புரட்டாசி 18 ஆம் நாள் பார்க்கும் இடமெல்லாம் மனித் தலைகள் தான், மேடையில் திலீ பன் அண்னா, திலீப்ன அண்ணா வின் உண்ணாவிரதத்தை ஆதரித்து மேடையில் பேச்சுக்கள், கவிதைகள் இடம் பெறுகின்றன. ஒரு பெண் கவிக்குரல் உண்மையை உரைக்கின்றது.


கப்டன் கஸ்தூரி

உள்ளத்தில் இருந்து அது வருகின்றது, திலீபன் அண்ணா

கஸ்தூரி புலிகளின் குரல் வானொலியின் தொடர்நாடகமான **சிந்தாமணி**யில் ஆச்சியாகக் குரல் கொடுத்தாள்.கலை, பண்பாட்டுப் பிரிவின் தெருக்கூத்தில் போராளியாகத் தன்னை பாத்திரமாக்கினாள். **களத்தில் காத்தான்** சிந்து நடைக் கூத்தில் இந்தியச் சிப்பாயாக வந்து எமத மக்கள் இந்திய இராணுவத்தால் பட்ட அவலங்களைத் தெளிவு படுத்தினாள். எந்தப் பாத்திரத்




www.sangathamil.com

**இவள் தன் குடும்பத்துகு ஒரேயொரு செல்லப்பிள்ளை. தங்கள் உயிரிலும் மேலாகப் பெற்றோரால் நேசிக்கப்பட்டவள். வறுமையின் கோரப்பிடி அவளது குடும்பத்தைப் பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.**




தைக் கஸ்தூரிக்குக் கொடுத்தாலும் அந்தப் பாத்திரம் கஸ்தூரியினால் சிறப்புப் பெற்றுத்தான் ஆகவேண்டும். இது கஸ்தூரியின் திறமையின் வெளிப்பாடு, இன்று எம் மக்கள் இந்தப் பாத்திரங்களைப் பேசிக் கொள்கின்றார்கள். அந்தக் குரலை மீண்டும் கேட்கத் துடிக்கிறார்கள்.

அடிமை இருளிலும் அறியாமைக் குகைக்குள்ளேயும் அடைபட்டுக் கொண்டிருக்கும் வெண்களுக்கு விடுதலை வேண்டும். அடுப்படிக்குள்ளேயே இருந்து அடையாளம் தெரியாமல் போன பெண்களின் அவல நிலையை இந்தச் சமூகம் அறியவேண்டும். கணவனை இழந்த பெண்ணை நிழலாகத் தொடரும் வேதனைகளை இந்த உலகம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காய் **'தீக்குளிக்கோம், தீயிட்டெரிப்போம்'** என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்த மேடையேற்றிய அந்தத் திறமை அவளுக்கு மட்டும்தான் உண்டு.

இவள் சுதந்திரப் பறவைகள் இதழுக்காகப் பல கவிதைகளையும் சில கதைகளையும் எழுதியிருக்கின்றாள் நிர்ப்பந்தங்கள், மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள், அவர்களுக்குத் தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே, இடம் மாறியுள்ள துப்பாக்கிகளால், சின்னப் பூக்களுடன் சில பொழுதுகள் என்ற சிறுகதைகள் கஸ்தூரியால் எழுதப்பட்டு சுதந்திரப் பறவைகளில் வெளி வந்தவையாகும். கஸ்தூரியின் கவிதைகளில் அவை வெற்றுடல்கள் அல்ல வெடி மருந்துப் பொதிகள், அக்கினிக் குஞ்சுகள், கொழுந்துக் கூடைகள், மறைந்தவர்களே நீங்கள் மலடர்கள் அல்ல, இறப்பற்றோர் என்பவை குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றுள் இறப்பற்றோர் என்ற கவிதையை எழுதி மடிக்க முன்னரே 11.07.1991 அன்று ஆனையிறவு ஆகாய - கடல்வெறிச் சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

## மேஜர் பாரதி

இவள் தன் குடும்பத்துக்கு ஒரே யோரு செல்லப்பிள்ளை, தங்கள் உயிரிலும் மேலாகப் பெற்றோரால் நேசிக்கப்பட்டவள். வறுமையின் கோரப்பிடி அவளது குடும்பத்தைப் பாதித்தாலும் அது அவர்களது இதயத்தைப் பாதிக்கவில்லை.




1986 ஆம் ஆண்டு காலப் பகுதியிலே தனது பல்கலைக் கழகப் படிப்பை நிறுத்திப் புலிகளின் போராட்டப் பாதையில் பாரதி தன்னை இணைத்துக் கொண்டாள். 1987 ஆம் ஆண்டு மகளிர் படையணியின் இராண்டாவது பயிற்சி முகாமுக்காகப் பெண் போராளிகள் தெரிவு செய்யப்பட்டபோது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மன வேதனைப் பட்டாள். 'எல்லேரும் பயிற்சிக்குப் போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. நீங்கள் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்ய வேண்டும்' என்று லெப். கேணல் திலீபன் கூறியதற்கிணங்க, பாராதி தன் மனதைச் சமாதானப்



படுத்திக்கொண்டாள். மகளிர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து பெண்களைப் போராட்டத்துடன் இணைப்பதிலும், பெண்களது சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டாள். சுதந்திரப் பறவைகளின் ஒன்பதாவது இதழை பாரதி வெளியிட்டாள்.

இந்திய இராணுவத்தை இம் மண்ணிலிருந்து விரட்டியடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளையும் போல பாரதியின் துப்பாக்கியோடு சேர்ந்து அவளது வேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாராதி ஆற்றிய பணிகள் குறிப்பிடக் கூடியவை. இந்நேரத்தில் தான் இரண்டாம் ஈழப் போர் ஆரம்பித்தது. பாரதி களம் சென்றாள், இராணுவக் காவலரண்களை அவதானிப்பதற்காகச் சென்று கொண்டிருந்த வேளையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காலில் காயமடைந்தாள்.

மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் துணைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். எந்த வேலைகள் வந்தாலும் எழுதுவதை மட்டும் பாராதி நிறத்தவேயில்லை. பாரதியின் எழுத்துக்களில் சூரியக் குழந்தை, பூபதிக் கோள், சிதறிப் போன சிவப்பு வல்லரசு, ஐ.நா. சபையே, அன்பான அம்மா போன்ற விதைகள் குறிப்பிடத் தக்கவை.

1992 இல் மேஜர் பாரதி சீதன அய்வு செய்வதற்காக வன்னிக்குப் போயிருந்த நேரத்தில், தவறுதலாக சிறு நாவற்குளத்திலுள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் எல்லைக்குள் பிரவேசித்த போது நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

-களத்தில் இதழ் (18.10.1995).



# தமிழீழச் செய்திகள்



## ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பம்

15.09.2026

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் லெப். கேணல் தீலிபன் உண்ணாநோன்பை ஆரம்பித்த நேரம் காலை 9.45 மணியளவில் நினைவு வணக்க நிகழ்வுகள் ஆரம்ப மானது.



மூத்த போராளியும் , மாவீரர்களின் தந்தையுமான பஷீர் காக்கா பொதுச் சுடர் ஏறியதை தொடர்ந்து, நினைவேந்தலில் கலந்து கொண்டவர்கள் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.

அத்துடன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகார மின்றி உண்ணாநோன்பு இருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர்



லெப். கேணல் தீபம் திலீபனின் 39வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை (15) பல பகுதிகளில் நினைவுகூர்ந்தனர்.

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங் களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம் களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும். தெற்காசிய உடைகளைத் தேர்ந்தெடு

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.



ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகார மின்றி உண்ணாநோன்பு இருந்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்படாத நிலையில், 12 நாட்களின் பின்னர் செப்டெம்பர் 26ஆம் திகதி காலை 10.48 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.

## யாழ். மாநகர சபையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்!

15.09.2026

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாநோன்பு இருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39வது ஆண்டு நினைவேந்தல் நிகழ் வுகள் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ் மாநகர சபையின் மதாந்த அமர்வு ஆரம்பமாக முன்னர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவ படத் திற்கு சுடரேற்றி, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது





## யாழ். பல்கலைக்கழகத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தொடக்கம்

15.09.2026

தமிழீழ மக்களின் உரிமைக்காகவும், நீதிக்காகவும் தன் உயி ரையே உருக்கி ஈகத்தின் உச்சம் தொட்ட "ஈகைச்சுடர்" திலீபன் அண்ணனின் 39ஆம் ஆண்டு நினைவேந் தலின் முதலாம் நாள் நிகழ்வு எமது பல்கலைக்கழக வளாகத்தில் உணர்வுபூர் வமாக நினைவுகூரப்பட்டது.





மக்களின் விடுதலைக்காய் அஹிம்சை வழியில் அவர் ஏந்திய அந்தப் போராட்டச் சுடரை எமது இதயங்களில் என்றென்றும் ஏந்தி நிற்போம்!

அவர் வழியில், எமது தார்மீக வழியிலான உரிமைக் குரல் தொடர்ந்து ஒலிக்கும்.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்





**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# திருகோணமலையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்

15.09.2026

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை (15) திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் இடம்பெற்றது.



39 ஆவது ஆண்டு நினைவு நாளில் இதன்போது ஈகைச்சுடர்



லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டதுடன், ஈகைச் சுடரும் ஏற்றப்பட்டு அவரது நினைவு நினைவு கூரந்தனர்.

நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், காணாமல் போன உறவு களின் சங்கங்கள்,சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஈகத்தை நினைவுகூர்ந்தனர்.

தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் அரசியல் கோரிக் கைகளை முன்னிறுத்தி உண்ணாநோன்புப் போராட்டத்தில்



ஈடுபட்டு உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் முன்னெடுப்பு!

15.09.2026

தமிழ் மக்களின் உரிமைக்காக ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணாநோன் பிருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில் அமைந் துள்ள வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் தொடர்பகத்தில் இன்று (15) செவ்வாய்க் கிழமை உணர்வெழுச்சியுடன் ஆரப்பிக்கப்பட்டது.

அந்தவகையில், அகவணக்கம் செலுத்தப்பட்டதையடுத்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு பாரா ளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுடரேற்றி நினை வேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப் பினர் உறுப்பினர் மகாதேவா குணசிங்கராவினால் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

அதனையடுத்து, குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற் றிருந்தவர்களால் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உரு வப்படத்திற்கு மலர்தூவி உணர்வெழுச்சியுடன் வணக்கம் செலுத்தப்பட்டது.

மேலும், குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப் பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மகாதேவா குணசிங்க



ராசா, தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ், சமூகசெயற்பாட்டாளர் மணிவண்ணன் நிறோஜன், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**இன அழிவில் இருந்து எமது மக்களைப் பாதுகாத்து தேசிய சுதந்திரத்தை முன்னெடுப்பதாயின், எமது தாய்ப்பூமியை ஆக்கிரமித்திருக்கும் எதிரிப் படைகளை விரட்டியடிக்க வேண்டும். இந்தக் கைங்கரியமானது தீர்க்கமான, திட்டமிடப்பட்ட ஆயுதப் போராட்டத்திலும் எமது மக்களின் ஏகோபித்த பங்களிப்பிலும் தங்கியிருக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

www.thuyarpakirvu.com

# மட்டக்களப்பு மயிலத்தமடு – மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரை உரிமையினை வலியுறுத்தி தொடர் போராட்டம்!

15.09.2026

மட்டக்களப்பு மயிலத்தமடு - மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரை உரிமையினை வலியுறுத்தி சித்தாண்டி பிரதான வீதியில் நடத்திவரும் போராட்டத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இன்றைய நாள் (15) சித்தாண்டியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

சித்தாண்டி சந்திக்கு அருகில் முகாமிட்டு மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மயிலத்தமடு - மாதவனை பகுதியில் சட்டவிரோத பயிர்ச் செய்கையாளர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அத்துமீறிய செயற்பாடுகள் இதுவரை தடுத்து நிறுத்தப்படாத நிலையில் மேய்ச்சல் தரை காணிகள் இல்லாமல்போகும் நிலையில் கால்நடைகள் மீதும் தொடர்ச்சியாக தாக்குதல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்த நீதி கோரிய போராட்டம் தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளதோடு, 1095 நாளையொட்டி இந்த கவனயீர்ப்பு போராட்டம் பண்ணையாளர்களினால் நடத்தப்பட்டது.





இதன்போது “மகாவலியே வெளியேறு”, “எமது நிலம் எமக்கு வேண்டும்”, “கால்நடைகளின் நிலத்தை அபகரிக்காதே”, “கால்நடைகளின் மேய்ச்சல் நில அபகரிப்பினை தடுத்து நிறுத்து”, “தமிழருக்கு ஒரு சட்டம், சிங்களவருக்கு ஒரு சட்டமா? சட்டத்தினை சமமாக அமுல்படுத்து”, “ஜனாதிபதியின் வாக்குறுதியை நிறைவேற்றாதது ஏன்”, “மகாவலியே மௌனம் காப்பது ஏன்?”போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கால்நடை பண்ணையாளர்கள் தமது துயரங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட தமது வாடிகளை அத்துமீறிய குடியேற்றவாசிகள் எரித்து மேற்கொள்ளும் அடாவடித்தனங்களை குறிக்கும் வகையில் அமைக்கப்பட்ட குடிசையொன்றை எரித்து போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதேபோன்று தமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களை குறிக்கும் 1095 நாளைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்ட தீப்பந்தத்தினை எரித்து போராட்டத்தினை முன்னெடுத்ததுடன் ஒரு பண்ணையாளர் பாலை தலையில் ஊற்றி போராட்டத்தினை முன்னெடுத்தார்.

இதன்போது மயிலத்தமடு மற்றும் மாதவனை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் மூன்று ஆண்டுகளைக் கடந்து, 4ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள நிலையிலும், தங்களுக்கான நிரந்தரத் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை என பண்ணையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் ஜனாதிபதி மட்டக்களப்பிற்கு வருகை தந்த போது அளித்த வாக்குறுதிகள் மற்றும் உத்தரவுகள் இன்னும் அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 12, 13ஆம் திகதிகளில் மேய்ச்சல் நிலங்கள் சட்டவிரோதமாக உழவு செய்யப்பட்டுள்ளன. இதனால் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இல்லாமற்போயுள்ளதோடு, உணவின்றி மாடுகள் இறக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

பண்ணையாளர்களின் வாடிகளுக்குள் சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், அண்மையில் 10க்கும் மேற்பட்ட கால்நடைகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது குறித்து பொலிஸில் முறையிட்டும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்துகின்றனர்.

சட்டம் இரு வேறாகப் பிரயோகிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் அல்லது பண்ணையாளர்கள் சிறு தவறு செய்தாலும் வனவளத் திணைக்களம் மூலம் உடனடியாகக் கைது செய்யப்படும் நிலையில், மேய்ச்சல் நிலங்களைச் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என வேதனை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் வருகைக்கு முன்னதாக, இன்னும் 5 நாட்களுக்குள் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி, பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கத் தவறினால், தங்களது அறவழிப் போராட்டத்தைச் “சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டமாக” மாற்றப்போவதாகப் பண்ணையாளர்கள் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கால்நடைகளும் வாழ்வாதாரமும் முற்றாக அழிந்துபோனால் பண்ணையாளர்கள் வீதியில் இறங்கி பிச்சை எடுக்கும் நிலைமையே உருவாகும் என்றும், இதற்கு அரசாங்கமும் மகாவலி அதிகார சபையுமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.



இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், டாக்டர் இ.சிறிநாத், சிவில் சமூக செயற்பாட்டாளர்களான எஸ்.சிவயோகநாதன், அருட்தந்தை லூக்காஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த போராட்டத்தின்போது குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் பெருமளவான புலனாய்வுத் துறையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.















# முல்லைத்தீவில் 17,469.58 ஹெக்டயர் காணிகளை உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

15.09.2026

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து ஏற்கனவே விடுவிக்கத் தீர்மானித்த 17,469.58ஹெக்டயர் காணிகளையும் உடனடியாக விடுவித்து காணிகளுக்குரிய மக்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை யுத்தகாலத்தில் மக்களுக்கு காணி ஆவணங்களை எடுத்துச் செல்லக்கூடிய சூழல் இருக்கவில்லை என இதன்போது சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர், அவ்வாறு ஏற்கனவே விடுவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்ட காணிகளுக்கு தற்போது மக்களிடமிருந்து ஆவணங்களைக் கோருவதை ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 14.09.2026 திங்கட்கிழமை இடம்பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வனவளம் மற்றும் வனஜீவராசிகள் திணைளங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்க முடியுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட 1,231.37 ஹெக்டயர் காணிகளை விடுவிப்பதற்கு, மக்கள் காணி ஆவணங்களை கையளிக்கவேண்டுமென பிரதேசசெயலாளரால் தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களிடம் ஆவணங்களைக் கோருவது பிழையான விடயமாகும். ஏன் எனில் கடந்த யுத்த காலப்பகுதியில் மக்கள் ஆவணங்கள் எவற்றையும் எடுத்துச் செல்லவில்லை. ஆவணங்களை எடுத்துச் செல்லக்கூடிய சூழல் இருக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பில் நான் தொடர்ச்சியாக பேசிவருகின்றேன். பாராளுமன்றிலும் இதுதொடர்பில் பேசியிருக்கின்றேன்.

அத்தோடு மாந்தைகிழக்கில் வனவளத் திணைக்களத்தினாலும், வனஜீவராசிகள் திணைக்களத்தினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 1,231.37 ஹெக்டயர் காணிகள் விடுவிக்கப்படவேண்டுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் நேரடியாக கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே குறித்த காணிகள் விடுவிக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே விடுவிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட காணிகளுக்கு தற்போது ஆவணங்களை காண்பிக்குமாறு கோருவது எவ்வகையில் நியாயம்?

யுத்தகாலத்தில் கோவணத்துடன் சென்ற மக்களிடம் காணி ஆவணங்களை கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளுக்கு அமைவாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 3,013.96 ஹெக்டயர் காணிகளும், புதுக்குடியிருப்பில் 5,131.13 ஹெக்டயர் காணிகளும், ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவில் 7,266.04 ஹெக்டயர் காணிகளும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 399.80 ஹெக்டயர் காணிகளும், மாந்தை கிழக்கில் 1,231.37 ஹெக்டயர் காணிகளும், மாணாலாறு பிரதேசத்தில் 427.28 ஹெக்டயர் காணிகளும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவரசிகள் திணைக்களங்களிட



மிருந்து விடுவிக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தம் 17,469.58 ஹெக்டயர் காணிகள் வனவளம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து, மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்கனவே விடுவிக்கப்படவேண்டுமெனத் தீர்மானக்கப்பட்ட காணிகளுக்கு ஆவணங்களைக் கோருவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவே உடனடியாக மக்களுக்கு அந்தக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேலும் அம்பாந்தோட்டையிலுள்ள காணிகளை நாம் விடுவித்து எமது மக்களிடம் வழங்குமாறு கோரவில்லை. எமது மக்களுடைய காணிகளை காணிகளுக்குரிய எமது மக்களிடம் வழங்குமாறே கோருகின்றோம் என்றார்.

# யாழ். நல்லூர் பிரதேச சபையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு நினைவு வணக்க நிகழ்வு!

16.09.2026

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாநோன்பு இருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வெழுச்சியாக நடைபெற்று வரும் நிலையில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்றைய நாள் புதன்கிழமை பல இடங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்நிலையில் நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு இன்றைய நாள் புதன்கிழமை தவிசாளர் ப.மயூரன் தலைமையில் நடைபெற்றது.

சபை அமர்வின் ஆரம்பத்தில் சபா மண்டபத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு வணக்கம் செலுத்தும் முகமாக அக வணக்கத்துடன் தவிசாளர், உறுப்பினர்கள் கைகளில் மெழுகு திரி ஏந்தி ஈகைச்சுடர் லெப். கேணல் திலீவனுக்கு வணக்கம் செலுத்தினர்.







# அநீதியின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றோம்!

## வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள்

17.09.2026




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சர்வதேச மாநாட்டின் மூலமாக எமக்கு இழைக்கப்படும் அநீதியின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றோம் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய நாள் புதன்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போது இதனை தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

இறுதிப் போர் வேளையிலும், அதற்கு முன்பும், அதற்குப் பின்பும் எமது பிள்ளைகள் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும், இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டநிலையிலும், இராணுவத்தாலும், அவர்களோடு சேர்ந்தியங்கிய துணை ஆயுதக்குழுக்களாலும் கடத்திச்செல்லப்பட்டநிலையிலும் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு காணாமலாக்கப்பட்ட நாள் தொட்டு தமது உறவுகளைத் தேடி அலையும் உறவினர்கள் இணைந்து, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினை ஆரம்பித்தோம். 2017ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இப்போராட்டங்களில், இராணுவத்திடம் கையளித்த எமது பிள்ளைகள் எங்கே? கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? நீதித் துறையில் எமக்கு நம்பிக்கையில்லை, சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை, மீளநிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும், பொறுப்புக்கூறலை நோக்கி சர்வதேச நாடுகள் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடியறிவதற்கென அரசு அமைக்கும் ஆணைக்குழுக்கள், நிறுவனங்கள் ஏமாற்று நாடகங்கள் எனப் பல கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றோம்.

இராணுவத்தின் உயிர் அச்சுறுத்தல்கள், விசாரணைகள், கண்காணிப்புகள், வயது முதிர்வு, நோய், வறுமை போன்ற துயரங்களால் பாதிக்கப்பட்டபோதிலும் துவண்டுபோகாது - விட்டு விலகிவிடாது எமது போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம்.

இப்போராட்டமானது எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கு மட்டுமானதல்ல, இனிவரும் காலங்களில் எமது பிள்ளைகளைப் போல இன்னொரு மகளோ, மகனோ கடத்திக் காணாமலாக்கப்படக்கூடாது என்பதற்கான ஓர் அரணாகவே நாம் எல்லாத் துயரங்களையும் தாங்கித் தெருவில் நிற்கின்றோம். இம்மண்ணில் எம்மைப் போல இன்னொரு தாய் கலங்கி நிற்கக்கூடாது என்பதற்காகவே மன வுறுதியோடு தொடர்ந்து போராடுகின்றோம்.

இந்நிலையில்தான் ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 30ஆம் நாளாகிய சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான தினத்தில், வடக்கு கிழக்கின் தமிழ் தாய்மார்களாகிய நாம், மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தோம். அப்போராட்டங்களில் எமது கோரிக்கைளை சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்திவந்தோம்.

இவ்வருடம் போராட்டத்தோடு இணைந்த வகையில் எமது கோரிக்கைளை இன்னும் வலுவாக முன்வைக்கும் பொருட்டு சர்வதேச மாநாடு ஒன்றினை நடாத்தினோம்.

அந்த மாநாட்டில் உலகத்திடம் நாம் எதனை எதிர்பார்க்கிறோம் என்பதனைப் பிரகடனமாக வெளியிட்டதோடு, எமது தொடர் போராட்டம் குறித்த தமிழ் சமூகத்தினதும், சர்வதேச சமூகத்தினதும் கரிசனையை கூட்டாக வெளிப்படுத்தினோம்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டிருந்த சர்வதேச பிரதிநிதிகள், சிறீலங்காவில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தமிழ் தாய்மார்கள் படுகின்ற இன்னல்களையும், நீதி மறுப்பையும், சர்வதேச நீதியைக் கோருவதற்கான நியாயத்தையும் விளங்கிக்கொண்டனர்.

அதனை வெளிப்படுத்தியுமுள்ளனர். அதேவேளை தமது பிள்ளைகளைத் தேடிய நீண்ட பயணத்தில் தாய் தந்தையர்கள் பலர் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலே இறந்துபோய்விட்டனர்.

அவர்களின் நீதிக்கான தேடலை ஆவணப்படுத்தியதோடு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நினைவாக அவர்களைத் தேடும் உறவினர்களிடம் எஞ்சியிருக்கும் நினைவுப் பொருள் நீதியைத் தேடும் போராட்டத்தில் பலமிக்க ஆயுதம் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

இம்மாநாட்டின் மூலமாக எமக்கு சிறீலங்காவில் இழைக்கப்படும் அநீதியின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றோம். தமிழ் சமூகத்தை அழித்துவிட்டோம், தம் பிள்ளைகளைத் தேடியலையும் தாய்மார்களுக்குப் பதில் சொல்லாமல் மெல்லமெல்ல சாட்சிய அழிப்பை செய்துவருகின்றோம் என நினைத்துக்கொண்டிருந்த தரப்பினரின் முகத்தில் கரியைப் பூசியிருக்கின்றோம்.

திக்குமுக்காடச் செய்திருக்கின்றோம். இவர்களால் வீதியில் இறங்கிப் போராட மட்டும்தான் முடியும் என நம்பிக்கொண்டிருந்தவர்களின் எண்ணத்தைப் பொய்யாக்கியிருக்கின்றோம்.

ஆகவே இந்த சர்வதேச மாநாடு போராடும் தாய்மார்களாகிய எமக்கு மிகுந்த நம்பிக்கையைத் தந்திருக்கின்றது. தொடர் போராட்டம் காரணமாக சோர்வும், அயற்சியும், அடுத்து என்ன செய்வதென்பது தொடர்பான தேக்கமும் ஏற்பட்டிருந்தநிலையில் இம்மாநாடு புத்துணர்ச்சியைத் தந்திருக்கின்றது.

மாநாட்டுக்காகத் திரண்ட மக்கள் புதிய நம்பிக்கையைத் தந்திருக்கின்றார்கள். தமிழ் மக்கள் எப்போதும் எமக்கு ஆறுதலாக நிற்பார்கள் என்கிற உத்வேகத்தைத் தந்திருக்கிறார்கள்.

சிறீலங்காவின் ஜனநாயக வழிப் போராட்டத்தின் இறுதி வடிவமாக நீளும் நீதி கோரிய எமது நீண்ட பயணத்திற்கு உங்களின் தார்மீக உதவிகளும், ஆதரவுகளும் தொடர்ந்தும் கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையோடு அடுத்த தடத்தைப் பதிக்கின்றோம். எங்கள் கரங்களை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள் - என்றனர்.

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஆரம்பம்!

16.09.2026

ஈகைச்சுடர் லெப் கேணல் திலீபன் அவர்களின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி, மக்களின் வணக்கத்திற்காக இன்று (16.09.2026) அம்பாறை மாவட்டம் பொத்துவிலிருந்து ஆரம்பமானது.











## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

# முள்ளிவாய்க்கால் வழிகாட்டி கல் அகற்றப்பட்டமைக்கு கண்டனம்!

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொது கட்டமைப்பு

17.09.2026

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்குச் செல்லும் பாதையை அடையாளப்படுத்தும் வகையில் புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு பிரதான வீதியோரத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல் இடித்து அகற்றப்பட்டுள்ளமைக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.



சிறீலங்கா காவல்துறையினர் ஊடாக நீதிமன்றத்தின் உத்தரவு பெறப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அண்மையில் குறித்த நினைவுக்கல் இடித்து அகற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது குறித்து நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய தமிழினப் படுகொலையை நினைவேந்துவதற்கான முள்ளிவாய்கால் முற்றத்திற்கு செல்வதற்கான பாதையை சுட்டிக் காட்டுவதற்காக முல்லைத்தீவு பரந்தன் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வழிகாட்டி கல் முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை காரணம் காட்டி வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இடித்தழிக்கப்பட்டுள்ளமையானது அரச திணைக்களங்கள் ஊடாக தமிழினம் மீதான ஒடுக்குமுறைகள் தடையின்றி தொடர்வதனையே காட்டி நிற்கின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வகை தொகையின்றி தமிழினம் குண்டுகளாலும், இன்னும் உலகில் மனித குலத்திற்கெதிரானதென தடைசெய்யப்பட்ட ஆயுதங்களாலும், போர் முறைகளாலும் திட்டமிட்டு அழித்தொழிக்கப்பட்ட இனப்படுகொலையை கண்ணீரோடு நினைவு கூரும் உரிமை தமிழினத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது என்பதை காட்டி நிற்கும் ஒன்றாகவே இந்த செயற்பாடு அமைந்துள்ளது.

முல்லைத்தீவு பரந்தன் வீதியின் வீதியோரங்கள் நெடுகிலும் இராணுவ முகாம்களிற்கான பெயர்ப்பலகைகளும், காவலரண்களும் அனுமதியற்ற கட்டடங்களாகவும், கட்டமைப்புக்களாகவும், அமைக்கப்பட்டுள்ளமை வெளிப்படையானதொன்றாகும்.

இடித்தழிக்கப்பட்ட குறித்த வழிகாட்டல் கல்லுக்கு அப்பால் சில மீற்றர் தூரம் தள்ளி முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமின் பெயர் பொறிக்கப்பட்ட கட்டமைப்பு, இதே வீதியில் புதக்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வெற்றிச் சின்னம் போன்ற இன்னும் பல கட்டுமானங்கள் அனுமதியற்ற



கட்டுமானங்களாகவே உள்ளன.

தற்போதைய நிலையில் சிறீலங்கா காவல்துறையினரின் ஆதரவுடன் இந்த முள்ளிவாய்கால் முற்ற வழிகாட்டல் கல்லும் அகற்றப்பட்டிருக்கின்றது.

இந்த வகையில் சிறீலங்காவில் எந்த அரசுகள் ஆட்சிப்பீடம் ஏறினாலும் தமிழர் விரோத செயற்பாடுகளையும், தமிழின அழிப்பு செயற்பாடுகளையும் கட்டமைக்கப்பட்ட வகையில் அரங்கேற்றி வருகின்றன.

ஆகவே சிறீலங்கா அரசினுடைய இத்தகைய செயற்பாடுகளை தாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன், தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு விரைந்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தினையும் வலியுறித்தி நிற்கின்றோம் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# மதவளசிங்கன்குளம் பகுதியில் சிறீலங்கா வன இலாகா ஆக்கிரமித்துள்ள மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தல்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

17.09.2026

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட மதவளசிங்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில், சிறீலங்கா வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிக்குமாறு, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியிருந்த நிலையில், வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குறித்த காணிகளை விடுவிப்பது தொடர்பில் இணைந்த களஆய்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.





அந்தவகையில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம், வனவளத் திணைக்களம், நாடாளுமன்ற உறுப்பினர் துரைரராசா ரவிகரன், காணிகளுக்குரிய மக்கள் ஆகியோர் இணைந்து குறித்த பகுதிக்கு நேரில் சென்று இணைந்த களஆய்வு ஒன்



றினை மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறிப்பாக கடந்த 1979ஆம் ஆண்டு காலப்பகுதியில் மதவளசிங்கன்குளம் கிராமஅலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மக்களுக்கு உப உணவுப் பயிற்செய்கைக்கென வழங்கப்பட்ட காணிகளை தற்போது வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது.

இந்நிலையில் காணிகளுக்குரிய பொதுமக்கள் குறித்த வனவளத்திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

இத்தகைய சூழலில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கடந்த 15.05.2026அன்று இடம்பெற்ற கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மதவளசிங்கன்குளம் பகுதியில் உபஉணவுப் பயிற்செய்கைக்கென மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படவேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனது வலியுறுத்தலுக்கமைய வனவளத் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை வனவளத்திணைக்களம், பிரதேசசெயலகம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், காணிகளுக்குரிய பொதுமக்கள் இணைந்து இணைந்த கள ஆய்வொன்றை மேற்கொள்வதென குறித்த பிரதேச அபிவிருத்தி



ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக 15.09.2026அன்று குறித்த பகுதிக்கு நேரில் சென்று மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக இணைந்த களஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும், எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.**

–ஈகைச்சுடர் லெப். வேணல் திலீபன் அவர்கள்–

# இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள முள்ளியவளை அஞ்சல் அலுவலகக் காணியை இந்த ஆண்டுக்குள் விடுவியுங்கள்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

18.09.2026

முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டு தற்போது சிறீலங்கா இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள காணியை 2026ஆம் ஆண்டுக்குள் விடுவித்து அஞ்சல் திணைக்களத்திடம் முறையாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், குறித்த காணியில் முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கான புதிய நிரந்தரக் கட்டடத்தை 2027ஆம் ஆண்டில் நிர்மாணிக்கத் தொடங்குவதற்குத் தேவையான நிதி மற்றும் நிர்வாக ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா அரியரத்னவுக்கு 2026.09.16 அன்று ரவிகரன் எம்.பி கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த 2026.04.08 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கான காணி விடுவிப்பு தொடர்பில் ரவிகரன் எம்.பி கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர், குறித்த காணியை 2026 யூலை மாதத்திற்குள் விடுவிப்பதற்கு இலங்கை இராணுவத்திடமிருந்து வாய்மொழி மூலமான உறுதிமொழி கிடைத்துள்ளதாகவும், காணி விடுவிக்கப்பட்ட பின்னர் அடுத்த ஆண்டில் அங்கு புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும், உறுதியளிக்கப்பட்ட 2026 யூலை மாத காலக்கெடு கடந்துள்ளபோதிலும் குறித்த காணி இதுவரையில் விடுவிக்கப்படவில்லை என ரவிகரன் எம்.பி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். காணி விடுவிப்பு தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளின் நிலையும் தெளிவாக அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளியவளை அஞ்சல் அலுவலகம் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக நிரந்தரக் கட்டடமின்றி வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்ற நிலையில், அதற்காக ஒதுக்கப்பட்ட காணி 1986ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் கையகப்படுத்தலில் இருப்பதாகவும் பாராளுமன்ற விவாதத்தின்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நீண்டகாலமாக நிரந்தர அஞ்சல் அலுவலகக் கட்டடத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் முள்ளியவளை மற்றும் அதனைச் சூழவுள்ள மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என ரவிகரன் எம்.பி கோரியுள்ளார்.

அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் அஞ்சல் சேவையை மேம்படுத்தும் வகையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அவர் வரவேற்றுள்ளார். குறிப்பாக முல்லைத்தீவுக்கான அஞ்சல் பரிவர்த்தனை வாகனம் வழங்கப்பட்டமை, புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டமை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அலுவலகக் கட்டட நிர்மாணம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு அவர் தனது பாராட்டையும் பதிவு செய்துள்ளார்.

இந்தச் சாதகமான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியை நடைமுறைப்



படுத்தும் வகையில் முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கான காணியை இராணுவக் கையகப்படுத்தலில் இருந்து இந்த ஆண்டுக்குள் விடுவித்து அஞ்சல் திணைக்களத்திடம் முறையாகக் கையளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக நிரந்தரக் கட்டடத்திற்காக காத்திருக்கும் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், 2027ஆம் ஆண்டில் புதிய முள்ளியவளை அஞ்சல் அலுவலகக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதி மற்றும் நிர்வாக ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ரவிகரன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தின் பிரதிகள் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அஞ்சல்மா அதிபர், சிறீலங்கா இராணுவத் தளபதி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# யாழ். மயிலிட்டியில் 21ஆவது வாரமாகத் தொடரும் போராட்டம்!

18.09.2026

யாழ். வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் “கொமாண்டோ ” பங்களா முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 22 ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலிகாமம் வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் , அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்




னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 22ஆவது வாரமாக போராட்டத்தை முன்னடுத்தனர்

# மகனை உயிருடன் மீட்டுத் தாருங்கள்

## அனோஜனின் தாயார்

18.09.2026

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கல்முனை, நட்பிட்டிமுனையைச் சேர்ந்த சிவராசா அனோஜன் எனும் இளைஞரை உயிருடன் மீட்டுத் தருமாறு அவரது தாயார் கண்ணீர் மல்க உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.

சமூக ஊடகமொன்றில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றின் போதே குறித்த இளைஞர் சவூதி பொலிசாரினால் கைது செய்யப்பட்டதாகக் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

குறித்த பதிவை அவர் உடனடியாகவே சமூக ஊடகத்திலிருந்து நீக்கியதுடன், அதற்காகப் பகிரங்கமாக மன்னிப்பும் கோரியிருந்தார்.

மேன்முறையீட்டில் அதிகரித்த தண்டனை இந்த வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது, நீதிமன்றத்தினால் 5 வருட சிறைத்தண்டனையும் 3 மில்லியன் சவூதி ரியால் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மேன் முறையீட்டு விசாரணைகளின் போது இத் தண்டனை மரண தண்டனையாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் குடும்பத்தினர் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவரது தாயார்,

“எனது மகன் தெரியாமல் ஏதேனும் தவறு செய்திருந்தால் அதற்காக நாங்கள் பகிரங்கமாக மன்னிப்பு கோருகிறோம். அவனை மன்னித்து, உயிருடன் மீண்டும் எங்களிடம் ஒப் படைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என அழுது புலம்பியவாறு வேண்டுகோள் விடுத்தார்.



இளைஞர் அனோஜனின் உயிரைப் பாதுகாப்பதற்காக சிறீலங்கா அரசாங்கம் சவூதி அதிகாரிகளுடன் அவசரமாக உயர் மட்ட இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என அவரது குடும்பத்தினரும் பிரதேச சமூக தலைவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

www.sangathamil.com

# சிறீலங்கா புலனாய்வாளர்களின் அறிக்கையைப் பெற்றே ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் ஒலிபெருக்கி பாவிக்கலாமாம்!

19.09.2026

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் ஒலி பெருக்கி பாவனைக்கு அனுமதி வழங்க தான் புலனாய் வாளர்களின் அறிக்கையை பெற்று, அதன் அடிப்படையிலையே வழங்குவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு யாழ்ப்பாண தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.



நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் அனுமதியின்றி ஒலிபெருக்கி சாதனங்களை பயன்படுத்தினார்கள் என குற்றம் சாட்டி சாதனங்களை பொலிசார் நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தனர்.

அதனை அடுத்து ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கி சாதனத்திற்கான பொலிஸ் நிலையம் சென்றிருந்த வேளை, பொறுப்பதிகாரி இல்லை என திருப்பியனுப்பியுள்ளனர். அந்நிலையில் இன்றைய நாள் சனிக்கிழமை மீண்டும் பொலிஸ் சென்ற போதும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

பொலிசார் ஏற்பாட்டாளர்களை அலைக்கழித்ததை அடுத்து, அது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு தகவல் வழங்கியதை அடுத்து , நாடாளுமன்ற உறுப்பினர் வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகரைத் தொடர்பு கொண்டு அது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

அதனை அடுத்து, யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய



பொறுப்பதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினரை தொடர்பு கொண்டு, ஒலிபெருக்கி சாதனம் பெறுவதற்கான அனுமதிக்காக பொலிஸ் நிலையத்தில் விண்ணப்பிக்க கூறியதுடன், புலனாய் வாளர்களின் அறிக்கையை பெற்ற பின்னரே அனுமதி வழங்குவதா? இல்லையா என முடிவெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# யாழ். வலிகாமம் வடக்கில் காணிகளை விடுவிக்கக் கோரித் தொடர் போராட்டம்

21.09.2026

சிறீலங்கா ஜனாதிபதி பதவியேற்று இரண்டு வருடங்கள் கடந்தும் மக்களின் காணி மக்களுக்கே. என்ற வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை என கண்டித்தும், தமது காணிகளை விடு விக்கக்கோரியும் வலி. வடக்கு மக்கள் பலாலி சந்தியிலும் மற்றும் வசாவிளான் சந்தியிலும் ஞாயிற்றுக்கிழமை (20.09.2026) போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும் நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வரும் நிலையில் தமது வீடுகள் காணிகளை விடுவிக்க வேண்டும் என கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். சமூக பிரச்சாரத்தில் சேர்க

இந்நிலையில், இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை பலாலி சந்தி மற்றும் வாசா விளான் சந்தி ஆகிய இருவேறு இடங்களில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது .



# அனோஜனின் உயிரைக் காப்பாற்றுமாறு கோரி நற்பிட்டிமுனையில் கையெழுத்து சேகரிப்பும் கவனயீர்ப்புப் போராட்டமும்!

20.09.2026

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை இளைஞன் அனோஜனின் உயிரைப் காப்பாற்றுவதற்காக, இனம், மதம், மொழி என அனைத்து எல்லைகளையும் கடந்து மனிதாபிமான அடிப்படையில் கையெழுத்து சேகரிப்பும் கவனயீர்ப்பு போராட்டமும் நற்பிட்டிமுனையில் நடத்தப்பட்டது.

இன்று ஞாயிற்றுக்கிழமை (20) காலை 9 மணி முதல், நற்பிட்டிமுனை முதலாம் கட்டை சந்தியில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது.

அனோஜனின் விடுதலைக்கான நீதியை வலியுறுத்தியும், அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் நடைபெறும் இப்போராட்டத்தில் பிரதேச பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பெருந்திரளானோர் கட்சி, மத பேதமின்றி பங்கேற்றுத் தங்களது கையெழுத்துக்களைப் பதிவிட்டு ஆதரவுக் கரங்களை நீட்டி வருகின்றனர்.



**தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# யாழ். நல்லூரில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஆவணக் காட்சியகம்

21.09.2026

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனை நினைவுகூரும் வகையில் யாழ். நல்லூரில் ஆவணக் கண்காட்சிப்படுத்தல் திங்கட்கிழமை ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் பிரதான நினைவுத்தூபிக்கு முன்பாக உள்ள பகுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



நான்காவது வருடமாக வழமை போன்று நல்லூரில் ஆரம்ப மான ஆவண கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களுடைய விடுதலைக்காக 12 நாட்கள் நீராகாரம் இன்றி தன்னுடைய உயிரினை ஆகுதியாக்கிய ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுடைய 39ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகமெங்கும் எழுச்சிப்பூர்வமாக நடைபெற்று வரும், நிலையில் அதனொரு அங்கமாக ஆவணக் கண்காட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுடைய வரலாற்றினையும், ஈகங்களையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்து இயம்புகின்ற வகையில் இந்த வரலாற்றுக் கண்காட்சியினை ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.









# அனோஜனின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்

21.09.2026

சவுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட அனோஜனின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மெழுகுதிரி ஏந்தி கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.




பண்ணை பகுதியில் இன்றைய நாள் திங்கட்கிழமை பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




# திருகோணமலைச் சித்திரவதைக் கூடத்தில் தமிழ் யுவதிகளும் படுகொலை!

21.09.2026

திருகோணமலை சிறீலங்காக் கடற்படைத் தளத்தின் இரகசிய சித்திரவதை முகாமெனக் கூறப்படும் "கன்சைட்" முகாமில் தமிழ் பெண்களும் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

திருகோணமலையின் பாலையூற்றுப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட இரு பெண்களின் கொலை தொடர்பில், நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கைது செய்யப்பட்டு, திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் சிறீலங்காக் கடற்படை பெண் சிப்பாய்கள் இருவரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், அவ்விருவருக்கான அடையாள அணிவகுப்பை ஒக்டோபர் 5ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் சிறீலங்காக் கடற்படை சிப்பாய்களான சந்தமாலி மற்றும் "காவோஸ்" என அழைக்கப்படும் இருவரும், நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்பு முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

2008ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி திருகோணமலை, பாலையூற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த தேன்மொழி சசிகுமார் மற்றும் மேரி டெலிசியா ஆகிய இரு பெண்களும் வெள்ளை வானில் வந்த சிறீலங்காக் கடற்படையினரால் கடத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் "கன்சைட்" முகாமில் தடுத்து வைக்கப்பட்டதுடன், அதன்பின்னர் இரு பெண்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

அக்கொலைகளை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், முன்னாள் சிறீலங்காக் கடற்படை பெண் சிப்பாய்ககள் இருவரும் ஞாயிற்றுக்கிழமை(20) கைது செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில், அவர்கள் இருவரும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் திருகோணமலைக்கு திங்கட்கிழமை (21) அழைத்து வரப்பட்டிருந்தனர்.



Gun Site, Trincomalee

# சிறீலங்கா குற்றப் புலனாய்வுத்துறையினால் 'வெந்து தணிந்தது காடு' திரைப்பட நடிகருக்கு அழைப்பாணை!

21.09.2026

சிறீலங்கா குற்றப் புலனாய்வுத் துறை (CTID), "வெந்து தணிந்தது காடு" திரைப்படத்தில் நடித்ததற்காக தமிழ் நடிகருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

2022இல் வெளியான ஒரு திரைப்படத்தில் நடித்தது தொடர்பான விசாரணைக்காக, நடிகர் பரமசிவம் அந்தோணி நியூட்டன், 20.09, 2026 யாழ்ப்பாணத்தில் உள்ள CTID அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளார். மதி சுதாவால் இயக்கப்பட்டு, முழுவதுமாக ஐபோனில் படமாக்கப்பட்ட இத்திரைப்படம், ஆயுத மோதல் உச்சக்கட்டத்தில் இருந்த போது ஒரு பதுங்குக்குழியில் சிக்கிக்கொண்ட ஒரு வயதான தாய், அவரது மூன்று பிள்ளைகள் ஆகியோரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டுள்ளது.

ஆயுத மோதலை ஆவணப்படுத்துதல், நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அவற்றில் பங்கேற்றல் அல்லது தங்கள் உரிமைகளை நிலைநாட்டுதல் ஆகியவற்றில் வடகிழக்கு தமிழர்களின் ஈடுபாடு குறித்து, அவர்களை அச்சுறுத்துவதற்காக சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளில் இந்த அழைப்பாணையும் உள்ளடங்குகிறது.

தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ஒரு புதிய சகாப்தத்தை வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்தார், ஆனால் வடகிழக்கு தமிழர்களுக்கு கண்காணிப்பு, அடக்கு முறை மற்றும் அச்சுறுத்தல் தொடர்கிறது.



From / To

No. 35

PA 166/2023

DAYS DAYS OF HEAVEN

2026/09/14 ... 1000 ...

(021 2219941)

NIC: 197223240034

T/No: 0776279928

Distribution

H 060780 – 5,000 (2025/01)P

# யாழ். மண்டைதீவு மனிதப் புதைகுழி வழக்கு எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதிக்கு மாற்றம்

22.09.2026

யாழ். மண்டைதீவில் மனிதப் புதைகுழிகள் காணப்படுவதாகவும், அதனை அகழ்வதற்கு அனுமதி கோரி நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் சிறீலங்காப் பொலிசார் சான்று ஆதாரங்களை சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்க மேலதிக கால அவகாசம் தேவை என கோரியதை அடுத்து வழக்கினை எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு மன்று திகதியிட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாள்களில் சிறீலங்கா இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலை நிகழ்த்தப்பட்டது. இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 45 இகும் அதிகமான உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருப்பதுடன் அதற்கான வாழும் சாட்சியங்கள் உறுதியாகவும் இருக்கின்றன. அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலை கிணறு ஒன்றுக்குள்ளும் உடலங்கள் இருக்கின்றன என சந்தேகிக்கப்படுகிறது.

அதனை அகழ்வதற்கு அனுமதி கோரி ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் , நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, சான்றுகள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு மன்று யாழ்.மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய நாள் செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தம்மால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் முடிவடைய வில்லை என்றும், விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும் என மன்றில் விண்ணப்பம் செய்தனர்.



பொலிசாரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மன்று , வழக்கினை எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு திகதியிட்டுள்ளது.

# திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று வழக்கில் சிறீலங்கா தொல்லியல் திணைக்களம் முக்கிய வாக்குறுதி!

22.09.2026

திருகோணமலை கன்னியா - வெந்நீரூற்று பிள்ளையார் கோயில் இருந்த இடத்தில் முன்னெடுக்கப்பட்ட கட்டுமானம் தொடர்பான வழக்கு விசாரணையானது திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இன்று (22) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சிறீலங்காத் தொல்லியல் திணைக்களத்தினால் எழுத்து மூலமான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அத்துடன், ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாட்டின்படி எல்லைகளை மீறி எந்தவொரு புதிய கட்டுமானமும் செய்யப்படாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

கன்னியா வெந்நீரூற்று பகுதியில் பிள்ளையார் கோயில் இருந்த இடத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கு ஏற்பட்ட பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருந்த நிலையில், அப்பகுதியில் தொல்லியல் அடையாளம் இருப்பதாகக் கூறி பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள மற்றொரு இடம் அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன் அளவீடு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டது.

அந்த தொல்லியல் அடையாளமாகக் கருதப்படும் இடத்தை பேணிப் பாதுகாப்பதற்கு மட்டுமே தொல்லியல் திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அங்கு செங்கற்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் கொண்டுவந்து குவிக்கப்பட்டு குறித்த வழக்கின் தீர்ப்பிற்கு புறம்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்து வழக்கறிஞர் பிரசாந்தினி உதயகுமார் தரப்பில் மேல் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டிருந்தது.

கடந்த முறை இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, தொல்லியல் திணைக்கள நாயகமும் மாவட்டச் செயலாளரும் இது தொடர்பான விளக்கத்தை நீதிமன்றத்திற்கு அளிக்கும் வரை அனைத்து கட்டுமான நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் மாவட்டச் செயலாளர் தரப்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நீண்ட அறிக்கையில், தாங்கள் செய்வது அனைத்தும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கை மட்டுமே என்றும், புதிய கட்டடங்கள் எதையும் கட்டவில்லை என்றும் உறுதிமொழி அளித்துள்ளனர்.

பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டுள்ளதாகவும், அப்போது சேதமடைந்த



அல்லது பழுதடைந்த இடங்களை மட்டுமே மீண்டும் சரிசெய்யும் பணியை மேற்கொள்கிறோமே தவிர புதிய விகாரையோ அல்லது வேறு கட்டடங்களோ அமைக்கப்படவில்லை என்றும் அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த எழுத்துமூலமான அறிக்கை நேரடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாட்டின்படி எல்லைகளை மீறி எந்தவொரு புதிய கட்டுமானமும் செய்யப்படாது என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

**எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அந்நாட்டின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# முல்லை. கொக்குத்தொடுவாய் சட்டவிரோத உப்பள விவகாரம் ரவிகரன் எம்.பியின் வலியுறுத்தலையடுத்து உப்பளம் அமைக்கும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த தீர்மானம்!

23.09.2026




முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, கொகுத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவின் குஞ்சுக்கால்வெளி பகுதியில் தமிழ் மக்களின் தனியார் காணி-களை ஆக்கிரமித்து இடம்பெறும் சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரின் வலியுறுத்தலுக்கு அமைவாக, குறித்த சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21.09.2026அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தோடு குறித்த சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாடுகளுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மூன்னெடுக்குமாறு கரைதுறைப்பற்று பிரதேசசபைக்கும் இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை துணையோடு கொக்குத்தொடுவாய் குஞ்சுக்கால்வெளி பகுதியில் எமது மக்களின் தனியார்காணிகளில் சட்டவிரோதமாக அத்துமீறி குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நாம் நேரில் சென்று தடுத்ததுடன், அதனைத்தொடர்ந்து, கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திடமும் குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நிரந்தரமாக நிறுத்துவதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியிருந்தேன்.

இதுதவிர குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கும், உரிய அமைச்சுக்களுக்கும்கூட என்னால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றிலும் பேசினேன்.

அதனைத்தொடர்ந்து வவுனியா மாவட்டசெயலகத்தில் இடப்பெற்ற அமைச்சர் லால்காந்த மற்றும் சுற்றாடல் அமைச்சர் பங்கேற்றிருந்த கூட்டத்திலும் குறித்த சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு கோரியிருந்தேன்.

இருப்பினும் குறித்த உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் குறித்தபகுதி கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதி என்பதையும், தமிழ் மக்களுக்குரிய தனியார் காணி என்பதையும் மகாவலி அதி காரசபை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

மகாவலி அதிகாரசபைக்குட்பட்டிருக்கின்ற மணலாறு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில்தான் குறித்த உப்பளம் அமைக்கப்படுவதாக மகவலி அதிகாரசபையால் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சூழலில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகத்தால் நிலஅளவைத் திணைக்களத்தின் ஊடாக அந்தப் பகுதிக்குரிய சுவட்டு வரைபடம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தவகையில் நிலஅளவைத் திணைக்களத்தின் சுவட்டு வரைபடத்தின் பிரகாரம் குறித்த உப்பளம் அமைக்கப்படும் பகுதி கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட, கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவிற்குட்டது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் உப்பளத்திற்கென மொத்தம் 44.197ஏக்கர் காணி சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்பதும் இனங்காணப்பட்டுள்ளது.

அதில் 13 ஏக்கர் 02 ரூட் காணிகள் அரச காணிகள் எனவும், மிகுதி 31 ஏக்கர் தனியார் காணிகளாகவும் இனங்காணப்பட்டுள்ளன.

அத்தோடு எமது மக்களிடமிருந்து பிரதேச செயலகத்தினால் பெறப்பட்ட தனியார் ஆவணம் ஒன்று, நில அளவைத் திணைக்களத்தின் சுவட்டு வரைபடத்துடன் தொடர்புடையதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஆவணரீதியாக அந்தப் பகுதி கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குரியதெனவும், பெரும்பகுதி தமிழ் மக்களுக்குரிய தனியார் காணிகள் எனவும் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடும் அங்கு சட்டவிரோத உப்பளச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறாக அங்கு சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கப்படுவதனால் கொக்கிளாய் கடல்நீரேரியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் எனவும், விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் எனவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த விடயங்கள்தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் முறையிட்டிருந்தேன். அதற்கமைய இந்த விடயத்தினை எதிர்க்கட்சித்தலைவர் உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார். இதுதொடர்பில் என்னோடு பேசி உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென உரிய அமைச்சரால் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால் சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

எனவே சட்டவிரோதமாக தனியார் காணிகளிலும், கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட அரச காணிகளிலும் அத்துமீறி உப்பளம் அமைக்கும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துவதற்கு இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்படவேண்டுமெனத் தெரிவித்தார்.

அதற்கமைய குறித்த சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டுமென கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தவகையில் இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த சட்டவிரோத உப்பளம் அமைக்கும் செயற்பாட்டைத் தடுப்பதற்குரிய சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கரைதுறைப்பற்று பிரதேசசபைக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

அத்தோடு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இத் தீர்மானத்தினை மாவட்ட அபிவிருத்திக்குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதெனவும் இதன்போது

# யாழ். பல்கலைக்கழகத்தின் முன் உண்ணாநோன்புப் போராட்டம் குவிக்கப்பட்ட சிறீலங்காப் பொலிசார்!

25.09.2026

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 12 நாள்கள் அஹிம்சை வழியில் உண்ணாநோன்பிருந்து தன்னுயிரைத் ஈகம் செய்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களால் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்து வரும் நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக முன்றலில் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவைப் போற்றும் வகையில் இடம்பெறவுள்ள இந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர் .

அதேவேளை மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை அவ்விடத்திற்கு முச்சக்கர வண்டியில் வருகை தந்த சிறீலங்காப் பொலிசார் மாணவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு சென்றனர்.

# முள்ளிவாய்க்கால் வழிகாட்டித் தளம் அகற்றப்பட்டமைக்கு கண்டனம்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

24.09.2026

முள்ளிவாய்க்கால் நினைவிட வழிகாட்டித் தளத்தை அகற்றிய பொலிசாருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும், முள்ளிவாய்க்கால் மேற்கு சந்தியில் நிருமாணிக்கப்பட்டுள்ள இராணுவ முகாமின் பெயர் பொறிக்கப்பட்ட தளத்தையும், புதக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் அனுமதியற்று நிருமாணிக்கப்பட்ட போர் வெற்றிச் சின்னத்தையும் ஏன்? அகற்றமுடியவில்லை எனக் கேள்வி எழுப்பிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்கான வழிகாட்டித் தளத்தை அழித்தவர்களால் உயிரோடும் உதிரத்தோடும் கலந்துள்ள எங்கள் உணர்வுகளை ஒருபோதும் அழிக்கமுடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்கான வழிகாட்டித்தளம் அழிக்கப்பட்டமைக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் 24.09.2026இன்று உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சிவப்பு மஞ்சள் தீந்தை பூசி முள்ளிவாய்க்கால் நினைவாலய வளாக வீதி என எழுதப்பட்ட சீமெந்துத்தளம் கடந்த 2026.09.14 அன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அடியோடு பிடுங்கி வீழ்த்தப்பட்டுள்ளது.

இத்தளத்தை இனங்காண முடிந்த பொலிசாருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் பல ஆண்டுக்கு முன்னர் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் சந்தியில் நிருமாணிக்கப்பட்ட இராணுவ முகாமின் பெயர் பொறிக்கப்பட்ட தளம் ஏன் இன்னமும் கண்ணுக்குத் தெரியவில்லை. புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் அனுமதியற்று நிருமாணிக்கப்பட்ட போர் வெற்றிச் சின்னம் ஏன் இன்னமும் கண்ணுக்குத் தெரியவில்லை.

உங்களுக்கு இருக்கும் பிரச்சினை, அந்த சீமெந்து தளமா அல்லது அந்தத் தளத்தில் உள்ள சிவப்பு மஞ்சள் வண்ணமும் அங்கு எழுதப்பட்ட எழுத்துகளுமா?

ஒரு நூறு புலனாய்வுப்பிரிவினர், படையினர், பொலிசார் சூழ்ந்திருக்க உயிரையும் துச்சமென எண்ணி உங்கள் அடக்குமுறையையும் மீறித்தான் முள்ளிவாய்க்கால் மண்ணில் நாங்கள் நினைவேந்தத் தொடங்கினோம். உங்கள் அனுமதியைக் கேட்டல்ல!

பல விசாரணைகள், அச்சுறுத்தல்களைத் தாண்டியே தான் இறுதிப்போருக்குப் பின்னர் மாவீரர் நாளையும் நினைவேந்தினோம். உங்களிடம் கேட்டல்ல!

இப்போது பாருங்கள் இடித்து வீழ்த்தப்பட்டுள்ள அந்த நினைவேந்தல் வளாக வீதி பொறித்த சீமெந்துத் தளத்திலும் உங்களின் கோரமுகமே உலகுக்கு சாட்சியாகி நிற்கிறது!



சீருடையுடனான இரத்தம் தோய்ந்த மாணவனின் பொம்மை இரவோடு இரவாக களவாக அகற்றி மீதமிருந்த வழிகாட்டித் தளத்தையும் பெயருக்காக அகற்ற முடிந்த உங்களால் எங்கள் உயிரோடும் உதிரத்தோடும் கலந்துள்ள எங்கள் உணர்வு வழிகாட்டிகளை எதைக்கொண்டு அழிக்கப்போகிறீர்கள்!

தமிழர்களின் உணர்வுகளை, தமிழர் அபிலாசைகளை மிதித்து, அடக்கி, அழித்துவிட்டு இத்தீவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிடலாம் என நினைப்பது சுத்த முட்டாள்தனம் என்பதை அரசும் அரச கட்டமைப்புகளும் உணரவேண்டும். முள்ளிவாய்க்கால் வழிகாட்டல் தளம் அடியோடு வீழ்த்தப்பட்டதை முள்ளிவாய்க்கால் மண்ணைச் சார்பாக்கும் பாராளுமன்ற உறுப்பினராக வன்மையாக கண்டிக்கின்றேன் - என்றார்

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு சிறீலங்காப் பாராளுமன்றில் வணக்கம் செலுத்திய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்!

25.09.2026

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றத்தில் வணக்கம் செலுத்தினார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (24) பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் திலீபனை நினைவுகூர்ந்தார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் முன்வைத்த ஐந்தம்சக் கோரிக்கைகளை நினைவுகூர்ந்த ரவிகரன், கடந்த கால காயங்கள் ஆற்றப்படாமல் நாட்டில் நல்லிணக்கம் சாத்தியமில்லை என்று தெரிவித்தார்.

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும், வடக்கு - கிழக்கில் இடம்பெறும் திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் அகிம்சைப் போராட்டத்தை நினைவுகூர்ந்து, அவருக்கு பாராளுமன்றத்தில் வணக்கம் செலுத்துவதாக ரவிகரன் தெரிவித்தார்



# தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து நல்லூருக்கு புறப்பட்ட ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்தி!

26.09.2026

தமிழ் மக்களின் உரிமைக்காக ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 39ஆம் ஆண்டு இறுதிநாள் நினைவு வணக்க நிகழ்வுகள் தயகப் பரப்பிலும், புலம்பெர் தேசங்களிலும் இன்று சனிக்கிழமை (26) உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்



படுகின்றன.



இந்நிலையில் முல்லைத்தீவு - விசுவமடு, தேரவில் மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் உருவப்படம் தாங்கிய நினைவு ஊர்தி ஒன்று, யாழ்ப்பாணம் - நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவிட வளாகம் நோக்கிப் புறப்பட்டுள்ளது.

குறிப்பாக தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக்குழுவின் செயலாளர் சுந்தரலிங்கம் யோகலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட, இந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களது உருவப்படம் தாங்கிய நினைவு ஊர்தி பவனியானது மலர் மற்றும் சுடர் வணக்கத்துடன் ஆரம்பமானது.

அந்தவகையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் உருவப்படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர்தூவி வணக்கம் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களது உருவப்படம் தாங்கிய நினைவு ஊர்தி யாழ்ப்பாணம் நல்லூரை நோக்கிப் புறப்பட்டது.

மேலும் குறித்த வணக்க நிகழ்வுகளில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளர் வேலாயுதம் கரிகாலன், முன்னாள் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் சண்முகசராசா ஜீவராசா, தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக்குழுவினர், பொது



மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். நல்லூரில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் உணர்வெழுச்சியுடன் நினைவு நாள் நிகழ்வு!

26.09.2026

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39வது நினைவு தின நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்றைய நாள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்த நேரமான காலை 10.48 மணியளவில் வணக்க நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றது.

அதன் போது ஈகை சுடரினை மாவீரர்களான அன்புக்குமாரன் மற்றும் தம்பமணி ஆகிய இரு மாவீரர்களின் பெற்றோர்களான அருணாச்சலம் வல்லிபுரம் மற்றும் வல்லிபுரம் செல்வராணி ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதேவேளை ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உண்ணாநோன்பிருந்த நல்லூர் ஆலய வீதியில் ஈகை சுடரினை மாவீரர்களான செல்லக்கண் மற்றும் இசை செல்வன் ஆகிய இரு மாவீரர்களின் சகோதரி, போராளி சுப்பிரமணியம் மலர்விழி ஏற்றி வைத்தார்.

அதனை தொடர்ந்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் உள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவ சிலைக்கு மாவீரர் அறிவின் தந்தையான மூத்த போராளி முத்துக்குமார் மனோகர் மலர் மாலை அணி வித்ததை தொடர்ந்து, திருவுருவ சிலைக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.









1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987. 09.15 ஆம் திகதி நீராகாரமின்றி உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 12 நாட்களாக நீராகாரமின்றி இருந்து 26ஆம் திகதி உயிர் நீத்தார்.



















## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

# யாழ். பருத்தித்துறையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்

26.09.2026

ஐந்துஅம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் யாழ். பருத்தித்துறையிலும் இடம்பெற்றன.

பருத்தித்துறை முருகன் கோயிலடியில் அமைந்துள்ள ஈகைச் சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபியில் வணக்க நிகழ்வு இடம்பெற்றன.

நிகழ்வில் ஈகைச்சுடரை போராளி சி. வேந்தன் ஏற்றிவைத்தார்.






தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்ட போராளி அன்புவின் மனைவி விஜயபாமா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி கோதை ஆகியோர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் மலர் வணக்கம் செலுத்தினர்.

# மட்டக்களப்பில் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்!

26.09.2026

மட்டக்களப்பில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை (26) தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா வில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப் பட்டதுடன், மலர் தூவி சுடர் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப் பட்டது.

தொடர்ந்து, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனை நினைவு கூரும் வகையில் இரண்டு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப் பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழரசுக் கட்சியின் முன் னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் நடராசா, செங்கலடி பிரதேச சபை தவிசாளர் முரளிதரன் உள்ளிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



கலந்துகொண்டவர்கள் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தியதுடன், அவரது ஈகத்தை நினைவுகூர்ந்தனர்.

# முல்லைத்தீவுப் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது நினைவேந்தல்!

27.09.2026

தமிழ் மக்களின் உரிமைக்காக ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் வணக்க நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை (26) முல்லைத்தீவு - கள்ளப் பாடு பகுதியில் அமைந்துள்ள வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு சுடரேற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

மேலும் குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப் பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மகாதேவா குணசிங்க




ராசா, தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ், சமூகசெயற்பாட்டாளர் மணிவண்ணன் நிறோஜன், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தார்கள்.

# வவுனியாவில் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்!

27.09.2026

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை (26) வவுனியா வில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

வவுனியா மாநகரசபை வாயிலுக்கு அருகில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபி வளாகத்தில் இந்த இந்நிகழ்வு நடை பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கம் மற்றும் தமிழ்த் தேசிய செயற்



பாட்டாளர் குழுமம் ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஈகைச்சுடரேற்றப்பட்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் வணக்கமமும் அகவணக்கமும் செலுத்தப்பட்டிருந்தது.

மேலும், இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப.சத் தியலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் பா.பாலேந்திரன், மாநகரசபை உறுப்பினரானார்கள், போரா-ளிகள் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய செயற் பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினர்.





# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை பெயர்த்து எடுத்து சென்ற அனுர அரச பொலிசார்!

27.09.2026

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் வணக்கத்துகாக வைக்கப் பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் வெண்கல சிலையை அனுர அரச பொலிசார் பெயர்த்து எடுத்து சென் றுள்ளனர்.











ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயம் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆம் ஆனது நினை வேந்தல் நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வான கடந்த 15ஆம் திகதி வெண்கல சிலை வைக்கப்பட்டு , தொடர்ந்து 12 நாட்கள் மலர் வணக்கம் நிகழ்வுகள் இடம்பெற்று, நேற்றைய தினம் சனிக்கிழமை இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெற்றன

இந்நிலையில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை நினை விவாலயத்திற்கு யாழ். பகுதிக்கான சிறீலங்காப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான சுமார் 20க்கும் மேற் பட்ட பொலிஸார், இரண்டு பொலிஸ் வாகனங்களில் வந்து சிலையை அங்கிருந்து பெயர்த்து எடுத்து சென்றுள்ளனர்

குறித்த சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் தமது கடுமையான கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.







# நெடுங்கேணி வெடுக்குநாரி ஆதிசிவன் ஆலய வளாகத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டது!

27.09.2026

நெடுங்கேணி வெடுக்குநாரி ஆதிசிவன் ஆலய வளாகத்தில் திடீரென புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கு பௌத்த பிக்குகள் எடுத்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

நேற்று புரட்டாசிச் சனிக்கிழமையை முன்னிட்டு, வெடுக்குநாரி ஆலயத்தில் பெருந்திரளான சைவப் பக்தர்கள் வருகை தந்து ஆதி சிவனுக்கு பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், பௌத்த பிக்கு ஒருவர் தலைமையில் வருகை தந்த குழுவினர் ஆதி சிவன் ஆலய வளாகத்தில் புத்தர் சிலை ஒன்றை வைத்து பௌத்த மத வழிபாடுகளுக்கான ஏற் பாடுகளை முன்னெடுக்க முயன்றமை அப்பகுதியில் பதட்ட நிலையை தோற்றுவித்தது.

சம்பவ இடத்தில் பெருமளவிலான சிறீலங்காப் பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டு புத்தர் சிலையை நிறுவுவதற்கான முயற்சியை மேற்கொண்ட நிலையிலும் பொது மக்களினால் குறித்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு, அவர்களின் பெயர் மற்றும் விவரங்களை முழு மையாகப் பதிந்த பின்னரே பொலிஸாரால் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

எனினும் பிக்குகளால் கொண்டுவரப்பட்ட புத்தர் சிலையை எதிர்ப்பின் காரணமாக மலைக்கு கீழே வைத்த பிக்கு தலைமை யிலான குழுவினர் அதற்கு பூஜை வழிபாடுகளை மேற் கொண்டனர்.



# யாழ். பலாலியில் 15 ஆவது வாரமாக மக்கள் போராட்டம் முன்னெடுப்பு!

27.09.2026

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள சிறீலங்கா ஜனாதிபதி எமது காணிகளை விடுவிக்க வேண்டும் என வலிகாமம் (வலி) வடக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி. வடக்கு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக்கோரி பலாலி சந்தியில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை 15ஆவது வாரமாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் சிறீலங்கா இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடு விக்குமாறு கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத் துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும் நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வரும் நிலையில் தமது வீடுகள் காணிகளை விடுவிக்க வேண்டும் என கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மயிலிட்டி மக்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளில் தமது காணி-களை விடுவிக்க வேண்டும் என போராடி வரும் நிலையில் பலாலி மக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை 15ஆவது ஞாயிற்றுக்கிழமையாக போராட் டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



www.thuyarpakirvu.com

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவச்சிலை அகற்றப்பட்டமைக்கு எதிராக யாழில் போராட்டம்

27.09.2026

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் வணக்கத்துகாக வைக்கப்பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை சிறீலங்காப் பொலிசார் பெயர்த்து எடுத்து சென்றமையை கண்டித்தும், சிலையை மீள அவ்விடத்தில் நிறுவ வேண்டும் எனவும் யாழில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.







ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயம் முன்பாக இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயம் பகுதியில் ஈகையர் திலீபனின் 39ஆம் ஆனது நினைவேந்தல் நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வான கடந்த 15ஆம் திகதி சிலை வைக்கப்பட்டு, தொடர்ந்து 12 நாட்கள் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்று, நேற்றைய நாள் சனிக்கிழமை இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெற்றன

இந்நிலையில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை நினைவாலயத்திற்கு யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான சுமார் 20க்கும் மேற்பட்ட பொலிசார், இரண்டு பொலிஸ் வாகனங்களில் வந்து சிலையை அங்கிருந்து பெயர்த்து எடுத்து சென்றுள்ளனர்.

பொலிசாரினால் சிலை பெயர்த்து எடுத்து செல்லபட்டதனை கண்டித்தும், மீள அந்த சிலையை அவ்விடத்தில் நிறுவ வேண்டும் என கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# நெடுங்கேணி வெடுக்குநாறி மலையை மையப்படுத்தி 51 ஏக்கர் வனப் பகுதியை அளவீடு செய்வதற்கு முயற்சி

27.09.2026

நெடுங்கேணி வெடுக்குநாறி மலையை மையப்படுத்திய 51 ஏக்கர் வனப்பகுதியை தொல்பொருளில் திணைக்களத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் சம்பந்தமாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 1921ஆம் ஆண்டு வர்த்தமானி ஊடாக பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக வவுனியா நைனாமடு வனம் வனப்பாதுகாப்பு திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த பகுதியிலுள்ள ஒலுமடு கிராமசேவையாளர் பிரிவின் வெடுக்குநாறிமலை சிவன் ஆலயம் உள்ளடங்கலாக 51 ஏக்கர் காணியை தொல்பொருளியல் திணைக்களம் தமது ஆய்வுகளுக்கான விடுவிக்கக்கோரி நெடுங்கேணி பிரதேச செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

குறித்த கடிதத்தை அடுத்து, நெடுங்கேணி பிரதேச செயலாளர் வனவளத்திணைக்களத்திடமிருந்து மீளப்பெற்று தொல்பொருளியல் திணைக்களத்துக்கு வழங்குவதற்காக அப்பகுதியை அளவீடு செய்து தருமாறு நில அளவையாளர் திணைக்களத்திற்கு கோரிக்கை கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் நில அளவையாளர் திணைக்களம், குறித்த பகுதியை அளவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, ஒலுமடு 222 பீ கிராம அலுவலர் பிரிவில், வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான நைனாமடு வனப் பகுதியில் அமைந்துள்ள வடுன்னாகல தொல்லியல் இடம் தற்போது தமது நிறுவனத்தினால் ஆய்வு செய்யப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த இடத்தை தொல்லியல் பாதுகாப்புப் பகுதியாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, 2026 செப்டெம்பர் 21ஆம் திகதி குருந்தி ரஜமகா விகாரையின் விகாராதிபதி தேரருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றின் மூலம், பதில் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ. செனரத் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் பழைய பௌத்த விகாரையொன்றுடன் தொடர்புடைய தொல்லியல் சான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதன்படி இந்த இடத்தின் வரலாற்றுச் சிறப்பு அனுராதபுரத்தின் ஆரம்ப காலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழைய தூபி, பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மூன்று குகைக் கல்வெட்டுகள், கடாரங்கள் செதுக்கப்பட்ட எட்டு குகைகள் மற்றும் கட்டிட இடிபாடுகள் உள்ளிட்ட பழைய பௌத்த விகாரையொன்றுடன் தொடர்புடைய தொல்லியல் சான்றுகள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.



அதன்படி, இந்த இடத்தின் வரலாற்றுச் சிறப்பு அனுராதபுரத்தின் ஆரம்ப காலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, இந்த தொல்லியல் இடத்தை எதிர்காலத்திற்காகப் பாதுகாப்பது எமது நிறுவனத்தினதும், தாங்கள் உள்ளிட்ட அனைவரினதும் பொறுப்பு எனக் கருதுகிறேன் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் வவுனியா வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம், இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக வன்னி வாழ் சைவ தமிழ் பக்தர்களால் வழிபடப்பட்டு வரும் மலைக் கோயில் பிரதேச தமிழ் மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

www.thuyarpakirvu.com

# ஈகையர் லெப். கேணல் திலீபனின் சிலை அகற்றப்பட்டதைக் கண்டித்து அம்பாறை திருக்கோவிலில் போராட்டம்

28.09.2026








அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாக, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை பொலிசாரால் அகற்றப்பட் டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவுமாறு கோரியும் இன்று திங்கட்கிழமை (28) கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஏற்பாட்டில், தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு இப்போராட்டம், முன்னெடுக்கப் பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளின் ஆரம்ப நாளான கடந்த 15ஆம் திகதி, தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள நினைவிடப் பகுதியில் சிலை நிறுவப்பட்டிருந்தது. தொடர்ந்து 12 நாட்கள் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்ற நிலையில், கடந்த சனிக்கிழமை (26) இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதனையடுத்து, நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) யாழ்ப்பாணத் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமை யில் 20க்கும் மேற்பட்ட பொலிசார் இரண்டு பொலிஸ் வாக னங்களில் வருகை தந்து, குறித்த சிலையை அங்கிருந்து அகற்றிச் சென்றதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரி வித்தனர்.

நல்லூரில் நிறுவப்பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை பொலிசாரால் அகற்றப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், அதனை மீண்டும் உரிய இடத்தில் நிறுவுமாறு கோரியும் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் இன்று கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி,

"தியாகி திலீபனின் சிலை பொலிசாரால் அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

தியாகி திலீபன் தமிழ் மக்களுக்காக உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டு தனது உயிரைத் தியாகம் செய்தவர். அவரது சிலை அகற்றப்பட்டமை எங்களுக்கு மிகுந்த கவலையளிக் கிறது. எனவே, சிலை நிறுவப்பட்ட அதே இடத்தில் மீண்டும் அதனை நிறுவ வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

பல வருடங்களாக எமது உறவுகளைத் தேடி போராடி வருகின் றோம். எமது போராட்டங்களுக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்காத நிலையில், தியாகி திலீபனின் நினைவாக அமைக் கப்பட்ட சிலையும் அகற்றப்பட்டிருப்பது எமது மனங்களை மேலும் பாதித்துள்ளது.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களின் நினைவாக சிலைகள் அமைக்கப்பட் டுள்ளன. அந்த வகையில், தியாகி திலீபனின் சிலையையும் மீண்டும் உரிய இடத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது உறவுகளுக்கான நீதியையும், சிலையை மீண்டும் நிறுவுவதற்கான நடவடிக்கையையும் அரசாங்கம் மேற் கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார்.

சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிப் படுத்திய போராட்டக்காரர்கள், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

# ஈகையர் லெப். கேணல் திலீபனின் சிலை அகற்றப்பட்டதைக் கண்டித்து மட்டக்களப்பில் பாரிய கவனயீர்ப்புப் போராட்டம்!

28.09.2026




யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவச் சிலை அகற்றப்பட்டமைய யைக் கண்டித்து மட்டக்களப்பில் இன்று (28.09.2026) பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின உருவச் சிலை அகற் றப்பட்டமை மற்றும் பொலிசாரின் நடவடிக்கைகளுக்குக் கடும் கண்டனம் தெரிவித்து போராட்டங்காரர்கள், தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை அரசாங்கமும் பொலிசாரும் உடனடியாக உறுதிப்படுத்த வேண்டும் என வலியுஞத்தி முழக் கங்களை எழுப்பினர்

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறீநேசன், ஶ்ரீநாத் உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்கள், மாவட்ட வலிந்து காணாமல் அக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கப் பிரதிநிதிகள், மதகுருமார்கள், சிவில் சமூகச் செயற் பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந் திரளானோர் கலந்துகொண்டு தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.






# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவச்சிலை மீள நிறுவப்பட வேண்டுமென வலியுறுத்தி வட, தென் தமிழீழம் எங்கும் கவனயீர்ப்பு போராட்டம்

29.09.2026

யாழ். நல்லூரில் உள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருந்த திருவுருவச்சிலை சிறீலங்காப் பொலிசாரால் அகற்றப்பட்டமையைக் கண்டித்தும், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவச் சிலையை மீளவும் உரிய இடத்தில் உடனடியாக வைக்குமாறு கோரியும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் எட்டு மாவட்டங்களிலும் திங்கட்கிழமை (28) பிற்பகல் 2 மணிக்கு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.









இதன்போது, வலிந்து காணாலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் என்று பலரும் பங்கேற்றிருந்ததோடு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு எதிராகவும், பொலிசாருக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பியும், பதாகைகளை தாங்கியவாறும் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்.மாவட்டத்தில் நல்லூரில் உள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் யாழ் மாவட்ட தலைவி இளங்கோதையின் தலைமையில் நடைபெற்ற இந்தப்போராட்டத்தில் பங்கேற்றவர்கள், அகிம்சையின் வடிவில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன், சிங்கள படைகளுக்கு வட, கிழக்கில் சிலை, அதிகார பலத்தால் வரலாற்றை அழிக்காதே உள்ளிட்ட பல பதாகைகளை தாங்கியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் போராட்டம் நடைபெற்றிருந்தது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் கந்தசாமி கோவிலடியில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை மீள நிறுவுமாறு வலியுறுத்தி கிளிநொச்சி கச்சேரி வரையும் பேரணியாகச் சென்றதோடு பின்னர் வீதியின் ஒருமருங்கில் நின்றவாறு கோசங்களை எழுப்பி தமது கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் வெளியிட்டனர்.

**மன்னார்**

மன்னாரில் தந்தை செல்வா நினைவுத்தூபக்கு அருகில் ஒன்றுகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை அகற்றப்பட்டமைக்கு தமது எதிர்ப்புக்களை வெளியிட்டதோடு அகிம்சை வழியிலான ஈகத்தை மதிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார்கள்.

**வவுனியா**

வவுனியாவில் பொங்குதமிழ் நினைவுத் தூபியடியில் ஒன்றுகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் அரசியல், சிவில் தரப்பினரும் பழைய பேருந்து நிலையம் வரையில் பேரணியாகச் சென்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை அகற்றி தமிழ் மக்களின் உணர்வுகளுடன் விளையாட வேண்டாமென எச்சரிக்கை விடுத்தனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாங்குளத்தில் ஒன்றுகூடி தமது எதிர்பபினை வெளியிட்டனர். இந்தப்போராட்டத்தில் ரவிகரன் உள்ளிட்ட அரசியல் தரப்பினரும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்டத்தின் சிவன் கோவிலடியில் சொற்ப அளவிலானவர்களின் ஒன்று கூடலுடன் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. இதிலும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரதானமாக கலங்து கொண்டிருந்தனர்.

**அம்பாறை**

அம்பாறை மாவட்டத்தில் தம்பிலுவில் மத்திய சந்தையடியில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரம் வரைசென்று தமது எதிர்ப்பினை வெளியிட்டதோடு மீண்டும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை நிறுப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மட்டக்களப்பு

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவச் சிலை அகற்றப்பட்டமையைக் கண்டித்து மட்டக்களப்பில் அம்மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில், காந்தி பூங்கா வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பாடாளுமன்ற உறுப்பினர்களான, சிறீநேசன், ஸ்ரீநாத் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் மதகுருமார்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிலையை மீள உரிய இடத்தில் நிறுவ வேண்டுமென வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கிழக்கில் கடற்படையின் ஆக்கிரமிப்பிலுள்ள ‘அரிச்சல்பாடு’ மீன்பிடி இறங்குதுறையை எல்லைப்படுத்துக!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

30.09.2026

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கில், கோத்தபாய கடற்படை முகாம் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள “அரிச்சல்பாடு” என்னும் கடற்தொழில் இறங்குதுறையினை எல்லைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலகத்தில் கடந்த 28.09.2026ஆம் திகதியன்று இடம்பெற்ற கடற்தொழில் இறங்குதுறைகளை எல்லைப்படுத்துவது தொடர்பான விசேட கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினரால் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்தொழிலாளர்களின் பயன்பாட்டிலுள்ள 41கடற்தொழில் இறங்குதுறைகளையே தாம் எல்லைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், குறித்த “அரிச்சல்பாடு” என்னும் இறங்குதுறைக்குரிய உரிமையாளர், இறங்குதுறைக்கான பணத்தை செலுத்தினால் அந்த இறங்குதுறையினையும் எல்லைப்படுத்த தம்மால் நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.



**தான் நேசித்த மக்களுக்காக, தன் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உன்னதமான தியாகத்தைச் செய்யமடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் திலீபன் செய்திருக்கிறான்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமையை கேள்விக்குள்ளாக்கி, தியாகதீபம் திலீபனின் வெண்கலச் சிலையை அகற்றிச் சென்ற சிறீலங்கா அரச பேரினவாத அடக்குமுறைக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கண்டனம் – 28.09.2026

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University Students' Union - University of Jaffna
UOJUSU.INFO@GMAIL.COM JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

28/09/2026
ஊடக அறிக்கை

தமிழ் மக்களின் நினைவுகூரும் உரிமையை கேள்விக்குள்ளாக்கி, தியாகதீபம் திலீபனின் வெண்கலச் சிலையை அகற்றிச் சென்ற சிறீலங்கா அரச பேரினவாத அடக்குமுறைக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கண்டனம்

தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது வெண்கலச் சிலையை சிறிலங்கா காவற்துறையினர், 27/09/2026 அன்று காலை 6:30 மணியளவில், அத்துமீறி அகற்றி எடுத்துச் சென்றுள்ள செயலிற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக எமது கண்டனங்களைப் பதிவு செய்கின்றோம். இச்செயல், தமிழ் மக்களின் நினைவேந்தல் உள்ளிட்ட கூட்டுரிமைகளின் மீது தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதலாகும். இது தொடர்ந்து ஆளும் சிறிலங்கா அரசுகளின் புரையோடிப் போயுள்ள சிங்கள பௌத்த பேரினவாத மனோ நிலையின் மாறாத வடிவமொன்றாகும்.

தமிழர் தாயக விடுதலைக்காக அறப்போர் செய்து தன்னுயிர் ஈந்த தியாகதீபம் திலீபன் அவர்களை அமைதி வழியில் நினைவுகூருவது என்பது தமிழர்களின் அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையைத் தொடர்ச்சியாகப் பறிப்பதும், நினைவுச் சின்னங்களை அகற்றுவதும், சிறிலங்கா அரச பேரினவாதம் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாகத் தனது அடக்குமுறையைக் காட்டி நிற்பதற்கு ஒரு தெளிவான ஆதாரமாக விளங்குகின்றது.

தமிழர்களின் தாயகமெங்கும் கடந்த கால ஆட்சியாளர்களால் தமிழ் மக்களை உளவியல் ரீதியாக ஒடுக்கும் நோக்கோடு பெருமளவான 'போர் வெற்றிச் சின்னங்கள்' நிறுவப்பட்டுள்ளன. பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக அவை இன்றும் தமிழர் தேசத்தில் திணிக்கப்பட்டு சிறிலங்கா இராணுவத்தால் பராமரிக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக தமிழ் மக்களைத் துன்புறுத்தும் வகையாக சிறிலங்கா அரசின் வெற்றிச் சின்னங்கள் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை, அறப்போர் செய்து தன்னுயிர் ஈந்த ஒருவரை தமிழ் மக்கள் கண்ணீரோடு நினைவுகூருவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நினைவுச் சிலையை அங்கிருந்து அகற்றிச் செல்வது எத்தகைய நீதி?

இவ்வாறு மீண்டும் மீண்டும் தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டி, அவர்களின் மனங்களைத் துன்புறுத்துகின்ற இத்தகைய செயற்பாடுகள், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கொந்தளிப்பான ஒரு மனநிலையை ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி, தமிழ் மக்கள் மீதான பேரினவாத சக்திகளின் தொடர்ச்சியான இனவாதப் போக்கிற்கு, அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளித்து வருகின்றது என்பதையே இந்தச் செயற்பாடு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. ஒடுக்கப்படும் மக்களின் மனங்களை மேலும் ரணப்படுத்தும் இத்தகைய சீண்டல்கள், நல்லிணக்க மாயைக்குப் பின்னிருந்து மெல்ல வெளித்தெரியும் சிங்கள - பௌத்த பேரினவாத மனோநிலையேயன்றி வேறில்லை.

(1/2)

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University Students' Union - University of Jaffna
UOJUSU.INFO@GMAIL.COM JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

சிறிலங்கா அரசிற்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் 'பயங்கரவாதிகள்' என முத்திரை குத்தப்பட்ட ஜே.வி.பியினரின் நினைவுச் சின்னங்களை நிறுவி, நினைவேந்தல்களை தெற்கில் பகிரங்கமாக முன்னெடுப்பதற்கும் சிறிலங்கா அரச இயந்திரங்கள் ஆதரவளித்து வருகின்றன. தெற்கில் அரசைக் கவிழ்க்க ஆயுதமேந்தியவர்கள் சுதந்திரமாகக் கொண்டாடப்படுவதும், வடக்கில் தமிழர் உரிமைக்காக அமைதி வழியில் உயிரீகம் செய்தவரை நினைவு கூருதல் குற்றமாக்கப்படுவதும் எவ்வகையில் ஜனநாயகம்? இதுதான் சிறீலங்கா அரசு கூறும் 'சமத்துவமா'?

ஈழத்தமிழர் மனங்களில் பதிந்துவிட்ட தியாக தீபத்தை, அடக்குமுறைகள் மூலம் தமிழர் மனங்களிலிருந்து அகற்றிவிடலாம் என எண்ணும் சிறிலங்கா அரச இயந்திரத்திற்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறோம் - 'உங்களால் சிலைகளை மட்டும் தான் அகற்ற முடியுமேயன்றி, தமிழர் தேசக் கனவையல்ல!'

அகற்றப்பட்ட தியாகதீபம் திலீபன் அவர்களின் சிலை மீண்டும் அதே இடத்தில் முறைப்படி நிறுவப்படும் வரை, தமிழர் தாயகம் எங்கும் மக்கள் போராட்டங்கள் ஓயாது தொடர்ந்து நடைபெறும்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் இந்தத் தொடர்ச்சியான சிறிலங்கா அரச அடக்குமுறைக்கு எதிராக அனைத்து ஜனநாயக மற்றும் மனித உரிமைச் சக்திகளும் ஓரணியில் திரண்டு குரல்கொடுக்க வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுக்கிறது.

நன்றி

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தலைவர்
Y.Thusanthan
President
University students' union
University of Jaffna

செயலாளர்

(2/2)

# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயம் முன் ஏற்றப்பட்ட அணையா விளங்கு!

30.09.2026

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை சிறீலங்காப் பொலிசார் பெயர்த்து எடுத்து சென்றமையை கண்டித்தும், சிலையை மீள அவ்விடத்தில் நிறுவ வேண்டும் எனவும் யாழ்ப்பாணத்தில் இன்றைய நாள் முதல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரையில் அணையா விளக்கு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.










ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயம் முன்பாக இன்றய நாள் புதன்கிழமை மாலை விளக்கு ஏற்றப்பட்டு, அதனை அணைய விடாது நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை வரை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த அணையா விளக்கு போராட்டம், பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் இருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான சுமார் 20க்கும் மேற்பட்ட பொலிசார், இரண்டு பொலிஸ் வாகனங்களில் வந்து சிலையை அங்கிருந்து பெயர்த்து எடுத்து சென்றுள்ளனர்.

பொலிசாரினால் சிலை பெயர்த்து எடுத்து செல்லப்பட்டதனை கண்டித்தும், மீள அந்த சிலையை அவ்விடத்தில் நிறுவ வேண்டும் என கோரியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை குறித்த சிலையை மீள அவ்விடத்தில் நிறுவ வேண்டும் என சிலை எடுத்து செல்லப்பட்ட நாளான ஞாயிற்றுக்கிழமை ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டிலும், மறுநாள் திங்கட் கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாலும், மூன்றாவது நாளாக நேற்று செவ்வாய்க் கிழமை பொது அமைப்புக்களின் ஏற்பாட்டிலும் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்றைய நாள் புதன்கிழமை நினைவாலயம் முன்பாக விளக்கு ஏற்பட்டு, நாளைய மறுநாள் வரையில் விளக்கினை அணைக்காது இரவு பகலாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கனடியச் செய்திகள்

## பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் கனடாவும் பிரான்சும் உடன்பாடு!

20.09.2026

பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்ணி ஆகியோர், பாதுகாப்பு, எரிசக்தி மற்றும் வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் தங்கள் நாடுகளுக்கு இடையேயான ஆழமான ஒத்துழைப்பை அறிவித்தனர்.

கனடாவின் அட்லாண்டிக் கடற்கரைக்கு அப்பால் அமைந்துள்ள ஒரு சிறிய பிரெஞ்சுப் பிரதேசமான செயிண்ட் பியர் மற்றும் மிக் வெலோனிலிருந்து, இரு தலைவர்களும் ஞாயிற்றுக்கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

கார்ணியின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையின்படி, தலைவர்கள் விண்வெளி, ஆற்றல், முக்கிய கனிமங்கள் மற்றும் குவாண்டம் கணினி, செயற்கைக்கோள்கள், சூப்பர் கம்ப்யூட்டிங் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விவாதித்தனர்.

இரு நாடுகளும் அமெரிக்காவுடன் பதட்டமான உறவுகளை எதிர்கொண்டு வரும் நிலையில், ஐரோப்பாவை நோக்கிய கனடாவின் வேகமான நகர்வில் இந்த நடவடிக்கை மற்றுமொரு படியாகும்.

கார்னியின் பிரஸ்ஸல்ஸ் பயணத்தைத் தொடர்ந்து மக்ரோனுக்கும் கார்னிக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது அப்பயணத்தின்போது ஐரோப்பிய ஒன்றியம் கனடாவுக்கு “இணை உறுப்பினர்“ அந்தஸ்தை வழங்கியது .



## ‘தமிழீழப் பெண்’ என்ற அடையாளத்தையே விரும்புகிறேன்!

### நடிகை மைத்ரேயி இராமகிருஷ்ணன்

24.09.2026

கனடாவைச் சேர்ந்த நடிகை மைத்ரேயி இராமகிருஷ்ணன், தன்னை தமிழீழப்பெண் என்று அடையாளப்படுத்தவே விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் என்பதற்கு பதிலாக தமிழீழப்பெண் என்ற அடையாளத்தையே விரும்புகிறேன் என கனடாவைச் சேர்ந்த நடிகை மைத்ரேயி இராமகிருஷ்ணன் கூறியுள்ளது பேசுபொருளாகியுள்ளது.

நெவர் ஹேவ் ஐ எவர், தி பாய்ஸ் தொடர்களிலும், ஃப்ரீகியர் ஃப்ரைடே மற்றும் நெட்பிலிக்சில் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ள ‘பெஸ்ட் ஆப் பெஸ்ட்’ திரைப்படங்களில் நடித்தவர் மைத்ரேயி இராமகிருஷ்ணன்.

24 வயது நடிகையான இவர் கனடாவின் Mississauga பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். எனினும் இலங்கை ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் தற்போது பேசியுள்ள விடயம் பேசுபொருளாகியுள்ளது.

மைத்ரேயி தனது புதிய நெட்பிலிக்ஸ் திரைப்படத்தின் (பெஸ்ட் ஆப் பெஸ்ட்) விளம்பர நடவடிக்கையின்போது, தன்னை ஒரு “தமிழீழப் பெண்” என்று குறிப்பிட்டதைத் தொடர்ந்து, தனது அடையாளம் குறித்த கடுமையான விமர்சனங்களை எதிர் கொண்டு வருகிறார்.

அதாவது, “எனது கலாச்சாரம் தமிழ். எனது நாடு கனடா; இலங்கை தமிழர் என்பதற்கு பதிலாக தமிழீழப்பெண் என தன்னை அடையாளப்படுத்தவே விரும்புகிறேன்” என மைத் ரேயி இராமகிருஷ்ணன் கூறியிருந்தார்.

இந்த நிலையில், தன்னை இலங்கைத் தமிழராக கருதாமல் ‘தமிழ்-கனேடியர்’ என்றே அடையாளப்படுத்திக் கொள்வதாகவும் மைத்ரேயி குறிப்பிட்டிருக்கிறார். அவரது இந்த அடை யாள வெளிப்பாடு அப்படத்திலும் இடம்பெற்றுள்ளது.

ஒரு காட்சியில் மைத்ரேயியை ஒரு கதாபாத்திரம் இந்தியர் என்று தவறாக கருதுகிறது. அதற்கு அவர், “நான் தமிழர். என் குடும்பத்தினர் இலங்கையைச் சேர்ந்தவர்கள்” என்று திருத்தம் செய்கிறார்.

ஆனால், அந்த காட்சியின் முந்தைய வடிவத்தில் மைத்ரேயி, தன்னை “இலங்கைத் தமிழர்” என்று குறிப்பிடுவது போல் அமைக்கப்பட்டிருந்தது.



பின்னர் தன்னை அவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்ளாத தால், அந்த வசனத்தை மாற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டார். தனது சொந்தக் குடும்பப் பின்னணியைக் கொண்டு இதற்கான வித்தியாசத்தை அவர் விளக்கியிருக்கிறார். அவரது பெற்றோர் இலங்கையில் வளர்ந்தவர்கள் பின்னர் உள்நாட்டுப் போரின் காரணமாக அங்கிருந்து புலம்பெயர்ந்துள்ளனர்.

மைத்ரேயி தனது இலங்கை அடையாளத்தில் இருந்து விலகி செல்வதாக கருதும் தரப்பினர், அவரது இந்த கருத்துகளால் அதிருப்தி அடைந்துள்ளனர். அதனால் மீது எதிர்மறையான விமர்சனங்கள் கிளப்பியுள்ளன. அவருக்கு எதிராக இலங்கையைச் சேர்ந்த பல இணையப் பக்கங்களும் கருத்துக்களை பதிவிடுகின்றன.

அதே சமயம் தமிழ் புலம்பெயர் சமூகத்தினர் பலரும் அவருக்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். அவர் தன்னை ஒரு தமிழர் என்று அடையாளப்படுத்துவதை வேறு பலரும் வரவேற்றுள்ளனர்.

# RECOGNISE LIBERATION TIGERS OF THAMIL EELAM AS A LIBERATION ORGANISATION



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தமிழ் நாட்டுச் செய்திகள்



## தமிழில் குடமுழுக்கு நடத்தக்கோரி மதுரை மீனாட்சி அம்மன் கோயில் முன்பு தமிழ் வேள்வியாளர் காத்திருப்பு போராட்டம்!

15.09.2026

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தமிழில் குடமுழுக்கு நடத்த வேண்டும் என கோயில் முன்பு தமிழ் வேள்வியாளர்கள் நேற்று காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களோடு அமைச்சர் நிர்மல்குமார் பேச்சுவார்த்தை நடத்தி கோயிலுக்குள் அனுமதிப்பதாக உறுதி அளித்தார். இதுதவிர தமிழில் குடமுழுக்கு நடத்த ஏற்பாடுகள் நடப்பதாக அமைச்சர் ரமேஷ் தெரிவித்தார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தமிழில் குடமுழுக்கு நடத்த வேண்டும், தமிழ் வேள்வியாளர்கள், அர்ச்சகர்கள், ஓதுவார்கள் மூலம் தமிழில் மந்திரங்கள் ஓதி வேள்வி நடத்த வேண்டும். யாகசாலை, குடமுழுக்கு, கருவறையில் தமிழில் வேள்விகள் நடத்த வேண்டும் என தெய்வத் தமிழ்ப் பேரவையினர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

உயர் நீதிமன்ற உத்தரவுப்படி சம்ஸ்கிருதத்துக்கு இணையாக தமிழில் வேள்வி நடத்த வேண்டும் எனவும், தமிழில் வேள்வி நடத்துவதை ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் வலியுறத்தி நேற்று முன்தினம் சென்னை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் தெய்வத்தமிழ் பேரவையினர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு நடந்த பேச்சுவார்த்தையில், கவுதமன், சத்தியபாமா, தமிழ் மணி, காயத்ரி அடங்கிய தமிழ் வேள்வியாளர்கள், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் இணை ஆணையர் க.செல்லத்துரையை சந்திக்க அனுமதி அளிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி இவர்கள் நேற்று அம்மன் சந்நிதி வழியாக கோயிலுக்குள் செல்ல காவல் துறையினர் மற்றும் கோயில் நிர்வாகத்தினர் மறுப்புத் தெரிவித்தனர். இதனால் கோயில் முன்பு சத்தியபாமா தலைமையில் தமிழ் வேள்வியாளர்கள் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்பு இவர்களோடு அமைச்சர் நிர்மல்குமார் பேச்சுவார்த்தை நடத்தினார். கோயிலுக்குள் செல்ல அனுமதி பெற்றுத் தரப்படும் என தெரிவித்தார்.

தமிழ் ஓதுவார்கள்: இந்நிலையில் மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா ஏற்பாடுகளை பார்வையிட்ட பிறகு அமைச்சர் ரமேஷ் கூறியது: குடமுழுக்கு விழாவில் தமிழில் பாராயணம் செய்வதற்கு தமிழகம் முழுவதும் இருந்து 27 ஓதுவார்களை நியமித்துளோம். முதல்வர் எப்போதும் தமிழை முன்னிறுத்தக் கூடியவர். தவெக ஆட்சியில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். அதன்படி கடந்த 11ஆம் தேதியிலிருந்து ஓதுவார்கள் தமிழில் மந்திரங்கள் ஓதி வருகின்றனர். தமிழில் குடமுழுக்கு நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அரசால் நியமிக்கப்பட்ட ஓதுவார்கள் யாரும் போராட்டம் செய்யவில்லை. அவர்கள் யாகசாலையில் பணியாற்றுகின்றனர். கோபுரக் கலசத்தில் நீர் ஊற்றவும், கருவறைக்குள் சென்று குடமுழுக்கு செய்யவும் தமிழ் ஓதுவார்கள் அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறு கூறினார்.



அமைச்சர் நிர்மல்குமார் கூறுகையில், அறங்காவலர் குழு தலைவர் மற்றும் அறங்காவலர்களைத் தொடர்புகொண்டு அவர்களுக்கு எத்தகைய ஆதரவு தேவை என்பதை இணை ஆணையர் மூலம் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வோம். குடமுழுக்கு விழா பாஸ் தொடர்பாக பல தவறான தகவல்கள் வருகின்றன. இதுவரை நான் 'பாஸ்'களை கண்ணால்கூட பார்க்கவில்லை. அதில் நான் தலையிடவே இல்லை. கோயில் நிர்வாகம் இணை ஆணையர் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. அதில் நான் தலையிடவில்லை. சிட்டிங் எம்.பி., எம்எல்ஏக்களுக்கு கோயில் நடைமுறைப்படி பாஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

## தனியார்மய எண்ணத்தை முதல்வர் விஜய் கைவிடவேண்டும்!

### தமிழக வாழ்வுரிமைக்கட்சியின் தலைவர் தி. வேல்முருகன்

19.09.2026

தனியார்மய எண்ணத்தை முதல்வர் விஜய் முற்றிலுமாகக் கைவிட்டு, அரசின் நேரடி கண்காணிப்பிலேயே விமான நிலைய உள்கட்டமைப்பை தரம் உயர்த்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக்கட்சி தலைவர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “சென்னை விமான நிலையத்தை தற்போது இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI) என்ற மத்திய அரசின் பொதுத்துறை அமைப்பு நிர்வகித்து வருகிறது. இந்நிலையில், இந்திய விமான நிலையங்கள் ஆணையத்துக்குப் பதிலாக மாற்று ஆபரேட்டரை நியமிக்கக் கோரி பிரதமருக்கு முதல்வர் விஜய் கடிதம் எழுதியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது, சென்னை விமான நிலையத்தின் நிர்வாகத்தைத் தனியார் வசம் ஒப்படைப்பதற்கான அடித்தளமாக அமையுமோ என்ற தீவிர ஐயத்தை ஏற்படுத்துகிறது. பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்த வேண்டிய காலகட்டத்தில், நிர்வாகத்தை மாற்ற முனையும் இந்த அணுகுமுறையை வன்மையாக கண்டிகிறோம்.

பயணிகளுக்கான உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, சரக்கு கையாளும் திறன் மற்றும் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், அதற்கான தீர்வு அரசு நிர்வாகத்தை மாற்றுவதுதானா? இந்திய விமான நிலையங்கள் ஆணைய நிர்வாகத்தில் குறைபாடுகள் இருப்பின், அவற்றைச் சுட்டிக்காட்டி தேவையான நிதி, அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் மனித வள கட்டமைப்புகளை பெற்றுத் தந்து திறம்பட செயல்பட வைப்பதே மக்கள் நல அரசின் பொறுப்பாகும்.

தமிழக அரசு, இந்திய விமான நிலையங்கள் ஆணைய நிர்வாகத்தில் உள்ள இடர்பாடுகளை வெளிப்படையாக ஆராய்ந்து, அவற்றை மத்திய அரசுடன் இணைந்து களைய முன்வர வேண்டும். விமான நிலைய நிர்வாகம் மற்றும் விரிவாக்கம் தொடர்பான அனைத்து முடிவுகள், ஒப்பந்த விதிகள் மற்றும் பொருளாதார தாக்கங்களை மக்களிடம் வெளிப்படையாக முன்வைக்க வேண்டும். சென்னை விமான நிலையம் என்பது போக்குவரத்து தளம் மட்டுமல்ல. அது தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான முதன்மை நுழைவாயில். அதன் எதிர்காலம் சார்ந்த முடிவுகள் பெருநிறுவனங்களின் லாபத்தை முன்னிறுத்தாமல், தமிழகத்தின் மக்களின் நலனையும் பொதுச்



சொத்து பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில் அமைய வேண்டும். எனவே, தனியார்மய எண்ணத்தை முதல்வர் விஜய் முற்றிலுமாகக் கைவிட்டு, அரசின் நேரடி கண்காணிப்பிலேயே விமான நிலைய உள்கட்டமைப்பை தரம் உயர்த்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION
www.sangathamil.com

# இந்தியாவின் தொன்மைக் குடிகள் தமிழர்களே என்பதை மறைக்க முயற்சியா? இந்திய ஒன்றிய அமைச்சருக்கு உலகத்தமிழர் பேரமைப்பின் சார்பில் பழ. நெடுமாறன் கடும் கண்டனம்

24.09.2026

கீழடி அகழாய்வை முதன்முதலாக நடத்திய இந்தியத் தொல்லியல்துறை இயக்குநர் கே. அமர்நாத் இராமகிருஷ்ணா மூன்றாண்டுகளுக்கு முன்பு சமர்ப்பித்த தொல்லியல் அறிக்கையை இதுவரை வெளியிடாமல் பல்வேறு குறைகள் இருப்பதாக குற்றம் சாட்டி வந்த ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் இப்போது புதிய குற்றச்சாட்டு ஒன்றினை சுமத்தியுள்ளார்.

தமது அறிக்கையைத் தயாரிக்கும்போது அமர்நாத் இராமகிருஷ்ணா அப்போதைய தி.மு.க. அரசின் செல்வாக்குக்குட்பட்டு இந்த அறிக்கையைக் கொடுத்ததாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், கீழடி அகழாய்வை அமர்நாத் நடத்தியபோதும், அதன் முடிவுகளை அறிவித்த போதும் அ.தி.மு.க. அரசு பதவி வகித்தது என்பதையும், கீழடி அகழாய்வு பிரச்சனையில் அந்த அரசு ஒருபோதும் தலையிடவில்லை என்பதையும் அடியோடு மறைத்து பழி சுமத்தியுள்ளார்.

கீழடி அகழாய்வு முடிவுகள் வெளிவந்த பிறகு, பதவிக்கு வந்த தி.மு.க. அரசின் காலத்தில் கீழடி அகழாய்வை மத்திய அரசு கைவிட்ட காரணத்தினால், தமிழகத் தொல்லாய்வுத் துறையை கொண்டு அகழாய்வைத் தொடர்ந்து நடத்தி அறிவியல் பூர்வமான பல முடிவுகளை வெளியிட்டது. அமர்நாத் அகழாய்வு முடிவுகளில் அது ஒருபோதும் தலையிடவில்லை.

கீழடி அகழாய்வு அறிக்கையை அமர்நாத் அளித்து மூன்றாண்டுகளாகிவிட்டது. 982 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையைப் பொதுவெளியில் வெளியிட அமைச்சருக்குத் துணிவு உண்டா? அந்த அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும். இந்தியாவில் உள்ள பல்வேறு தொல்லாய்வு அறிஞர்கள், உலக நாடுகளைச் சேர்ந்த தொல்லாய்வு அறிஞர்கள் ஆகியோர் அந்த அறிக்கையை ஆராய்ந்து பாராட்டுவார்களே தவிர, குறையிருப்பதாக ஒருவரும் கூறமாட்டார்கள்.

இந்தியாவின் மூத்த குடி தமிழர்களே என்பதை அண்மையில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் மெய்ப்பித்துள்ளன. ஆனால், பா.ச.க. அரசு அதை மறைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. கி.பி. 2004-2005 ஆண்டுகளின் ஆதிச்சநல்லூரில் அகழாய்வு புதியதாக நடத்தப்பெற்று, அதை நடத்திய இந்தியத் தொல்லியல் அதிகாரி டி. சத்தியமூர்த்தி என்பவர் அறிக்கை அளித்து 21 ஆண்டுகளான பிறகும், அதை இன்னும் வெளியிடாமல் மறைப்பது ஏன்? இது



இந்தியாவின் தொல்குடி தமிழினமே என்ற வரலாற்று உண்மையை மறைப்பதற்கு யாராலும் இயலாது. தங்களது உள்நோக்கத்தையும் மறைத்துக்கொண்டு அமர்நாத் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறும் ஒன்றிய அமைச்சரை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புள்ள,
(பழ. நெடுமாறன்)

# அகிம்சை நாயகன் திலீபனின் சிலையகற்றி அரக்கத்தனத்தின் அதிபரானார் அநுர!

## தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனரும், திரைப்பட இயக்குனருமான வடமலை கௌதமன்

27.09.2026

அறவழியில் போராடி தன்னுயிரை தற்கொடையாக தந்த புனிதன் எங்களது அண்ணன் திலீபனுக்கே இந்த நிலை என்றால் ஈழத்திருநாட்டில் வாழும் எங்கள் தொப்புள் கொடி உறவுகளுக்கு தினம் தினம் என்ன அக்கிரமம் நடக்கும் என்பது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது.






இவ்வாறு தமிழ்ப் பேரரசு கட்சியின் நிறுவனரும், திரைப்பட இயக்குனருமான வடமலை கௌதமன் தெரிவித்துள்ளார். நல்லூர் நினைவு முற்றத்தில் இருந்த தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலையானது யாழ்ப்பாண போலிசாரால் அகற்றப்பட்டமை குறித்து அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நிறைவேற்றப்படக்கூடிய, நிறைவேற்றப்பட வேண்டிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தியாக தீபம் அண்ணன் திலீபன் அவர்கள் நீராகாரம் கூட அருந்தாமல் தனது இன்னுயிரை மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தியாகம் செய்தார். இத்தகைய தியாகத்தை செய்வதற்கு இவ்வுலகில் எவர் முன்வருவர்?

அவரது தியாகத்தை கண்டு கூனி குறுகி நிற்க வேண்டிய சிங்கள பேரினவாதம், சற்றும்கூட கூச்சமோ, குற்ற உணர்ச்சியோ இல்லாமல் இன்று அவரது சிலையை உடைப்பதற்கு துணிந்துள்ளது. இந்த சம்பவத்தால் நீங்கள் வீரர்கள் ஆகிவிடுவீர்கள் என்று நினைக்கின்றீர்களா? ஒருபோதும் இல்லை. மீண்டும் மீண்டும் கோழைகள் என்பதை இவ்உலகத்துக்கு பறைசாற்றியிருக்கின்றீர்கள்.

உங்களது கட்சிக்கு நம்பி வாக்களித்த எங்கள் தமிழர்களுக்கு நீங்கள் செய்கின்ற நன்றிக்கடன் இதுதானா? குற்ற உணர்ச்சியால் உங்கள் மனசாட்சி சற்றும்கூட உறுத்தவில்லையா? தன்னுயிரை தியாகம் செய்த தியாகியின் சிலையை உடைத்து சென்ற தங்களுக்கு மனசாட்சி, குற்ற உணர்ச்சி இவையெல்லாம் இன்னும் இருக்கும் என எதிர்பார்ப்பது எங்கள் தவறு தான்.

இப்படியெல்லாம் செய்து இறுதியில் எதனை சாதிக்கப்போகின்றீர்கள்? உங்கள் இலட்சியம் என்னவாக இருக்கிறது? சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதா? அல்லது தமிழ் மக்களை மிரட்டுவதா? கல்லாலான ஒரு சிலையே உங்கள் அரசை இந்த அளவிற்கு நிலைகுலையச் செய்கின்றது என்றால் ஈழத் தமிழரின் வீரத்தை நிரூபிக்க நாங்கள் வேறு எந்த ஆயுதமும் இனி கையில் எடுக்க தேவையில்லை.

இதற்கு முன்பு ஆண்டவர்கள் எல்லாம் கொடூர முகத்தை காட்டி கோரத்தாண்டவம் ஆடினார்கள் நீங்களோ குழந்தை முகத்தை காட்டி குரூரத்தாண்டவம் ஆடுகிறீர்கள். பாவம் இது எதனையும் அறியாத எம் மக்கள் உங்களிடம் மீண்டும் மீண்டும் ஏமாந்து கொண்டே இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் எங்களின் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்த நினைவுச் சின்னத்தை உடைத்தீர்கள். உலகம் முழுவதும் வாழும் எம் தமிழர்கள் பொங்கி எழுந்ததும் அந்த வெக்கை தாங்காமல் தாழ்பணிந்து நீங்களே மீண்டும் கட்டியெழுப்பினீர்கள். அறத்தோடு சொல்கிறேன். எங்களின் புனிதச் செல்வனின் சிலையை எந்த வாகனத்தில் பெயர்த்தெடுத்து சென்றீர்களோ அதே வாகனத்தில் மீண்டும் எடுத்து வந்து அதே இடத்தில் நிறுவுவதற்கு வழி செய்யுங்கள். அதனை செய்யத் தவறும் பட்சத்தில் ஒட்டுமொத்த உலகத் தமிழர்கள் முன்பும் நீங்கள் கூனிக் குறுகி நின்று, வெட்கப்பட நேரிடும். இது உங்களுக்கு மட்டுமல்ல, இறுதியில் உங்களது இனத்துக்கே அவமானத்தை கொண்டு வந்து சேர்க்கும் இது உறுதி.

இந்த சந்தர்ப்பத்தில் அடிவயிற்றின் பெருவலியோடு "மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்கிற எங்கள் திலீபன் அண்ணாவின் உணர்வுப் பெருக்கான வாசகத்தை மீண்டும் உலகத்தமிழர்கள் மத்தியில் நினைவுகூற விரும்புகிறேன் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.






# விண்வெளியில் அமெரிக்கா ஆயுதங்களை நிலை நிறுத்தியுள்ளதாக உறுதிப்படுத்தியது!

15.09.2026

விண்வெளி சுற்றுப்பாதையில் அமெரிக்கா ஆயுதங்களை நிலைநிறுத்தியுள்ளதாக அமெரிக்க விண்வெளிப் படை முதன் முறையாக வெளிப்படையாக உறுதி செய்துள்ளது.

விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட ஆயுதங்கள் தொடர்பான விவரங்களை அமெரிக்க விண்வெளிப் படை வெளியிடவில்லை. எனினும், எதிரிகளின் நடவடிக்கைகளி லிருந்து அமெரிக்காவின் கூட்டு இராணுவப் படைகளைப் பாது காக்கும் வகையில், சுற்றுப்பாதையில் விண்வெளிக் கட்டுப் பாட்டு ஆயுதத் திறன்கள் இருப்பதாக அதன் செய்தித் தொடர் பாளர் தெரிவித்துள்ளார்.

விண்வெளிக் கட்டுப்பாட்டுக்காக இயக்கவியல் மற்றும் இயக் கவியலற்ற பல்வேறு வழிமுறைகள் பயன்படுத்தப்படுவதாக வும், அவை தாக்குதல் மற்றும் தற்காப்பு ஆகிய இரு நோக் கங்களுக்கும் பயன்படுத்தப்படலாம் என்றும் அமெரிக்க விண் வெளிப் படை தெரிவித்துள்ளது.

இதனிடையே, விமானம், விண்வெளி மற்றும் இணைய மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க விமானப்படை செய லாளர் ட்ராய் மெய்ங்கும், விண்வெளியில் அமெரிக்க ஆயு தங்கள் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.
அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு ரஷ்யா மற்றும் சீனா வுடனான அதிகரித்து வரும் மூலோபாயப் போட்டியே முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. சீனா தனது இராணுவ நவீன மயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக விண்வெளி மற்றும் விண்வெளி எதிர்ப்புத் திறன்களை மேம்படுத்தி வருவதாகவும், ரஷ்யா எதிர்கால மோதல்களில் விண்வெளி மேலாதிக்கம் முக் கிய பங்கு வகிக்கும் எனக் கருதுவதாகவும் அமெரிக்க விண் வெளிப் படை குறிப்பிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ரஷ்யா, விண்வெளி ஆயத மயமாக் கலுக்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளது. விண்வெளி எந்தவொரு ஆயுதமும் இல்லாத பகுதியாக இருக்க வேண்டும் என கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

விண்வெளியை முழுமையாக இராணுவமயமற்றதாக்கும் முயற்சிகளை முன்னெடுக்க பரந்த சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் இந்த உறுதிப்படுத்தல், விண்வெளியை எதிர் கால இராணுவ மோதல்களுக்கான முக்கிய களமாகக் கருதும் உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டி மேலும் தீவிர மடைந்து வருவதைக் காட்டுவதாக பார்க்கப்படுகிறது.

விண்வெளிக்கென அர்ப்பணிக்கப்பட்ட அமெரிக்க இராணுவத் தின் பிரிவான விண்வெளிப் படை, தனது இரண்டு மிகப்பெரிய புவிசார் அரசியல் போட்டியாளர்களான ரஷ்யா மற்றும் சீனா வைக் காரணம் காட்டி ஆயுத நிலைநிறுத்தத்தை நியாயப்படுத் தியது. அவ்விரு நாடுகளும் விண்வெளியில் உள்ள அமெரிக்க




நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அது கூறியது.

சீனா தனது இராணுவ நவீனமயமாக்கல் உத்தியின் ஒரு பகுதி யாக விண்வெளி மற்றும் விண்வெளி எதிர்ப்புத் திறன்களை உருவாக்கி இயக்குகிறது. அதே வேளையில் ரஷ்யா விண் வெளியை ஒரு போர்க்களமாகக் கருதுவதோடு, எதிர்கால மோதல்களில் விண்வெளி மேலாதிக்கம் ஒரு தீர்க்கமான காரணியாக அமையும் என்றும் நம்புகிறது என அந்த அறிக்கை தெரிவித்தது.

தற்குப் பதிலளிக்கும் விதமாக, விண்வெளியில் “போருக்குத் தயாராவதை நிறுத்துமாறு” சீனா வாஷிங்டனை வலியுறுத் தியது.

விண்வெளியில் ஒரு ஆயுதப் போட்டிக்கு எதிராக எச்சரித்த அமெரிக்கத் தரப்பு, தனது இராணுவத் திறன்களை விரிவுபடுத் துவதையும், விண்வெளியில் போருக்குத் தயாராவதையும் நிறுத்த வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம், என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன் கூறினார்.

விண்வெளியை ஆயுதங்கள் அற்றதாக வைத்திருக்க வேண் டும் என்றும் ரஷ்யா செவ்வாய்க்கிழமை அன்று அழைப்பு விடுத்தது.

விண்வெளி எந்தவொரு ஆயுதமும் இல்லாததாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம் என மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் கூறிய கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் , விண்வெளியை முழுமையாக இராணுவ மயமற்றதாக்கும் பணியைத் தொடர, பரந்த சர்வதேச ஒருங் கிணைப்பை நாங்கள் நம்பியிருக்கிறோம் என்றும் மேலும் கூறினார்.

விண்வெளியை இராணுவமயமாக்குவது என்பது, விண் வெளிப் பந்தயத்தைப் போலவே தொன்மையான ஒரு பிரச் சினையாகும்.

1967இல் உலகின் மிகப்பெரிய வல்லரசுகளும் பிற நாடுகளும், விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்துவது என்ற மிகப்பெரிய கவலைக்குத் தீர்வு காணும் வகையில், புற விண் வெளி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

அப்போதிருந்து, ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் அந்த ஒப்பந்தத்திற்கு வெளியே விண்வெளியில் போரிடுவதற்கான வழிகளை ஆராய்ந்து வருகின்றன. இரா ணுவத் தகவல் தொடர்பு, வழிசெலுத்தல் மற்றும் கண்காணிப் புக்கு இன்றியமையாத, ஒன்றின் செயற்கைக்கோள்களை மற்றொன்று குறிவைப்பதும் இதில் அடங்கும்.

# கொசோவோவின் முன்னாள் அதிபர் போர்க்குற்றவாளி: 25 ஆண்டுகள் சிறை!

16.09.2026

கொசோவோவின் முன்னாள் அதிபர் ஹாஷிம் தாசி, போர்க் குற்றவாளி என கொசோவோ போர்க்குற்றத் தீர்ப்பாயத்தால் புதன்கிழமை குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

58 வயதான தாசி, 1990-களில் செர்பியாவிலிருந்து கொசோவோ வன்முறையாகப் பிரிந்த காலகட்டத்தில், அல் பேனிய இனத்தைச் சேர்ந்த கொசோவோ விடுதலை இரா ணுவத்தின் (KLA) உயர் தளபதியாக இருந்தபோது செய்த கொலை, சித்திரவதை மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல் உள் ளிட்ட குற்றங்களுக்காக 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

இந்த மோதலின்போது, கொசோவோ விடுதலை இராணுவப் படைகளால் 96 அரசியல் எதிரிகள் மற்றும் செர்பிய பாதுகாப்புப் படைகளுடன் ஒத்துழைத்ததாகக் கருதப்பட்டவர்களின் கொலைக்கு அவர் குற்றவாளி எனத் தீர்ப்பாயம் கூறியது.

தாசி அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்திருந்தார்.



RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION

# கிரீன்லாந்து விவகாரத்தில் அமெரிக்காவும் டென்மார்க்கும் உடன்பாடு எட்டின!

18.09.2026

கிரீன்லாந்தின் பாதுகாப்பின் மீது அமெரிக்காவிற்கு நிரந்தரக் கட்டுப்பாட்டை வழங்கும் ஒரு ஒப்பந்தத்தில், டென்மார்க் மற்றும் கிரீன்லாந்துடன் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளதாக அதிபர் டோனல்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

எனது வழிகாட்டுதலின் பேரில், கிரீன்லாந்து மற்றும் அமெரிக்காவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தற்காப்பதற்கும் தேவையானதைச் செய்வதற்கான முழுமையான திறனை அமெரிக்கா என்றென்றும் கொண்டிருக்கும் என்பதை உறுதி செய்வதற்காக, நாங்கள் டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்றினோம், என்று டிரம்ப் ட்ரூத் சோஷியல் தளத்தில் கூறினார்.

இந்த ஒப்பந்தம், அமெரிக்காவின் எதிரி நாடுகள் அங்கு தளங்களை அமைப்பதைத் தடுக்கிறது என்று அமெரிக்க வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்கக் கண்டத்தைப் பாதுகாக்கவும் தற்காக்கவும் கிரீன்லாந்தில் நிரந்தர அணுகல், தளம் அமைத்தல் மற்றும் வான் வழிப் பயண உரிமைகள் உட்பட, அவசியமெனக் கருதும் அனைத்தையும் செய்வதற்கான முழுமையான திறனை இந்த ஒப்பந்தம் அமெரிக்காவிற்கு வெளிப்படையாக உத்தரவாதம் அளிக்கிறது," என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறினார். "சீனாவும் ரஷ்யாவும் கிரீன்லாந்தில் தளம் அமைக்க முடியாது, கிரீன்லாந்திற்குத் துருப்புகளை அனுப்ப முடியாது என்பதையும், முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் முதலீடுகளைத் தடுப்பதற்கான தேவையான வழிமுறைகள் நடைமுறையில் உள்ளன என்பதையும் இந்த ஒப்பந்தம் உத்தரவாதம் அளிக்கிறது.

தனது பதிவில், டேனிஷ் பிரதேசத்தில் அமெரிக்கா உடனடியாக ஒரு பெரிய இராணுவ இருப்பை உருவாக்கத் தொடங்கும் என்று டிரம்ப் எழுதியுள்ளார்.

டேனிஷ் மற்றும் கிரீன்லாந்து அரசாங்கங்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையின்படி, ஆர்க்டிக் தீவு தொடர்பான தங்களது சர்ச்சையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா, டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து அறிவித்துள்ளன.

கிரீன்லாந்து, டென்மார்க் இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கு இடையே ஒரு நல்ல உடன்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் ஓர் அறிக்கையில் தெரிவித்தார்.




இந்த ஒப்பந்தம் நேட்டோவிற்கும் ஐரோப்பாவிற்கும் சிறந்தது என்றும், (டென்மார்க்) இராச்சியத்தின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டையும், கிரீன்லாந்து மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

# ருவாண்டா இனப்படுகொலையுடன் தொடர்புபட்டவர் பிரிட்டனில் கைது!

22.09.2026



ருவாண்டா இனப்படுகொலையுடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், திங்களன்று ஒருவரை இங்கிலாந்து அதிகாரிகள் கைது செய்து அவர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாக அரசு வழக்கறிஞர்களும் லண்டன் காவல் துறையினரும் தெரிவித்தனர். பல ஆண்டுகளாக அதிகாரிகள் இந்த வழக்கை விசாரித்து வந்தபோதிலும், இது போன்ற முதல் கைது நடவடிக்கை இதுவாகும்.

ருவாண்டாவில் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்ததாக ஒரு குற்றச்சாட்டும், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு உதவியதாக ஆறு குற்றச்சாட்டுகளும் 65 வயதான அந்த நபர் மீது சுமத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சர்வதேசக் குற்றங்களைச் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு இங்கிலாந்து ஒரு பாதுகாப்பான புகலிடம் அல்ல என்பதை இந்த வழக்கு நிரூபிக்கிறது என்று பயங்கரவாத எதிர்ப்பு காவல் பிரிவின் தலைவர் கமாண்டர் ஹெலன் ஃபிளானகன் கூறினார்.

ருவாண்டா இனப்படுகொலை 1994இல் நடைபெற்றது . இதில், ஆளும் ஹுட்டு பெரும்பான்மையினரால் திட்டமிடப்பட்டு வழிநடத்தப்பட்ட 100 நாள் வெறியாட்டத்தில், 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட டுட்சி இனத்தவரும், மிதவாத ஹுட்டு இனத்தவரும் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலையில் உள்ளூர் அதிகாரிகளும் சாதாரண குடிமக்களும் ஈடுபட்டிருந்தனர்.

பிரிட்டன் சட்டம், இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட சில சர்வதேசக் குற்றங்கள் வெளிநாட்டில் செய்யப்பட்டிருந்தாலும், அவற்றுக்காக வழக்குத் தொடர அரசு வழக்கறிஞர்களை அனுமதிக்கிறது.

ருவாண்டாவின் இனப்படுகொலையுடன் தொடர்புடைய ஒருவர் ஐரோப்பாவில் கைது செய்யப்பட்ட சமீபத்திய சம்பவம் இதுவாகும். கடந்த ஜூலை மாதம், ஜெர்மன்-ருவாண்டா நாட்டவர் ஒருவர், இனப்படுகொலையில் பங்கேற்றது மற்றும் தானே ஒருவரைக் கொன்றது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இதற்கிடையில், நெதர்லாந்தில், தஞ்சம் புகுந்த டுட்சி இனப் பொதுமக்கள் மீது கையெறி குண்டை வீசியது உட்பட, வீடுகள் மீதான தாக்குதல்களில் பங்கேற்றதற்காக ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ருவாண்டா அரசாங்கத்தின் கோரிக்கையைத் தொடர்ந்து, இங்கிலாந்தின் பெருநகர காவல்துறையின் போர்க்குற்றப் புலனாய்வாளர்கள் 2019இல் சந்தேக நபருக்கு எதிராக இந்த வழக்கைத் தொடங்கினர்.

65 வயதான அவர் பூர்வீகமாக கிகாலியைச் சேர்ந்தவர், ஆனால் கைது செய்யப்பட்ட நேரத்தில் லண்டனில் வசித்து வந்தார்.

ருவாண்டாவின் நீதித்துறை அமைச்சர் தார்சிஸ் கருகராமாவின் கூற்றுப்படி, அவர் 1998இல் புகலிடக் கோரிக்கையாளராக இங்கிலாந்தில் நுழைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004இல் பிரிட்டிஷ் குடியுரிமை வழங்கப்பட்ட பிறகு, அந்த நபர் தனது பெயரை மாற்றிக்கொண்டார், மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இனப்படுகொலையுடனான அவரது தொடர்பு காரணமாக அவர் கைது செய்யப்பட்டார்.

அவரையும் மேலும் நான்கு பேரையும் ருவாண்டாவிற்கு நாடு கடத்தும் நடவடிக்கை, 2017-ஆம் ஆண்டில் பிரித்தானிய நீதிமன்றம் ஒன்றால் இறுதியாகத் தடுத்து நிறுத்தப்பட்டது.

நாடு கடத்தும் முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, இவ்விவகாரத்தை இங்கிலாந்து அதிகாரிகளே விசாரிக்க வேண்டும் என ருவாண்டா அரசாங்கம் வலியுறுத்தியது.

அரசுத் தரப்பு வழக்குரைஞர் சேவையின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவின் தலைவர் ஃபிராங்க் ஃபெர்குசன், அந்த நபர் மற்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட கொலை மற்றும் இனப்படுகொலைச் செயல்களை இயக்கியதாகவும், தூண்டியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார் என்று கூறினார்.

ருவாண்டா இனப்படுகொலையுடன் தொடர்புடைய, தற்போது பிரிட்டனில் வசிக்கும் மேலும் பல சந்தேக நபர்கள் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# தமிழீழம் கிட்டும்வரை போராட்டம் தொடரும்

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கின்றோம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துகள்,செல்வங்களை இழந்திருகிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலி கொடுத்திருக்கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப்பட்டிருக்கிறோம். இழிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர் இத்தனை, உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை மகத்தான தியாகங்களுக்குப் பின்னர், இத்தனை வீரசாதனைகளுக்குப் பின்னர், நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கைநீட்டப்போவதில்லை.

நாம் சுதந்திரமாக, பௌரவமாக நிம்மதியாக சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திர தமிழீழத்தில் தான் சாத்தியமாகும். அந்த சுதந்திர தமிழீழம் கிட்டும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்து கூற விரும்புகிறேன்.

தர்மமும் உண்மையும் இறுதியில் வெற்றியளித்து தமிழ்த்தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்மபலமும் ஆயுதபலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

('எனது மக்களின் விடுதலைக்காக' என்ற நூலில் இருந்து)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும் பொன் நகை மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இரசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


13th GLOBAL BUSINESS MEET
13TH
GLOBAL BUSINESS MEET
3 – 4 DEC 2026, OSAKA JAPAN
ஜப்பான் வர்த்தக மாநாட்டிற்கு
அரசு மானியம்
தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை
காட்சிப்படுத்தி, சந்தைப்படுத்த
அரங்கம் அமைக்க
தமிழக அரசின் MSME அமைச்சகத்தின்
மானியம் பெற
தொடர்புக்கு
உலகத் தமிழ் வர்த்தக சங்கம்
+91 72999 92999 | +91 90921 75000
wtcc.co.in
Supported by
Organiser
OSAKA BUSINESS DEVELOPMENT AGENCY
ICCI
WTCC


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu







## லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வீரவேங்கைகள் நினைவாக...



# தீயினில் எரியாத தீபங்களே!

காற்றும் ஒருகணம் வீச மறந்தது
கடலும் ஒருநொடி அமைதியாய் கிடந்தது
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தது

தீயினில் எரியாத தீபங்களே –எம்
தேசத்தில் நிலையான வேதங்களே
மண்ணினில் விதையான முத்துக்களே –நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் –புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்

கடலினில் கடல்புறா பயணங்கள் போனது
சிறிலங்கா இராணுவம் பொறிவைக்க லானது
குமரப்பா புலேந்திரன் உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின்படி நஞ்சை குடித்தபின் சாய்ந்தனர்

இளமையில் சருகாகிக் போனவரே –எம்
இதயத்தில் உருவான கோவில்களே

அப்துல்லா ரகு நளன் ஆனந்தகுமார் மிரேஸ்
அன்பழகன் றெஜினோல்ட் பழனி கரனுடன் தவக்குமார்
ஆகிய வேங்கைள் அனலிடை போயினர்
காவிய நாயகர் களப்பலி ஆகினர்
மக்களுக்காக கடல் சென்றீரே –மண
மாலைகள் வாட முன்னர் போனீரே

எங்களின் கடலிலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது
இந்திய அரசது ஏன்துணை போனது
இடியுடன் பெருமழை ஏன் உருவானது
கண்களில் நீர் சுமந்து நிற்கின்றோம் –நீர்
காட்டிய பாதையிலே செல்கின்றோம்




# தமிழீழ மணமீப்புப் போரில் பாரிய தாக்குதல் என வர்ணிப்பு

# 'ஓயாத அலைகள் -02

26.09.1998



விடுதலைப் புலிகளின் தமிழீழ மீட்புப் போராட்ட வரலாற்றில் மிகப் பாரிய அளவிலும் அதிக சேதத்தை சிறீலங்காப் படையினருக்கு ஏற்படுத்தியுள்ளதும் தமிழீழ மீட்புப் போர் முனையில் பெரும் திரும்புமுனையாக அமைய உள்ளதுமான பாரிய அழித்தொழிப்பு யுத்தம் ஒன்றை கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் நிலைகொண்டிருந்த சிங்களப் படைகள் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளனர். 1500க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்புப் படைகளை அழித் தொழித்து 1000க்கும் அதிகமான படையினரின் உடல்களைக் கைப்பற்றி பெருந்தொகையான நவீன ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றி கிளிநொச்சிப் பிரதேசத்தை முழுமையாக ஆக் கிரமிப்பில் இருந்து விடுவித்து பரந்தனுக்கு அப்பால் ஆனையிறவு நோக்கி ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டி அடித்து போரியல் வரலாற்றில் மேலும் ஒரு வீரகாவியம் படைத்த இப்பெரும் அழித்தொழிப்பு யுத்தம் குறித்து இங்கு தருகிறோம்.

## திலீபன் நினைவு

1998 செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிமை. காலை முதலே தேசவிடுதலைக்காய் அதி உயர் அர்ப்பணிப்பைச் செய்த தியாக தீபம் திலீபனின் 11ஆவது ஆண்டை நினைவு கூரும் முகமாக எழுச்சிக்கோலம் கொண்டிருந்தது. சுதந்திரத் தமிழீழத்தின் பகுதிகள் எல்லாம் திலீபனின் நினைவால் மிளிர்ந்தவண்ணம் இருந்தன. ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட தமிழீழப் பகுதிகளில் கூட மக்கள் நினைவெல்லாம் தமக்காக தன்னை வருத்தி அழித்து கொண்ட அம்மாவீரன் நினைவாகவே விடிந்தது. அங்கும் மக்கள் தங்கள் சக்திக்கு உட்பட்ட ரீதியில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். திலீபனின் நினைவில் தமிழீழம் அமிழ்ந்துள்ளது எனினும் அவ் நினைவு தம்மீதும் திரும்பலாம் என்ற அச்ச உணர்வில் சிங்கள ஆக்கிரமிப்புப் படையினர் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தனர். அடிமைச் சின்னமாக விளங்கிய யாழ் கோட்டை நோக்கி, அந்த அடிமைச் சின்னம் வென்றாகப்பட வேண்டும் என முழங்கியவன் திலீபன். அவன் நினைவாக 1990ஆம் ஆண்டில் அவனது 3ஆவது நினைவு நாளன்று அக்கோட்டையைச் சிங்களப்படைகளிடமிருந்து கைப்பற்றி அவ் அடிமைச் சின்னத்தை விடுதலைப் புலிகள் அழித்தொழித்தனர். அந்நினைவு ஆக்கிரமிப்புப் படைகளின் மனதில் இன்றும் பசுமையாகவே உள்ளது. எனினும் செப்டெம்பர் 26 இரவு இவ்வாறு விடியும் என்பதை அவர்கள் கனவிலும் கற்பனை செய்திரார்கள்.

## பாரிய படைத்தளம்

நடு இரவு கடந்த நேரம், இயக்கச்சியிலிருந்து ஆனையிறவு பரந்தன் கடந்து கரடிப்போக்குச் சந்திவரை நீண்ட மலைப்பாம்பாக விரிந்து கிடந்தது பாரிய ஆக்கிரமிப்புப் படைத்தளம். பரந்தனிலிருந்து கரடிப்போக்கு வரையிலான பகுதிகளில் 54ஆவது படைப்பிரிவின் 1ஆவது, 2ஆவது, 3ஆவது படையணிகள் நிலைகொண்டிருந்தன. பரந்தனில் 1996ஆம் ஆண்டு பூநகரியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட 10ஆவது படைப்பிரிவு நிலைகொண்டிருந்தது. இவற்றில் விசேட கொமாண்டோக்கள் கவசப் படைப் பிரிவு உட்பட ஆக்கிரமிப்புப் படைப் பிரிவின் முக்கிய படைப்பிரிவினர் எத்தகைய தாக்குதலையும் எதிர்கொள்ளும் வகையில் தயாராக இருந்தனர்.

## 15. கி. மீற்றர் பாதுகாப்பு வேலி

ஆனையிறவுக்குத் தெற்கே இருந்த இப்படைகளின் முன்னணிக்காவல் அரண்கள் 15 கி. மீற்றர் தூரத்திற்குத் தொடராக கிழக்கே சுண்டிக்குளம் முதற்கொண்டு மேற்கே குஞ்சுப் பரந்தன் கழிந்து வியாபித்திருந்தன. இவற்றினுள்ளே இரண்டாவது நிலைக் காவல் அரண்கள், மூன்றாவது நிலைக் காவல் அரண்கள், உள்ளே கட்டளைத் தலைமையகம், பாரிய முகாம்கள், மினி முகாம்கள் என 4000க்கும் மேற்பட்ட





































படைகளை உள்ளடக்கிய பாரிய தளம் அமைந்திருந்தது.

## தகவல் திரட்டிய வேவுப் புலிகள்

கடந்த சில மாதங்களாக இவ் உயர் பாதுகாப்பு வலயத்தை ஊடுருவி துல்லியமான தகவல்களை விடுதலைப் புலிகள் வேவுப் புலிகள் சேகரித்தமை விடுதலைப் புலிகளின் உலகம் அதிசயிக்கும் வீரவரலாறு. இத்தளத்திற்கு ஆதரவாக உள்ள பின்தள பாதுகாப்பு ஏற்பாடுகளும் அவர்களின் கண்களில் தப்ப வில்லை. பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையே உள்ள இயக்கச்சியில் அமைக்கப்பட்டிருந்த 122 மி.மீ. 130 மி.மீ நீண்டதூர தாக்குதல் ஆட்லறித் தளம் அதி உயர் பாதுகாப்பும் நன்கு அரண் அமைக்கப்பட்டதுமான ஆனையிறவுத் தளத்தில் அமைக்கப்பட்டிருந்த மேலும் ஒரு ஆட்லறி, மோட்டார் தளம் - ஆனையிறவில் அமைந்திருந்த பாரிய ஆயுத விநியோகக் கிடங்கு நீண்டு உயர்ந்து வானை எட்டி நின்ற தகவல் தொடர்புக் கோபுரம் என்பன பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த படைகள் மீது மேற்கொள்ளப்படும் எத்தகைய தாக்குதல்களையும் முறியடிக்கும் முயற்சிக்கு உறுதுணையாக அமைக்கப்பட்டிருந்தன.

## 'சத்ஜெய' வும் கிளிநொச்சி நகர் விடுவிப்பும்

இந்நிலையில் 1996 யூலையில் வரலாற்று நிகழ்வான ஓயாத அலைகள் அழித்தொழிப்பு யுத்தம் மூலம் முல்லைத்தீவு மாவட்ட முழுமையாக விடுவிக்கப்பட்டபோது அவ்வரலாற்றுத் தோல்வியை மூடிமறைக்கவும் விடுதலைப் புலிகளின் கவ னத்தை திசை திருப்பவும் என 1996 யூலை 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சத்ஜெய - 1', 'சத்ஜெய - 2', 'சத்ஜெய - 3' என 70 நாட்கள் தொடர்ந்து பத்திற்கு மேற்பட்ட தாங்கிகளை இழந்து. 600 படையினரைப் பலிகொடுத்து தொடர்ந்த சமரில் கிளி நொச்சி பஸ் டிப்போ சந்திவரை ஆக்கிரமிப்புப் படைகள் வியா பித்திருந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம். கடந்த பெப்ரவரி முதலாம் நாள் சிங்கள் தேசம் 50 ஆண்டு சுதந்திர நிகழ்வைக் கொண்டாட முயன்றிருந்த வேளை தமிழீழ சுதந் திரம் வென்றாகப்படும் என்பதை நினைவுறுத்த சிங்களப் படைகள் மீது பாரிய அதிரடித்தாக்குதலை மேற்கொண்டு பஸ்டிப்போ சந்தியிரிருந்து கரடிப்போக்கு சந்திவரை ஆக்கிரமிப் புப் படைகளை விரட்டினர் விடுதலைப் புலிகள்.

## தேசியத் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் தாக்குதல் திட்டம்

அன்று முதல் மேலும் ஒரு வீர காவியம் படைக்க செயற்பட்ட வேவுப்புலிகளின் பணி முடிவுற்ற நிலையில் அவர்கள் திரட்டிய துல்லியமான தகவல்கள் ஒருங்கிணைக்கப்பெற்று பாரிய தாக்குதல் வடிவம் தயாரானது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் படையணிகளின் தாக் குதல் பயிற்சியும் சிறப்பு நடந்தேறின. இந்நிலையில் தாக்குதல் நடாத்த திட்டமிடப்பட்ட செப்டெம்பர் 26ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் தாக்குதல் தளபதிகளின் தலைமையில் எதிரிப் படைகளுக்கு எத்தகைய அசைவுகளை யும் காட்டாது நிலைகொண்டன. தாக்குதல் தொடுக்கப்படும் போது பின்புலமாகத் திகழக்கூடிய இயக்கச்சி ஆட்லறித்தளம் ஆனையிறவு ஆட்லறித் தளம் ஆயுத விநியோகக் கிடங்கு தகவற்கோபுரம் ஆகியவற்றைத் தகர்ப்பதற்கென விசேட அணிகள் அதி உயர் பாதுகாப்புடன் கூடிய அப்பகுதிகளுக்குள் ஊடுருவின. முன்னேறிய அணிகள் தமது பணியைச் செய்து முடித்தன. ஆட்லறித் தளங்களில் இருந்த ஆட்லறிகள் அழிக் கப்பட்டன. பாரிய ஆயுத விநியோகக் கிடங்கு வெடித்துச் சிதறத் தொடங்கியதும் அந்த அர்த்த நடுநிசியில் ஆனையிறவு அதிர்ந்தது.

## ஆக்கிரமிப்புப் படைத்தளம் அதிர்ந்தது

அதிர்வின் அதிர்ச்சியில் ஆக்கிரமிப்புத் தளம் திணறியபோது பரந்தனை நோக்கி விடுதலைப் புலிகளின் அதிரடிப் படைப் பிரிவுகள் புயல்வேகப் பாய்ச்சலை மேற்கொண்டன. ஆனை யிறவு, பரந்தன் வடக்கு ஆக்கிரமிப்புத் தளங்கள் மீது விடு தலைப் புலிகளின் கேணல் கிட்டு - பீரங்கிப் படைப்பிரிவு சர மாரியான ஆட்லறி, மோட்டார் தாக்குதலை மேற்கொண்டது. சண்டை விமானங்கள் உதவிக்கு விரைந்தால், அவற்றை எதிர் கொள்ளவென இம்ரான் பாண்டியன் விமான எதிர்ப்பு படை யணி தயார் நிலையில் நின்றது. கடல்வழியாக யாழ் குடா நாட்டில் இருந்தோ வெற்றிலைக்கேணியில் இருந்தோ படைகள் பரந்தனுக்குக் கிழக்கேயோ மேற்கேயோ இறக்கப்படாமல் கடல் நீரேரியில் கடற்புலிகள் ரோந்தில் ஈடுபட்டன. முன்னணிக் காவல் அரண் மின்னல் வேகத்தில் தாக்கப்பட எதிரியின் 2ஆம் 3ஆம் பாதுகாப்பு நிலைகள் நிலைகுலைந்தன. பரந்தனில் நிலைகொண்டிருந்த படைகள் பாரிய இழப்புக்களுடன் ஆனை யிறவு நோக்கி ஓடித்தப்பின.

## தனிமைப்படுத்தப்பட்ட படைகள்

எத்தகைய பரந்தன் நோக்கிய மின்னல் வேகத் தாக்குதலில் காவல் அரண்களை உடைத்து ஊடறுத்து உட்புகுந்த விடு தலைப் புலிகள் கிளிநொச்சிக்குத் தெற்கே அமைந்திருந்த பாரிய படைமுகாம் படைகளைத் தனிமைப்படுத்தினர். ஆனையிறவு முகாமில் இருந்து வரும் உதவிப்படைகளின் முயற்சியையும் முறியடிக்கும் விதத்தில் லெப். கேணல். விக்ரர் தாங்கி எதிர்ப்புப் படையணியுடன் விடுதலைப் புலிகளின் ஓர் படையணி பரந் தனில் நிலையெடுத்தது. இந்நிலையில் கரடிப் போக்கை மைய மாகக் கொண்டு அமைந்திருந்த பாரிய ஆக்கிரமிப்பு இராணு வத்தளத்தின் மீது மேற்கொண்ட அழித்தொழிப்பு யுத்தத்தை ஒத்த தாக்குதலை சுற்றிவளைப்பு அழித்தொழிப்பு யுத்தத்தை விடுதலைப் புலிகள் தொடுத்தனர். மகளிர் படைப்பிரிவு முன் னிலை பெற விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பு யுத்தம் தீவிரமடைந்தது.

## வான்படை உதவி துண்டிப்பு

ஞாயிறு விடிந்தும் தாக்குதல் தொடர்ந்தது. குறுகிய தூரத்தில் இருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததால் விமானப் படை உதவி இரவு படையினருக்கு கிட்டவில்லை. விடிந்ததும் படை விமானங்கள் வானில் தோன்றினாலும் முற்றுகையிடப் பட்டிருந்த படைகளுக்கு உதவக் கூடிய நிலையில் அவையிருக் கவில்லை. அதியுயர் உயரத்தில் இருந்து தாக்குதல் மேற் கொண்டால் அவை தமது படையினரையே பலி கொள்ளக் கூடிய நிலை. குறுகிய தூரத்தில் வந்து தாக்குதல் நடாத்தினால் தயாராக இருக்கும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியின் தாக்குதலுக்கு இலக்காகும் நிலை. இந் நிலை யில் ஆனையிறவுத் தளத்தில் குவிந்து கொண்டிருக்கும் காயப் பட்டவர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட உலங்கு வானூர்திகள் சில முயன்றன. விமான எதிர்ப்புப் படையணி யின் கவனம் அவற்றின் மீது திரும்பியது ஓர் உலங்கு வானூர்தி தாக்குதலுக்கு இலக்கானதை அடுத்து அனைத்தும் பின்வாங்கி வானில் இருந்து மறைந்தன.

## மீட்பு முயற்சி முறியடிப்பு

வான்வெளி உதவி தடைப்பட்டதும் ஆனையிறவில் இருந்து முன்னேறி தாக்குதல் நடத்தி துருப்புக்களை மீட்கும் ஒரு பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குடாநாட்டிலிருந்து ஆனையிற வுக்கு நகர்த்தப்பட்டு அங்கு குவிக்கப்பட்ட பெருந்தொகைப் படைகள் சமீபத்தில் வாங்கப்பட்ட 3 மிக நவீன பிரதான யுத்த தாங்கிகள் சகிதம் பரந்தனை நோக்கி எறிகணை முன்னேறின. சரமாரியான தாக்குதலுடன் முன்னேறிய இப்படைகளை எதிர் கொண்டனர் விடுதலைப் புலிகள். குறுகிய காலத்தில் நன்கு அர ணமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களை அமைத்துக் காத் திருந்த தாங்கி எதிர்ப்புப் படையணி முன்னேறிவரும் தாங் கிகள் அருகில் வரும்வரை காத்திருந்து திடீர்த் தாக்குதலைத் தொடுத்தன. ஜெயசிக்குறுப் படையணிகளுக்கு சமீப காலமாக சிம்ம சொப்பனமாகத் திகழும் லெப். கேணல். விக்டர் தாங்கி


YMCA


சிறிலட்சுமி நகையகம்
SRILUCKSHMI


KARUNANILAYAM
KILINOCHCHI
கருணா நிலையம்




KILLINOCHCHI CENTRAL COLLEGE


YMCA













எதிர்ப்புப் படையணியின் மின்னல் வேகத் தாக்குதலில் முன்னர் வந்த இரு பிரதான நவீன யுத்த தாங்கிகளும் வெடித்துச் சிதறின. இதனை சற்றும் எதிர் பாராத படையணியினர் நிலை குலைந்து மீட்புப் சிதறி இழப்புக்களுடன் பின்வாங்கத் தொடங்கினர். இதில் ஒரு தாங்கி விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனைத் தவிர்க்கும் முகமாக அத்தாங்கியில் இருந்தவர்களே அதனை வெடிக்க வைத்து விட்டுத் தப்பி ஓடினர். சிதறிப் பின்வாங்கிய படைகள் மீது விடுதலைப் புலிகள் மோட்டார், இலகு இயந்திரத் துப்பாக்கி கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில் பலத்த இழப்புக்களுடன் மீட்புப் படையினர் மீட்க வேண்டிய படையாகமாறி ஆனையிறவு திரும்பினர்.



## அழித்தொழிப்பு யுத்தம்

இந்நிலையில் முதல்நாள் சண்டை பலநூறு படையினரைக் கொன்றும் காயப்படுத்தியும் தொடர்ந்தது. ஞாயிறு இரவு முழுவதும் முற்றுகையிடப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகள் மீதான அழித்தொழிப்பு யுத்தத்தை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக மேற் கொண்டனர். சுற்றி வளைப்பில் சிக்குண்டு உதவி மறுக்கப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகள் நிலைகுலைந்து சிதறி நாற்புறமும் ஓட எத்தனித்தனர். சுற்றி இருந்த விடுதலைப் புலிகளின் தீவிர தாக்குதலில் பலிக்கடாக்களாகி குஞ்சுப் பரந்தன், பெரிய பரந்தன், உருத்திரபுரம், எட்டாம் வாய்க்கால், 10ஆம் வாய்க்கால், ஜெயந்தி நகர். குருகுலம் என எங்கும் ஆக்கிரமிப்புப் படைகளின் சடலங்களால் நிறைந்தன. திங்கள் விடிந்ததும் அழித்தொழிப்பு யுத்தம் தொடர்ந்தது. ஆனையிறவுப் படைகள் மீண்டும் ஒருமுறை மீட்பு முயற்சியில் ஈடுபடாதவண்ணம் ஆனையிறவுத் தளம் மீது விடுதலைப் புலிகளின் கேணல் கிட்டு பீரங்கிப் படையணி தொடர்ச்சியான தாக்குதலை மேற் கொண்டது.

## பாரிய படைத்தளம் கைப்பற்றப்பட்டது

படையினரை மீட்கும் முயற்சிகள் தடைப்பட்ட நிலையில் சந்திரிகா படைகள் விசித்திரமான தாக்குதலில் இறங்கின. சண்டைக்களம் நோக்கி குறும் தூர எறிகணை தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கின. தமது தப்பிய படைகள் கூட பாதிப்படையா வண்ணம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தப்பியுள்ள படையினர் ஒன்றுசேர்ந்து தாக்குதல் நடத்துவதற்கு எந்தவிதத் திலும் உதவி செய்யவில்லை. திங்கள் மாலை தாண்டிய வேளையில் கட்டளைத் தலைமையகம் நடுத்தரமான இராணுவ முகாம்கள் 3 பல மினி முகாம்கள் என பரந்திருந்த அவ் ஆக்கிரமிப்புத் தளம் விடுதலைப் புலிகளால் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது. சிறு குழுக்களாகத் தப்பி பதுங்கியிருந்த படைகளை தேடி அழிக்கும் நடவடிக்கை இரவு முழுவதும் தொடர்ந்தது.

## விடுதலைப் புலிகளுடன் களத்தில் இணைந்த மக்கள்

3ஆவது நாளான செப்டெம்பர் 29ஆம் திகதி செவ்வாய்க் கிழமை விடிந்தபோது 15 கி. மீற்றர் நீளமான ஆக்கிரமிப்புப் பாதுகாப்பு வலையம் தகர்ந்து கிடந்தது. கிளிநொச்சிப் பகுதி முழுவதும் விடுவிக்கப்பட்ட பிரதேசமாக விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் அலைகள் கொண்டுவரப்பட்டது. ஓயாத அழித்தொழிப்பு யுத்தம் மூலம் முல்லையில் வீரகாவியம் படைத்த தமிழீழ இராணுவமான விடுதலைப் புலிகள் கிளிநொச்சி மீட்பு அழித்தொழிப்பு யுத்தத்திற்கு ஓயாத அலைகள்-2 எனப் பெயரிட்டனர். மீட்கப்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்புப் படையினரின் சடலங்களை அப்புறப்படுத்துதல், எங்கும் பரவிக் கிடக்கும் பெருந்தொகையான கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைச் சேகரித்து அகற்றுதல் என பல்வேறு பணிகளிலும் மக்கள் புலிகளுடன் தோளோடு தோள் நின்றனர். காயம் அடைந்தவர்களுக்கு இரத்த தானம் வழங்குதல், களத்திலுள்ள நம் வீரர்களுக்கு உணவு வழங்குதல், இளநீர் வழங்குதல் என மக்கள் நம் வீரர்களின் வீரவரலாற்றில் தம் பங்களிப்பை உள மகிழ்வுடன் உவகையுடன் ஆற்றினர். இந்த மண் எங்களின் சொந்த மண் இதை மிதிப்பவனை அழித்தே நொருக்குவோம் என்ற உணர்வு அவர்களின் மனங்களில் உறுதியாகப் பதிந்திருந்தது.

## 1100க்கும் மேற்பட்ட சடலங்கள்

திங்கள் முதல் பரந்தனில் இருந்து கரடிப்போக்குவரை 5 கி.மீற்றர் அகலத்தில் 20 சதுரக் கி.மீற்றர் பரப்பளவில் காணப்பட்ட ஆக்கிரமிப்புப் படையினரின் சடலங்களை அகற்றும் பணி மக்களின் பூரண பங்களிப்புடன் நடந்தது. செவ்வாய் வரை சேகரிக்கப்பட்ட உடல்களில் நல்ல நிலையில் 800 வரை யானவை காணப்பட்டன.

## காயமடைந்த சிறீலங்கா படையினர்

புலிகளின் தாக்குதலின் விளைவாகக் காயமடைந்த சிங்கள இராணுவத்தினரால் அநுராதபுரம் வைத்தியசாலைகள் நிரம்பி வழிந்ததைத் தொடர்ந்து கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு காயமடைந்தவர்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். ஆனையிறவுப் பகுதியில் காயமடைந்த இராணுவத்தினரை அப்புறப்படுத்த வென யாழ் குடா நாட்டிலுள்ள பேருந்துகள். லொறிகள், மக்கள் வாகனங்கள் என்பன அபகரிக்கப்பட்டு ஆனையிறவு நோக்கி அணி அணியாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறும் வீதியில் மக்கள் நடமாட்டம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ள தாகவும் செய்திகள் வெளியே தெரியாதவாறு திங்கள் முதல் யாழ் பகுதிகளுக்கான தொலை தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அதுவரை இவ்வளவு பெருந்தொகையான இராணுவத்தினர் காய மடைந்த நிலைமை யாழ் குடாநாட்டில் இதுவரை ஏற்பட்டிருந்ததில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.



## 240 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

தமிழீழ மணமீட்புப் போரில் பாரிய வெற்றிகரமான இத்தாக்குதலில் 240 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். மண்ணின் மைந்தர்களான இம்மாவீரர்களுக்கு பொதுமக்கள் பெருமளவில் திரண்டு நின்று அஞ்சலி செலுத்தினர்.








## RECOGNISE LIBERATION TIGERS OF
# THAMIL EELAM
## AS A LIBERATION ORGANISATION




# பிரமந்தனாற்றுப் படுகொலை 02 அக்டோபர் 1985

02.10.1985 அன்று அதிகாலை வேளை பொழுது புலர்ந்தும் புலராத நிலமை. அதிகாலை வானில் ஓர் உலங்கவானூர்தி முதலில் சுற்றி வட்டமிட்டு சுட்டுக்கொண்டே இருந்தது. அதனைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அவை குண்டுகளை வீசவில்லை. இவை மூன்றும் இத்தாலியத் தயாரிப்பான சிறியராக சியாமா செட்டி விமானங்களாகும்.

இந்த வேளையிற் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் தெற்கு எல்லை ஓரமாக வுள்ள காட்டுப்பகுதிக்குள் சிறீலங்கா இராணுவ அணிகள் உலங்கு வானூர்தி மூலமாகத் தரையிறக் கப்பட்டன. தரையிறக்கப்பட்ட படைகள் படிப்படியாக முன்னேறி கிராமத்தினைச் சுற்றிவளைத்து கொண்டன. வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடைபெறுகின்றது எனப் பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்களுக்கு அந்த ஊரைச்சேர்ந்த மயிலர் கந்தசாமி என்பவர் ஒழுங்கைகளுக்கூடாக காட்டுக்குள்ளால் ஆமி வருகிறான் என்று சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டே ஓடி வந்தார். அவர் கூறுவதைக்கேட்டு அக்கிராம மக்கள் விழிப்படைந்தார்கள்.

அந்தச்சம்பவத்தினை நேரில் பார்த்த திருமதி உமாமகேஸ்வரன் கமலாம்பிகை (வயது 45) அன்றையநாள் நடந்த அனர்த்தம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காட்டுக்குள்ளால் ஆமி நடந்து வருகிறான் என்று மயிலர் கந்தசாமி சொல்லக் கேட்டவுடனேயே நான் எனது ஆறு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டக்குள் ஓடிவிட்டேன். எனது கடைசிக் குழந்தை தீபன் அப்போது ஆறுமாதக் குழந்தை. அன்றைய நாள் முழுவதும் எனது பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும்தான் இருந்தார்கள். எந்த உணவும் கிடைக்க வில்லை. முழுநாளும் பட்டினி தான். தாகம் எடுத்தபோது குளம் குட்டைகளில் தங்கி நின்ற தண்ணீரைத்தான் எடுத்துக் குடித்தோம்.

மேற்படி நாளன்று இக்கிராமத்திலிருந்த சிவபாதம் என்பவருடைய கடை கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக்கடையிலிருந்த நகை, பணம். என்பன கொள்ளையடிக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்குறித்த சிவபாதத்தின் கடையைக் கொள்ளையடித்த சிறீலங்கா இராணுவத்தினர் அவருக்குப் புலியெனச்சாயம் பூசிக்கைது செய்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். போகும் போது ஓலை வீடுகளுக்குத் தீவைத்துவிட்டுச் சென்றார்கள். பல வீடுகள், பொது மக்களுடைய உடைமைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத் தகங்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டன. அன்றையநாள் ஐந்து உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறக்கப் பட்ட சிங்களச் சிப்பாய்கள் செய்த அடாவடித்தனங்களால் இக் கிராமத்தினைச்சேர்ந்த பலர் புகலிடம் ஏதுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டனர்.

**இப்படுகொலை பற்றிய மேலும் சில விபரங்கள்**

மேற்படி சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் போது பதின்நான்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் சுட்டும் வெட்டியும் படுகாயப் படுத்தப்பட்டார்கள். பல அப்பாவிப் பொதுமக்கள் ஏறக்குறைய இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிட்டிணர் சிவபாதசுந்தரம் என்பவரினது கடையில் நீண்ட நைலோன் கயிற்றால் கைகள் பின்பக்கமாகப் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப் பட்டிருந்தார்கள். இவர்களை நைலோன் கயிற்றினால் கட்டி வைத்த சிங்களப் படைகள் போதையேறிய நிலையில் காணப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வந்து கவனித்துக்கொள்வதாகக் கூறிவிட்டு மனிதவேட்டைக்குச் சென்று விட்டார்கள். நல்லவேளையாக ஒரு சிறுவன் கத்தியைக் கொண்டுபோய் அவர்களது கைகள் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றை வெட்டிவிட்டுச் சென்றமையால் அவர்கள் யாவரும் காப்பாற்றப் பட்டார்கள்.

**உடன் பிறந்த தம்பியைப் பறிகொடுத்த அக்காவின் துயரம்**

மேற்படி 02.10.1985 அன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது தனது உடன்பிறந்த சகோதரனான வாரித்தம்பி பாக்கியநாதன் என்பவரைப் பேரினவாதக் கொடுமைகளுக்குப் பறிகொடுத்த அவரது சகோதரியான திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) என்பவர் இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

சம்பவநாள் காலை வேளை தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் எனது வீட்டைச் சுற்றி வளைத்தார்கள். எனது கணவர் அப்போது அங்கே இருக்க வில்லை. எனது தம்பியார் தான் அங்கே இருந்தார். அவருக்கு அப்போது இருபத்தொரு வயதுதான் இருக்கும். எமது வீட்டைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவத்தினர் முதலில் எங்கள் எல்லோரையும் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே நாங்கள் நின்றோம். எங்கள் வீட்டுக்குள் தாங்கள் தேடுதல் மேற்கொள்ளப்போகின்றோம் என்றார்கள். அவ்வாறு சொல்லியவாறே எங்கள் வீட்டக்குள் அடாவடித்தனமாக நுழைந்தார்கள். எனது தம்பியின் இரு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டினார்கள். வீட்டுக்குள் வந்தவர்களிற் சிலர் நான்றாகத் தமிழிற் கதைத்தார்கள். இவர்களுள் ஒரு வெள்ளைத் தோலுடைய நன்கு உயரமான தோற்றமுடைய ஒருவரும் காணப்பட்டார். அவர் ஒன்றுமே பேசவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாக இவதானித்தபடி இருந்தார். அன்றைய நாள் அவரை வேறு பல தமிழ் மக்களும் கண்டிருக்கிறார்கள். அவரைப் பொதுமக்கள் மொசாட் என்று அழைத்தார்கள். மொசாட் என்றால் என்னவென்று எனக்கு முதலில் விளங்கவில்லை. பின்னர்தான் மொசாட் என்பவர்கள் வெளிநாட்ட வெள்ளைக்காரர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

**சிறீலங்காப் படையினர் செய்த கொடுமைகள்**

**மேற்குறித்த திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) தொடர்ந்து கூறுகையில்,**

மேலும் சிறீலங்கா இராணுவத்தினர் எனது தம்பியிடம் துவக்கைக் கொடுத்துப் படமெடுத்தார்கள். வேறு சில சிறீலங்கா இராணுவத்தினர் உலங்குவானூர்திக்கு முன்னால் எனது தம்பியை நிறுத்தி வீடியோப் படம் எடுத்தார்கள். எனது தம்பிக்குக் காலால் உதைத்தார்கள், அடித்தார்கள். எனது தம்பிக்கு அடிக்கவேண்டாம் என்று நான் கதறி அழுதேன். அவரை எல்.ரி.ரி.இ என்று சொல்லி அடித்தார்கள். நான் இல்லை அவருக்கும் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சொல்லி அழுதேன். அவர்கள் என்னிடம் எனது தம்பியை எல்.ரி.ரி.இ என்று சொன்னால் விட்டு விடுவதாகச் சொன்னர்கள். நான் அவர்களிடம் இல்லாத ஒன்றைச் சொல்லமாட்டேன் என்றேன். அவர்கள் எனது தம்பியை உதைத்துக் கொண்டும், அடித்த படியும் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் பின்னால் அழுதுகொண்டு போனேன். சிறீலங்காப்படையினர் என்னை வழி மறித்த அடித்து உதைத்துத் தள்ளி விழுத்திவிட்டார்கள். என்னால் தொடர்ந்து செல்ல முடிய வில்லை. இந்தவேளை எனது கணவர் எனது வீட்டில் இருக்க வில்லை. அவர் புளியம்பொக் கணைக்குச்சென்று விட்டார். சிங்கள இராணுவத்தினர் எனது வீட்டைத் தீமூட்டி எரித்தார்கள். இவற்றைக் கேள்விப்பட்ட கணவர் ஊருக்கு வந்தார். அக்கால கட்டத்தில் முல்லைத்தீவு நகரில் முகாமமைத்திருந்த சிங்கள இராணுவச் சிப்பாயகள் தான் எங்கள் வீட்டைக் கொளுத்தினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதோடு, எனது தம்பியையும் அவர்கள் இழுத்துச் சென்றமையால் அங்கு போய் எனது தம்பியைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர்கள் தாம் எங்களுடைய ஊருக்கு வர வில்லை என்றும் இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மறுத்து விட்டார்கள். இதன் பின்னர் நான் சிறீலங்காச் சிப்பாய்கள் எனது தம்பியைக் கொன்றிருப்பார்கள் என்று எண்ணிக் காட்டுப் பக்கங்களில் அவரைத்தேடினேன். இச்சம்பவம் இடம் பெற்று ஆறாம் நாள் தான் எனது தம்பியின் இறந்த உடலைக் காட்டுப் பக்கம் கண்டேன். அவரது உடலில் பலத்த கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. கைகள் பின்னுக்குக் கட்டப்பட்டிருந்தன. இறந்த அவரது உடல் நன்றாகப் பழுதாகிப் போயிருந்தது. அதனால் அதனை அந்த இடத்தியேயே எரித்த விட்டோம். எனது தம்பியைப் பலவந்தமாக உலங்குவானூர்தியில் ஏற்றிய சிங்களப் சிப்பாய்கள் உலங்கு வானூர்தி மேலே எழும்பியபோது அதிலிருந்து தள்ளிவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். இப்போது நான் கூலிவேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன்.

**இச்சம்பவத்தை நேரில் பார்த்த இன்னொரு பெண்ணின் சாட்சியம் "இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற நாள் அன்று பிரமந்தனாற்றுக் கிராமத்தில் வாழ்ந்த திருமதி குலஅரியேஸ்வரி (வயது 46) இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.**

"இப்படுகொலைத் நாள் அன்று ஐந்து உலங்குவானூர்திகள் வானத்தில் வட்டமிட்டதைப் பார்த்தேன். விமானங்களும் வானத்தில் சுற்றிச் சுழன்றடித்து வட்டமிட்டுக் கொண்டன. சிறீலங்கா இராணுவச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் எல்லோருமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டோம். காட்டுக்குள் தரையிறக் கப்பட்ட இராணுவம் வீடுகளை எரித்துக் கொண்டே வந்தது. தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை யைச் சேர்ந்த டிஸ்கோ என்பவர் முகத்தில் பெயின்ரைப் பூசிக் கொண்டு உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு சிங்கள இராணுவத்திற்கு வழிகாட்டிக்கொண்டு சென்றதைக் கண்டேன். டிஸ்கோவால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் பிடிபட்டார். ஆனால் இவர் தந்திரோபாயமாக தப்பிக்கொண்டார். இவர் இராணு வப்பயிற்சி பெற்றிருந்த ஒருவரென் பதை நான் அறிவேன். எனது வீட்டுக்கு அருகில் சிறீலங்கா சிப்பாய்கள் அப்பன் என்பரையும், ஆனந் தராசா என்பவரையும் வாழை மரத்தோடு கட்டி வைத்து அவர்களது நெற்றியில் சுட்டப் படுகொலை செய்தார்கள்."

மேலே கூறப்பட்ட 02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்கா விமானப் படையினரும் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த அனைவரும் இருபதிற்கும முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

**மேலதிகத் தகவல்கள்**

பிரித்தானிய கே.எம்.எஸ் (கினிமின இராணுவப் பிரிவைச் சேர்ந்த Tim Smith என்பவர் சிறீலங்கா இராணுவத்திற்கு சிறீலங்காவில் தங்கியிருந்து கே. எம். எஸ் (கினிமினி சேவிஸ்) இராணுவ பிரிவின் சார்பாகப் பயிற்சி கொடுத்தார். பயிற்சி கொடுத்ததோடு, அவர்களோடு இணைந்து பல சந்தர்ப்பங்களில் விமானத்தாக்குதல்களுக்கு விமானியாகவும், Tim Smith கடமையாற்றியுள்ளார். இலங்கையில் கடமையாற்றிய பின் தனது சொந்த நாடான பிரித்தானியாவுக்குச் சென்ற இவர் சிறீலங்காவில் தனது பணிகள் பற்றி ஒரு நூலை எழுதியுள்ளார். "The Reluctant Meunary" (The Recollection of a British Ex Army Helicopter Pilot in the anti Terrorist War in Sri Lanka) என்ற அந்த நூலில் அறுபத்தோராம் பக்கத்தில் புதுக்குடியிருப்பு புறச்சூழலில் (பிரமந்தனாறு) சிறீலங்காப் படைகளைத் தான் தரையிறக்கும் போது தனது அனுபவத்தினை எழுதியுள்ளார். இலங்கையின் தரைப்படையும், விமானப்படையும் கூட்டாகத் தரையிறக்கப்பட்ட படை நடவடிக்கைக்கு Flight Lieutant (முதலாவது லெப் றொகான் குணதிலகா தலைமை தாங்கியதாகவும், அவர் எவ் வேளையிலும் எத்தகைய முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறியதாகவும் (He is always undecided) குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த நூலில் சிறீலங்காப் படைகளைப் பற்றி விபரிக்கும் போது "சிறீலங்கா இராணுவம் ஒழுக்கம் கெட்ட இராணுவமாகவே இருந்தது என்றும் இவர்களைக் களத்தில் இறக்கிவிட்டால் அவர்கள் கொலைப் பொறி போல (Killing Machinery) செயல்படுவர்" என்றும் கூறியுள்ளார்.

**றொகான் குணத்திலக**

சிறீலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ஏயா மார்சல் ரி. குணதிலகாவின் மகன் தான் இந்த றொகான் குணதிலக (Flight Lieutant) ஆவார். இவர் தனது தந்தையாரின் செல்வாக்கால் விமானப் படையினுள் நுழைந்து மிகக் குறுகிய காலத்தில் ஒரு இடைநிலை அதிகாரியானார். இவரே பிரமந்தனாற்றுப் படுகொலைக்குப் பொறுப்பாக அன்றைய நாள் இருந்தார்.

**02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. ஸ்லீபன்ராஜாஸ் சத்தியசீலன் (26)
2. நாகப்பன் சத்தியலிங்கம் (21)
3. கந்தசாமி தர்மசிங்கம் (23)
4. கிட்டிணர் சிவபாதசுந்தரம் (33)
5. கறுப்பையா தர்மலிங்கம் (23)
6. கறுப்பையா செல்வராசா (24)
7. பொன்னுத்துரை பாக்கியநாதன் (21)
8. சுப்பையா அருணாச்சலம் (29)
9. சின்னையா சவுந்தரராசன் (24)
10. வன்சநாதகே பியதிலகே காமினி (26)
11. வல்லிபுரம் கணேசமூர்த்தி (30)



குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடிய வில்லை.

# அடம்பன் படுகொலை 12.10.1986



திருமலை மூதூரில் 18.07.1986 அன்று அதிகாலை 3:00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணு வத்தினர் இங்கு நாற்பத்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டுசென்று சுட்டுப் படுகொலை செய்தனர். இதில் அனை வரும் உயிரிழுந்தனர். அவர்களில் பெரும பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தல், படுகொலை சம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடம்பன் கிராமம் அமைந்துள்ள விவசாயக் கிராமமாகும். கிராமத்தில் வசித்து வருகின்ற மக்கள் கடந்த இருபது ஆண்டகளுக்கு மேலாக கிராமத்திற்கு அருகேயமைந்துள்ள தள்ளாடி சிங்கள இராணுவ முகாமினால் பலசொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த வருகின்றனர்.

12.10.1986 அன்று அதிகாலை 4:00 மணிக்கு தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து பறப்பட்ட இராணுவத்தினர் மாளிகைத்திடல் கிராமத்தினூடாக வந்து அடம்பன் கிராமத்ததைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அடம்பன் கிராமத்தில் வீடுகளில் உறங்கிகொண்டிருந்த மக்களைச் சுட்டப் படுகொலை செய்ததுடன், அடம்பன் சந்தியிலுள்ள கடைகளையும் எரித்தனர். அதிகாலை 5:00 மணிக்கு கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் மு.ப. 11 மணிவரை அடம்பன் கிராமத்தில் தாக்குதலை நடாத்திவிட்டு இறந்தவர்களின் சடலங்களை வீதிகளிலும் வயல்களிலும் வீசிவிட்டு இராணுவ வாகனங்களில் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இச்சம்பவத்தில் இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பல வியாபார நிலையங்கள், கடைகள் என்பனவும் எரிக்கப்பட்டன.

**கதிரன் சௌந்தரராஜன்**

"1986 ஆம் ஆண்டு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளிக்கிட்டு வந்த இராணுவத்தினர் திருக்கேதீசுவரம் வந்து அதன் வழியாக மாளிகைத்திடல் வந்து அதனூடாக தாமரைக்குளம் வரை வந்து தியாகு மற்றும் கோபாலு என்று குடும்பஸ்தர்கள் இருவரையும் சுட்டுக் கிணற்றுக்குள் போட்டனர். பின்னர் அங்கிருந்து அடம்பன் வந்த இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த நோபோட் என்ற பத்தொன்பது வயதுடைய ஒருவரையும் சீலன் என்ற பதினாறு வயது இளைஞனையும் பசுமை என்பவரையும் சுட்டக் கொன்றார்கள். அந்தவேளை அடம்பன் கடை வீதிவழியால் வந்த இராணுவத்தினர் முத்துவேல் என்ற இளைஞனையும் அந்தோனிச்சாமி என்ற இளம் குடும்பஸ்தரையும் சிறி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் வாழ் நெல் வியாபாரியையும் பிடித்தச் சென்று நெடுங்கண்டல் கோயிலடியில் சுட்டுப் போட்டனர். அதன் பின்னர் அவ் வீதி வழியால் வந்த இராணுவத்தினர் 22 வயதுடைய மனோகரன் என்பவரையும் பத்தென்பது வயது ஜெகதீஸ்வரன் என்பவரையும் மாந்தையைச் சேர்ந்த நெல்லுக்கடை உரிமையாளரான உதயன் என்பவரையும் உலக்கையால் அடித்து சாகாத நிலையில் அடம்பன் கடற்கரையிற் போட்டுச் சுட்டிருந்தார்கள். இவ்வாறு சுடப்பட்ட அனைவரினதும் கழுத்துகளில் நஞ்சைக் கட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றி உள்ளித் தாழ்வுப் பகுதியால் தள்ளாடி முகாமிற்கு ஏற்றிச் சென்றார்கள். பின்னர் சடலங்கள் அனைத்தும் அடையாளங்காண முடியாத நிலையில் இருந்ததால் யாரும் சடலங்களை கையேற்க முன்வராத நிலையில் இராணுவத்தினரே ரயர்களைப் போட்டு எரித்தார்கள். இந்தச் சம்பவத்தில் பதினாறு பேர் வரை இறந்திருந்தார்கள். இச்சம் பவத்தின் போது எந்தவித வயது வேறுபாடின்றி ஆறுபது வயது முதியவர்களிலிருந்து இருபது வயது இளைஞர்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தள்ளாடியிலும், உயிலங்குளத்திலும் இராணுவ முகாம்கள் இருப்பதால், இராணுவத்தினரின் தாக்குதல் நேரங்களில் வேறு பகுதிகளிற்குப் போகமுடியாத நிலை ஏற்படும். அப்படி வெளியேறினால் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடும். இதேபோன்று தான் ஆண்டான்குள மக்களுக்கும் பாதிப்புக்கள் இருக்கிறது. இந்தத் தள்ளாடி இராணுவ முகாமால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தள்ளாடி முகாமிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலிருக்கின்ற நாங்களாகத்தான் இருக்கிறது. பெரும் பாலும் எறிகணைத் தாக்குதலையும் உலங்குவானூர்த்தித் தாக்குதலையும் இம்முகாம் இராணுவத்தினர் மேற்கொள்வார்கள்."

**12.10.1986 அடம்பன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. யூலியன் யெஜசீலன் (22)
2. கிறிஸ்தோடு யோவான் (65)
3. ஐயம்பிள்ளை நாகமுத்து (84)
4. தங்கவேல் ராமன் (-)
5. மாமுண்டி செல்வராஸ் (14)
6. அந்தோனி செல்வராஸ் (63)
7. அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (28)

# பெரியபண்டிவிரிச்சான் படுகொலை 15.10.1986

மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேசசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமை போல 15.10.1986 அன்று தோட்டத்தில் வேலை செய்து கொணடிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற் தோட்டத்தில் காவல்காக்கும் எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக்குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.

இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக் குடிசைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத்தாக்கினர். பின்னர் இராச நாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பிவிட்டனர். இராசநாயகத்தின் படு கோரமாக சித்திரவதை செய்யப்பட்ட மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழுந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழுந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

**15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சான் படுகொலை யில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசநாயகம் மரிய எனஸ்ரின் (11)
2. ஜோசப் பிரான்சிஸ் (72)

**15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சானில் காயமடைந்தவர்களின் விபரம்**

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி (மாணவி)



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# புதுக்காட்டுச்சந்திப்படுகொலை 11.10.1987

கிளிநொச்சி மாவட்டத்தின் வட பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 நெடுஞ்சாலையில் சோரன்பற்று புதுக்காடச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியானது மருதங்கேணி, பளை, கிளிநொச்சி என்பவற்றை இணைக்கும் முச்சந்தியாக உள்ளது. இச்சந்தியைச் சுற்றி சோரன்பற்று, கரந்தாய் போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன. மேலும் தாளையடி, மருதங்கேணிப் பகுதிக்கான பிரதான வீதி இச்சதந்தியிலிருந்து ஆரம்பிப்பதால் இச்சந்தியில் போக்கு வரத்துக்காகப் பொதுமக்கள் அதிகளவில் கூடுகிற இடமாகும்.

11.10.1987 அன்று ஞாயிற்றுக்கிழமை 3:30 மணியளவில் ஆனையிறவு இந்திய இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி வாகனத்தொடரணி, கவசவாகனங்கள் சகிதம் வந்த இந்தியப் படையினர் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் திடீரென வாகனங்களிலிருந்து இறங்கி அப்பகுதியில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காகவும், பிரயாணத்திற் காகவும் நின்ற பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் போர் உயிரிழந்ததுடன், நான்கு பேர் படுகாயமடைந்தார்கள்.

**இந்தச் சம்பவத்தின் போது தன்னுடைய இரண்டு பிள்ளைகளை இழந்தவரும் சந்தியில் கடை வைத்திருந்தவருமான இளையதம்பி பேரம்பலம் பின்வருமாறு கூறினார்.**

"வாகனங்களில் வந்த இந்திய அரச படையினர் திடீரென இறங்கி பஸ் தரிப்பு நிலையத்திற் காத்து நின்ற மக்கள்மீதும் கடைகளில் நின்றவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தினார்கள். அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் கடையில் எனது மூத்த மகனும் இளையமகளும் நின்றனர். அத்துடன் ஊழியர் ஒருவரும் நின்றார். இவர்கள் மூவரையும் இராணுவம் கடையுடன் சேர்த்து எரித்தது. இவர்களின் உடல்கள் எரிந்த நிலையில் பின்னர் என்னால் மீட்கப்பட்டது. இந்தச் சந்தியிலிருந்த நான்கு கடைகளும் டாங்கிகளால் இடிக்கப்பட்டன. அத்துடன் சந்தியில் நின்ற காரும் எரிக்கப்பட்டது." என தன்னுடைய சோகக்கதையைக் கூறினார்.

**11.10.1987 அன்று புதுக்காட்டுச் சந்திப்படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. கனகரத்தினம் (35)
2. குழந்தைவேலு செல்வராசா (22)
3. பொன்னையா நவரத்தினம் (34)
4. பொன்னையா சுப்ரமணியம் (40)
5. பேரம்பலம் மகேஸ்வரன் (10)
6. பேரம்பலம் கோகிலா தேவி (14)
7. வேலாயுதம் செந்தில்நாதன் (14)
8. சின்னத்தம்பி பசுபதிப்பிள்ளை (41)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் (14)
2. சுப்பிரமணியம் ஏகாம்பரம் (45)
3. சின்னக்குட்டி சிவரூபன் (16)
4. ஆறுமுகம் பாலசிங்கம் (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்குவில், பிரம்படி, பொற்பதி வீதிப் படுகொலை 10.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ் மாவட்டத்தில் நல்லூர்ப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் அமைந்துள்ள இடத்திலிருந்து மேற்குப் புறமாக ஏறக்குறைய ஐநூறு யார் தூரத்தில் கொக்குவில் பிரம்படி வீதி உள்ளது.

இந்திய இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பன்னிரண்டாம் திகதி பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கிய தொடருந்து நிலைய வீதியூடாகக் கனரக வாகனங்கள் மூலம் முன்னேறி கொக்குவில் பிரம்படிப் பகுதியினைச் சுற்றிவளைதத்து. பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்த பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள் என யாவரையும் வீதிகளுக்கு அழைத்து வந்து சுட்டதில் நாற்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். அன்றையதினம் வேறு ஒரு பகுதியூடாக வந்த இந்திய இராணுவத்தின் மற்றுமொரு அணியினர், கொக்குவில் பொற்பதிப் பகுதியைச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து கொக்குவில் பிள்ளையார் ஆலயத்துக்கு வடக்காக நானூறு யார் தூரத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தின் அருகே வீதியோரத்தில் அனைவரையும் உயிருடன் நிலத்தில் படுக்க வைத்து இராணுவத்தின் கவச வாகனங்கள், டாங்கிகளை அவர்கள் மீது ஏற்றிப் படுகொலை செய்தனர். இதில் அறுபத்துநான்கு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். 1987 ஒக்டோபர் பன்னிரண்டாம் திகதி பிரம்படிப் பகுதி, கொக்குவில் பொற்பதிப் பகுதி ஆகிய இடங்களில் நடந்த சம்பவத்தில் நூறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள்.

பொற்பதி வீதியைச் சேர்ந்த 87 வயதான தட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம் தன்னுடைய வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

"சுகாதாரப் பரிசோதகரான என்னுடைய சகோதரன் தட்சனாமூர்த்தி தவராஜலிங்கம், வயது 44, அவருடைய மனைவி தவராஜலிங்கம் கனகமலர், வயது 38, பிள்ளைகளான தவராஜலிங்கம் கரன், வயது 10, தவராஜலிங்கம் கஜேந்திரன், வயது 6, 18 மாதங்களே நிரம்பிய தவராஜலிங்கம் தர்மிகா ஆகியோர் கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள இல 24 வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். என்னுடைய இன்னெரு மருமகனான 11 வயதான ஹர்சனும் அவர்களுடன்தான் இருந்தார். அன்றைய தினம் என்னுடைய சகோதரனின் வீட்டுப் பகுதியில் கடுமையான துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அடுத்தநாள் காலை 7 மணிக்குத்தான் அவ்வீட்டுக்கு என்னால் போக முடிந்தது. அங்கே, என்னுடைய சகோதரன், அவரின் மனைவி, பஞ்சிளம் பெண் குழந்தை ஆகியோரின் சடலங்கள் வீட்டிற்குள் இருந்தன. வேறு இரு சடலங்களும் அவ்வளாகத்தில் காணப்பட்டன.



கரன், கஜேந்திரன், ஹர்சன் ஆகிய மூன்று பையன்களும் இன்னொரு அறையிலிருந்த கட்டிலின் கீழ் ஒளிந்திருந்ததைக் கண்டேன். கஜேந்திரனும் ஹர்சனும் காயமடைந்திருந்ததுடன் குருதி வழிந்து கொண்டும் இருந்தது."

7 ஆம் வட்டாரம் நயினாதீவைச் சேர்ந்த 47 வயதான நாகலிங்கம் நாகேஸ்வரி தன் வாக்குமூலத்தில்,

"நான் என்னுடைய அண்ணா நாகலிங்கம் ஜீவரட்ணத்தின் குடும்பத்துடன் இல 24, பிரம்படி வீதி, கொக்குவிலில் வாழ்ந்துகொண்டிருந்தேன். சில வருடங்களுக்கு முன்னர்தான் என் பெற்றோர் மரணமடைந்திருந்தார்கள். அவ்வீட்டில், அண்ணாவும், பிள்ளைகளான கோகிலாவும் மனோகரனும், என்னுடைய சகோதரிகளான ஆனந்தகௌரி, சாரதாதேவியும் ஒன்றாக வசித்தோம். அன்றைய தினம் காலை ஒரு மணியிலிருந்து, துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தால் எமது உறக்கம் கலைந்துபோயிருந்தது. காலை 5.30 அளவில், இந்தியப் படையினர் எமது வீட்டு வளவுக்குள் நுழைந்து எம்மை வெளியில் வருமாறு சொன்னார்கள். படைவீரர்கள் எமது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் எறிகணைகள் அருகில் விழுந்து வெடித்தது. பின்னர், குண்டுப் பயத்தினால் பயமடைந்தோ என்னமோ, அவர்கள் தங்கள் சுடுகலன்களை எம்மை நோக்கித் திருப்பினார்கள். என்னுடைய அண்ணாவும் ஆறே வயது நிரம்பிய அவரது மகன் மனோகரனும் அவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். என்னுடைய இரு சகோதரிகளும், ஏழு வயதான மருமகள் கௌசலாவும் அவர்களின் துப்பாக்கிச் சன்னங்களுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். பின்னர் அவர்கள் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்."

# திருகோணமலை மாவட்டம் மூதூர் பூமரத்தடிச்சேனைப் படுகொலை 04.10.2000

தென்தமிழீழத்தில் திருமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பூமரத்தடிச்சேனைக் கிராமத்தில் 07 அப்பாவித் தமிழ் விவசாயிகள் சிங்கள ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 04.10.2000 அன்று பூமரத்தடிச்சேனைக் கிராமத்தை சுற்றிவளைத்த சிங்கள ஊர்காவல் படையினரால் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பெண் உட்பட 07 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு:

1. ந. அருளானந்தம் (17 வயது)
2. சி. நல்லதம்பி (57 வயது)
3. த. கலிராசா (35 வயது)
4. வி. சோமசுந்தரம் (56 வயது)
5. த. கனகரட்ணம் (57 வயது)
6. ச. இராசன் (37 வயது)
7. கிருஸ்ணபிள்ளை தயாஜோதி (32 வயது)



# சிறீலங்கா அரச பயங்கரவாதத்தினால் 06.10.1990 அன்று அனலைதீவிலிருந்து தமிழ்நாடு நோக்கி சென்ற அகதிகள் படகு மூழ்கி மக்கள் பலி

06.10.1990 அன்று அனலைதீவில் இருந்து சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் போக்குவரத்து தடை காரணமாக அனலைதீவிலிருந்து 78 பேரை ஏற்றிக்கொண்டு தமிழ் நாடு நோக்கிப் பயணித்தவேளை நடுக்கடலில் படகு முழ்கியதால் அதில் பயணம் செய்த மக்களில் 66 போல் பலியாகினர்.






கடலில் மூழ்கி 67 பேர் பலி

## படகில் ஓட்டை விழுந்ததால் கடலில் மூழ்கியது

### உயிர்தப்பி வந்த இலங்கை அகதிகள் பேட்டி

ஆவுடையார்கோவில், அக். 10–

"படகில் ஓட்டை விழுந்து தண்ணீர் உள்ளே புகுந்து விட்டது. அதனால் படகு மூழ்கி எங்கள் குடும்பத்தாரை இழந்துவிட்டோம்" என்று உயிர் தப்பி வந்த இலங்கை அகதிகள் கூறினார்கள்.

**தப்பி வந்த அகதிகள்**

இலங்கையில் சிங்கள ராணுவத்தின் கொலைவெறி தாக்குதலுக்கு பயந்து ஊர்க்காவல்துறை, அனலைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து 76 மீனவர்கள் தமிழ்நாட்டுக்கு தப்பி வருவதற்காக ஒரு படகில் வந்தார்கள்.

அவர்களில் 30 பேர் பெண்கள், 16 குழந்தைகள்

அவர்கள் வந்த படகு கடலில் மூழ்கி விட்டதால் அதில் 67 பேர் செத்து விட்டார்கள். 11 பேர் நீந்தி புதுக்கோட்டை மாவட்டத்தில் கரை ஏறினார்கள்.

**பேட்டி**

இந்த விபத்தில் உயிர் தப்பியவர்களில் சூரியகுமார், கிருஷ்ணமூர்த்தி குருக்கள் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:–

**ஓட்டை விழுந்தது**

இலங்கை ராணுவத்தின் கொலை வெறி நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. அதற்கு பயந்து நாங்கள் 78 பேரும் ஒரு படகில் ஏறி தமிழ்நாட்டுக்கு தப்பி வர முடிவு செய்தோம்.

அதன்படி ஒரு நபருக்கு ரூ. 1000 வீதம் பேசி படகை ஏற்பாடு செய்து கடந்த 6–ந் தேதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு அனலைத் தீவில் இருந்து புறப்பட்டோம்.

ஏறத்தாழ 1½ மணி நேர பயணத்துக்குப் பிறகு படகில் ஓட்டை விழுந்து விட்டது. அதில் தண்ணீர் புகுந்து படகில் ஏறியது.

**சாவு**

நாங்கள் அந்த தண்ணீரை வாளியினால் இறைத்து கடலில் ஊற்றினோம்.

படகு இந்திய எல்லைக்குள் வந்து விட்டது. அதன் பிறகு சிறிது தூரம்தான் எங்களால் வர முடிந்தது. மீண்டும் ஓட்டை வழியே தண்ணீர் புகுந்து படகு கடலில் மூழ்கியது.

நாங்கள் 2 பேரும் அரை மைல் தூரம் கடலில் நீந்தினோம். அங்கு சிலர் படகில் மீன் [illegible] கொண்டு இருந்தார்கள். அந்த [illegible] அழைத்து அதில் நாங்கள் 2 பேரும் ஏறிக் கொண்டோம்.

மூழ்கிய படகை தேட அங்கு விரைந்தோம். நாங்கள் இலங்கையில் இருந்து வந்த படகு முழுவதும் மூழ்கி விட்டது.

**தப்பியவர்கள்**

கடலில் 9 பேர் மட்டுமே தத்தளித்துக் கொண்டிருந்தனர் அவர்களை மட்டும் படகில் சென்று காப்பாற்றினோம். மற்ற 67 பேர் என்ன [illegible] தெரியவில்லை.

அதன்பின் எங்களை புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினம் அருகில் உள்ள ஆமி பட்டினம் என்ற இடம் அருகே இறக்கி விட்டனர். நாங்கள் அங்கிருந்து நீந்தி கரைக்கு வந்தோம்.

எங்கள் குடும்பத்தினர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

இவ்வாறு சூரியகுமாரும், கிருஷ்ணமூர்த்தி குருக்களும் கூறினார்கள்.

**கனகசபை**

தப்பி வந்த கனகசபை (63) நிருபரிடம் கூறியதாவது:–

என் மனைவி செல்லம்மாள் [illegible] கள் 3 மகன்கள். அவர்கள் 6 பேரும் கனடா நாட்டில் இருக்கிறார்கள்.

நானும் என் மனைவியும் இலங்கையில் இருந்து உயிர் தப்பி தமிழகத்துக்கு படகில் புறப்பட்டோம். வழியில் படகு மூழ்கியதால் என்னால் மட்டுமே தப்பிக்க முடிந்தது. என் மனைவியை பறிகொடுத்து விட்டேன்"

இவ்வாறு கனகசபை அழுது கொண்டே கூறினார்.

**சண்முகநாதன்**

உயிர் தப்பி வந்தவர்களில் சண்முகநாதனும் ஒருவர். விவசாயியான அவர் நிருபரிடம் கூறிய போது, என்னுடைய மகள்கள் சாந்தலோசினி (20) வசந்தலோசினி (18), மகன் சிவநாதன் (10), தங்கை நித்தியாநந்தி (20) ஆகியோரும் அந்த படகில் வந்தோம்.

படகு மூழ்கியதால் நானும் என்னுடைய மகன் சிவநாதன் மட்டுமே தப்பினோம். மற்றவர்கள் தண்ணீரில் மூழ்கி விட்டனர் என்று கூறி அழுதார்.

**பத்மநாபன்**

பத்மநாபன் கூறிய போது, எனக்கு திருமணம் ஆகி 4 வருடம் ஆகிறது. மனைவி புவனேசுவரி, மகள் மதலினி (3), தாய் [illegible] (52), [illegible] (19) [illegible] சுவரி, அண்ணன் உருத்திரநாதன் (32) ஆகியோரும் படகில் வந்த போது படகு மூழ்கி விட்டது. நான் மட்டுமே உயிர் பிழைத்தேன். மற்ற 7 பேரின் கதி என்ன என்று தெரியவில்லை என்று கதறி அழுதபடி கூறினார்.

**குகதாசன்**

குகதாசன் நிருபரிடம் கூறியதாவது:–

இலங்கையில் அரசு படகு கம்பெனி ஒன்றில் வேலை பார்த்த என்னை நீக்கி விட்டனர்.

இலங்கை பிரச்சினையில் மனைவி பரமேசுவரி (52), மகள்கள் பிரியதர்சினி (20), பெரியநந்தினி (19) நிவேதிகா (15) சிவப்பிருந்தா (13), ராதிகா (9) ஆகியோரும் படகில் வந்தோம்.

மகள் பெரிய நந்தினிக்கு மன நிலை சரியில்லை. அவளுக்கு தமிழகத்தில் வைத்தியம் பார்க்க வேண்டும் என்று ஆசையுடன் வந்தேன். படகு மூழ்கியதால் மனைவி மகள்களை பறிகொடுத்து விட்டோம்" என்று கூறி கதறி அழுதார்.

**அகதி முகாம்**

உயிர் தப்பிய 11 பேரும் கோட்டைப்பட்டினம் அகதி முகாமில் தங்கி உள்ளனர்.

கடலில் மூழ்கி செத்தவர்களின் பிணங்கள் ஏதேனும் கரையில் ஒதுங்குகிறதா என் பதை கடற்கரை ரோடு இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன் பார்வையிட்டு வருகிறார்.




**06.10.1990இல் அனலைதீவிலிருந்து அகதிகளாக 78 பேர் இந்திய மீன்படிப் கடகொன்றில் ஏறி கடல் மார்க்கமாக இந்தியாவை நோக்கிச் சென்ற வேளை, படகு நடுக்கடலில் கவிழ்ந்து நீரில் மூழ்கியதனால், அதில் சென்றவர்களின்78 பேர் உயிர் நீத்தனர், 13 பேர் நீந்தி உயிர் தப்பினர்; இவர்களில் 2 பேர் படகோட்டிகள்.**

**06.10.1990 அன்றைய நாள் கடலில் உயிர்நீத்த உறவுகளின் விபரம்:–**

1. திருமதி. குகதாசன் பரமேஸ்வரி 45, வட்டாரம் 2 , அனலைதீவு
2. செல்வி. குகதாசன் பிரியதர்சினி(பூரணி) 22, வட்டாரம் 2, அனலைதீவு
3. 3. செல்வி.குகதாசன் பிரியனந்தினி 20, வட்டாரம் 2, அனலைதீவு
4. செல்வி. குகதாசன் நிவேதிகா 18, வட்டாரம் 2, அனலைதீவு
5. செல்வி. குகதாசன் சிவப்பிருந்தா 16, வட்டாரம் 2, அனலைதீவு
6. செல்வி. குகதாசன் இராதிகா 14, வட்டாரம் 2, அனலைதீவு
7. திரு. கணேசையர் கோபாலகிருஷ்ணன் குருக்கள் 48, வட்டாரம் 3, அனலைதீவு
8. திருமதி. கோபாலகிருஷ்ணன் வாலாம்பிகாதேவி 40, வட்டாரம் 3, அனலைதீவு
9. செல்வன். கோபாலகிருஷ்ணன் ரமேஷ் 20, வட்டாரம் 3, அனலைதீவு
10. செல்வன். கோபாலகிருஷ்ணன் ராஜேஷ் 18, வட்டாரம் 3, அனலைதீவு
11. செல்வி. கோபாலகிருஷ்ணன் சித்திரா 17, வட்டாரம் 3, அனலைதீவு
12. செல்வன். கோபாலகிருஷ்ணன் ஜெகதீஷ் 15, வட்டாரம் 3, அனலைதீவு
13. திருமதி. சண்முகம் சின்னாச்சி 55, வட்டாரம் 3, அனலைதீவு
14. செல்வி. திருநாவுக்கரசு சசிகலா 18, வட்டாரம் 3, அனலைதீவு
15. செல்வன். திருநாவுக்கரசு சசிகரன் 16, வட்டாரம் 3, அனலைதீவு
16. திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை 70, வட்டாரம் 3, அனலைதீவு
17. திருமதி. கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து 60, வட்டாரம் 3, அனலைதீவு
18. செல்வி. கணபதிப்பிள்ளை உருத்திராதேவி 27, வட்டாரம் 3, அனலைதீவு
19. செல்வி. கணபதிப்பிள்ளை கௌரி 20, வட்டாரம் 3, அனலைதீவு
20. செல்வி. சண்முகநாதன் சந்தலோயினி 21, வட்டாரம் 3, அனலைதீவு
21. செல்வி. சண்முகநாதன் வசந்தலோயினி 19, வட்டாரம் 3, அனலைதீவு
22. செல்வி. தம்பையா சத்தியானந்தி 22, வட்டாரம் 3, அனலைதீவு
23. பொன்னம்பலம் இந்திரநாதன் 34, வட்டாரம் 3, அனலைதீவு
24. செல்வன். இந்திரநாதன் சுஜாகரன் 08, வட்டாரம் 3, அனலைதீவு
25. திருமதி. குமாரசாமி ஈஸ்வரி (சின்னம்மா) 59, வட்டாரம் 4, அனலைதீவு
26. திரு. சிவராசா உருத்திரநாதன் 36, வட்டாரம் 4, அனலைதீவு
27. திருமதி. உருத்திரநாதன் சற்குணம் 30, வட்டாரம் 4, அனலைதீவு
28. செல்வன். உருத்திரநாதன் மோகனதாஸ் 1.5 , வட்டாரம் 4, அனலைதீவு
29. திருமதி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் சாவித்திரி 27, வட்டாரம் 4, அனலைதீவு
30. செல்வி. கிருஷ்ணமூர்த்தி அரிகரப்பிரியா (பிரியா) 12, வட்டாரம் 4, அனலைதீவு
31. செல்வி. கிருஷ்ணமூர்த்தி சிவப்பிரியா 09, வட்டாரம் 4, அனலைதீவு
32. செல்வி. கிருஷ்ணமூர்த்தி ஜனனி 08, வட்டாரம் 4, அனலைதீவு
33. திருமதி. குமாரசாமி கனகலெட்சுமி (மணி) 45, வட்டாரம் 5, அனலைதீவு
34. திருமதி. விக்னேஸ்வரன் சூரியவதனி 20, வட்டாரம் 5, அனலைதீவு
35. செல்வி. விக்னேஸ்வரன் ஜீவிதா 10 மாதம், வட்டாரம் 5, அனலைதீவு
36. செல்வி. குமாரசாமி மலர்வதனி 16, வட்டாரம் 5, அனலைதீவு
37. செல்வன். குமாரசாமி அரிகரகுமாரன் 12, வட்டாரம் 5, அனலைதீவு
38. திருமதி. செல்லத்துரை கமலாம்பிகை (சின்னம்மா) 52, வட்டாரம் 5, அனலைதீவு
39. செல்வி. சதாசிவம் யோகேஸ்வரி (சுரபி) 15, வட்டாரம் 5, அனலைதீவு
40. திருமதி. பத்மநாதன் பவனேஸ்வரி (கீதா) 20, வட்டாரம் 5, அனலைதீவு
41. செல்வி. பத்மநாதன் மகிழினி 03, வட்டாரம் 5, அனலைதீவு
42. திருமதி. சபாபதி அன்னலட்சுமி (அன்னம்) 51, வட்டாரம் 5, அனலைதீவு
43. திருமதி. கனகசபை செல்லம்மா 50, வட்டாரம் 5, அனலைதீவு
44. செல்வன். க. கந்தசாமி விக்னேஸ்வரன் (அப்பன்) 15, வட்டாரம் 5, அனலைதீவு
45. செல்வன். கு. கந்தசாமி அரிகரன் (கரன்) 14, வட்டாரம் 5, அனலைதீவு
46. திரு. சந்தியான் அந்தோனி 26, வட்டாரம் 5, அனலைதீவு
47. திரு. வயிரவநாதன் தில்லையம்பலம் 56, வட்டாரம் 6, அனலைதீவு
48. திருமதி. தில்லையம்பலம் திருப்பதி 53, வட்டாரம் 6, அனலைதீவு
49. செல்வி. தில்லையம்பலம் சிவசோதி (ராணி) 21, வட்டாரம் 6, அனலைதீவு
50. செல்வன். தில்லையம்பலம் சிவகுமார் (குமார்) 14, வட்டாரம் 6, அனலைதீவு
51. செல்வி. தில்லையம்பலம் வசந்தா 11, வட்டாரம் 6, அனலைதீவு
52. திரு. இந்திரநாதன் சுஜீதா 22, வட்டாரம் 6, அனலைதீவு
53. திரு. இந்திரநாதன் சுஜீகரன் 32, வட்டாரம் 6, அனலைதீவு
54. திரு. பொன்னம்பலம் பொன்னுச்சாமி 64, புளியங்கூடல்
55. திருமதி. பொன்னுச்சாமி அன்னலெட்சுமி 60, புளியங்கூடல்
56. பொன்னுச்சாமி சிவநாதன் 35, புளியங்கூடல்
57. பொன்னுச்சாமி கணநாதன் 29, புளியங்கூடல்
58. திரு. நாகராசா குகதாசன் 17, புளியங்கூடல்
59. திருமதி. கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் 60, வட்டாரம் 2, எழுவைதீவு
60. செல்வி. கிருஷ்ணபிள்ளை சுந்தரேஸ்வரி 14, வட்டாரம் 2, எழுவைதீவு
61. திருமதி. நடராசா இராசாம்பாள் 24, வட்டாரம் 2, எழுவைதீவு
62. செல்வி. நடராசா வாணி 1.5, வட்டாரம் 2, எழுவைதீவு
63. வே. அன்னலிங்கம் 70, மண்டைதீவு
64. திருமதி. அன்னலிங்கம் 55, மண்டைதீவு
65. செல்வி. அன்னலிங்கம் வசந்தா 30, மண்டைதீவு
66. தேவன் 24, கரம்பொன்

# ஏறாவூர் படுகொலை 10.10.1990

தங்கராசு ஐயனார் சொல்கிறார்:

"கைதாகி காரத்தீவு சண்முகா பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது மகனை பார்ப்பதற்கு. 10ஆம் தேதி அக்டோார் மாதம், 1990இல் சுமார் 10 மணிக்கு மருத்துவர் சண்முகநாதன், அவருடைய மனைவி ராணி ஆகியோரை அழைத்து சென்றேன். நகரில் நின்றோரை எல்லாம் தடுத்து நிறுத்தி விட்டு சென்றார்கள். சிறது நேரத்தில் திரும்ப வந்து இஸ்லாமியர்களையும், தமிழர்களையும் தனித் தனியே பிரிந்திருக்க சொன்னார்கள். பின்னர் இஸ்லாமியர்களை எல்லாம் அங்கிருந்து சென்று விட்டனர்.

ஆண்களை ஒரு பக்கத்துக்கு அழைத்தார்கள். என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டு இருந்தோம். அங்கு உள்ள ஒரு அறையினுள் எங்களை செல்லச் சொன்னார்கள். எங்களுக்கு பயமாக இருந்தது. இப்போது மருத்துவரின் மனைவி அந்த அறையினுள் சென்று, மருத்துவரை ஒன்று துன்புறுத்த வேண்டாம் என இராணுவத்தினரைப் பாரர்த்து கெஞ்சினார். ஆனால், இராணுவத்தினர் மருத்துவரின் மனைவியை தூரே இழுத்துச் சென்று வெளியே வீசி விட்டு வந்தனர். அப்பொழுது அங்கு ஒரு மனிதர் கத்தியை பிடித்து கொண்டு நின்றிருக்கிறார். இது எனக்கு அப்பொழுது தெரியாது. தீடீரென என்னுடைய தலையில் உள்ள மயிரை பிடித்தார். எனது தலையில் எண்ணெய் தடவியிருந்ததால், அவரின் பிடி நழுவியது. என்னுடைய தலையை வெட்டிவிட ஓங்கிய கத்தி, எண்ணெய் வழுக்கி கை நழுவியதால் எனது கழுத்தில் விழுந்தது. நான் தரையில் விழுந்தேன். நான் படுகாயமுற்றதால் இறந்து விடுவென் என நினைத்தேன்.

மருத்துவர் சண்முகநாதனும், சிலரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டிருந்தனர். நான் கீழே விழுத்திருந்த நேரத்தில். கொல்லப்பட்டவர்களின் அலறல் ஒலி கேட்க முடிந்தது. அந்த சப்தத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால், எனக்கு வேறு வழி தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து பெரிதாய் சத்தமிட்டுக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் இழுத்து வரப்பட்டார். அவரின் மேலிருக்கும் சேலையை களையப்பட்டிருந்தது. சிங்கள இராணுவ சிப்பாய் ஒருவன் அப்பெண்னை வேறு அறைக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத் தினான். தன்னை விடச் சொல்லியும் அங்கு நடப்பதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றும் அப்பெண் கெஞ்சினார். ஆனால், மற்றொரு இராணுவ சிப்பாய் அப் பெண்ணின் தலையை வெட்டச் சொல்லி கட்டளையிட்டான். பின்னர் என் நிகழ்ந்திருக்கும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், கூச்சல் அடங்கி அமைதியானது. இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று சென்று விட்டனர்.

என்னால் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. மனித வதைக்குள்ளான மக்களின் ஓலம் கேட்டுக் கொண்டே இருந்தது. என்ன செய்வது என்று நான் யோசனையில் இருந்தேன். அப்பொழுது இராணுவத்தினர் திரும்பவும் வந்து. ஓலமிடுவோரையும், மூச்சு விட்டுக் கொண்டிருந்தோரையும் தேடி, கத்தியால் குத்தி எந்தவொரு சப்தம் வராதவாறு பார்த்து கொண்டனர்.

பின்னர், அவர்கள் எண்ணெயோ அல்லது மண்ணென்ணெயையோ அங்கு கிடந்தவர்கள் மீது ஊற்றி எரியூட்டினர். தீ என்னுடைய கால்களுக்கும் பாய்ந்தது. நான் அணைக்க முற்பட்டேன். ஆனால், முடியவில்லை. என்னால் எழுந்து நிற்கவோ, என்னுடைய கால்களை தூக்கவோ முடியவில்லை. என்னுடைய கைகளினால் என் தலையை உயர்த்தி பின்னர் தவழ்ந்து கொண்டே, அந்த பெண்ணை கொண்டு சென்ற அறைக்குள் தவழ்ந்து சென்றேன்.

எழுந்து அமர்ந்து சிறிது நேரம் சிந்தித்தேன். விமானச் சத்தங்கள் இப்பொழுது கேட்க முடிந்தது. பெண்ணின் சேலை தரையில் கிடந்ததைப் பார்த்தேன். அதை யெடுத்து இரண்டாய் கிழித்தேன். என்னுடைய தலையிலும், கழுத்திலும், முகத்தையும் மறைத்துக் கொண்டபடி இறுக கட்டிக் கொண்டேன். வெளியே என் தலைக்கு மேலே தீ எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும், கைகள், கால்கள் மற்றும் தலைகளாய் கிடந்தன. அவைகளைத் தாண்டி நகர்ந்து ஊர்ந்து வெளியே வந்து சேர்ந்தேன்".

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

# குமரபுரம் குண்டுவீச்சு 10.10.2008

குமரபுரம் கிளிநொச்சி நகர மையத்திலிருந்து ஏழு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதன்மீது 10 அக்டோபர் 2008 அன்று நிகழ்த்தப்பட்ட வான்குண்டு வீச்சு, சன அடர்த்தி மிக்க கிளிநொச்சி நகரமையம், மற்றும் அதனையண்டிய பகுதிகளில் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட வான்குண்டு வீச்சுக்களில் ஒன்றாகும். இக்காலம், இடம்பெயர்ந்த மக்களும், உள்ளூர்வாசிகளும், இக் குண்டு வீச்சுக்கள் காரணமாக மிகப்பெரிய அளவில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த காலமாகும். மேற்குறிப்பிட்ட குண்டு வீச்சில் ஒரு பாடசாலை ஆசிரியை, அவரது பத்துவயது மகள், மேலுமோர் பெண் ஆகியோர் கொல்லப் பட்டனர். ஆசிரியையின் கணவன், அவரது மகன், மேலும் பல பொது மக்கள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்த கணவன் இத் துயர சம்பவத்தின் பின்னர் பின்வருமாறு கூறினார்:

"நான் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உள்ளூராட்சி அமைப்பு ஊழியன். எமக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. நாம் எமது சொந்த ஊராகிய பச்சிலைப் பள்ளியிலிருந்து ஆகஸ்ட் 2006 இல் இடம் பெயர்ந்தோம். அப்போதிருந்து கிளிநொச்சி குமரபுரத்தில் ஒரு மண்வீட்டைக் கட்டி வாழ்ந்திருந்தோம். அந்த துர்ப்பாக்கிய நாளில் நானும் மனைவியும், அன்று வேலைக்குச் செல்லும் முன்பதாக காலை 6.25 மணியளவில் அன்றைய சமையலில் ஈடுபட்டிருந்தோம். அந்நேரம் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டது. நாம் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பதுங்கு குழிக்கு ஓடினோம். எமது வீட்டைச் சுற்றி மூன்று குண்டுகள் வீழ்ந்தன. அவற்றில் ஒன்று எமது பதுங்கு குழிக்கு மிகவும் அண்மையில் விழுந்தது. எனது மனைவி தலத்திலேயே இறந்துவிட்டார். மகள் மூர்ச்சையாகிப் பின்னர் வைத்திய சாலையில் இறந்தாள். நானும் எனது மகனும் காயமடைந்ததுடன், குண்டு வெடித்தவுடன் மூச்சு விட சிரமப்பட்டோம். வெடிச்சத்தத்தினாலும், அதிர்ச்சியினாலும் எனது செவிப்புலன் பாதிக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் இடம் பெயர்ந்து இப்போது எனது உறவினருடன் வாழ்கின்றோம். இங்குதான் நாம் எனது மனைவி, மகள் இருவரினதும் ஈமச்சடங்கினை நிறைவேற்றினோம்".
























எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.






# தமிழர் தோற்றம் பற்றிய சில கோட்பாடுகளின் நம்பகத்தன்மையும், நிலவியல் சமூகத்திரவியல் சான்றுகளும் பகுதி – 1

## திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ் மொழியின் படிமுறைத் தோற்றமும்

### தமிழர் தோற்றம் பற்றிய சில கோட்பாடுகள்

தமிழ் மொழியைப் பாரம்பரியமாகப் பேசும் மக்கள் 'தமிழர்கள்' என அழைக்கப்படுகிறார்கள். இந்தத் தமிழ் மொழி பேசப்பட்ட - பேசப்படுகிற - நிலம் 'தமிழகம்' (Home of the Tamils) என அழைக்கப்படுகிறது. இங்கே நாங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை:

தமிழகம் என நாங்கள் அழைக்கும் தென்னாசிய மண்ணில் வாழும் மக்களின் முன்னோர்கள் இந்த நிலத்திற்கு வருகை தந்த காலம் வேறு.

தமிழ் என்றொரு மொழி உருவாகி அம்மொழியை இம்மக்கள் கடைப்பிடித்த காலம் வேறு.

இத்தென்னாசிய மக்கள் தமிழ் மொழியைப் பேச ஆரம்பித்த பின்னரே இவர்களை நாம் தமிழர்கள் என அழைக்க முடியும். ஆனால், இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் என்றொரு மொழி வழக்கத்திற்கு வருவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களது ஆரம்பகாலப் பேச்சுவழக்குகள் பிற்காலத் திராவிட மொழிகளின் தோற்றத்திற்கு முக்கிய பங்களித்தமையால் (இது பற்றி பின்னர் விரிவாகப் பேசப்படும்) இவர்களை இன்று நாம் திராவிட முன்னோடிகள் என்ற பெயரால் அழைக்கலாம்.

தமிழர்களின் தோற்றம் பற்றி பல வகையான கோட்பாடுகள் தமிழக வரலாற்றாசிரியர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமான சில:

தமிழர் தோன்றியது 'குமரிக்கண்டம்' என்று அழைக்கப்பட்ட ஒரு பெரும் நிலப்பரப்பில். அதற்கு 'லெமூரியா' என்ற மாற்றுப் பெயர் உண்டு. ஒரு காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கே ஆபிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலிருந்த கண்டம் இது. இக்கண்டம் கடல்கோள்களினால் அழிந்துவிட்டது. இந்த லெமூரியா எனப்படும் குமரிக்கண்டத்திலிருந்தே தமிழர்கள் இன்றைய தமிழகத்தை வந்தடைந்தார்கள். இங்கிருந்து அவர்கள் மேற்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்தார்கள்.

தமிழர் ஓர் இன மக்கள். அவர்கள் தமிழ்நாட்டின் தொல்குடிகள். அவர்கள் தோன்றியது இந்த மண்ணில்தான்.

தமிழர்கள் மொசப்பத்தேமியாவிலுள்ள சுமேரியாவிலிருந்து சிந்து சமவெளி (மொகஞ்சதாரோ, ஹரப்பா) வழியாக தமிழகத்திற்கு வந்தவர்கள்.

இக்கோட்பாடுகளின் உண்மைத்தனத்தை முடிவு செய்வதற்கு கீழ்க்காணும் கற்கைத்துறைகள் துணை நிற்கின்றன. அவை: 1. குடிசன மரபணுவியல் (Population Genetics), 2. மானிடவியல் (Anthropology), 3. தொல்லியல் (Archaeology), 4. மொழியியல் (Linguistics), 5. நிலவியல் (Geology) என்பன.

குமரிக்கண்டம் என்ற பெயரில் ஒரு கண்டம் இருந்ததா? லெமூரியா என்பது குமரிக்கண்டமா?




வடக்கே இந்தியாவையும், மேற்கே மடகஸ்காரையும், கிழக்கே ஆஸ்திரேலியாவையும் இணைக்கும் முக்கோண வடிவிலான, தமிழறிஞர்கள் கற்பனையில் உருவான, லெமூரிய - தமிழக நிலப்பரப்பு

## குமரிக்கண்டமாக்கப்பட்ட குமரி நாடு

சங்ககால இலக்கியங்களில் உள்ள சில நூல்களிலும், பின்னர் சங்கம் மருவிய காலத்தில் வெளிவந்த சிலப்பதிகாரத்திலும் கடல் கொண்ட குமரி நாடு பற்றிக் கூறப்படுகிறது.

புறநானூறு 9ஆம் செய்யுள் 9-11ஆம் வரிகளில்:

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,
முந்நீர் விழவின், நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே!"

"கடல் தெய்வத்திற்கு முந்நீர் விழா எடுத்து, அதனுள் கூத்தர்க்குப் பசும் பொன் வழங்கிய நெடியோனால் ஆக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி ஆற்று மணலிலும் பல ஆண்டுகள் நீ புகழுடன் வாழ்வாயாக!"

கலித்தொகை 104ஆம் செய்யுள் 1-4ஆம் வரிகளில்:

"மலித்திரை ஒருங்க தன்மண் கடல் வவ்வின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம்பட
புலியொடு வில்நீக்கி புகழ் பொரித்த கிளர் கெண்டை
வலியினால் வனக்கிய வாடாசீர்த் தென்னவன்"

"தனது நிலத்தைக் கடல் கொண்டதனால் பாண்டிய மன்னன், சேர - சோழர்களை வென்று அவர்களது நிலங்களைத் தனதாக்கிக் கொண்டான்."
சிலப்பதிகாரம் 11ஆம் செய்யுள் 18-20ஆம் வரிகளில்:

"வடிவேலெறிந்த வன்பகை பொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

"(பாண்டிய மன்னன்) தனது கூர்மையான வேலெறிந்த பெரும் பகையைப் பொறுக்க மாட்டாது பொங்கி எழுந்த சமுத்திரம், பஃறுளி ஆற்றுடன் கூடிய மலைகளையும், குமரிக் கோட்டையையும் விழுங்கிக் கொண்டது."

இதில் எந்தப் பாடலிலும் குமரிக்கண்டம் என்றொரு கண்டம் கூறப்படவில்லை. பாண்டிய நாட்டின் நிலங்களைக் கடல் கொண்டதாகவும், அந்த நிலத்தில் பஃறுளி என்றொரு ஆறும், மலைகளும், குமரி மலையும் இருந்ததையும் மட்டுமே இப்பாடல்கள் கூறுகின்றன. இவற்றிலிருந்து பஃறுளி ஆற்றையும், குமரிக்கோட்டையையும் கொண்ட ஒரு குமரி நாடு இருந்ததை மட்டுமே நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும், 'கண்டம்' என்ற சொற்பதம் 'நாடு' என்பதைக் குறிக்கும் மாற்றுச் சொற்களில் ஒன்றென பிங்கல நிகண்டின் 457ஆவது செய்யுள் குறிப்பிடுகிறது:

"பைதிர மண்டிலம் பாடி தேயந்
தண்ணடை நீவரங் கோட்டாஞ் சனபதஞ்
சும்மை யகலுள் கண்டமேணி யென்றின்ன
விராச்சிய முலகு நாடெனப"

இதன்படி 'கண்டம்' என்ற சொற்பதம் ஒரு நாட்டைக் குறிப்பிடப் பாவிக்கப்பட்டிருக்கலாம். இப்பதம் ஒரு பெரும் நிலப்பரப்பைக் குறிப்பிடுகிறது என நிச்சயமாகக் கொள்ள முடியாது.

சங்ககாலத்தின் பின் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள் கழித்து, கி.பி. எட்டாம் நூற்றாண்டுக் காலத்தில் இறையனார் அகப்பொருளுரை என்றொரு நூல் வெளிவந்தது. இதற்கு இறையனார் களவியல் உரை என்ற மாற்றுப் பெயரும் உண்டு. இந்நூலின் செய்யுட்பகுதியை இறையனாரே - அதாவது கடவுளே - எழுதியதாகக் கூறப்பட்டது. இந்நூலின் செய்யுட்பகுதி 60 சூத்திரங்களைக் கொண்ட பொருளிலக்கணப் பாடல்களைக் கொண்டது (இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரை, 2006 பதிப்பு).

இதற்கு நக்கீரர் உரை கூறியதாகக் கூறப்படுகிறது. இன்றிருக்கும் உரை நக்கீரர் உரை என வழங்கப்பட்டாலும், நக்கீரர் உரை வாய்மொழியாகப் பல தலைமுறைகளுக்கு வழங்கப்பட்டு வந்து பின்னர் ஒன்பதாம் தலைமுறையைச் சேர்ந்த முசிறி ஆசிரியர் நீலகண்டனார் என்பவரால் கேட்கப்பட்டது என்ற குறிப்பும் இந்த நூலின் முன்னுரையில் காணப்படுகிறது. நீலகண்டனாரின் காலத்தில் இது ஏட்டில் எழுதி வைக்கப்பட்டிருக்கலாம்.

இந்நூலின் முக்கியத்துவம் என்னவெனில், இப்பாடல்களின் உரைக்குத் தொடர்பேதும் இல்லாத இதன் நீண்ட முன்னுரையில் பண்டைய தமிழகத்தின் பாண்டிய நாட்டில் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்ததாகவும், இவை முறையே 4440, 3700, 1850 ஆண்டுகள் செயற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

"இந்த முதற்சங்கம் குமரிக்கண்டத்தில் அங்கே ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களின் முதல் தலைநகரமான தென் மதுரையில் நடைபெற்றது. தென் மதுரை தலைநகராக இருந்த குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியை 'கடற்கோள்' கொண்டபின், மிகுதியிருந்த குமரிக்கண்டத்தின் கபாடபுரத்தில் தலைநகர் அமைக்கப்பட்டு, அங்கே இடைச்சங்கம் நடைபெற்றது. இந்தப் பகுதியும் மீண்டும் கடற்கோளினால் அழிந்துபோக, பாண்டியர்கள் வடக்கே வந்து இன்றைய மதுரையைத் தலைநகராக்கி அங்கே மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்" என இந்நூலில் கூறப்படுகிறது (இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரை).

இறையனார் அகப்பொருள் உரை நூலைத் தொடர்ந்து வெளிவந்த தொல்காப்பியப் பொருளதிகார உரையில் நச்சினார்க்கினியரும், தொல்காப்பிய உரை நூலில் பேராசிரியரும், சிலப்பதிகார உரை நூலில் அடியார்க்கு நல்லாரும், இறையனார் அகப்பொருள் கூறிய தமிழ்ச் சங்கம் பற்றிய விவரங்களையும், குமரிநாட்டின் அழிவைப் பற்றியும், அத்தோடு பல புதிய தகவல்களையும் சேர்த்து திரும்பவும் உரைத்தார்கள்.

இந்த வரலாற்றில் பின்வரும் அம்சங்கள் சர்ச்சைக்கு உரியவை:

1. சங்ககால இலக்கியங்கள் 'குமரி நாடு' என்ற பெயரால் ஒரு நாடு இருந்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றனவே ஒழிய, குமரிக் கண்டம் பற்றியோ, கபாடபுரம் குமரிக்கண்டத்தில் இருந்தது பற்றியோ, அங்கிருந்த தமிழ்ச் சங்கங்கள் பற்றியோ எதுவுமே குறிப்பிடவில்லை. மேலும், சங்கம் மருவிய காலத்திற்கும் இறையனார் அகப்பொருளுரை நூல் வெளிவந்த எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 500 ஆண்டுக் காலத்தில் வெளிவந்த எந்தத் தமிழ் நூலிலும் இம்மூன்று சங்கங்கள் பற்றிக் கூறப்படவே இல்லை.

2. முதற் கடற்கோளில் குமரிக்கண்டத்தின் ஒரு பகுதி அழிந்து போக, எஞ்சிய குமரிக்கண்டத்தின் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இடைச்சங்க காலத்தில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் தொல்காப்பியம், இச்சங்கங்கள் பற்றியோ, குமரிக் கண்டம் பற்றியோ, கபாடபுரம் பற்றியோ எதுவுமே கூறவில்லை. தமிழ் நாட்டின் எல்லைகளை, "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து" என்ற வரிகளுடன் ஆரம்பிக்கும் தொல்காப்பியம், இன்று இருப்பதைப்போல தமிழகத்தின் தென் எல்லையாகக் குமரிமுனையையே குறிப்

பிடுகிறது.

3. 'சங்கம்' என்பது ஒரு பிராகிருத-சமஸ்கிருத மொழிப்பதம். அது இன்றுவரை நிலைபெற்று நின்றுவிட்டது. தமிழ்மொழி வளர்க்கப் புறப்பட்ட பாண்டிய மன்னனும், தமிழ் அறிஞர்-புலவர்களும் தங்கள் அவைக்கு ஏன் ஒரு சமஸ்கிருத மொழிப் பதத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்? அழகிய தமிழில் 'கூடல்' என்றல்லவா அழைத்திருப்பார்கள்? மதுரையை 'கூடல்', 'நான் மாடக் கூடல்' என்ற பெயர்களாலும் சங்ககால இலக்கியங்கள் அறியத் தருகின்றன.

இறையனார் அகப்பொருள் உரை எழுதப்பட்ட மத்திய காலத்தில் சமஸ்கிருதம் தமிழகத்தின் சில அறிஞர்கள் மத்தியில் பிரபலமாக இருந்தது. சமஸ்கிருதப் பதங்களை அவர்கள் எழுதும் தமிழ் நூல்களில் தாராளமாக உபயோகிப்பது கௌரவமாகக் கருதப்பட்டது. எனவே, அக்காலகட்டத்தில் எழுதப்பட்ட நூலில் நக்கீரனார் 'சங்கம்' என்ற பதத்தை உபயோகித்திருப்பதைப் பெரும் தவறாகக் கொள்ள முடியாது. ஆனால், குமரிக்கண்டத்தில் முதற்சங்கம் இருந்ததாகக் கூறப்படும் காலகட்டத்தில் ஆரியர்கள் இந்திய உபகண்டத்திற்குள் நுழையவே இல்லை. சமஸ்கிருத மொழி அன்று வழக்கில் இல்லை. வழக்கில் இல்லாத ஒரு மொழிப்பதத்தைப் புலவர்களாலோ, பாண்டிய மன்னனாலோ, மற்றெவராலுமோ அக்காலத்தில் உபயோகித்திருக்க முடியாது.

4. தமிழகத்தில் பாண்டிய மன்னர்கள் மதுரையைக் கைப்பற்றி அங்கே தலைநகரை அமைக்க முன்னர், கொற்கையில் தமது தலைநகரை அமைத்திருந்தார்கள். இந்தக் கொற்கை நகரின் கடற்கரைத் துறையை சில சமஸ்கிருத இலக்கியங்கள் 'பாண்டிய கபாடக' எனக் குறிப்பிடுகின்றன. சமஸ்கிருதத்தில் 'பாண்டிய கபாடக' என்றால் பாண்டியநாட்டின் நுழைவாயில் என்றும் பொருள்படும் (தமிழிலும் இப்பதம் 'வாயில்' என்பதைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணம்: 'இதயக் கபாடம் திறமினோ?').

வால்மீகி இராமாயணத்தில் (கி.மு. 300-200), கிஷ்கிந்தா காண்டத்தில் தாமிரபரணி நதி பாண்டியர்களின் தலைநகரான கபாடபுரத்தினூடாகச் சென்று கடலை அடைகிறது என்ற செய்யுள்வரி காணப்படுகிறது (Valmiki Ramayana: Kishkinta Khanda: 41:17-19).

அர்த்தசாஸ்திரத்தை எழுதிய கௌடில்யர் (சாணக்கியர், கி.மு. 350-270) கொற்கைப் பாண்டிய முத்துகளை பாண்டிய கபாடக எனக் குறிப்பிடுகிறார் (Arthashastra, Chapter 2:32). இங்கே 'கபாடக' என்ற பதம் முத்துகளைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டிருக்கிறது. 'கபாடபுரம்' என்ற பதத்தை முத்துகள் பெறப்படும் நகரம் என்றும் பொருள் கொள்ளலாம்.

வடமொழி இலக்கியங்கள் குறிப்பிடும் 'கபாடபுரம்' கொற்கை நகரமே. இந்த உண்மையை உணராமல் கபாடபுரம் குமரிக் கண்டத்தில் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.



புராதன தமிழகத்தின் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் சேர்ந்து நடனமாடும் காட்சி பாறை ஓவியமாக ஆண்டிப்பட்டி மலைக்குன்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களோடு பழக்கப்பட்ட (domesticated) ஆடும் காணப்படுகிறது. இந்த ஓவியத்தின் காலம் இற்றைக்கு 5.000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிக்கப்படுகிறது.

Image Source - Indian Express, March 4, 2013

5. இறையனார் அகப்பொருள் உரை, முதற்சங்கம் 4440 ஆண்டுகளும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடப்படும் ஆண்டுக் கணக்குகள் இயற்கையாக இல்லை. ஏனெனில், இவை யாவும் 37 இன் 120ஆம், 100ஆம், 50ஆம் இலக்கப் பெருக்கங்கள்:



'லெமூரியா' என்ற கற்பனைக் கண்டத்தின் பெயருக்குக் காரணமான லெமூர் விலங்கு. இந்த சிறு விலங்கு தமிழர்களின் வரலாற்றை எத்தனை பெரும்பாடு படுத்தியிருக்கிறது!

$120 \times 37 = 4440$
$100 \times 37 = 3700$
$50 \times 37 = 1850$

இவையெல்லாம் இக்கணக்கை வகுத்தவரின் கற்பனையில் உதித்த காலங்களோ என நம்மை ஐயுறவைக்கின்றன.

இறையனார் அகப்பொருளுரை குறிப்பிடும் மொத்த தமிழ்ச் சங்கங்களின் காலம் 9990 ஆண்டுகள். பேச்சு வன்மை வந்த இன்றைய மனித இனம் (Homo Sapiens Sapiens) தோற்றம் பெற்று 300,000 ஆண்டுகள் ஆகின்றன. இதில் மிக நீண்ட காலம் இவர்கள் காடுகளிலும், கடற்கரைகளிலும் சிறு சிறு குழுக்களாக வேட்டையாடியும், உணவு சேகரித்தும் (Hunter-Gatherers) நாடோடிகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த நிலப்பரப்பிற்கு விவசாயம் அறிமுகமான பின்னரே அவர்கள் காடுகளை விட்டு வெளியே வந்து, ஆற்றங்கரைகளிலும், ஏரிக்கரைகளிலும் வேளாண்மையை (Agriculture) மேற்கொண்டார்கள். அதன் பின்னரே ஊர்களும், சமூகங்களும், நகரங்களும், நாடுகளும் உருவாயின. அவர்கள் வெவ்வேறு குழுக்களாக, காடுகளில் வேட்டையாடி வந்த காலங்களில் பேசிய பேச்சுவழக்குகள் (Dialects) ஒன்றோடொன்று கலந்து ஒரு பொதுவான மொழி (Common Unified Language) உருவாக பல நூற்றாண்டுகள் பிடித்தது.

இன்றைய அறிவியல் ரீதியான காலக்கணிப்புகளின்படி (Radiometric Dating) வேளாண்மை தமிழகத்திற்கு இற்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே (இ.மு. 5,000) அறிமுகமாயிற்று. அதன் பின்னரே ஊர்கள் தோன்றின. அங்கே வாழ்ந்த மக்கள் பேசிய பேச்சு வழக்குகள் இணைந்து, பின்னர் தமிழ் 'மொழி-வடிவம்' பெற்றது. அதற்குரிய எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே தமிழ்மொழி தரப்படுத்தப்பட்டு (Standardization) பலராலும் எழுதி, வாசிக்கக்கூடிய மொழியாயிற்று.

இன்றுவரை இ.மு. 2,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் மொழி எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, 9990 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் காடுகளில், வெவ்வேறு குழுக்களாக, வெவ்வேறு பேச்சு வழக்குகளுடன், வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்த மக்கள் மத்தியில் தமிழ் ஒரு பொது மொழியாக உருவாகியிருக்க முடியாது. ஆனால், அக்காலகட்டத்தில் திராவிட முன்னோடிப் பேச்சு வழக்குகள் (Archaic Proto-Dravidian Dialects) வழக்கில் இருந்தன என்பது உண்மை. இவற்றை இனிவரும் பகுதிகளில் பார்ப்போம்.

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.com**

# நியூயார்க்கில் அமெரிக்கா – ஈரான் பேச்சுவார்த்தை: முட்டுக்கட்டையை உடைக்குமா புதிய இராஜதந்திரம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

24.09.2026







நியூயார்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உயர்மட்ட அமர்வு, வழக்கமான உலகத் தலைவர்களின் உரைகளுக்கான மேடையாக மட்டுமல்லாமல், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மிக முக்கியமான இராஜதந்திரத் தொடர்புகளுக்கான அரங்காகவும் மாறியுள்ளது. நீண்டகாலமாக கடுமையான பதற்றத்தில் இருந்த வாஷிங்டனும் தெஹ்ரானும், ஐ.நா. பொதுச்சபை அமர்வை ஒட்டி மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்திருப்பது சர்வதேச அரசியலில் முக்கியமான நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா – ஈரான் உறவு ஏற்கனவே அணுசக்தி விவகாரம், பொருளாதாரத் தடைகள், பிராந்திய ஆயுதக் குழுக்கள், வளைகுடா பாதுகாப்பு மற்றும் ஹோர்முஸ் நீரிணை ஆகிய பல பிரச்சினைகளால் சிக்கலடைந்திருந்தது. அண்மைய இராணுவ மோதல்களும் கடல்சார் தடைகளும் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ள நிலையில், நியூயார்க்கில் நடைபெற்ற புதிய தொடர்புகள் குறைந்தபட்சம் இரு தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தையை ஒரு கருவியாக பயன்படுத்தத் தயாராக உள்ளன என்பதைக் காட்டுகின்றன.

## நியூயார்க்கில் முக்கிய சந்திப்பு

செப்டெம்பர் 22ஆம் தேதி ஐ.நா. பொதுச்சபை அமர்வின் போது அமெரிக்கா மற்றும் ஈரான் தரப்புகளுக்கிடையே பல மணி நேர பேச்சுவார்த்தை நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்கோஃப் மற்றும் ஜேரட் குஷ்னர் ஆகியோர் அமெரிக்கத் தரப்பை பிரதிநிதித்துவப் படுத்தியதாகவும், ஈரான் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி முக்கிய பங்காற்றியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கட்டார் உள்ளிட்ட இடைத்தரகர்கள் இரு தரப்புகளுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு சுமார் மூன்று மணி நேரம் நீடித்ததாக அமெரிக்கத் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க சிறப்பு தூதர் விட்கோஃப் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமானவை மற்றும் நம்பிக்கையளிப்பவை என்ற வகையில் அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்

**ஐ.நா. பொதுச்சபை மேடையில் சந்திக்கும் இரு எதிரிகள் – ஹோர்முஸ் நீரிணை, பொருளாதாரத் தடைகள், போர் நிறுத்தம் குறித்து தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர். இதேவேளை ஈரான் அதிபர் பெசஷ்கியான் அமெரிக்க அழுத்தத்துக்கு ஈரான் அடிபணியாது என்று வலியுறுத்தியதுடன், அதே நேரத்தில் இராஜதந்திரம் மற்றும் பேச்சுவார்த்தைக்கு கதவு முழுமையாக மூடப்படவில்லை என்ற செய்தியையும் வெளிப்படுத்தினார். ஆனால் எந்தவொரு பேச்சுவார்த்தையும் வலுக்கட்டாய அச்சுறுத்தல்களின் அடிப்படையில் நடைபெற முடியாது என்பதே ஈரானின் நிலைப்பாடு என அவர் கூறியுள்ளார்.**

டிரம்பும் பேச்சுவார்த்தை மிகவும் நன்றாக நடைபெற்றதாகவும், தொடர்ந்து முன்னேற்றம் ஏற்படலாம் என்றும் கூறியுள்ளார்.

ஆனால் இங்கு ஒரு முக்கியமான விடயம் கவனிக்கப்பட வேண்டும். இரு தரப்பும் ஒரே விதமாக இந்தச் சந்திப்பை விளக்கவில்லை. அமெரிக்கத் தரப்பு இடைத்தரகர்கள் மூலம் நடைபெற்ற நீண்ட பேச்சுவார்த்தையாகக் கூறிய நிலையில், ஈரான் தரப்பிலிருந்து வெளிவிவகார அமைச்சர் அரக்சி மற்றும் விட்கோஃப் இடையே நேரடி சந்திப்பும் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே, முட்டுக்கட்டை உடைந்துவிட்டது என்று கூறுவதற்கு பதிலாக, பேச்சுவார்த்தைக்கான ஒரு புதிய வாயில் திறக்கப்பட்டுள்ளது என்பதே தற்போதைய நிலையைச் சரியாக பிரதிபலிக்கும்.

## ஈரான் அதிபர் நியூயார்க் பயணம்

இந்த பேச்சுவார்த்தைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் கிடைத்ததற்கான மற்றொரு காரணம் ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் நியூயார்க்கில் ஐ.நா. பொதுச்சபையில் கலந்து கொண்டிருப்பதாகும். ஈரான் – அமெரிக்க மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில், ஈரான் அதிபர் நேரடியாக ஐ.நா. மேடையில் உரையாற்றியது சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

தனது உரையில் பெசஷ்கியான் அமெரிக்க அழுத்தத்துக்கு ஈரான் அடிபணியாது என்று வலியுறுத்தியதுடன், அதே நேரத்தில் இராஜதந்திரம் மற்றும் பேச்சுவார்த்தைக்கு கதவு முழுமையாக மூடப்படவில்லை என்ற செய்தியையும் வெளிப்படுத்தினார். ஆனால் எந்தவொரு பேச்சுவார்த்தையும் வலுக்கட்டாய அச்சுறுத்தல்களின் அடிப்படையில் நடைபெற முடியாது என்பதே ஈரானின் நிலைப்பாடு என அவர் கூறியுள்ளார்.

இதனால் ஈரானின் தற்போதைய அணுகுமுறையில் இரண்டு அம்சங்கள் ஒரே நேரத்தில் காணப்படுகின்றன. ஒருபுறம் அமெரிக்காவின் இராணுவ மற்றும் பொருளாதார அழுத்தத்திற்கு எதிரான கடுமையான அரசியல் நிலைப்பாடு, மறுபுறம் போர் மேலும் விரிவடைவதைத் தவிர்க்க பேச்சுவார்த்தையை பயன்படுத்தும் முயற்சி.

## அணுசக்தி விவகாரம்

அமெரிக்கா – ஈரான் உறவில் மிகப் பெரிய அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்று ஈரானின் அணுசக்தி திட்டமாகும். ஈரான் தனது அணுசக்தி திட்டம் அமைதியான நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படுவதாக வலியுறுத்தி வருகிறது. அமெரிக்காவோ ஈரான் அணு ஆயுத திறனை நோக்கி நகரக்கூடாது என்பதில் பாதுகாப்பு உத்தரவாதங்களை நாடுகிறது.

எனவே ஹோர்முஸ் நீரிணை திறப்பு மற்றும் பொருளாதாரத் தடைகள் தளர்த்தல் குறித்து பேச்சுவார்த்தை முன்னேறினாலும், அணுசக்தி தொடர்பான நீண்டகால உடன்பாடு தனியான கடினமான கட்டமாக இருக்கும்.

இராணுவ மோதலிலிருந்து இராஜதந்திரத்திற்கு மாறுமா என்பதே தற்போதைய சூழலின் மிக முக்கியமான கேள்வியாகும். அமெரிக்காவும் ஈரானும் மீண்டும் முழுமையான இராஜதந்திரப் பாதைக்குத் திரும்பவே பல சர்வதேச நாடுகளின் அவாவாகும். நியூயார்க் பேச்சுவார்த்தைகள் குறைந்தபட்சம் இரு தரப்பும் நேரடி அல்லது இடைத்தரகர் வழியான தொடர்பை ஏற்றுக்கொண்டிருப்பதை காட்டுகின்றன. ஆனால் இதுவரை எந்த இறுதி உடன்பாடும் எட்டப்படவில்லை. தற்போதைய தகவல்களின்படி, இரு தரப்பும் இன்னும் பல முக்கிய அம்சங்களில் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.



இதனால் நியூயார்க் சந்திப்பை ஒரு இறுதி சமாதான ஒப்பந்தமாக பார்க்க முடியாது. மாறாக, எதிர்கால பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப கட்டமாகவே பார்க்க வேண்டும்.

## உலக பொருளாதார தாக்கம்

அமெரிக்கா – ஈரான் மோதல் மத்திய கிழக்கின் அரசியல் பிரச்சினையாக மட்டும் இருக்கவில்லை. அதன் தாக்கம் உலக பொருளாதாரத்திலும் வெளிப்படுகிறது. குறிப்பாக ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டால், எண்ணெய் விநியோகத்தில் நிச்சயமின்மை அதிகரிக்கும். இதன் விளைவாக எண்ணெய் விலை உயர்வதுடன், போக்குவரத்து செலவு, மின்சார உற்பத்தி, தொழில்துறை உற்பத்தி மற்றும் உலகளாவிய பணவீக்கம் போன்றவற்றிலும் தாக்கம் ஏற்படக் கூடும்.

இதனால்தான் அமெரிக்கா – ஈரான் பேச்சுவார்த்தைகளை மத்திய கிழக்கு நாடுகள் மட்டுமல்லாமல் ஐரோப்பா, ஆசியா மற்றும் உலகின் முக்கிய எரிசக்தி இறக்குமதி நாடுகளும் கவனித்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நேரடியாக அமெரிக்கா – ஈரான் மோதலைத் தீர்க்கும் அதிகாரம் கொண்ட அமைப்பாக இல்லாவிட்டாலும், உலகத் தலைவர்கள் ஒரே இடத்தில் கூடும் அரங்காக இருப்பதால் அதன் இராஜதந்திர முக்கியத்துவம் அதிகம். கட்டார் உள்ளிட்ட இடைத்தரகர்கள் மூலம் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதும், இரு தரப்பும் நியூயார்க்கில் இருப்பதும் தொடர்புகளை எளிதாக்கியுள்ளன. இதனால் பொதுச்சபை அமர்வு ஒரு சர்வதேச அரசியல் மேடையிலிருந்து நடைமுறை இராஜதந்திரத் தொடர்புகளுக்கான வாய்ப்பாகவும் மாறியுள்ளது.

## இன்னும் கடினமான பாதை

எனினும், இந்த பேச்சுவார்த்தைகளில் மிகுந்த நம்பிக்கையுடன் உடனடி உடன்பாட்டை எதிர்பார்ப்பது முன்கூட்டிய முடிவாகிவிடும். ஹோர்முஸ் நீரிணை, அமெரிக்க கடற்படை நடவடிக்கைகள், பொருளாதாரத் தடைகள், முடக்கப்பட்ட ஈரானிய சொத்துக்கள், அணுசக்தி திட்டம், பிராந்திய பாதுகாப்பு மற்றும் எதிர்கால இராணுவ நடவடிக்கைகள் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடைய சிக்கல்களாக உள்ளன.

மேலும், இரு நாடுகளிலும் உள்நாட்டு அரசியல் அழுத்தங்களும் உள்ளன. எனவே பேச்சுவார்த்தை மேசையில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் அரசியல் ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் கணக்கிடப்பட வேண்டியிருக்கும்.

நியூயார்க்கில் நடைபெற்ற அமெரிக்கா – ஈரான் பேச்சுவார்த்தைகள், பல மாதங்களாக நிலவி வந்த கடுமையான மோதலுக்கு மத்தியில் உருவான முக்கியமான இராஜதந்திர வாய்ப்பாகும். அமெரிக்க தரப்பில் ஸ்டீவ் விட்கோஃப் மற்றும் ஜேரட் குஷ்னர், ஈரான் தரப்பில் அப்பாஸ் அரக்சி ஆகியோரின் தொடர்பு, இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் ஒரு பேச்சுவார்த்தைச் சேனல் திறந்திருப்பதை வெளிப்படுத்துகிறது.

ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் ஐ.நா. பொதுச்சபை மேடையில் கடுமையான அரசியல் செய்தியை வெளியிட்ட அதேவேளை, இராஜதந்திரத்திற்கான வாய்ப்பையும் முற்றாக நிராகரிக்கவில்லை. இதேபோல் அமெரிக்கத் தரப்பும் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக இருந்ததாகக் கூறியுள்ளது. ஆனால் இரு தரப்பினருக்கும் இடையிலான அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. எனவே, நியூயார்க் சந்திப்பின் உண்மையான முக்கியத்துவம் உடனடியாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதில் இல்லை. பல மாதங்களாக கடுமையான மோதலில் இருந்த இரு தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்திருப்பதே அதன் முக்கியத்துவமாகும்.

ஹோர்முஸ் நீரிணை மீண்டும் முழுமையாகத் திறக்கப்படுமா? அமெரிக்க பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்படுமா? ஈரானின் முடக்கப்பட்ட சொத்துக்கள் விடுவிக்கப்படுமா? அணுசக்தி விவகாரத்தில் புதிய புரிந்துணர்வு உருவாகுமா? போர் நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவரப்படுமா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களே நியூயார்க்கில் தொடங்கியுள்ள புதிய இராஜதந்திர முயற்சியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும். தற்போதைய தகவல்கள் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாக காட்டினாலும், இறுதி உடன்பாட்டை நோக்கிய பாதை இன்னும் பல கடினமான கட்டங்களை கடக்க வேண்டியுள்ளது.



# சமூக ஊடகங்களும் வலைத்தளங்களும்: புதிய அரசியலின் நவீன போர்க்களமா?

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

ஒரு காலத்தில் அரசியல் என்பது பொதுக்கூட்ட மேடைகள், நாடாளுமன்ற விவாதங்கள், செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் ஆகியவற்றின் எல்லைக்குள் மட்டுமே இயங்கிய ஒரு துறையாகக் கருதப்பட்டது. அரசியல் தலைவர்கள் மக்களை நேரடியாகச் சந்தித்து தங்களது கொள் கைகளை எடுத்துரைத்தனர் ஊடகங்கள் அந்தச் செய்திகளை மக்களிடம் கொண்டு சென்றன. ஆனால் இணையப் புரட்சியும், ஸ்மார்ட்போன்களின் வெடித்தளர்ந்த பயன்பாடும், சமூக ஊட கங்களின் வளர்ச்சியும் உலக அரசியலின் இயல்பையே தலை கீழாக மாற்றியமைத்துள்ளன.

இன்று அரசியல் போராட்டங்கள் நடைபெறும் மிக முக்கியமான களமாக சமூக ஊடகங்கள் மாறியுள்ளன. குயஉநடிழழம, X, Twitter, YouTube, Instagram, TikTok, Telegram, WhatsApp போன்ற தளங்கள் வெறும் தகவல் பரிமாற்ற ஊடகங்களாக இல் லாமல், அரசியல் கருத்துகளை உருவாக்கும், தேர்தல் முடிவு களைப் பாதிக்கும், மக்களின் மனநிலையை மாற்றும், அரசுக ளுக்கு அழுத்தம் கொடுக்கும், சர்வதேச அரசியலையே திசை திருப்பக்கூடிய சக்திவாய்ந்த கருவிகளாக உருவெடுத்துள்ளன.

## டிஜிட்டல் யுகத்தின் அரசியல்

21ஆம் நூற்றாண்டின் அரசியல் வரலாற்றை எழுதும் போது, சமூக ஊடகங்களின் தாக்கத்தைப் புறக்கணிக்க முடியாது. கடந்த காலத்தில் ஒரு செய்தி மக்களைச் சென்றடைய பல கட் டங்களைக் கடக்க வேண்டியிருந்தது. ஆசிரியர்கள், செய்தி யாளர்கள், ஊடக நிறுவனங்கள் போன்ற இடைத்தரகர்கள் தகவலின் தரத்தையும் உண்மைத்தன்மையையும் பரி சோதித்த பின்னரே அது வெளியிடப்பட்டது.

ஆனால் இன்று உலகின் எந்த மூலையிலிருந்தும் ஒரு சாதாரண நபரால் கூட சில வினாடிகளில் கோடிக்கணக்கான மக்களைச் சென்றடையும் தகவலைப் பகிர முடிகிறது. இந்த மாற்றம் தகவலின் ஜனநாயக மயமாக்கலை ஏற்படுத்தியதோடு, தகவல் கட்டுப்பாட்டின் பாரம்பரிய அமைப்புகளையும் பலவீனப் படுத்தியுள்ளது.

இதன் விளைவாக அரசியல் தலைவர்கள் மக்களுடன் நேரடி யாக உரையாடும் புதிய கலாச்சாரம் உருவாகியுள்ளது. கொள்கை அறிவிப்புகள், தேர்தல் வாக்குறுதிகள், அவசர அறி விப்புகள், எதிர்க்கட்சிகளுக்கான பதில்கள் என அனைத்தும் சமூக ஊடகங்கள் மூலமாகவே உடனுக்குடன் வெளிவருகின் றன. பல நேரங்களில் ஒரு சமூக ஊடகப் பதிவு, பல மணி நேர தொலைக்காட்சி விவாதத்தைவிட அதிக அரசியல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**நவீன தேர்தல்களின் வெற்றி–தோல்வியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக சமூக ஊடகங்கள் மாறிவிட்டன. அரசியல் கட்சிகள் இப்போது வாக்காளர்களை ஒரே மாதிரியாக அனுகுவ–தில்லை. அவர்களின் வயது, பாலினம், வசிக்கும் பகுதி, கல்வி, தொழில், பொருளாதார நிலை, இணையப் பழக்கம் உள்ளிட்ட பல்வேறு தரவுகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு வாக்காளர் குழுவிற்கும் தனித்தனி அரசியல் செய்திகளை அனுப்புகின்றன.**




## தேர்தல்களை மாற்றிய சமூக ஊடகங்கள்

நவீன தேர்தல்களின் வெற்றி–தோல்வியை நிர்ணயிக்கும்

அரசியல் கட்சிகள் இப்போது வாக்காளர்களை ஒரே மாதிரியாக அணுகுவதில்லை. அவர்களின் வயது, பாலினம், வசிக்கும் பகுதி, கல்வி, தொழில், பொருளாதார நிலை, இணையப் பழக் கம் உள்ளிட்ட பல்வேறு தரவுகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு வாக்காளர் குழுவிற்கும் தனித்தனி அரசியல் செய்திகளை அனுப்புகின்றன.

இது மைக்ரோ டார்கெட்டிங் (Micro-targeting) எனப்படும் புதிய அரசியல் உத்தியை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் ஒவ் வொரு வாக்காளரின் மனநிலையையும், அவர்களின் முக்கிய கவலைகளையும் கணித்து, அதற்கேற்ற அரசியல் விளம் பரங்கள் வழங்கப்படுகின்றன.

இதனால் தேர்தல் பிரசாரம் இனி பொதுக்கூட்டங்களில் மட்டு மல்ல; ஒவ்வொரு குடிமகனின் கைப்பேசி திரையிலும் நடை பெறுகிறது. அரசியல் போட்டி, டிஜிட்டல் தரவுகளுக்கான போட்டி யாக மாறிவிட்டது.

## மக்கள் இயக்க புதுமுகம்

சமூக ஊடகங்கள் அரசியல் கட்சிகளுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் முன்னெப்போதும் இல்லாத அதிகாரத்தை வழங் கியுள்ளன. ஒரு சமூக அநீதி நடந்தால், அதை உலகம் முழு வதும் சில நிமிடங்களிலேயே பகிர முடிகிறது. இதனால் அர சுகள் உடனடியாக பதிலளிக்க வேண்டிய சூழ்நிலை உரு வாகிறது.

அரபு நாடுகளில் நடைபெற்ற “Arab Spring” எழுச்சிகள், ஹாங் காங் ஜனநாயகப் போராட்டங்கள், “Black Lives Matter”, #MeToo இயக்கம், பல்வேறு மாணவர் போராட்டங்கள் ஆகியவை சமூக ஊடகங்கள் மக்கள் இயக்கங்களை எவ்வாறு உலகளாவிய அளவில் வலுப்படுத்தின என்பதற்கான முக்கிய எடுத்துக்

காட்டுகளாகும்.

அதுவே ஒரு ஹேஷ்டேக் இன்று ஒரு அரசியல் இயக்கமாக மாறக்கூடிய சக்தியைப் பெற்றுள்ளது.

சமூக ஊடகங்களின் மிகப்பெரிய சவால் தவறான தகவல்களின் பரவலாகும். உண்மையான செய்திகளுடன் சேர்த்து, பொய்யான தகவல்கள், திருத்தப்பட்ட படங்கள், செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் "டீப்-ஃபேக்" (Deepfake) காணொளிகள், போலியான ஆவணங்கள் மற்றும் தவறாக வழிநடத்தும் புள்ளிவிவரங்கள் மிக வேகமாகப் பரவுகின்றன.

தேர்தல் காலங்களில் இத்தகைய தகவல்கள் வாக்காளர்களின் கருத்தை மாற்றுவதோடு மட்டுமல்லாமல், ஜனநாயக அமைப்பின் மீதான நம்பிக்கையையும் பாதிக்கின்றன. பல ஆய்வுகள் பொய்யான செய்திகள் உண்மையான செய்திகளைவிட வேகமாகப் பரவுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.



## தவறான தகவலின் அரசியல்

சமூக ஊடகங்கள் பயனாளர்களுக்கு அவர்கள் விரும்பும் உள்ளடக்கங்களையே தொடர்ந்து காட்டும் வகையில் அல்கோரிதம்களைப் பயன்படுத்துகின்றன. இதனால் ஒரே கருத்தை மட்டுமே மீண்டும் மீண்டும் பார்க்கும் "Echo Chamber" சூழல் உருவாகிறது. இதன் விளைவாக மாறுபட்ட அரசியல் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை குறைகிறது. அரசியல் துருவமயமாக்கல் அதிகரிக்கிறது. கருத்து வேறுபாடு ஜனநாயக விவாதமாக இல்லாமல், பகைமையாக மாறும் அபாயமும் உருவாகிறது.



## செயற்கை நுண்ணறிவும் அரசியல் எதிர்காலமும்

செயற்கை நுண்ணறிவு (AI) சமூக ஊடக அரசியலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது. தேர்தல் பிரசார உரைகள் உருவாக்குவது, வாக்காளர்களின் மனநிலையை பகுப்பாய்வு செய்வது, செயற்கை குரல்கள் மற்றும் போலி காணொளிகளை உருவாக்குவது போன்ற பல செயல்பாடுகள் தற்போது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமாகியுள்ளன.

இந்த தொழில்நுட்பங்கள் அரசியல் தொடர்பாடலை மேம்படுத்தும் வாய்ப்பையும் வழங்குகின்றன் அதே நேரத்தில் மக்களைத் தவறாக வழிநடத்தும் அபாயத்தையும் அதிகரிக்கின்றன. எனவே எதிர்கால தேர்தல்களில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு மிகப்பெரிய அரசியல் மற்றும் சட்ட விவாதமாக மாறும் என்பது உறுதி.

சமூக ஊடகங்கள் ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் முடியும் பலவீனப்படுத்தவும் முடியும். மக்கள் தங்களது கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை அவை வழங்குகின்றன. அதே சமயம் வெறுப்புப் பேச்சு, இணையத் தாக்குதல், அரசியல் வன்முறையைத் தூண்டும் பிரசாரம், வெளிநாட்டு தகவல் தலையீடு, தேர்தல் பாதிப்பு போன்ற அபாயங்களையும் உருவாக்குகின்றன.

இதனால் பல நாடுகள் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்களை கொண்டு வர முயற்சிக்கின்றன. இருப்பினும் கருத்துச் சுதந்திரம் மற்றும் பொது பாதுகாப்பு ஆகிய இரண்டுக்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துவது உலக நாடுகளுக்கு மிகப்பெரிய சவாலாகவே உள்ளது.

## ஜனநாயகத்தின் எதிர்காலம்

சமூக ஊடகங்கள் இன்று வெறும் தொடர்பாடல் தளங்களல்ல; அவை உலக அரசியலின் புதிய போர்க்களமாக மாறியுள்ளன. தேர்தல்கள், மக்கள் எழுச்சிகள், சர்வதேச உறவுகள், அரசியல் பிரசாரங்கள், கருத்து உருவாக்கம், தகவல் பரவல் என அனைத்திலும் அவை தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளன.

எதிர்கால அரசியல் ஆயுதங்கள் துப்பாக்கிகளோ, போர் விமானங்களோ மட்டுமல்ல; தகவல், தரவு, அல்கோரிதம் மற்றும் செயற்கை நுண்ணறிவும் ஆகும். இந்த புதிய அரசியல் சூழலில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு தொழில்நுட்ப வளர்ச்சி மட்டுமல்ல, தகவல் கல்வியறிவு, ஊடகப் பொறுப்புணர்வு, சட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் விழிப்புணர்வுள்ள குடிமக்களும் அவசியமாகின்றனர்.

டிஜிட்டல் யுகத்தில் அரசியல் அதிகாரத்திற்கான போட்டி இனி தெருக்களிலும் நாடாளுமன்றங்களிலும் மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனின் கைப்பேசி திரையிலும், சமூக ஊடகங்களின் அல்கோரிதம்களிலும், தகவல் ஓட்டத்தை கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப அமைப்புகளிலும் நடைபெறுகிறது. எனவே, சமூக ஊடகங்களை யார் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதற்கும் மேலாக, அவை எவ்வாறு பொறுப்புடன் பயன்படுத்தப்படுகின்றன என்பதே எதிர்கால ஜனநாயகத்தின் தரத்தையும், உலக அரசியலின் திசையையும் தீர்மானிக்கும்.





# இப்படித்தான்...

– தமிழீழத்திலிருந்து „
சாவித்திர
அத்துவிதானந்தன்
களத்தில் 28.10.1994 –

சிறுகதை

கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சந்தியில் சனம் கூடத் தொடங்கி விட்டது. மாலை 5 மணி தாண்டி விட்டால் இது வழமையான நிகழ்ச்சி தான்.

பலவகைப்பட்ட சனங்கள், சந்தியின் முகப்பில் இருக்கும் அந்தக் கடையின் முன் விறாந்தையில் வைக்கப்பட்டிருக்கும் பெரிய மேசையைச் சுற்றி ஒரு கும்பல் நிற்கும்.

புஸ்பா தங்கத்துரை, பாலகுமாரன், ரமணிச்சந்திரன், சிவ சங்கரி, சுஜாதா, ராஜேஸ்குமார்... இன்னும் பலர் மேசையில் குவிந்து கிடந்த புத்தகங்களின் முன் அட்டைகளில் இருந்து, சற்றி நிற்கும் ரசிகர் கூட்டத்தைப் பார்த்து சிரிப்பார்கள்.

மேசைச் ‘சுற்றிவளைப்பு’ மேற்கொள்ளும் அணியில் பாடசாலை – பல்கலைக்கழக மாணவ, மாணவியர்கள் பிரதான அங்கம் வகிப்பார்கள்.

இத்தனைக்கும் அந்தக் கடை புத்தகக்கடை அல்ல. பலசரக்குக் கடை.

அந்நிய மோகம் எம் மத்தியில் ஆழமாய் வேரூன்றி விட்டதால் இந்திய எழுத்தாளர்களின் – தரமான – தரமற்ற எல்லாப் படைப்புகளுமே எம் இளைய பரம்பரையினரை ஈர்த்து கொண்டிருப்பதை நன்றாகவே அறிந்திருந்ததால், தமது வியாபாரம் பெருகுவதற்காகக் கடை முதலாளிகள் கையாளும் ‘வியாபாரத் தந்தரம்’ இது.

அந்தக் கடைக்கு முன்னால் ‘எதிர் முனையில் ஒரு வீடியோக் கடை.

அங்கேயும் இந்திய ஆக்கிரமிப்புத் தான்.

வெவ்வேறு கோணங்களில் தென்னிந்தியத் திரைப்படங் களின், நடிக, நடிகையரின் படங்கள் ஏராளமாய் அந்தக் கடைக்கு முன்னால் அணிவகுப்பில் நிற்கின்றன.

அந்த விளம்பரப்படங்களை வாய்பிளந்து ரசிப்பதற்காகவே அந்தச் சந்தியில் கூடும் ஒரு கும்பலும் உண்டு.

“ராஜ்... ரமணிச்சந்திரன்ரை புத்தகம் இருந்தால் எனக்கு எடுத்து தாடி...” மேசையில் புத்தகங்களைக் கிளறிக் கொண்டிருந்த ஒரு பல்கலைக்கழக மாணவி அருகில் நின்றவளிடம் இப்படிக் கூறுகிறாள்.

“உனக்கு எப்ப பார்த்தாலும் ரமணிச்சந்திரனின்ரை கதை தான் எல்லாக்கதையும் ஒரே மாதிரித்தான் இருக்கும்” இப்படி அலுத்து கொண்டே கூறிய ராஜி என்ற பெண்ணும் ஆவலோடு தேடிக் கொண்டிருந்தது ரமணிச்சந்திரனைத்தான்!

நாகரிமாக உடையணிந்து ‘அவன் கடையை நோக்கி வருகி றான். தோளில் துணிப்பை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும்.

“ரெண்டு பிறிஸ்டல்” என்று கூறிப்பணத்தைக் கடைக்காரன் இருந்த மேசையில் வைக்கிறான்.

சுற்றிவரக் கண்களை ஓட விட்டுச் சூழலை அவதானித்தபடியே சிகரெட்டைப் பற்ற வைக்கிறான்.

கடையில் வருவோரும், போவோருமாக வியாபாரம் மும்முர மாய் நடைந்து கொண்டிருக்கிறது.

இருக்குதையா... ஆனா... விலைதான் கொஞ்சம் கூட...”

“ஏன் சீனி தட்டுப்பாடோ?”

> **நாகரிகமாக உடையணிந்து ‘அவன்’ கடையைநோக்கி வருகிறான். தோளில் துணிப்பை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும்.**

யாரையோ அல்லது எதையோ எதிர்பார்த்து நிற்பது போன்ற பாவனையில் ‘அவன்’ கடைவாசலிலேயே நின்று கொண் டிருக்க,

“தம்பி... சீனி இருக்கோ...?” என்று கேட்டபடி கந்தையர் கடைக்குள் நுழைகிறார்.

“ஓம் ஐயா மூடைக்கு ஆயிரம் ரூபாய் கூடக் கேக்கிறாங்கள்... பின்னை எடுக்காம வந்திட்டம்...”

“அது சரி தம்பி... இப்ப உங்களிட்டை இருக்கிறது முந்தி எடுத்த சீனி மூட்டை தானே...? அதுக்கேன் விலை கூட்டிறியள்?”

கடைக்காரர் முகத்தில் அசடு வழிகிறது.

கந்தையரின் கேள்விக்கு என்ன பதில் சொல்லலாம் என அவர் குழம்பிக் கொண்டிருந்த போது,

'அவன்' புத்தக மேசைப் பக்கம் நகர்கிறான்.

"ஏன்ன கந்தையாண்ணை... கனநாளாய் உங்களை அங்காலை வீட்டுப்பக்கம் காணேல்லை?" என்ற குரல் கேட்டுக் கந்தையா திரும்புகிறார்.

"அட... நித்தியே....? ரெண்டு மூன்று நாள் உன்னட்டை வந்தனான். மனிசி சொன்னதே... உனக்கு இப்ப இயக்கத்திலே ஏதோ வேலை கிடைச்சிருக்காம் எண்டு சொல்லிச்சுது...?"

"ஓமண்ணை... வேலை பாக்காமை இந்த நாளிலை என்னெண்டு சீவியம் போறது...? பொடியளிட்டைத் தான் கேட்டன்... அவை ஒரு வேலை தந்தினம்..."

"எங்கை வேலை...? என்ன வேலை செய்யிறனி?"

'அவன்' காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறான்.

மேசையில் கிடந்த புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்த அவனது கவனம் முழுவதும் கந்தையர் நித்தியின் உரை யாடலிலேயே பதிந்திருக்கிறது.

"அதண்ணை...இயக்கத்தின்ரை அரசியல் துறை Main Office இலை தான் வேலை. பொறுப்பாளரைச் சந்திக்க வாறவை யின்ரை பேர்கள் பதிவு செய்து வைக்கிறதும்... வேறை வேலைகளும் செய்யிறனான்..." கூறிக்கொண்டே அன்றைய பத்திரிகை ஒன்றை நித்தி எடுத்து புரட்டுகிறான்.

"தம்பி அரைக்கிலோ சீனி கட்டு..." சொல்லிக் கொண்டிருக்கை யில் கந்தையருக்கு, நித்தியின் சின்னம்மாவை முன்தினம் கண்டஞாபகம் வருகிறது.

"சொன்னாப் போலை... நித்தி... நேற்று உன்ரை கமலாச் சின்னம்மாவைக் கண்டனான்..."

அப்ப சாவகச்சேரிக்குப் போயிருக்கிறீங்கள்..." பத்திரிகையை விட்டு கண்களை எடுக்காமலேயே நித்தி கேட்கிறான்.

ஒரு அலுவலாய்ப் போனனான்... சாவகச்சேரிக் சந்தைக் குள்ளை தான் உன்ரை சின்னம்மாவைக் கண்டனான்... உன்னைப்பற்றியும் விசாரிச்சா..."

"சாவகச்சேரி மாக்கெற்றடியிலை கிட:டு மாமான்ரை தூபி பார்த்தனீங்களே...?"

"பார்த்தனான் வடிவாயிருக்கு... வேலை எல்லாம் முடிஞ்சு இப்ப பெயின்ற அடிக்கினம்..."

"திறப்பு விழா நடக்கப் போகுதல்லே... அதுதான் பெயின்ற் அடிக்கினம் போலை,

'அவன்' உசாராகிறான்.

"திறப்பு விமா நடக்கப் போகுதே...? எப்ப கம்பி...? பேப்பரிலை




ஒண்டும் போடேலை..." ஆர்வத்துடன் கந்தையர் கேட்கிறார்.

"நாளண்டைக்குப் பின்னேரம் அஞ்சு மணிக்குத் திறப்பு விழா"

"உனக்கு வடிவாய்த் தெியுமே...? நான் கட்டாயம் அதுக்குப் போகவேணும்..."

அரசியல் துறை Office இலை தானே அண்ணை. முதலில் எங்களுக்கு நியூஸ் எல்லாம் தெரிஞ்சுடும்... பேப்பரிலை போடுறதெண்டால் நாளண்டைப் பேப்பரிலை தான் வரும்..."

"உன்னட்ட இப்ப கேட்டது நல்லதாய்ப் போச்சு... கிட்டற்றை நினைவாலயத் திறப்பு விழாவுக்குப் போகாமை விடுறதே...? கந்தையர் சில விநாடி மௌனமாய் நின்று கிட்டுவை நினைத்து பார்க்கிறார்.

"இயக்கப் பொறுப்பாளர்மாரும் கூட்டத்திலை பேசுவினம் தானே?"

நித்தியிடம் கேட்கிறார்.

இப்பொழுது 'அவன்' இவர்களுக்கு மிக அருகில்... "ரெண்டு முக்கிய பொறுப்பாளர்மாரும், நாலைஞ்சு (Area) எரியாப் பொறுப்பாளர்மாரும் பேசுவினம் எண்டமாதிரி இண்டைக்கு அங்கை கதைச்சவை"

"இந்தாருங்கோ சீனி..." கடைக்காரர் பொட்டலத்தைக் கந்தையரிடம் கொடுக்கிறார்.

"அப்ப... நித்தி... நாளண்டைக்குப் போகேக்கை கமலாவைக் கண்டா, நீ விசாரிச்சனி எண்டு சொல்லிவிடுறன்.... நான் வரட்டே தம்பி...?"

"ஓமண்ணை வாருங்கோ..."

நாளை மறுதினம் திறப்புவிழாவுக்குப் போகும் கற்பனைக ளுடனும், கையில் சீனி பொட்டலத்துடனும் கந்தையர் வீடு திரும்புகிறார்.

சிறீலங்கா இராணுவத்துகு உளவு சொல்ல 'விடயம்' தேடிவிட்ட வெற்றிக்களிப்போடு 'அவன்' கடையை விட்டு வெளியேறு கிறான்.

இரண்டு நாட்கள் கடந்தன.

தமிழித் தினசரிகள் அன்று காலையில் தாங்கி வந்த பிரதான தலைப்புச் செய்தி.

சிறீலங்கா விமானக் குண்டுவீச்சில் 9 அப்பாவி பொதுமக்கள் பலி! பலர் படுகாயம்! சாவகச்சேரியில் கோரச் சம்பவம்.









# கிரின்லாந்தில் அமெரிக்கா: டென்மார்க்குடன் முறியும் உறவா? புதிய ஆர்க்டிக் பாதுகாப்புக் கூட்டணியா?

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

20.09.2026

உலகின் மிகப்பெரிய தீவான கிரின்லாந்து, இன்று ஒரு பனிப் பிரதேசம் என்ற அடையாளத்தைத் தாண்டி, உலக வல்லரசுகளின் புவிசார் அரசியல் போட்டியின் முக்கிய மையமாக மாறியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கிரின்லாந்தை அமெரிக்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற தனது விருப்பத்தை தொடர்ந்து வெளிப்படுத்தி வந்த நிலையில், இந்த விவகாரம் அமெரிக்கா-டென்மார்க் உறவில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் 2026 செப்டெம்பர் மாதத்தில் எட்டப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு உடன்பாடு, பிரச்சினையை நிலப்பரப்பு கையகப்படுத்தல் என்ற நிலையிலிருந்து அமெரிக்காவின் விரிவான பாதுகாப்பு மற்றும் இராணுவப் பங்கு என்ற புதிய கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது.






## கிரின்லாந்து யாருடையது?

கிரின்லாந்து புவியியல் ரீதியாக வட அமெரிக்காவுக்கு அருகில் அமைந்திருந்தாலும், அரசியல் ரீதியாக டென்மார்க் இராச்சியத்தின் தன்னாட்சிப் பிரதேசமாக உள்ளது. 2009ஆம் ஆண்டின் சுய அரசாங்க ஆட்சி (Self-Government Act ) மூலம் கிரின்லாந்துக்கு விரிவான உள்நாட்டு நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய பொறுப்புகள் டென்மார்க்கிடம் உள்ளன.

இதனால் கிரின்லாந்தை அமெரிக்கா வாங்குவது என்பது ஒரு சாதாரண நிலப்பரப்பு கொள்முதல் விவகாரம் அல்ல. டென்மார்க்கின் இறையாண்மை, கிரின்லாந்து மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் சர்வதேச சட்டம் ஆகியவை இந்த விவகாரத்தின் மையத்தில் உள்ளன.

அமெரிக்காவுக்கு ஏன் கிரின்லாந்து முக்கியம் என்பது குறித்து பல விவாதங்கள் உள்ளன. கிரின்லாந்தின் மிகப்பெரிய பலம் அதன் புவியியல் அமைவிடமே. வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆர்க்டிக் பிராந்தியங்களுக்கு இடையே அது அமைந்துள்ளது. வட அட்லாண்டிக் மற்றும் ஆர்க்டிக் பாதுகாப்பு, ஏவுகணை எச்சரிக்கை மற்றும் விண்வெளி கண்காணிப்பு போன்ற துறைகளில் கிரின்லாந்து முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

அமெரிக்கா ஏற்கனவே கிரின்லாந்தில் Pituffik Space Base என்ற முக்கிய இராணுவத் தளத்தை வைத்துள்ளது. இது முன்னர் Thule Air Base என அழைக்கப்பட்டது. இந்தத் தளம் அமெரிக்காவுக்கும் நேட்டோவுக்கும் ஆர்க்டிக் பகுதியில் மூலோபாய முக்கியத்துவம் கொண்டதாகும். கிரின்லாந்தில் அமெரிக்க இராணுவ இருப்புக்கான அடிப்படை புதிய ஒன்றல்ல. 1951ஆம் ஆண்டு அமெரிக்கா-டென்மார்க் பாதுகாப்பு ஒப்பந்தம் கிரின்லாந்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கான முக்கிய சட்ட அடித்தளத்தை உருவாக்கியது. 2004ஆம் ஆண்டு திருத்தப்பட்ட ஒப்பந்தமும் அமெரிக்கா, டென்மார்க் மற்றும் கிரின்லாந்து இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வரையறுத்தது.

## ரஷ்யா – சீனா: பின்னணியில் இருக்கும் போட்டி

ஆர்க்டிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம் காலநிலை மாற்றம் மற்றும் பனிப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களால் மேலும் அதிகரித்து வருகிறது. புதிய கடல் வழிகள், கனிம வளங்கள் மற்றும் இராணுவ அணுகல் ஆகியவை எதிர்காலத்தில் முக்கியமான மூலோபாயப் போட்டிகளாக மாறக்கூடும். ரஷ்யா ஆர்க்டிக் பகுதியில் குறிப்பிடத்தக்க இராணுவ உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. சீனாவும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் மூலோபாய ஆர்வத்தை அதிகரித்து வருகிறது. இந்தப் பின்னணியில் கிரின்லாந்தில் அமெரிக்காவின் பாதுகாப்பு இருப்பை வலுப்படுத்துவது வாஷிங்டனின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகியுள்ளது.

அதோடு கிரின்லாந்தில் காணப்படும் கனிம வளங்களும் அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கின்றன. குறிப்பாக நவீன தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புத் துறையில் பயன்படுத்தப்படும் முக்கியமான கனிம வளங்கள் எதிர்கால பொருளாதாரப் போட்டியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

## டென்மார்க்கும் அமெரிக்காவும் எதிரிகளா?

கிரின்லாந்து விவகாரத்தில் ஏற்பட்ட கடுமையான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அமெரிக்காவும் டென்மார்க்கும் நீண்டகால பாதுகாப்புக் கூட்டாளிகள். இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவு 1801ஆம் ஆண்டு தொடங்கியது. டென்மார்க் நேட்டோவின் நிறுவனர் உறுப்பினர்களில் ஒன்றாகும். பாதுகாப்பு, இராணுவம் மற்றும் ஆர்க்டிக் பிராந்திய ஒத்துழைப்பில் இரு நாடுகளும் நீண்டகாலமாக இணைந்து செயல்பட்டு வருகின்றன.

**கிரின்லாந்தை அமெரிக்கா கையகப் படுத்துவது என்பது ஒரு சாதாரண நிலப்பரப்பு கொள்முதல் விவகாரம் அல்ல. டென்மார்க்கின் இறையாண்மை, கிரின்லாந்து மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் சர்வதேச சட்டம் ஆகியவை இந்த விவகாரத்தின் மையத்தில் உள்ளன. அமெரிக்காவுக்கு ஏன் கிரின்லாந்து முக்கியம் என்பது குறித்து பல விவாதங்கள் உள்ளன. கிரின்லாந்தின் மிகப்பெரிய பலம் அதன் புவியியல் அமைவிடமே. வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆர்க்டிக் பிராந்தியங்களுக்கு இடையே அது அமைந்துள்ளது.**

எனவே கிரின்லாந்து விவகாரத்தை அமெரிக்கா எதிர் டென்மார்க் என்ற எளிய மோதலாகப் பார்க்க முடியாது. ஒருபுறம் அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய நலன்கள் உள்ளன் மறுபுறம் டென்மார்க்கின் இறையாண்மை மற்றும் கிரின்லாந்து மக்களின் சுயநிர்ணய உரிமை உள்ளன.



## புதிய பாதுகாப்பு ஒப்பந்தம்

2026 செப்டெம்பர் 18ஆம் தேதி அமெரிக்கா, டென்மார்க் மற்றும் கிரின்லாந்து இடையே புதிய பாதுகாப்பு உடன்பாடு எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் கிரின்லாந்தில் அமெரிக்க இராணுவ இருப்பை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு உருவாகிறது. மேலும் அமெரிக்காவின் எதிரிகளாகக் கருதப்படும் நாடுகள் அங்கு இராணுவத் தளங்களை அமைப்பதையும் முக்கியமான மூலோபாய முதலீடுகளை மேற்கொள்வதையும் கட்டுப்படுத்தும் நோக்கமும் இதில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முக்கியமான விஷயம்-இந்த உடன்பாடு கிரின்லாந்தின் இறையாண்மையை அமெரிக்காவுக்கு மாற்றவில்லை.

டென்மார்க் மற்றும் கிரின்லாந்து தலைவர்கள், புதிய ஏற்பாடு கிரின்லாந்தின் பிராந்திய ஒருமைப்பாட்டையும் சுயநிர்ணய உரிமையையும் பாதிக்காது என்று வலியுறுத்தியுள்ளனர். நேட்டோவும் இந்த உடன்பாட்டை ஆர்க்டிக் மற்றும் வட அட்லாண்டிக் பாதுகாப்பை வலுப்படுத்தக்கூடியதாக வரவேற்றுள்ளது.

## டிரம்பின் நிரந்தர கட்டுப்பாடு என்ற கூற்று

இதில் மற்றொரு முக்கியமான அம்சம் உள்ளது. ட்ரம்ப், புதிய ஒப்பந்தம் கிரின்லாந்தின் பாதுகாப்பில் அமெரிக்காவுக்கு நிரந்தர கட்டுப்பாடு வழங்குகிறது என்று கூறியுள்ளார். ஆனால் டென்மார்க் மற்றும் கிரின்லாந்து தரப்புகள், இதனால் இறையாண்மை மாற்றப்படவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளன.

ஒப்பந்தத்தின் அனைத்து சட்ட மற்றும் நடைமுறை விவரங்களும் இதுவரை முழுமையாக பொதுவெளியில் வெளியாகவில்லை. இதனால் ட்ரம்பின் அரசியல் விளக்கத்தையும், டென்மார்க்-கிரின்லாந்து தரப்பின் சட்டரீதியான விளக்கத்தையும் தனித்தனியாகப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

## கிரின்லாந்து மக்களின் விருப்பம்

இந்த விவகாரத்தின் மையத்தில் இருப்பவர்கள் கிரின்லாந்து மக்களே. கிரின்லாந்தில் டென்மார்க்கிலிருந்து எதிர்காலத்தில் சுதந்திரம் பெறுவது குறித்து நீண்டகாலமாக அரசியல் விவாதம் இடம்பெற்று வருகிறது. ஆனால் அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாறுவது என்பது அதிலிருந்து வேறுபட்ட கேள்வியாகும். கிரின்லாந்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் அதன் மக்களின் சுயநிர்ணய உரிமை முக்கியமானதாகும். கிரின்லாந்து தலைமையும் இதையே வலியுறுத்தி வருகிறது.

கிரின்லாந்து விவகாரம் வெறுமனே ஒரு தீவை அமெரிக்கா கையகப்படுத்தும் முயற்சி என்ற அளவில் மட்டுப்படுத்த முடியாது. இது ஆர்க்டிக் பாதுகாப்பு, ரஷ்யா-சீனா போட்டி, கனிம வளங்கள், நேட்டோ ஒற்றுமை, டென்மார்க்கின் இறையாண்மை மற்றும் கிரின்லாந்து மக்களின் சுயநிர்ணயம் ஆகிய அனைத்தும் சந்திக்கும் முக்கியமான புவிசார் அரசியல் விவகாரமாகும். புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் கிரின்லாந்தை அமெரிக்காவுடன் இணைக்கவில்லை. ஆனால் அமெரிக்காவின் இராணுவ அணுகலையும் பாதுகாப்புப் பங்கையும் விரிவுபடுத்தும் புதிய பாதையைத் திறந்துள்ளது.

இதனால் இனி உலக அரசியலில் எழும் முக்கியமான கேள்வி "அமெரிக்கா கிரின்லாந்தை வாங்குமா என்பது மட்டுமல்ல; ஆர்க்டிக் பிராந்தியத்தின் பாதுகாப்பில் அமெரிக்காவின் செல்வாக்கு எவ்வளவு அதிகரிக்கப் போகிறது?" என்பதுமாகும். கிரின்லாந்தின் நிலப்பரப்பு டென்மார்க்கின் இறையாண்மைக்குள் தொடர்ந்தாலும், அதன் எதிர்கால அரசியல் பாதை, அமெரிக்காவின் பாதுகாப்பு ஆர்வம் மற்றும் கிரின்லாந்து மக்களின் சுயநிர்ணய விருப்பம் ஆகியவை அடுத்த ஆண்டுகளில் இந்தப் பிராந்தியத்தின் அரசியல் சமநிலையை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக இருக்கக்கூடும்.



# ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்:

# அறவழியின் உச்சம்!

சு. லோகிதன்

25.09.2026



## முன்னுரை

உலக வரலாற்றில் விடுதலைப் போராட்டங்கள் பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கின்றன. அதில் ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்குள்ளும், அறவழியில் நின்று எதிரிக்கு உணர்த்த முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர் 'ஈகைச்சுடர்' லெப். கேணல் திலீபன் . 1987ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், சொட்டு நீரும் அருந்தாமல் அவர் மேற்கொண்ட 12 நாள் அறவழிப் போராட்டம், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது. தன்னையே மெழுகுவர்த்தியாக உருக்கி, ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தன் இன்னுயிரைத் துறந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன், உண்மையிலேயே "அறவழியின் உச்சம்" என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை.

### போராட்டத்தின் பின்னணியும் 5 அம்சக் கோரிக்கைகளும்

சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமைதியை ஏற்படுத்த என்ற பெயரில் இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் நுழைந்த காலம் அது. அமைதிப்படை மீது நம்பிக்கை வைத்த மக்கள், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், நிலைமை எதிர்மறையாக மாறவே, திலீபன் அறவழிப் போராட்டத்தை ஆயுதமாகக் கையிலெடுத்தார்.

1987 செப்டம்பர் 15ஆம் தேதி, யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில் சூழலில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் தன் வரலாற்றுச் சிறப்புமிக்க உண்ணாநோன்பைத் தொடங்கினார். அவர் முன்வைத்த **ஐந்து அம்சக் கோரிக்கைகள்**:

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைத்து அரசியல்.
கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
3. இடைக்கால நிர்வாகம் அமைக்கும் வரை இடைக்காலப் பணிகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்.
4. காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
5. தமிழ் அமைப்புகள் வசமிருந்த ஆயுதங்கள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு, இந்திய அமைதிப்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும்.

### அறவழியின் உச்சம்: சொட்டு நீருமின்றி 12 நாட்கள்

காந்திய வழியில் பல அறவழிப் போராட்டங்கள் உலக வரலாற்றில் நடந்திருக்கின்றன. ஆனால், பெரும்பாலான உண்ணாநோன்புப் போராட்டங்களில் நீர் அல்லது திரவ உணவுகள் உட்கொள்ளப்படுவது வழக்கம். ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் போராட்டம் இதில் முற்றிலும் வேறுபட்டது.

சொட்டு நீரும் அருந்தாமல், மருந்துகளும் உட்கொள்ளாமல் செப்டம்பர் 15 முதல் செப்டம்பர் 26 வரை தொடர்ந்து 12 நாட்கள் (265 மணிநேரம்) அவர் மேற்கொண்ட தியாகம், அகிம்சைக்கே ஒரு புதிய வரைவிலக்கணத்தைக் கொடுத்தது. உடல் தளர்ந்து, உறுப்புகள் ஒவ்வொன்றாகச் செயலிழந்த நிலையிலும், அவரின் மன உறுதி சிறிதும் தளரவில்லை. மேடையில் தன்னைச் சந்திக்க வந்த மக்களிடம் புன்னகையோடு உரையாடியபடி, தன் உடலையே போராட்ட ஆயுதமாக மாற்றினார்.

### மக்கள் மத்தியில் ஏற்படுத்திய விழிப்புணர்வு

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் அறவழிப் போராட்டம் ஈழத் தமிழ் மக்களிடையே ஒரு மிகப்பெரிய அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் நல்லூர் முருகன் கோவில் வீதியில் திரண்டு, அவருடைய உடலின் ஒவ்வொரு தளர்வையும் கண்ணீருடன் கவனித்து வந்தனர்.

"நான் வீழ்ந்தாலும் என் ஜனங்கள் எழுவார்கள்" என்ற உயரிய நம்பிக்கையோடு தன் இன்னுயிரை ஈகம் செய்தார் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்.

இந்திய அமைதிப்படை மற்றும் சிறீலங்கா அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவும், சர்வதேச சமூகத்தின் மனசாட்சியைத் தட்டவும் அவர் மேற்கொண்ட இந்த அறவழிப் போராட்டம், தமிழ் மக்களின் ஒற்றுமையை உலகிற்குப் பறைசாற்றியது.

## முடிவுரை

1987 செப்டம்பர் 26 அன்று ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் மூச்சுக்காற்று நின்றுபோனது. ஆனால், அவர் கொளுத்திச் சென்ற ஈகத்தின் சுடர் தமிழர்களின் நெஞ்சங்களில் என்றென்றும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது. ஆயுதங்களை விட அறவழி வல்லமைமிக்கது என்பதைத் தன் சொந்த உடலையே உருக்கி நிரூபித்தவர் அவர்.

அநீதிக்கு எதிராகத் தன் உயிரையே கொடையாகக் கொடுத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன், வெறும் விடுதலைப் போராட்ட வீரன் மட்டுமல்ல; அவர் அறவழியின் உச்சத்தைத் தொட்ட ஒரு மாபெரும் ஈகச் சுடர்.

# நல்லூர் வீதியில் ஒரு ஈகைச்சுடர்





நல்லூர் வீதியின் மணல் தொட்டு
நடுநடுங்குகிறது காற்று!
பன்னிரண்டு நாட்கள் – அங்கே
பகலவனும் கண்மூடி நின்றான்.
சொட்டு நீரும் வேண்டாமெனச்
சொல்லிய உதடுகளில்
சுட்டெரித்தது விடுதலைத் தீ!
ஐந்து கோரிக்கைகள் – அவை
தமிழனின் வாழ்வுரிமைக் கோடுகள்.
அறவழியை ஆயுதமாக்கி
ஆயுதமில்லாக் களத்திலே
அறப்போர் தொடுத்த
அபூர்வப் போராளி அவன்!
கந்தனின் வாசலில்
காந்திய வழியில்...
உடலை உருக்கி
உயிரை எரித்து

உண்மையைப் பறைசாற்றிய
உன்னதப் புயல் அவன்!

"நான் வீழ்ந்தாலும்
என் மக்கள் எழுவார்கள்"
என்றவன் மூச்சுக்காற்று
இன்றும் நல்லூர் வீதியில்
புரட்சிப் பாடலாய்
ஒலித்துக் கொண்டிருக்கிறது!
நீர் அருந்தா உதடுகளில்
நெருப்புப் பூத்தது!
உயிர் பிரிந்த வேளையிலும்
உறுதி கலையாத விழிகள்!
செப்டம்பர் இருபத்தாறில்
சரித்திரம் அழுதது – ஆனால்,
சத்தியம் வென்றது!
அணையாத் சுடராய்
தமிழர் நெஞ்சங்களில்
என்றென்றும் எரியும் – அந்த
நல்லூர் வீதியின்
ஈகைச் சுடர்!

–சு. லோகிதன்–

# புடாபெஸ்ட் அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்: உக்ரைன் அணு ஆயுதங்களை கைவிட்டது ஏன்?

23.09.2026

ஐங்கரன் விக்கினேஸ்வரா



1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட போது, அதன் அணு ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு முக்கிய பகுதி புதிதாக சுதந்திரம் பெற்ற உக்ரைனின் நிலப்பரப்பில் இருந்தது. இதன் காரணமாக, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் கிடங்கை வைத்திருந்த நாடாக உக்ரைன் மாறியது. ஆயிரக்கணக்கான அணு வெடிகுண்டுகளும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும், நீண்ட தூர மூலோபாய குண்டுவீச்சு விமானங்களும் அதன் கட்டுப்பாட்டில் இருந்தன. எனினும், ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலத்திலேயே உக்ரைன் இந்த அணு ஆயுதங்களை முழுமையாக கைவிட்டது. அந்த முடிவிற்கு அடிப்படையாக அமைந்ததே 1994 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட புடாபெஸ்ட் பாதுகாப்பு உத்தரவாத ஒப்பந்தமாகும்.




சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், அணு ஆயுதங்கள் பல புதிய நாடுகளின் எல்லைகளுக்குள் இருந்தன. அணு ஆயுதப் பரவலைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் மேற்கத்திய நாடுகள் உக்ரைன், பெலாரஸ் மற்றும் கஜகஸ்தான் ஆகியவற்றை அணு ஆயுதமற்ற நாடுகளாக மாற்ற முயன்றன. இதற்கு முன்பே, 1990 ஆம் ஆண்டு ஜூலை 16 அன்று வெளியிடப்பட்ட உக்ரைனின் இறையாண்மை பிரகடனத்தில், அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவோ, பெறவோ அல்லது வைத்திருக்கவோ விரும்பவில்லை என்ற நிலைப்பாடு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நடைமுறையில் நிலைமை மிகவும் சிக்கலானதாக இருந்தது. உக்ரைனின் நிலப்பரப்பில் அணு ஆயுதங்கள் இருந்தாலும், அவற்றின் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப பராமரிப்பு வசதிகள் பெரும்பாலும் ரஷ்யாவுடன் தொடர்புடையதாக இருந்தது. மேலும், அணு ஆயுதங்களை பாதுகாப்பாக பராமரிப்பதற்கும், அவற்றின் ஆயுளை நீட்டிப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார வளங்கள் உக்ரைனிடம் குறைவாக இருந்தன. இதனால், நீண்ட காலத்திற்கு ஒரு சுயாதீன அணு சக்தியாகத் தொடர்வது கடினம் என்பதை உக்ரைனின் அரசியல் தலைமை உணரத் தொடங்கியது.




இந்த சூழ்நிலையில், 1992 ஆம் ஆண்டு லிஸ்பன் நெறிமுறையில் உக்ரைன், பெலாரஸ் மற்றும் கஜகஸ்தான் ஆகியவை அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT) அணு ஆயுதமற்ற நாடுகளாக இணைவதற்கு ஒப்புக்கொண்டன. இருப்பினும், உக்ரைனுக்குள் இதற்கு எதிர்ப்பு இருந்தது. குறிப்பாக ரஷ்யாவை எதிர்கால அச்சுறுத்தலாகக் கண்ட சில அரசியல்வாதிகள், அணு ஆயுதங்களை முழுமையாக கைவிடுவது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தாக அமையும் என்று எச்சரித்தனர்.

இந்த விவாதங்களின் மத்தியில், சர்வதேச உறவுகள் அறிஞரான ஜான் மியர்ஷைமர் முக்கியமான எச்சரிக்கையை முன்வைத்தார். உக்ரைன் தனது அணு ஆயுதங்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதுவே எதிர்காலத்தில் ரஷ்ய தாக்குதலைத் தடுக்கும் மிக வலுவான பாதுகாப்பு உத்தரவாதமாக இருக்கும் என்றும் அவர் வாதிட்டார். அணு ஆயுதங்களை கைவிட்டால், ஒருநாள் ரஷ்யா உக்ரைனின் இறையாண்மைக்கு சவால் விடுக்கலாம் என்ற அவரது கணிப்பு பின்னாளில் அதிக கவனத்தைப் பெற்றது.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள், அணு ஆயுதப் பரவலைத் தடுப்பதையே முன்னுரிமையாகக் கொண்டிருந்தனர். இதன் காரணமாக, உக்ரைன் அணு ஆயுதங்களை அகற்றுவதற்காக அரசியல் மற்றும் இராஜதந்திர அழுத்தங்கள் அதிகரித்தன. அதே நேரத்தில், ரஷ்யாவுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் மூலம், எரிவாயு மற்றும் எண்ணெய் கடன்கள் தொடர்பான நிவாரணங்களும், அணுமின் நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் விநியோக உத்தரவாதங்களும் வழங்கப்பட்டன.

இறுதியாக, 1994 டிசம்பர் 5 அன்று ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாட்டின் போது புடாபெஸ்ட் பாதுகாப்பு உத்தரவாத ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதில் ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம், உக்ரைனின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் நிலப்பரப்பு ஒருமைப்பாட்டை மதிப்பதாக உறுதியளித்தன. மேலும், உக்ரைனுக்கு எதிராக இராணுவ பலம் அல்லது பொருளாதார அழுத்தம் பயன்படுத்தப்படாது என்றும் உறுதிமொழி வழங்கப்பட்டது. பிரான்ஸ் மற்றும் சீனாவும் தனித்தனி அறிக்கைகள் மூலம் ஆதரவை வெளிப்படுத்தின.

இதனைத் தொடர்ந்து, உக்ரைன் தனது அணு ஆயுதங்களையும், ஏவுகணை அமைப்புகளையும், நீண்ட தூர குண்டுவீச்சு விமானங்களையும் அகற்றியது. அமெரிக்காவும் இந்த ஆயுத அகற்றல் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்கியது. இதன் மூலம் உக்ரைன் உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் கிடங்கை முழுமையாக கைவிட்ட நாடாக மாறியது.

## 1990 உக்ரைன் இறையாண்மை பிரகடனம்

இத்தகைய சூழலில் புடாபெஸ்ட் ஒப்பந்தம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஒரு வழியாக, உக்ரைன் அரசாங்கம் உக்ரைன் அணு ஆயுதமற்ற நாடாக இருக்கும் என்று ஆரம்பத்திலேயே உறுதியளித்தது. ஜூலை 16, 1990 அன்று அரசு இறையாண்மை பிரகடனம் செய்தது. அதன்படி உக்ரைன் அணு ஆயுதங்களை ஏற்கவோ, உற்பத்தி செய்யவோ அல்லது வாங்கவோ முடியாது என்று உறுதியளித்தது.

இருப்பினும் ரஷ்யாவை அச்சுறுத்தலாகக் கருதிய சில உக்ரைனிய அரசியல்வாதிகள் இதை எதிர்த்தனர். உக்ரைன் தனது மண்ணில் நிலைநிறுத்தப்பட்ட சோவியத் அணு ஆயுதங்களை மாற்றும் வரை, அது உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் கிடங்கை வைத்திருந்தது.

பெலாரஸில் மட்டுமே இடமாறும் - நகரும் ஏவுகணைகள் இருந்தன. மேலும் கஜகஸ்தான் தனது அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை ரஷ்யாவிற்கு விரைவாகக் கொடுக்கத் தேர்ந்தெடுத்தது.

இதன்பின்னர் மே 23, 1992 அன்று, ரஷ்யா, அமெரிக்கா, பெலாரஸ், கஜகஸ்தான் மற்றும் உக்ரைன் ஆகியவை START I ஒப்பந்தத்திற்கான லிஸ்பன் நெறிமுறையில் கையெழுத்திட்டன. பின்னர் ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்கு முன்னதாக, இந்த நெறிமுறை பெலாரஸ், கஜகஸ்தான் மற்றும் உக்ரைன் ஆகியவை அணு ஆயுதமற்ற நாடுகளாக NPTயை விரைவில் கடைப்பிடிக்க உறுதியளித்தன. இருப்பினும், அணு ஆயுதங்களை மாற்றுவதற்கான விதிமுறைகள் உடன்படவில்லை.

மேலும் சில உக்ரேனிய அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நவீன உக்ரேனிய RT-23 (SS-24) ஏவுகணைகள் மற்றும் சோவியத் உற்பத்தி போர்க்கப்பல்களை தக்கவைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்கத் தொடங்கினர். 1993 ஆம் ஆண்டில், உக்ரேனில் உள்ள UR-100N (SS-19) ஏவுகணைகளின் இரண்டு படைப்பிரிவுகள் போர்க்கப்பல் கூறுகள் அவற்றின் செயல்பாட்டு ஆயுளைக் கடந்துவிட்டன என்பதால் சேமிப்பிற்குத் திரும்பப் பெறப்பட்டன. மேலும் போர்க்கப்பல்களைப் பராமரிக்கவும் நீண்டகால அணு சக்தி பாதுகாப்பை உறுதி செய்யவும் முடியாததால், உக்ரைன் நம்பகமான அணுசக்தி இராணுவ சக்தியாக மாற முடியாது என்பதை உக்ரைனின் அரசியல் தலைமை உணர்ந்தது.

ஆனால், 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கிரிமியாவை இணைத்துக் கொண்டதும், 2022 ஆம் ஆண்டு முழுமையான இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியதும், புடாபெஸ்ட் ஒப்பந்தத்தின் நம்பகத்தன்மை மீதான கேள்விகள் தீவிரமடைந்தன. உக்ரைன் மற்றும் பல மேற்கத்திய நாடுகள், ரஷ்யா தனது ஒப்பந்தப் பொறுப்புகளை வெளிப்படையாக மீறியதாக குற்றம் சாட்டின. இதற்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கினாலும், நேரடி இராணுவ தலையீட்டைத் தவிர்த்தன.

இதனால், புடாபெஸ்ட் ஒப்பந்தம் இன்று சர்வதேச அரசியலில் முக்கியமான விவாதப் பொருளாக உள்ளது. ஒருபுறம் அது அணு ஆயுதப் பரவலைக் கட்டுப்படுத்திய ஒரு வெற்றிகரமான இராஜதந்திர முயற்சியாகக் கருதப்படுகிறது. மறுபுறம், பாதுகாப்பு உத்தரவாதங்கள் நடைமுறையில் எவ்வளவு நம்பகமானவை என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. குறிப்பாக, உக்ரைன் தனது அணு ஆயுதங்களை கைவிட்ட முடிவு வரலாற்றுத் தவறா அல்லது அக்கால அரசியல் சூழ்நிலையின் அவசியமான தீர்மானமா என்பது இன்னும் விவாதிக்கப்படும் ஒரு கேள்வியாகவே உள்ளது.

# ஈரான் போரில் நிறைவேறாத அமெரிக்காத் திட்டம்!

# இராணுவப் பொருளாதார அரசியல் சவால்கள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

21.09.2026

ஏழாவது மாதத்தை எட்டியுள்ள ஈரான் போரின் பின்னணியில் அமெரிக்காவுக்கு முன்னுள்ள இராணுவ பொருளாதார அரசியல் சவால்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான போர் ஏற்கனவே அமெரிக்காவின் ஆரம்ப எதிர்பார்ப்புகளைத் தாண்டி நீடித்துக் கொண்டிருக்கிறது. 2026 பெப்ரவரி 28ஆம் தேதி தொடங்கிய இந்த மோதல் சில வாரங்களில் முடிவடையும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆரம்பத்தில் கூறியிருந்தார்.

ஆனால் செப்டெம்பர் 2026க்குள் போர் ஏழாவது மாதத்தை எட்டியுள்ளது. இதனால், அமெரிக்கா அடுத்து என்ன செய்யப் போகிறது என்ற கேள்வி அமெரிக்காவுக்குள் மட்டுமல்லாமல், மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா மற்றும் உலக சந்தைகளிலும் முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது.



## நீடிக்கும் போர் – மாறும் அமெரிக்கத் திட்டம்

அமெரிக்காவின் ஆரம்ப இராணுவ நடவடிக்கைகளின் நோக்கங்களில் ஈரானின் இராணுவ திறன்கள், வான்பாதுகாப்பு அமைப்புகள், ஏவுகணை மற்றும் அணுசக்தி தொடர்பான கட்டமைப்புகளைத் தாக்குவது முக்கியமாக இருந்தது. செப்டெம்பர் 1ஆம் தேதி அமெரிக்க மத்திய கட்டளை (CENTCOM) ஈரானிய புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் இலக்குகள் மீது புதிய தாக்குதல்களை நடத்தியதாக அறிவித்தது. வான்பாதுகாப்பு, ரேடார், கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் தொடர்பு அமைப்புகள் உள்ளிட்ட இலக்குகள் தாக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

ஆனால் போரின் நீடிப்பு அமெரிக்காவுக்கு ஒரு புதிய கணக்கீட்டை உருவாக்கியுள்ளது. எதிரியை இராணுவ ரீதியாக தொடர்ந்து தாக்குவது மட்டுமே போரை முடிவுக்குக் கொண்டு வராது என்பது தெளிவாகியுள்ளது. எனவே அடுத்த கட்டத்தில் இராணுவ அழுத்தம், பொருளாதாரத் தடைகள், கடற்படை நடவடிக்கைகள் மற்றும் பேச்சுவார்த்தை ஆகியவை ஒன்றுடன் ஒன்று இணைந்த அணுகுமுறையாக இருக்கக்கூடும்.

## ஹோர்முஸ் நீரிணை அமெரிக்க சவால்

இந்தப் போரின் முக்கியமான மையங்களில் ஒன்று ஹோர்முஸ் நீரிணையாகும். உலகின் முக்கியமான எண்ணெய் மற்றும் எரிவாயு கடல் போக்குவரத்து வழிகளில் ஒன்றான இந்த குறுகிய நீரிணையின் பாதுகாப்பு உலக பொருளாதாரத்தையே பாதிக்கக்கூடியது. ஈரானுடனான மோதலின் காரணமாக இங்கு கப்பல் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எண்ணெய் விலை உயர்வும், உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் அழுத்தமும் ஏற்பட்டுள்ளன.

இதனால் அமெரிக்காவுக்கு இரண்டு முரண்பட்ட தேவைகள் உள்ளன. ஒன்று, ஈரானுக்கு எதிரான இராணுவ அழுத்தத்தைத் தொடர்வது. மற்றொன்று, உலக எண்ணெய் சந்தை மேலும் பாதிக்கப்படாமல் ஹோர்முஸ் வழியாக வர்த்தகக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்லும் சூழலை உருவாக்குவது. இதற்காக வளைகுடா நாடுகளுடன் ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவது அமெரிக்காவின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாக இருக்கும்.

மேலும் அமெரிக்க இராணுவத்தின் செலவும் ஆயுதப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. போர் நீடிப்பதால் அமெரிக்காவுக்கு இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் புதிய அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

பென்டகன் அலுவலகத்தின் அறிக்கைகள், மத்திய கிழக்கிலுள்ள பல அமெரிக்கத் தளங்களில் ஈரானிய தாக்குதல்களால் நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் சேதமடைந்ததாகக் கூறுகின்றன. ஆனால் இந்த தகவல்கள் அனைத்தும் அமெரிக்க அரசால் மூடிமறைக்கப்பட்டன.

அத்துடன் மேம்பட்ட ஆயுதங்களின் கையிருப்பில் பற்றாக்குறையும், அவற்றை மீண்டும் நிரப்பும் பாதுகாப்புத் தொழில்துறையின் திறனில் தடைகளும் உருவாகியுள்ளதாகவும் பென்டகன் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், அமெரிக்க காங்கிரஸின் கணக்குப்படி, ஆகஸ்ட் 1 வரை போருக்கான அமெரிக்க செலவு சுமார் 38 பில்லியன் டொலர் ஆகியுள்ளது.

தொடர்ந்து போர் நடந்தால் மாதத்திற்கு மேலும் சுமார் 2 முதல் 3 பில்லியன் டொலர் வரை செலவாகலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால் இராணுவ வெற்றி மட்டுமல்ல, இந்தப் போரை எவ்வளவு காலம் நிதியளிக்க முடியும் என்பதும் வாஷிங்டனின் முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது.

போரின் எதிர்காலத்தில் அமெரிக்க காங்கிரஸின் பங்கு முக்கியமானதாகிறது. செப்டெம்பர் 15ஆம் தேதி அமெரிக்க பிரதிநிதிகள் சபை மீண்டும் ஒரு போர் அதிகாரத்தை (War Powers Resolution) நிறைவேற்றியது. ஜனநாயகக் கட்சியினருடன் ஏழு குடியரசுக் கட்சி உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். இது ஜனாதிபதியின் காங்கிரஸ் அங்கீகாரம் இல்லாத இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டமன்ற அழுத்தத்தை வெளிப்படுத்துகிறது.

இதன் பொருள், போரின் அடுத்த கட்டம் வெறும் வெள்ளை மாளிகை அல்லது பென்டகன் முடிவாக இருக்காது. போர் செலவு, அமெரிக்க இராணுவ வீரர்களின் பாதுகாப்பு, ஆயுதக் கையிருப்பு, எண்ணெய் விலை மற்றும் பொதுமக்கள் மீதான பொருளாதார தாக்கம் ஆகியவை அமெரிக்க உள்நாட்டு அரசியலிலும் தொடர்ந்து விவாதிக்கப்படும்.



## நவம்பர் இடை தேர்தல் பின்னணி

அமெரிக்காவின் நவம்பர் இடைத்தேர்தல்களும் போரின் அரசியல் சூழலைப் பாதிக்கக்கூடிய காரணியாக உள்ளன. அதிபர் ட்ரம்ப் செப்டெம்பர் 9ஆம் தேதி, போர் நவம்பர் இடைத் தேர்தல்களுக்குப் பின்னர் உடனடியாக முடிவடையும் எனத் தெரிவித்தார். அதேவேளை, துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் போர் பின்னர் மிகவும் வேறுபட்ட கட்டத்துக்குள் செல்லும் எனக் கூறியுள்ளார். ஆனால் தேர்தல் தேதியுடன் போர் தானாக முடிவடையும் என்பது உறுதி செய்யப்பட்ட விடயம் அல்ல. ஈரானின் இராணுவ திறன், ஹோர்முஸ் நிலைமை, பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் மற்றும் பிராந்தியத்தில் உள்ள ஈரான் ஆதரவு அமைப்புகளின் நடவடிக்கைகள் போன்ற பல காரணிகள் போரின் நீடிப்பைத் தீர்மானிக்கக்கூடும்.

அமெரிக்காவுக்கு முன்னுள்ள மற்றொரு முக்கியமான பாதை பேச்சுவார்த்தையாகும். ஈரானை இராணுவ ரீதியாக அழுத்துவதோடு, பொருளாதாரத் தடைகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகள் மூலம் பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் கொடுப்பது ஒரு சாத்தியமான அணுகுமுறையாகத் தெரிகிறது. இதற்கிடையில் அமெரிக்க அதிகாரிகள் ஈரான் ஆதரவு பெற்ற யேமன் ஹூவுதி பிரதிநிதிகளுடன் ஓமானில் சந்தித்ததாக கூறப்படுகிறது.

இது முக்கியமான காரணத்தைக் காட்டுகிறது. மத்திய கிழக்குப் போரில் ஈரான் மட்டும் அமெரிக்காவின் கவலையாக இல்லை. யேமன், செங்கடல், வளைகுடா, ஈராக், சிரியா மற்றும் பிற பிராந்தியங்களில் செயல்படும் ஈரான் சார்ந்த அமைப்புகளின் நடவடிக்கைகளும் அமெரிக்காவின் போர்த் திட்டத்தைப் பாதிக்கின்றன.

## வளைகுடா நாடுகளின் பங்கு

அமெரிக்கா அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும் போது சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், பஹ்ரைன், குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகளின் நிலைப்பாடுகளையும் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது. செப்டெம்பர் இறுதியில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தையொட்டி வளைகுடா நாடுகளின் தலைவர்களுடன் ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. போருக்குப் பிந்தைய திட்டம் குறித்து இந்தச் சந்திப்புகளில் விவாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அடுத்த கட்ட அமெரிக்கத் திட்டம் தனிப்பட்ட முறையில் ஈரானை எதிர்கொள்ளும் நடவடிக்கையாக இல்லாமல், வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்காவின் பிராந்திய கூட்டாளிகளுடன் இணைந்த பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும் முயற்சியாகவும் அமையக்கூடும்.

## உலக வர்த்தக விளைவுகள்

அமெரிக்கா–ஈரான் போர் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பிரச்சினையாக மட்டும் இல்லை. எண்ணெய் விலை, உலக வர்த்தகம், கடல் போக்குவரத்து, ஐரோப்பிய பாதுகாப்பு, ஆசிய நாடுகளின் எரிசக்தித் தேவைகள் மற்றும் உலகளாவிய பணவீக்கம் ஆகியவற்றுடன் இந்தப் போர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது. அமெரிக்காவின் போருக்கான செலவு ஏற்கனவே பல பத்துப் பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது.

இந்தப் போர் 2027ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் அமெரிக்க பணவீக்கத்தை சுமார் 0.5 சதவீதப் புள்ளி அதிகரிக்கக்கூடும். இதனால் வாஷிங்டனின் அடுத்த முடிவு ஈரானை மட்டும் கருத்தில் கொண்டதாக இருக்காது; அமெரிக்கப் பொருளாதாரம் மற்றும் உலக எரிசக்தி சந்தையின் நிலைத்தன்மையையும் கருத்தில் கொண்டதாக இருக்கும்.

ஈரான் போர் அமெரிக்காவுக்கு ஒரு முக்கியமான மூலோபாயத் திருப்புமுனையாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் குறுகிய கால இராணுவ நடவடிக்கையாகக் கருதப்பட்ட மோதல், தற்போது நீண்டகால இராணுவ, பொருளாதார மற்றும் தூதரகச் சவாலாக மாறியுள்ளது.

அமெரிக்கா தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறனை வைத்திருக்கிறது.

ஆனால் நீண்டகாலப் போரின் செலவு, ஆயுதக் கையிருப்பின் அழுத்தம், வளைகுடா நாடுகளின் பாதுகாப்பு, ஹோர்முஸ் நீரிணையின் நிலைமை, அமெரிக்க உள்நாட்டு அரசியல் மற்றும் ஈரானுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பேச்சுவார்த்தை ஆகியவை அதன் அடுத்த கட்ட முடிவுகளை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன. அமெரிக்கா அடுத்து ஈரானைத் தாக்குமா என்பது மட்டும் முக்கியமான கேள்வியல்ல.

அதைவிட முக்கியமான கேள்வி, இந்தப் போரை இராணுவ வெற்றியிலிருந்து ஒரு நீடித்த அரசியல் தீர்வாக எவ்வாறு மாற்றுவது என்பதாகும். அமெரிக்காவுக்கு முன்னுள்ள மிகப்பெரிய சவால் இதுவே. போரைத் தொடங்குவது ஒரு இராணுவ முடிவாக இருக்கலாம். ஆனால் அதை முடிவுக்குக் கொண்டு வந்து, மத்திய கிழக்கில் புதிய பாதுகாப்பு சமநிலையை உருவாக்குவது மிகப் பெரிய இராஜதந்திர அரசியல் சவாலாக இருக்கும்.




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

# ரஷ்ய நாடாளுமன்ற தேர்தலில் புட்டினின் கட்சி வெற்றி! உக்ரைன் போருக்கான மக்கள் அங்கீகாரமா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

22.09.2026



உக்ரைன் போர் நீடிக்கும் நிலையிலும், புட்டினின் யுனைடெட் ரஷ்யா கட்சி 355 இடங்களை வென்றுள்ளது. இதன் மூலம் புட்டினின் அரசியல் பிடி மேலும் மாஸ்கோவில் வலுவடைந்து வருகிறது. ஆயினும் தேர்தல் முடிவுகளை மட்டும் வைத்து ரஷ்ய மக்கள் அனைவரும் போருக்கு ஆதரவாக உள்ளனர் என்று முடிவு செய்வது சரியானதாக இருக்காது.

ரஷ்யாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிபர் விளாடிமிர் புட்டினை ஆதரிக்கும் யுனைடெட் ரஷ்யா (United Russia) கட்சி மிகப்பெரிய பெரும்பான்மை பெற்றுள்ளது. 450 உறுப்பினர்களைக் கொண்ட மாநில டூமாவில் 355 இடங்களை அந்தக் கட்சி கைப்பற்றியிருப்பதாக ரஷ்ய மத்திய தேர்தல் ஆணையத்தின் ஆரம்ப முடிவுகள் தெரிவிக்கின்றன. இது அக்கட்சிக்கு அரசியலமைப்பு ரீதியான மிகப்பெரிய பெரும்பான்மையை வழங்குவதுடன், புட்டினின் அரசியல் அதிகாரத்தையும் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

2026 செப்டெம்பர் 18 முதல் 20 வரை நடைபெற்ற இந்தத் தேர்தல், 2022ஆம் ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா முழுமையான இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிய பின்னர் நடைபெற்ற முதல் நாடாளுமன்றத் தேர்தல் என்பதால் சர்வதேச அளவில் விசேட கவனத்தைப் பெற்றது.

## 57.83 சதவீத வாக்கு புட்டினுக்கு

இதுவரையில் 95 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், யுனைடெட் ரஷ்யா கட்சி 57.83 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. 2021ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சி 49.8 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது தற்போதைய முடிவு கணிசமான உயர்வைக் காட்டுகிறது.

450 உறுப்பினர்களைக் கொண்ட டூமாவில் 355 இடங்களைப் பெறுவது, சாதாரண பெரும்பான்மையைத் தாண்டிய அரசியலமைப்பு பெரும்பான்மை ஆகும். முன்னதாக 2016ஆம் ஆண்டு யுனைடெட் ரஷ்யா 343 இடங்களைப் பெற்றதே அதன் முந்தைய சாதனையாக இருந்தது. தற்போதைய 355 இடங்கள் அந்த எண்ணிக்கையையும் முறியடித்துள்ளன. மீதமுள்ள முக்கிய இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சி 40 இடங்களையும், லிபரல் கட்சி (LDPR) 25 இடங்களையும், புதிய மக்கள் கட்சி 20 இடங்களையும் பெற்றதாக ஆரம்ப முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தலை வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலாக மட்டுமல்லாமல், உக்ரைன் போருக்கான தனது அரசின் கொள்கைக்கு கிடைக்கும் அரசியல் ஆதரவின் அளவுகோலாகவும் புட்டின் முன்வைத்திருந்தார். நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் உக்ரைன் போர் ரஷ்யாவின் பொருளாதாரம், இராணுவம் மற்றும் சமூக வாழ்க்கையில் அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறது.

போரின் செலவுகள் அதிகரிப்பது, பணவீக்கம், எரிபொருள் மற்றும் பிற பொருட்களின் விலை உயர்வு, உக்ரைனின் ட்ரோன் தாக்குதல்கள் ரஷ்யாவின் உள்பகுதிகளையும் சென்றடைவது போன்றவை ரஷ்ய மக்களிடையே கவலையை அதிகரித்துள்ளன. இந்த சூழலில் யுனைடெட் ரஷ்யாவுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியை கிரெம்ளின், புட்டினின் ஆட்சிக்கும் அவரது உக்ரைன் கொள்கைக்கும் கிடைத்த ஆதரவாக முன்னிறுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது.








ஆனால் தேர்தல் முடிவுகளை மட்டும் வைத்து ரஷ்ய மக்கள் அனைவரும் போருக்கு ஆதரவாக உள்ளனர் என்று முடிவு செய்வது சரியானதாக இருக்காது. ஏனெனில் புட்டினை விமர்சிக்கும், குறிப்பாக போருக்கு எதிரான பல அரசியல் வேட்பாளர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

## எதிர்க்கட்சிகளின் ஆதரவு சரிவு?

ரஷ்யாவின் தற்போதைய அரசியல் சூழலில் மிக முக்கியமான ஒன்றாக புட்டினின் ஆட்சியை விமர்சிக்கும் அரசியல் சக்திகள் மீது கடந்த சில ஆண்டுகளில் கடுமையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. போருக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட யாபிலக்கா (Yabloko) கட்சியும் தேசிய அளவில் போட்டியிடுவதிலிருந்து விலக்கப்பட்டது. அந்தக் கட்சியே ரஷ்யாவில் பதிவு செய்யப்பட்ட முக்கியமான போர் எதிர்ப்பு அரசியல் கட்சியாகக் கருதப்பட்டது.

இதன் காரணமாக, வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட அரசியல் தெரிவுகள் குறைவாக இருந்ததாக ரஷ்யாவை விமர்சிக்கும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும், தேர்தல் காலகட்டத்தில் போருக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான அரசியல் மற்றும் சட்டரீதியான இடம் மிகவும் குறுகியதாக இருந்தது. இதனால் யுனைடெட் ரஷ்யாவின் மிகப்பெரிய வெற்றி, மக்கள் ஆதரவின் ஒரு குறியீடாக இருக்கலாம் என்றாலும், முழுமையான அரசியல் போட்டியின் மூலம் பெறப்பட்ட வெற்றி என அதை மதிப்பிடுவது குறித்து சர்வதேச அளவில் கேள்விகள் எழுந்துள்ளன.

அத்துடன் தேர்தல் கண்காணிப்பு குறித்த சர்ச்சையையும் எழுந்துள்ளது. ரஷ்யாவின் தேர்தல் செயல்முறை குறித்து மேற்கத்திய நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் விமர்சனங்களை முன்வைத்துள்ளன. எதிர்க்கட்சிகளின் பங்கேற்பு குறைவு, ஊடகச் சூழல் மீதான கட்டுப்பாடுகள், போருக்கு எதிரான குரல்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆகியவை தேர்தலின் ஜனநாயகத் தன்மை குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளன.

## போரின் மீது மக்கள் மனநிலை

மேலும், ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்ட உக்ரைனின் டொனெட்ஸ்க், லுகான்ஸ்க், கெர்சன் மற்றும் சபோரிஜியா பகுதிகளிலும் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த பகுதிகளை ரஷ்யா

வின் பகுதிகளாக இணைத்துக் கொண்டதை ஐக்கிய நாடுகள் சபையும் பெரும்பாலான சர்வதேச நாடுகளும் அங்கீகரிக்கவில்லை. அவ்விடங்களில் நடத்தப்பட்ட தேர்தல்களையும் பல நாடுகள் நிராகரித்துள்ளன.

ஒருபுறம், யுனைடெட் ரஷ்யா 57 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. மறுபுறம், போரின் நீடிப்பு குறித்து ரஷ்ய சமூகத்தில் கவலைகள் அதிகரித்து வருவதாக பல்வேறு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். முக்கியமாக உக்ரைனிலிருந்து வரும் ட்ரோன் தாக்குதல்கள் ரஷ்யாவின் எல்லைப் பகுதிகளையும், மாஸ்கோவையும் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, போருக்குத் தேவையான மனிதவளத்தைப் பெறுவதற்கான ஆட்சேர்ப்பு முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனால் புதிய இராணுவ அணிதிரட்டல் நடைபெறுமா என்ற அச்சமும் சில ரஷ்யர்களிடையே காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## போர்வீரர்கள் அரசியலில்

அதே நேரத்தில், ரஷ்ய அரசாங்கம் உள்நாட்டில் நிலைத்தன்மை, தேசிய பாதுகாப்பு மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான எதிர்ப்பை முன்னிறுத்தி தனது அரசியல் ஆதரவை ஒருங்கிணைத்து வருகிறது.

மேலும் போர்வீரர்களுக்கு அரசியலில் புதிய இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தேர்தலின் மற்றொரு முக்கிய அம்சம், உக்ரைன் போரில் பங்கேற்ற ரஷ்ய இராணுவ வீரர்களின் அரசியல் எழுச்சியாகும்.

யுனைடெட் ரஷ்யா சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 49 பேர் உக்ரைன் போரில் பணியாற்றிய முன்னாள் அல்லது தற்போதைய இராணுவ வீரர்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இது ரஷ்ய அரசியலில் போர் வீரர்களை ஒரு புதிய அரசியல் சமூகமாக முன்னிறுத்தும் புட்டினின் முயற்சியுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இதன் மூலம் போர் அனுபவம் கொண்டவர்களை நிர்வாகத்திலும் சட்டமன்றத்திலும் இணைத்து, தனது ஆட்சியின் தேசிய பாதுகாப்பு அடையாளத்தை புட்டின் மேலும் வலுப்படுத்தக்கூடும்.

யுனைடெட் ரஷ்யாவின் 355 இடங்கள் புட்டினின் அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றுவதற்கும், அரசின் கொள்கைகளைத் தொடர்வதற்கும் வலுவான அரசியல் தளத்தை வழங்குகின்றன. குறிப்பாக உக்ரைன் போர் தொடர்பான பாதுகாப்பு மற்றும் இராணுவச் செலவுகள், பொருளாதாரக் கொள்கைகள், ஊடக மற்றும் இணையக் கட்டுப்பாடுகள், உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற முக்கிய விவகாரங்களில் நாடாளுமன்ற எதிர்ப்பின் வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இந்த தேர்தல் முடிவை புட்டின் உக்ரைன் போருக்கான தனது கொள்கைக்கு கிடைத்த மக்கள் ஆதரவின் அடையாளமாகப் பயன்படுத்தக்கூடும். அதேவேளை, தேர்தல் சூழலில் உண்மையான போர் எதிர்ப்பு வேட்பாளர்கள் பெருமளவில் இல்லாததால், முடிவை நேரடியாக போருக்கான மக்கள் ஆதரவாக மட்டுமே விளக்குவது சிக்கலானது.

## ரஷ்ய அரசியலின் புதிய அத்தியாயம்

2026 நாடாளுமன்றத் தேர்தல் ரஷ்ய அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது. யுனைடெட் ரஷ்யாவின் 355 இடங்கள், புட்டினின் அரசியல் அதிகாரத்தை நாடாளுமன்ற மட்டத்தில் மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால் இந்த வெற்றியை மதிப்பிடும்போது, தேர்தல் போட்டியின் தன்மை, எதிர்க்கட்சிகளின் பங்கேற்பு, போருக்கு எதிரான குரல்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் உக்ரைன் போரின் உண்மையான சமூகச் செலவு ஆகிய அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ரஷ்யாவில் புதினின் அரசியல் அமைப்பு தற்போது நாடாளுமன்றத்தில் மிகவும் வலுவாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில், நீடிக்கும் போர், பொருளாதார அழுத்தங்கள் மற்றும் மக்களின் போர்சோர்வு போன்றவை எதிர்காலத்தில் கிரெம்ளினுக்கு எதிரான முக்கிய சவால்களாக இருக்கக்கூடும். எனவே, இந்தத் தேர்தல் முடிவு உடனடியாக புட்டினின் ஆட்சிக்கு எதிரான அரசியல் மாற்றத்தைக் காட்டவில்லை. மாறாக, உக்ரைன் போர் தொடரும் நிலையிலும், கிரெம்ளின் தனது உள்நாட்டு அரசியல் கட்டுப்பாட்டை எவ்வாறு தக்கவைத்துக் கொண்டிருக்கிறது என்பதையே இந்தத் தேர்தல் வெளிப்படுத்துகிறது.

# லிதுவேனியப் புதிய எல்லைப் பாதுகாப்பு அரண்கள்:

# பால்டிக் நாடுகளின் எல்லையில் இராணுவப் பதற்றம்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

16.09.2026

ஐரோப்பாவின் கிழக்கு எல்லையில் பாதுகாப்புப் பதற்றம் மீண்டும் அதிகரித்து வருகிறது. ரஷ்யாவின் கலினின்கிராட் பிராந்தியம் மற்றும் பெலாரஸை ஒட்டியுள்ள தனது எல்லைகளில் எதிர்ப்பு அகழிகள், கம்பிவலைகள், சாலைத் தடைகள், "டிராகனின் பற்கள்" எனப்படும் கான்கிரீட் தடுப்புகள் உள்ளிட்ட இராணுவப் பாதுகாப்பு கட்டமைப்புகளை உருவாக்க லிதுவேனியா (Lithuania) நடவடிக்கை எடுத்து வருகிறது.






இந்த நடவடிக்கை, உக்ரைன் போருக்குப் பின்னர் ஐரோப்பாவின் பாதுகாப்புச் சூழலில் ஏற்பட்டுள்ள ஆழமான மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான இராணுவப் போட்டி எந்த அளவுக்கு தீவிரமடைந்துள்ளது என்பதற்கான ஆதாரங்களாக உள்ளன.

## ரஷ்ய எல்லையில் பாரிய பாதுகாப்பு

லிதுவேனியா, லாட்வியா, எஸ்டோனியா ஆகியவை பால்டிக் நாடுகள். இவை அனைத்தும் நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்கள். அதேவேளை ரஷ்யா அல்லது ரஷ்யாவுடன் நெருங்கிய உறவில் உள்ள பெலாரஸுடன் நேரடி எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

லிதுவேனியாவுக்கு குறிப்பாக ரஷ்யாவின் கலினின்கிராட் பிராந்தியம் மிக முக்கியமான பாதுகாப்புச் சவாலாக உள்ளது. ரஷ்யாவின் பிரதான நிலப்பரப்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள கலினின்கிராட், பால்டிக் கடற்கரையில் அமைந்துள்ள முக்கிய



மான ரஷ்ய இராணுவத் தளமாகும்.

மறுபுறம் பெலாரஸ் ரஷ்யாவின் நெருங்கிய இராணுவக் கூட்டாளியாக உள்ளது. இதனால் லிதுவேனியாவின் கிழக்கு மற்றும் தென்கிழக்கு எல்லைகள் இராணுவ ரீதியாக மிகவும் உணர்திறன் வாய்ந்த பகுதிகளாக மாறியுள்ளன. 2022-ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரேன் மீது முழுமையான படையெடுப்பைத் தொடங்கிய பின்னர், பால்டிக் நாடுகளின் அச்சம் மேலும் அதிகரித்தது. உக்ரைனில் நடந்தது எதிர்காலத்தில் எங்களுக்கும் நடக்கலாம் என்ற அச்சம், அவற்றின் பாதுகாப்புக் கொள்கைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 20 மீட்டர் எதிர்ப்பு அகழிகள்

லிதுவேனியாவின் புதிய பாதுகாப்புத் திட்டத்தில் எதிரி இராணுவ வாகனங்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கான அகழிகள் முக்கிய இடம் பெறுகின்றன. சில பகுதிகளில் சுமார் 20 மீட்டர் அகலமுள்ள எதிர்ப்பு அகழிகள் அமைக்கப்பட உள்ளன. இதன் நோக்கம் எதிரி படையை உடனடியாக அழிப்பது அல்ல. மாறாக, டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களின் வேகத்தை குறைத்து, அவற்றின் நகர்வை குறிப்பிட்ட பாதைகளுக்குள் கட்டுப்படுத்துவதாகும்.

இதன் மூலம் லிதுவேனிய மற்றும் நேட்டோ படைகளுக்கு எதிர்வினையாற்றுவதற்கான கூடுதல் நேரம் கிடைக்கும். சில முக்கிய இடங்களில் இந்தப் பாதுகாப்பு மண்டலம் 150 மீட்டர் வரை விரிவுபடுத்தப்படலாம். இது நவீன இராணுவத் தந்திரத்தில் எதிர்ப்பு நகர்வு (Counter-mobility) பாதுகாப்பு முறையின் ஒரு பகுதியாகும்.



## பால்டிக் 'டிராகனின் பல்' தற்காப்பு வரிசை

லிதுவேனியா ஏற்கனவே பல்வேறு இராணுவப் பொறியியல் தடுப்புகளை சேமித்து வைக்கும் பூங்காக்களை உருவாக்கியுள்ளது. டிராகனின் பல் (Dragon's Teeth) எனப்படும் கான்கிரீட் தடுப்புகள், சாலைத் தடைகள், கம்பிவலைகள் மற்றும் பிற உபகரணங்கள் இதில் அடங்குகின்றன.

இத்தகைய இராணுவப் பொறியியல் பூங்காக்களின் எண்ணிக்கையை 27-இல் இருந்து 50 ஆக அதிகரிக்க லிதுவேனியா திட்டமிட்டுள்ளது. போர்நிலை ஏற்பட்டால் தடுப்புகளை புதிதாக உருவாக்குவதற்குப் பதிலாக அவற்றை உடனடியாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

மேலும், இயற்கையான காடுகள், நீர்நிலைகள் மற்றும் சதுப்பு நிலங்களையும் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கனரக இராணுவ வாகனங்கள் மற்றும் டாங்கிகள் வேகமாக முன்னேற முடியாத வகையில் நில அமைப்புகளைப் பயன்படுத்துவது இதன் நோக்கமாகும்.

லிதுவேனியாவின் நடவடிக்கையை தனிப்பட்ட திட்டமாக மட்டும் பார்க்க முடியாது. இது எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய மூன்று பால்டிக் நாடுகளும் இணைந்து உருவாக்கும் (Baltic Defence Line) தற்காப்பு வரிசையின் ஒரு பகுதியாகும். 2024-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த முயற்சியின் நோக்கம், மூன்று நாடுகளின் கிழக்கு எல்லைகளிலும் பதுங்கு குழிகள், எதிர்ப்பு அகழிகள், சாலைத் தடைகள் மற்றும் பிற இராணுவத் தடுப்புகளை உருவாக்குவதாகும். இந்த நடவடிக்கைகள் நேட்டோவின் கிழக்கு எல்லையைப் பாதுகாக்கும் பரந்த திட்டத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன.

## சுவால்கி இடைவெளி

இந்த விவகாரத்தில் சுவால்கி இடைவெளி (Suwałki Gap) மிகவும் முக்கியமானது. இது லிதுவேனியாவுக்கும் போலந்துக்கும் இடையிலான நிலப்பகுதி. ஒருபுறம் ரஷ்யாவின் கலினின்கிராட் மறுபுறம் பெலாரஸ். பால்டிக் நாடுகளை போலந்து மற்றும் மேற்கு ஐரோப்பாவுடன் இணைக்கும் முக்கியமான நிலப்பாதை என்பதால், எதிர்கால இராணுவ மோதலில் இது முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது.

இதன் காரணமாக லிதுவேனியா மட்டுமல்லாமல் போலந்தும் தனது கிழக்கு எல்லைப் பாதுகாப்பை அதிகரித்து வருகிறது. எல்லைகளில் அகழிகள் தோண்டப்படுவது மற்றும் இராணுவத் தடுப்புகள் அமைக்கப்படுவது, போரைத் தொடங்குவதற்கான நடவடிக்கையாக இல்லாமல், எதிரி தாக்குதலைத் தடுப்பதற்கான முயற்சியாகவும் இருக்கலாம். நேட்டோவின் அடிப்படை பாதுகாப்புக் கொள்கைகளில் ஒன்றான தடுப்பு (Deterrence) இதையே வலியுறுத்துகிறது.

ஒரு நாட்டைத் தாக்குவது மிகவும் கடினமாக இருக்கும் என்பதை முன்கூட்டியே காட்டுவதன் மூலம் தாக்குதலைத் தவிர்ப்பதே இந்தக் கொள்கையின் நோக்கம். ஆனால் மறுபுறம், ரஷ்யா-நேட்டோ உறவுகள் ஏற்கனவே மிகுந்த பதற்றத்தில் உள்ளன. உக்ரைன் போர், நேட்டோவின் கிழக்கு விரிவாக்கம், ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் பெலாரஸின் ரஷ்யாவுடனான நெருக்கம் ஆகியவை நிலைமையை மேலும் சிக்கலாக்குகின்றன.

## புதிய இரும்புத் திரையா?

பனிப்போர் முடிவடைந்தபோது ஐரோப்பாவின் கிழக்கு-மேற்கு இராணுவப் பிரிவு முடிவுக்கு வந்ததாக பலர் கருதினர். ஆனால் உக்ரைன் போர் அந்தப் பழைய புவிசார் அரசியல் பிரிவின் சில அம்சங்களை மீண்டும் உருவாக்கியுள்ளது. பல்டிக் நாடுகள் தங்கள் எல்லைகளை வெறும் தேசிய எல்லைகளாக அல்லாமல், நேட்டோவின் முன் பாதுகாப்பு வரியாகக் கருதுகின்றன. அகழிகள், பதுங்கு குழிகள், கான்கிரீட் தடுப்புகள் மற்றும் அதிகரிக்கும் இராணுவச் செலவுகள் இதன் வெளிப்பாடுகளாகும்.

ஐரோப்பா மீண்டும் பெரிய அளவிலான போர் சாத்தியத்தைத் தனது பாதுகாப்புத் திட்டங்களில் தீவிரமாகக் கருத்தில் கொள்ளத் தொடங்கியுள்ளது என்பதற்கான முக்கிய அறிகுறியாகும். இன்றைய ஐரோப்பிய பாதுகாப்பு அரசியலின் மிகப்பெரிய முரண்பாடு இதுதான்: போரைத் தடுப்பதற்காக ஆயுதங்களையும் பாதுகாப்பு அரண்களையும் அதிகரிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது; ஆனால் அதே இராணுவப் போட்டி எதிர்காலப் பதற்றத்தையும் அதிகரிக்கும் அபாயத்தை உருவாக்குகிறது. லிதுவேனிய எல்லைகளில் தோண்டப்படும் அகழிகள் வெறும் மண்ணில் தோண்டப்படும் பள்ளங்கள் அல்ல. அவை உக்ரைன் போருக்குப் பின்னர் மாறிவிட்ட ஐரோப்பிய பாதுகாப்பு மனநிலையின் அடையாளங்களாகும்.




# பொறுப்புக் கூறாமை?

15.09.2026

ஐநாவின் 63ஆவது கூட்டத் தொடர் கடந்த 7ஆம் திகதி தொடங்கியது. தொடரை முன்னிட்டு கடந்த மூன்றாம் திகதி வெளியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.. “அனைத்துத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள், பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கடுமையாக மீறப்பட்டமை ஆகியன எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை அவற்றுக்கு பொறுப்பு கூறப்படவும்” இல்லை.

மேற்கண்ட அறிக்கை வெளியிடப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, உலகப்பொது நிறுவனங்களில் ஒன்றாகிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் (Human Rights watch) அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது. அரசாங்கம் “நீதியின் விடயத்தில் நேர்மையாக இல்லை” என்று. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நாட்டின் மிக மோசமான பல வழக்குகளை மீண்டும் திறந்துள்ளது. எனினும் அந்த வழக்குகளை இன்றுவரை முடிக்கவில்லை” என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிக்கைகள் நமக்கு எதனை உணர்த்துகின்றன? கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத் தீவு இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், 2009 மே 18க்குப் பின், அப்போது இருந்த ஐநா பொதுச் செயலாளர் கொழும்புக்கு வருகை தந்தபோது, அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவருக்கு கொடுத்த வாக்குறுதிகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவில்லை என்பதைத் தான். கடந்த 17ஆண்டுகளிலும் ராஜபக்சக்கள் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, அனுர குமார… யாருமே பொறுப்புக்கூறவில்லை என்பதுதான் உண்மை.

குறிப்பாக 2015இல் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவோடு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின், அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் இன்றுவரை பொறுப்பு கூறவில்லை. இதை இன்னும் விரிவாகச் சொன்னால் அந்த தீர்மானமானது பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலை மாறுகால நீதிக்கானது. அந்தத் தீர்மானத்தை அப்போது இருந்த மைத்திரி-ரணில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டது. தான் இணை அனுசரணை வழங்கிய ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த சுமார் 11 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் கடந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் பொறுப்புக் கூறவில்லை. இதை இன்னும் ஆழமான கோட்பாட்டு வார்த்தைகளில் சொன்னால், கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துலக சமூகத்துடன் தான் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தொடர்ச்சியாக வந்த எந்த ஓர் இலங்கை அரசாங்கமும் பொறுப்புக் கூறவில்லை.

இது ஒரு ராஜபக்ச குடும்பத்தின் அல்லது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அல்லது அனுர குமாரவின் தனிப்பட்ட பொறுப்புக் கூறாமை அல்ல. இது சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக் கூறாமை. அவ்வாறு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பொறுப்புக்கூற வைப்பதில் ஐநா கடந்த 17 ஆண்டுகளாக அதிலும் குறிப்பாக, 2015 நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் பின்னரான 11ஆண்டுகளில் பின்னடைவைக் கண்டுள்ளது என்பதுதான் உண்மை.

நிலைமாறு கால நீதியின் தமிழ்ப்பங்காளியாகிய சுமந்திரன் கடந்த 2021ஆம் ஆண்டு, வவுனியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் கூட்டம் அப்பொழுது நடக்கவிருந்த ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுக் கடிதம் ஒன்றைத் தயாரிக்கும் நோக்கத்தோடு கூட்டப்பட்ட இரண்டாவது கூட்டம் ஆகும். அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் கூறினார் “6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனை செய்தோம், அதில் தோல்வி அடைந்து விட்டோம்” என்று. அந்த பரிசோதனைதான் நிலைமாறு கால நீதியாகும். அதாவது நிலைமாறு கால நீதியின் தமிழ்ப் பங்காளியாகிய சுமந்திரன் அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று கூறினார்.

நிலை மாறுகால நீதி இலங்கைத் தீவில் தோல்வியுற்ற ஒரு பரிசோதனை என்பதற்கு அதைவிட வேறு கூர்மையான உதாரணங்களைக் கூறலாம். முதலாவது உதாரணம், நிலைமாறு கால நீதியின் பெற்றோறில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன 3ஆண்டுகளில் தன் குழந்தையைக் காட்டிக் கொடுத்தார். அவர் ராஜபக்ஷங்களோடு இணைந்து ஒரு யாப்புச் சதி முயற்சியில் ஈடுபட்டார். அதாவது இலங்கைத் தீவை பொறுப்புக்கூற வைப்பதற்கான செயற்பாடுகளின் பிரதான பங்காளியாகிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கினார். அனைத்துலக சமூகம் ஒன்றுக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளைத் தானே விழுங்கி நிலைமாறு கால நீதியைக் காட்டிக் கொடுத்தார். இது முதலாவது உதாரணம்.

அடுத்த உதாரணம் ஈஸ்டர் குண்டு வெடிப்பு. ஈஸ்டர் குண்டு வெடிப்பானது நிலைமாறு கால நீதியின் தோல்வியின் விளைவு எனலாம். நிலை மாறுகால நீதி செய்முறைகள் நாட்டில் அமுலில் இருந்த ஒரு காலகட்டத்தில் தான் ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. எனவே நிலைமாறு கால நீதியின் இயலாமையை தோல்வியை அந்த குண்டு வெடிப்புகள் ரத்தம் சிந்தி நிரூபித்தன.

நான்காவது உதாரணம், மிகவும் பிந்தியதுஇப்பொழுது நடந்து கொண்டிருப்பது. இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தைச் புதுப்பிக்க முயற்சிக்கின்றது. அந்த அடிப்படையில் “பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைக் காப்பாற்றும்” சட்ட மூலம் கடந்த மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து விடுவித்து விட்டதாகக் கூறும் அரசாங்கங்கள் எதற்காக தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும்? நிலைமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றால் பிறகு எதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம்? நிலைமாறு கால நீதியின் ஆகப் பிந்திய தோல்வி அது.

மேற்கண்ட நான்கு உதாரணங்களும் ஐநாவின் இலங்கையைப் பொறுப்புக் கூற வைப்பதற்கான திட்டம் தோல்வி அடைந்ததைக் காட்டுகின்றன. அதற்குப் பொறுப்பு, இலங்கைத் தீவின் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பு மட்டுமல்ல. அதைவிட முக்கியமாக ஐநாவும்தான். ஏனென்றால் நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்க முயன்றமைதான் அந்தத் தவறுக்கு அடிப்படைக் காரணம்.

தென்னாபிரிக்காவில் நிலைமாற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கே பெரும்பான்மை கருப்பின மக்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது. அந்த நிலை மாற்றத்தின் பின்னணியில் அங்கே நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒப்பிட்டுளவில் வெற்றி பெற்றன. ஆனால் இலங்கைத் தீவிலோ போரில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதை வைத்துக்கொண்டு அதனை ஒரு நிலை மாற்றமாக எடுத்துக்கொண்டு, ஐநா நிலைமாறு கால நீதியை இலங்கைக்கு பரிந்துரைத்தது. ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்ததை நிலைமாற்றம் என்று ஐநா ஏற்று கொண்டதா?

ஆயுதப் போராட்டம் எனப்படுவது ஒரு மூல காரணம் அல்ல. அது விளைவு. இன ஒடுக்கு முறையின் விளைவுதான். 2009இல் தோற்கடிக்கப்பட்டது விளைவுதான். மூல காரணம் அல்ல. மூலகாரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால்தான், மைத்திரிபால சிறிசேன அதற்குப் பயந்து அப்பத்தைச் சாப்பிட்டுவிட்டு நிலைமாறு கால நீதியைக் காட்டிக்கொடுத்தார்.

மூல காரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால்தான், ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. அந்தக் குண்டு வெடிப்பின் பின்னரான உணர்ச்சிகரமான அரசியல் சூழலில், ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வர முடிந்தது.

மூல காரணம் அப்படியே உள்ளபடியால்தான், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டிய தேவை வந்தது. புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்க வேண்டி வந்தது. மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியாலும் அந்த மூல காரணத்தை மாற்ற முடியவில்லை என்பதை அது காட்டுகிறது.

இவ்வாறு மூல காரணம் அப்படியே இருக்கத்தக்கதாக, விளைவின் தோல்வியை வைத்துக்கொண்டு, நாட்டில் நிலை மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கணித்தமை ஐநாவின் தவறு. இது ஐநா அதாவது அனைத்துலக சமூகம் தெரியாமல் செய்த தவறு அல்ல. தெரிந்து செய்த தவறு. தமிழ்மக்களுக்கு அவர்கள் தரக்கூடிய நீதியின் வரையறையை உணர்த்துவது அது.

எனவே இப்பொழுது ஐநா மனித உரிமைச் செயலாளருடைய அறிக்கைகளும் சரி, ஏனைய அனைத்துலக நிறுவனங்களின் அறிக்கைகளும் சரி, சுட்டிக்காட்டுகின்ற போதாமைகள், தவறுகள், பின்னடைவுகள் போன்றவற்றுக்கு ஐநாவும் உட்பட உலக சமூகமும் பொறுப்பு.

இந்தப் பொறுப்பின்மைக்கு பலியாடுகள் ஆக்கப்படுவது தமிழ் மக்கள்தான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த சுமார் இரண்டு ஆண்டு கால பகுதிக்குள் ஊழல் முறைகேடு போன்ற குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை ஐநா,மனித உரிமைகள் காப்பகம் போன்றன ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் யார் யாருக்கு எதிராக,என்னென்ன குற்றங்களுக்கு எதிராக, வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தொகுத்துப் பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவை இன முரண்பாடு சம்பந்தப்படாத வழக்குகள்தான். அதாவது இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் கை வைக்கவில்லை. இந்த விடயத்தில் அவர்களிடம் ஓர் அரசியல் தெரிவு உண்டு. அந்தத் தெரிவுதான் இனவாதம். ஆனால் அண்மையில் பேருவளையில் மக்களை சந்தித்தபோது ஜனாதிபதி என்ன கூறினார் தெரியுமா? இலங்கைத் தீவின் நவீன வரலாற்றிலேயே இனவாதம் இல்லாத காலம் கடந்த இரண்டு ஆண்டுகள்தான் என்று.

எனவே இதில் ஐநாவும் கூட்டுப் பொறுப்பாளி. நிலைமாறு கால நீதி இலங்கைத் தீவில் தோல்வியடைந்து விட்டது என்பதனை அதன் தமிழ் பங்காளியே கூறிவிட்டார். எனவே இனியும் ஐநா நிலை மாறுகால நீதிச் செய்முறைகளைத் தொடர முடியாது. மாறாக இலங்கை அரசாங்கங்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான புதிய ஏற்பாடுகளையும் பொறிமுறைகளையும் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக இப்போது ஆட்சியில் இருக்கும் என்.பி.பி அரசாங்கம் உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் போன்றவற்றின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் நிதி உதவிகளையும் பொறுப்புக்கூறலையும் பிரிக்கப்படவியலாதபடி இணைப்பதற்கு உலக சமூகத்தால் முடியும். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. செய்ய முடியவில்லையா? செய்ய விரும்பவில்லையா?

நன்றி: நிலாந்தன்



# ஹூவுதிகள் பாப் எல்-மண்டேப் நீரிணை முன்னேற்றம்!

# உலகக் கப்பல் போக்குவரத்திற்கு அச்சுறுத்தல்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.09.2026

யேமனில் நீண்டகாலமாக நீடித்து வரும் உள்நாட்டுப் போர், தற்போது மத்திய கிழக்கின் மிக முக்கியமான கடல் மற்றும் எரிசக்தி பாதைகளை நேரடியாகப் பாதிக்கும் புதிய கட்டத்தை எட்டியுள்ளது. ஈரானுடன் நெருக்கமான உறவைக் கொண்ட ஹூவுதி இயக்கம், செங்கடல் கரையோரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மோகா (Mokha/Al-Makha) துறைமுக நகரைக் கைப்பற்றியதுடன், தெற்கை நோக்கி முன்னேறி பாப் எல்-மண்டேப் நீரிணைக்கு அருகிலுள்ள பகுதிகளையும் தீவுகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்று வருகிறது.

இது வெறுமனே யேமனின் உள்நாட்டுப் போரில் ஏற்பட்டுள்ள ஒரு பிராந்திய இராணுவ வெற்றி அல்ல. உலகின் மிக முக்கியமான கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான செங்கடல்-பாப் எல்-மண்டேப் வழித்தடத்தின் பாதுகாப்பு, சவூதி அரேபியாவின் எண்ணெய் ஏற்றுமதி, உலக எண்ணெய் விலை மற்றும் அமெரிக்கா-ஈரான் மோதலின் எதிர்காலம் ஆகிய அனைத்துடனும் இந்த முன்னேற்றம் தொடர்புபட்டுள்ளது.

## மோகா துறைமுக முக்கியம்

மோகா யேமனின் செங்கடல் கரையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுக நகரமாகும். 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் ஹூவுதிகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ள இந்த நகரம், பாப் எல்-மண்டேப் நீரிணைக்கு வடக்கே அமைந்திருப்பதால் இராணுவ ரீதியாக முக்கியமானது. செப்டம்பர் 10ஆம் தேதி ஹூவுதிகள் மோகாவைக் கைப்பற்றியதாக யேமன் அரசாங்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மோகாவைக் கைப்பற்றிய பின்னர் ஹூவுதிகள் தெற்கு நோக்கி வேகமாக நகர்ந்துள்ளனர். அரசாங்கப் படைகள் மற்றும் அவற்றின் கூட்டாளிகள் மேலும் தெற்கிலுள்ள துபாப் (Dhubab) பகுதிக்கு பின்வாங்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. துபாப் பாப் எல்-மண்டேப் நீரிணைக்கு மிக அருகில் அமைந்திருப்பதால், அங்கிருந்து கடல் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கும் முக்கியமான வாய்ப்பு உருவாகிறது.

பாப் எல்-மண்டேப் நீரிணை உலக வர்த்தகத்தின் முக்கிய வாயிலாக உள்ளது. பாப் எல்-மண்டேப் என்பது யேமன் மற்றும் ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதி நாடுகளுக்கு இடையில் அமைந்துள்ள குறுகிய கடல்வழிப் பாதையாகும். இது செங்கடலை ஏடன் வளைகுடாவுடன் இணைக்கிறது. இதன் வழியாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவுக்கிடையிலான மிகப்பெரிய அளவிலான கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது.

ஒருபுறம் பாப் எல்-மண்டேப் மறுபுறம் பாரசீக வளைகுடாவின் ஹோர்முஸ் நீரிணை உள்ளது. இந்த இரு கடல்வழிகளும் உலக எரிசக்தி வர்த்தகத்தின் முக்கிய உயிர்நாடிகளாக உள்ளன. இதனால் ஹூவுதிகள் பாப் எல்-மண்டேப் மீது இராணுவ அழுத்தத்தை அதிகரித்தால், அது யேமனுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கமாக இருக்காது. உலகளாவிய கப்பல் போக்குவரத்தும் எரிசக்தி விநியோகமும் பாதிக்கப்படக்கூடிய நிலை உருவாகும். ஹோர்முஸ் நீரிணைக்கு மாற்றாக செயல்படும் மற்றொரு முக்கியமான போக்குவரத்து வழித்தடத்தின் மீதான அச்சுறுத்தலாக உள்ளது.

## ஹனிஷ் தீவுகளும் புதிய இராணுவ சமன்பாடும்

மோகாவைக் கைப்பற்றிய பின்னர் ஹூவுதிகள் செங்கடலில் உள்ள ஹனிஷ் தீவுகளை (Hanish Islands) நோக்கி முன்னேறியதாக யேமன் அரசாங்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதன் மூலம் செங்கடலின் கடல் வழித்தடத்தை கண்காணிக்கும் திறன் ஹூவுதிகளுக்கு மேலும் அதிகரிக்கலாம்.

அதற்குப் பின்னர் பாப் எல்-மண்டேப் பகுதியில் அமைந்துள்ள பெரிம் (Perim/Mayyun) தீவை நோக்கியும் ஹூவுதிகள் சென்றதாக செப்டம்பர் 11ஆம் தேதி செய்திகள் வெளியாகின. இது பாப் எல்-மண்டேப் நீரிணையின் வாயிலிலேயே ஹூவுதிகளின் நிலையை வலுப்படுத்தும் முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது.

**மோகா துறைமுகத்திலிருந்து துபாப், ஹனிஷ் தீவுகள் மற்றும் பெரிம் தீவு நோக்கி ஹூதிகள் முன்னேறியிருப்பது, யேமனின் போர்க்கள வரைபடத்தை மட்டுமல்லாமல் மத்திய கிழக்கின் முழுமையான மூலோபாய சமன்பாட்டையும் மாற்றக்கூடியதாக உள்ளது. ஹோர்முஸ் நீரிணை ஒரு பக்கம், பாப் எல்-மண்டேப் மறுபக்கம் என இரண்டு முக்கிய எரிசக்தி மற்றும் வர்த்தகக் கடல்வழிகளும் ஒரே பிராந்திய மோதலின் தாக்கத்திற்கு உள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.**

அவர்களின் நிலை குறிப்பிடத்தக்க வகையில் வலுப்பெற்றுள்ளதுதான் தற்போதைய உறுதியான தகவல். கடல்வழியின் முழுமையான இராணுவக் கட்டுப்பாடு என்பது வேறு நிலை.

## ஈரானுக்கு மூலோபாய பலன்

இந்த முன்னேற்றத்தின் மிகப் பெரிய புவிசார் அரசியல் விளைவு ஈரானுடன் தொடர்புடையது. ஈரானும் அமெரிக்காவும் நேரடி மோதலில் ஈடுபட்டுள்ள தற்போதைய சூழலில், ஈரானுடன் இணைந்த ஹூவுதி இயக்கம் பாப் எல்-மண்டேப் அருகே வலுவடைவது தெஹ்ரானுக்கு கூடுதல் அழுத்தக் கருவியை வழங்குகிறது.

ஹோர்முஸ் நீரிணை ஏற்கனவே உலக எண்ணெய் சந்தைக்கு மிக முக்கியமான பாதையாக உள்ளது. அந்தப் பாதையில் ஏதெனும் தடங்கல் ஏற்பட்டால், பாப் எல்-மண்டேப் வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்தும் அச்சுறுத்தப்பட்டால், உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் இரட்டை அழுத்தம் உருவாகும்.

அதனால், ஹூவுதிகளின் முன்னேற்றம் வெறும் யேமன் அரசாங்கத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையாக இல்லாமல், ஈரானின் பிராந்திய மூலோபாயத்துக்கு உதவும் நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

## சவூதிக்கு பெரும் சவால்

இந்த நிலைமை சவூதி அரேபியாவுக்கு மிகவும் கவலைக்குரியது. குறிப்பாக ஹோர்முஸ் நீரிணை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக செங்கடல் வழித்தடத்தின் முக்கியத்துவம் அதிகரித்துள்ள நிலையில், ஹூவுதிகளின் முன்னேற்றம் சவூதியின் எண்ணெய் ஏற்றுமதி பாதுகாப்பை நேரடியாகப் பாதிக்கிறது. இதேவேளை ஹூவுதிகள் சவூதி கப்பல்களுக்கு எதிராக கடற்படைத் தடையை அறிவித்துள்ள நிலையில், மற்ற சர்வதேச கப்பல்களுக்கு செங்கடல் வழியாகப் பயணம் செய்வது பாதுகாப்பானது என தங்களுடன் தொடர்புடைய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஆனால் நடைமுறையில், ஒரு கடல்வழியின் அருகே இராணுவ மோதல் அதிகரித்தாலே கப்பல் நிறுவனங்களின் காப்பீட்டுச் செலவு, எரிபொருள் செலவு மற்றும் மாற்றுப் பாதைச் செலவு அதிகரிக்கும்.

செங்கடல் மற்றும் பாப் எல்-மண்டேப் வழியாக எண்ணெய் மற்றும் பிற பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் அதிக ஆபத்தை எதிர்கொண்டால், கப்பல் நிறுவனங்கள் நீண்ட மாற்றுப் பாதைகளைத் தேர்வு செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். அதனால் கப்பல் பயண நேரம் அதிகரிக்கும். அத்துடன் காப்பீட்டு கட்டணங்கள் உயரும். மேலும் எரிபொருள் செலவு அதிகரிப்பதுடன் உலகளாவிய விநியோகச் சங்கிலி பாதிக்கப்படும். விளைவாக எண்ணெய் விலை மேலும் உயரக்கூடும்.

தற்போது பாப் எல்-மண்டேப் தொடர்பான அச்சுறுத்தல்களால் எண்ணெய் மற்றும் கப்பல் போக்குவரத்து செலவுகள் உயர்ந்துள்ளன. கண்சாய் விலை 3% உயர்ந்து சுமார் 107.81 அமெரிக்க டொலராக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ட்ரம்புக்கு புதிய சிக்கல்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் இந்த முன்னேற்றம் அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக சிக்கலானதாக மாறியுள்ளது. ஈரானுடனான போர் அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களை நோக்கி நீடிப்பது குறித்த அரசியல் அழுத்தம் ஏற்

கனவே உள்ளது. அதே நேரத்தில், யேமனில் ஹூதிகள் வேகமாக முன்னேறினால், அமெரிக்கா தனது கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டிய அழுத்தத்தையும் எதிர்கொள்ளலாம்.

அமெரிக்கா நேரடியாக ஹூவுதிகளுடன் மோதலை அதிகரித்தால், ஈரான்-அமெரிக்க மோதல் மேலும் விரிவடையும் அபாயம் உள்ளது. மாறாக அமெரிக்கா பின்வாங்கினால், பிராந்தியத்தில் அதன் கூட்டாளிகளின் பாதுகாப்பு குறித்து கேள்விகள் எழலாம். இதனால் வாஷிங்டனுக்கு இரு வழிகளிலும் கடினமான முடிவு காத்திருக்கிறது.

மற்றொரு முக்கியமான கேள்வி யேமனின் உள்நாட்டுப் போரைக் குறித்தது. 2022ஆம் ஆண்டு உருவான போர் நிறுத்த சூழ்நிலை, பல ஆண்டுகளாக நீடித்த கடுமையான மோதலை ஒப்பீட்டளவில் குறைத்திருந்தது. ஆனால் சமீபத்திய ஹூவுதி முன்னேற்றம், அரசாங்கப் படைகளுடனான மோதலை மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் யேமனில் மீண்டும் பெரிய அளவிலான உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

இதன் மிகப்பெரிய பாதிப்பை சந்திக்கப் போவது யேமன் மக்கள். ஏற்கனவே உலகின் மிகக் கடுமையான மனிதாபிமான நெருக்கடிகளில் ஒன்றை எதிர்கொண்டுள்ள யேமனில், புதிய போர் ஆயிரக்கணக்கான மக்களை இடம்பெயரச் செய்யக்கூடும்.

## உலகம் எதிர்கொள்ளும் ஆபத்து

மோகா துறைமுகத்திலிருந்து துபாப், ஹனிஷ் தீவுகள் மற்றும் பெரிம் தீவு நோக்கி ஹூவுதிகள் முன்னேறியிருப்பது, யேமனின் போர்க்கள வரைபடத்தை மட்டுமல்லாமல் மத்திய கிழக்கின் முழுமையான மூலோபாய சமன்பாட்டையும் மாற்றக் கூடியதாக உள்ளது. ஹோர்முஸ் நீரிணை ஒரு பக்கம், பாப் எல்-மண்டேப் மறுபக்கம் என இரண்டு முக்கிய எரிசக்தி மற்றும் வர்த்தகக் கடல்வழிகளும் ஒரே பிராந்திய மோதலின் தாக்கத்திற்கு உள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, ஹூவுதிகளின் மோகா கைப்பற்றலை ஒரு சாதாரண



இராணுவ வெற்றியாகப் பார்க்க முடியாது. இது ஈரான்-அமெரிக்க மோதல், சவூதி அரேபியாவின் எண்ணெய் பாதுகாப்பு, செங்கடல் கப்பல் போக்குவரத்து, உலக எண்ணெய் விலை மற்றும் யேமனின் எதிர்கால உள்நாட்டுப் போர் ஆகிய அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் ஒரு முக்கிய திருப்பு முனையாக மாறியுள்ளது.

அடுத்த கட்டத்தில் ஹூவுதிகள் பாப் எல்-மண்டேப் பகுதியில் எவ்வளவு நிலையான கட்டுப்பாட்டை உருவாக்குகிறார்கள் என்பது தான் உலக நாடுகளின் முக்கிய கவனமாக இருக்கும். அது வெற்றிகரமாக நடந்தால், மத்திய கிழக்கின் கடல் வழித்தடங்களின் பாதுகாப்பு மட்டுமல்லாது, உலகளாவிய எரிசக்தி மற்றும் பொருளாதாரச் சந்தைகளின் நிலைத்தன்மையும் புதிய சோதனையை எதிர்கொள்ளும்.





www.sangathamil.com

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**

**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளரர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**

**www.vanikam.ca**

# இந்தியப்படை ஈழமண்ணில் நடத்திய சதியும் இனப்படுகொலைகளும்!

பா. அரியநேத்திரன்

19.09.2026

- **இலங்கை இந்திய ஒப்பந்தம்:** 29.07.1987,
- **இந்தியப்படை இலங்கை வருகை:** 30.07.1987.
- **தமிழீழத் தேசிய தலைவரின் சுதுமலை பிரகடனம்:** 04.08.1987.
- **விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கையளிப்பு:** 05.07.1987.
- **ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் உண்ணாவிரதம்:** 15.09.1987 தொடக்கம், 26.09.1987, (12நாள்)
- **விடுதலைப்புலிகள் இந்தியப்படை மோதல் ஆரம்பம்:** 10.10.1987.

[மோதல் ஏற்பட காரணம்: 03.10.1987, விடுதலைப்புலிகளின் தளபதிகள் சிறிலங்காக் கடற்படையால் பரித்தித்துறை கடற்பரப்பில் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உள்ளிட்ட 12 முக்கிய விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதிகளை கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படுவதைத் தவிர்க்க நஞ்சருந்தி (சைனைட்) உட்கொண்டு மரணமடைந்தனர். இது விடுதலைப்புலிகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது]

## இலங்கைக்கு இந்திய படை வந்த நோக்கம்

அமைதி காத்தல்
புரட்சி ஏற்படுவதற்கு எதிர்ப்பு
விஷேட நடவடிக்கைகள்

## இலங்கையில் இந்தியப்படைக்கு தலைமை தாங்கிய தளபதிகள்

திபந்தர் சிங்
ஹர்கிராட் சிங்
எஸ். சி. சர்தேஸ்பாண்டே
ஏ. ஆர். கல்கட்
சிவகரன் அலோக் துபெ
எம்.பி பிரேமி .

ஆனால் அமைதிப்படை சண்டைப்படையாகவே செயல்பட்டது.

## இந்தியப்படைகள் வடக்கு கிழக்கில் மேற்கொண்ட போர் நடவடிக்கையில் சூட்டப்பட்ட (சண்டை)பெயர்கள்

பவான் நடவடிக்கை
வீராட் நடவடிக்கை
திரிசூல் நடவடிக்கை
செக்மேட் நடவடிக்கை

## 35, நாட்கள் ஊரடங்கு உத்தரவு

(1987 அக்டோபர் 11, சனிக்கிழமை தொடக்கம் 1987 நவம்பர 15, சனிக்கிழமை வரை தொடர் ஊரடங்கு யாழ்குடாவில்)

இலங்கையின் சரித்திரத்திலேயே அதிக நாட்களைக் கொண்ட ஊரடங்கு உத்தரவு, இந்திய அமைதி காக்கும் படையினரால் பிறப்பிக்கப்பட்டது. யாழ் குடா நாட்டினைக்கைப்பற்றும் நோக்கத்துடன் முப்பத்து ஐந்து நாட்கள் பிறப்பிக்கப்பட்ட இவ்வூரடங்கு உத்தரவின்படி, இத்தகு நடவடிக்கைகள் அனைத்தும் அரசியல் ரீதியாக கிடைக்கப்பெற்ற உத்தரவுகளிற்கேற்ப மேற்கொள்ளப்பட்டன.

- **13ஆவது திருத்தச்சட்டம் :** 14.11.1987, நாடாளுமன்றில் நிறைவேறியது.
- **அன்னை பூபதி உண்ணாநோன்பு:** 19.03.1988, தொடக்கம், 19.04.1988, வரை (30, நாள்)
- **இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தல்:** 19.11.1988. (ஈபிஆர்எல்எவ் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள்)

இந்த தேர்தலை பங்குபற்றக்கூடாது என விடுதலைப்புலிகள் அறிவிப்பு இதனால் தமிழர் விடுதலை கூட்டணி, ரெலோ, புளேட், போட்டியிடவில்லை. ஆனால் ஈபிஆர்எல்எவ், ஈஎன்டீஎல்எவ், சிறீலங்கா முஷ்லிம் காங்கிரஷ், ஐக்கியதேசிய கட்சி மட்டும் இந்திய இராணுவத்தின் துணையுடன் போட்டியிட்டன.

மொத்தம்: 71, ஆசனங்களில்,
ஈபிஆர்எல்எவ்: 41, ஆசனங்கள்,
சிறீலங்கா முகா: 17,ஆசனங்கள்,
ஈஎன்டீஎல்எவ்: 12, ஆசனங்கள்,




ஐதேகட்சி: 01, ஆசனம்,
எதிர்கட்சி தலைவர் சிறீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் எம். எச். சேகு இஸ்ஸதீன்.

- **வடமாகாணசபை கலைப்பு:** 30.03.1990
- **இந்தியப்படை இலங்கையை விட்டு திரும்பியது:** 31.03.1990. (வரதராஜப்பெருமாளும் இந்திய கப்பலில் ஏறி இந்திய ஒறிசா மாநிலம் தப்பி ஓடினார்)
- **வடகிழக்கு மாகாணசபை இயங்கிய காலம்:** 01, வருடம் 04, மாதம்,11, நாள் மட்டுமே!

அகிம்சையால் விடுதலை பெற்ற இந்திய நாட்டின் அமைதிப் படை அட்டூழியங்களுக்கு எதிராக அகிம்சை வழியில் பதில் கொடுக்க உண்ணாநோன்பு இருந்து உயிர் நீர்த்த ஈகையர் இருவர்.. ஒருவர் யாழ்ப்பாணம் மற்றவர் மட்டக்களப்பு!

இந்த இருவரின் இழப்புக்கு மூலகாரணம் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பது எத்தனை பேருக்கு தெரியும்!?

- **ஈகையர் லெப். கேணல் திலீபன்** (சொந்தப்பெயர் இராசையா பார்த்திபன் ) 29 நவம்பர் 1963, யாழ் மாவட்டம் ஊரெழு ஊரில் பிறந்தவர் உண்ணாநோன்பு இருந்து சாவை தழுவும் போது அவரின் வயது 1987, செப்டம்பர் 26இல் 24, வயது இளைஞர் ஒரு மருத்துவ பீட மாணவன் இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் 2026, செப்டம்பர் அவருக்கு வயது 63,

- அடுத்தவர் **அன்னை பூபதி** (சொந்தப்பெயர் திருமதி கணபதிப்பிள்ளை பூபதி,) 03 நவம்பர்1932 மட்டக்களப்பில் பிறந்தவர் உண்ணாநோன்பு இருந்து சாவை தழுவும் போது அவரின் வயது 1988 ஏப்ரல் 19இல் 56 வயது தமிழ் தாய் பத்து பிள்ளைகளை ஈன்ற அன்னை. அவர் இன்று 2026 ஏப்ரல் உயிருடன் இருந்திருந்தால் அவருக்கு வயது 94.

பாரதம் செய்த ஒப்பந்தம் 13ஆவது திருத்தசட்டம் பொலிஷ், காணி அதிகாரம் என இப்போது 39, வருடங்கள் கடந்தும் புலம்பும் நாம் எமக்கான உரிமைக்காக காந்திய வழியில் அகிம் சையில் நம்பிக்கை வைத்து சாகும் வரை உண்ணாநோன்பு இருந்து சாவைத்தழுவிய இந்த இரண்டு ஈகையரையும் ஒருகனம் நினைத்துப்பாருங்கள்.

## இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் நடத்திய படுகொலைகளின் பட்டியல்

1) 02.06.1987 - Liberation Operation படுகொலை - வடமராட்சி.
2) 10.06.1987 - முகமாலை இளைஞர் படுகொலை - முகமாலை சந்தி.
3) 14.06.1987 - Operation Liberation சிறை படுகொலை - பூசாசிறைச்சாலை.
4) 17.06.1987 - டைிநசயவழைெ ிநசயவழைெ இராணுவ நடவடிக்கை - வடமராட்சி.
5) 28.06.1987 - நாட்டுப்பற்றாளர் க.ஏகாம்பரம் படுகொலை - கூனித்தீவு.
6) 08.07.1987 - தையிட்டி பராசக்தி சன சமூக நிலைய மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் படுகொலை.
7) 10.07.1987 - வடமாராட்சி தேடுதல் வேட்டை - (கல்லூரி, ஆலயம், குடியிருப்புகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்).
8) 19.07.1987 - பன்குளம் குழந்தைகள் எரித்துப் படுகொலை - கிராமம்.
9) 26.07.1987 - அளவெட்டி ஆசிரமம் படுகொலை - ஆசிரமம்.
10) 23.09.1987 - மனு கொடுக்கச் சென்ற யோகன் படுகொலை - எழுத்தூர்.
11) 10.10.1987 - கோட்டைப் படுகொலை - யாழ்ப்பாணம்.
12) 11.10.1987 - பள்ளி அதிபர் தாமோதரம்பிள்ளை படுகொலை - பெரியபுலம்.
13) 11.10.1987 - காங்கேசன்துறை தேடுதல் வேட்டை - வீடு.
14) 11.10.1987 - புதுக்காட்டு சந்தி படுகொலை - சந்தி.
15) 12.10.1987 - மல்லாகம் படுகொலை - கிராமம்.
16) 12.10.1987 கொல்லங்கலட்டி படுகொலை - கிராமம்.
17) 12.10.1987 - சுன்னாகம் படுகொலை - கிராமம்.
18) 12.10.1987 - பிரம்படி படுகொலை - கிராமம்.
19) 12.10.1987 - பொற்பதி படுகொலை (கவச வாகனங்களை ஏற்றிப் படுகொலை).
20) 19.10.1987 - யாழ் சுற்றிவளைப்பு & படுகொலை - குடியிருப்புப் பகுதி.
21) 19.10.1987 - கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில் இராசப்பாதை, உரும்பிராய், கோப்பாய், வசாவிளான் உள்ளிட்ட பகுதிகளில் நடத்திய படுகொலை.
22) 20.10.1987 - மன்னார் தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி.
23) 20.10.1987 - கேரதீவு இறங்குதுறை தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி.
24) 20.10.1987 - சுண்டுக்குளி தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி.
25) 20.10.1987 - உரும்பிராய் தேடுதல் வேட்டைப் படுகொலை - குடியிருப்புப் பகுதி.
26) 21.10.1987 - யாழ் மருத்துவர்கள் படுகொலை - மருத்துவமனை.
27) 21.10.1987 - யாழ் மருத்துவமனைப் படுகொலை - மருத்துவமனை.
28) 22.10.1987 - சுண்டுக்குளி தேடுதல் வேட்டை - குடியிருப்புப் பகுதி.
29) 22.10.1987 - யாழ் மருத்துவமனை ஊழியர்கள் படுகொலை.
30) 22.10.1987 - அராலி தேடுதல் வேட்டைப் படுகொலை
31) 22.10.1987 - சுண்டுக்குளி படுகொலை
32) 22.10.1987 - அராலித்துறை படுகொலை
33) 24.10.1987 - யாழ் மத்திய கல்லூரி மாணவர் லக்ஸ்மணன் படுகொலை
34) 24.10.1987 - கொக்குவில் இந்துக்கல்லூரி படுகொலை.
35) 25.10.1987 - கொக்குவில் இடம்பெயர்ந்தோர் முகாம் மீது பீரங்கித்தாக்குதல்.
36) 25.10.1987 - சேரதீவு படுகொலை.
37) 25.10.1987 - சந்தை மீது உலங்கு வானூர்தித் தாக்குதல்.
38) 25.10.1987 - இந்துக்கல்லூரி அகதி முகாம் படுகொலை.
39) 26.10.1987 - சூறாவத்தை படுகொலை.
40) 26.10.1987 - அளவெட்டி படுகொலை.
41) 26.10.1987 - புத்தூர் படுகொலை.
42)26.10.1987 - அளவெட்டி படுகொலை.
43) 26.10.1987 - புத்தூர் படுகொலை.
44) 27.10.1987 - சாவகச்சேரி கந்தசட்டி கோயில் படுகொலை.
45) 04.11.1987 - களபூமி, வீமன்காமம், கோண்டாவில் படுகொலை.
46) 05.11.1987 - மூளாய் மருத்துவமனை படுகொலை.
47) 07.11.1987 - உரும்பிராய் தேடுதல் வேட்டைப்படுகொலை.
48) 07.11.1987 - உரும்பிராய் படுகொலை.
49) 09.11.1987 - மானிப்பாய் படுகொலை.
50) 10.11.1987 - அச்சுவேலி தேடுதல் வேட்டைப் படுகொலை.
51) 10.11.1987 - கோப்பாய் தேடுதல் வேட்டைப் படுகொலை.
52) 10.11.1987 - அராலி தேடுதல் வேட்டைப் படுகொலை.
53) 11.11.1987 - நெடுங்கேணி தேடுதல் வேட்டைப்படுகொலை.
54) 12.11.1987 - இணுவில் தேடுதல் வேட்டைப்படுகொலை.
55) 12.11.1987 - சுன்னாகம் தேடுதல் வேட்டைப்படுகொலை.
56) 16.11.1987 - கோப்பாய் தேடுதல் வேட்டைப் படுகொலை.
57) 19.11.1987 - குழந்தைகள் சுவரில் அடித்து படுகொலை.
58) 20.11.1987 - அச்செழு படுகொலை.
59) 21.11.1987 - ஆனைக்கோட்டைச் சந்தி பதுங்குகுழி படுகொலை.
60) 30.11.1987 - மூதூர் எழுவர் படுகொலை.
61) 02.12.1987 - மட்டக்களப்பு படுகொலை.
62) 27.12.1987 - மட்டக்களப்பு எறிகணைவீச்சு.
63) 02.12.1987 - தம்பாப்பிள்ளைசிவம் படுகொலை.
64) 02.12.1987 - ஏழாலை இளைஞர்கள் படுகொலை.
65) 03.12.1987 - மட்டக்களப்பு பேரூந்து படுகொலை.
66) 20.12.1987 - ஊரெழு தேடுதல் வேட்டைப் படுகொலை.
67) 27.12.1987 - சாவகச்சேரி பொதுச்சந்தை படுகொலை.
68) 28.12.1987 - முல்லைத்தீவு நகர் படுகொலை.
69) 30.12.1987 - காத்தான்குடி படகு பயணிகள் படுகொலை.
70) 04.01.1988 - புதுக்குடியிருப்பு தேடுதல் வேட்டை.
71) 13.01.1988 - வட்டுக்கோட்டை காவல் முகாம் படுகொலை முகாம்.
72) 19.01.1988 - பாண் வியாபாரி தங்கராசா படுகொலை.
73) 21.01.1988 - தாண்டியடி படுகொலை.
74) 26.01.1988 - கிண்ணியடி படுகொலை.
75) 02.02.1988 - வட்டக்கச்சி பதுங்குகுழி படுகொலை.
76) 03.02.1988 - வட்டக்கச்சி து.கிருஷ்ணப்பிள்ளை படுகொலை
77) 08.02.1988 - தம்பிலுவில் அரசியல் பிரமுகர் நடேசன் படுகொலை.
78) 08.02.1988 - ஏறாவூர் வானூர்தித் தாக்குதல்.
79) 08.02.1988 - திருக்கோவிலில் குண்டு வெடித்து 9 வயது சிறுவன் சிறுவன் விஜேந்திரன் இறப்பு.
80) 13.02.1988 - நாட்டுப்பற்றாளர் சிவா படுகொலை.
81) 16.02.1988 - பம்பலப்பிட்டி விநாயகர் ஆலயப்படுகொலை.
82) 19.02.1988 - வட அளவெட்டி அமைதிப்படை முகாம் படுகொலை.
83) 04.03.1988 - கோணமலை விமானத் தாக்குதல்.
84) 06.03.1988 - மட்டக்களப்பு பொதுமக்கள் படுகொலை.
85) 11.03.1988 - திருமலை பேருந்து படுகொலை (வவுனியா வழியில்).
86) 11.03.1988 - முத்தையன்கட்டு படுகொலை.
87) 15.03.1988 - தம்பலகாமம் எல்லை பேருந்து பயணிகள் படுகொலை.

**1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21, 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாண வைத்தியசாலையில் கடமையிலிருந்த போது இந்திய அமைதிப்ப படையால் படுகொலை செய்யப்பட்டவர்கள்**



88) 15.03.1988 - ஸ்கந்தபுரம் தமிழர் படுகொலை.
89) 15.03.1988 - கோட்டைக்கல்லாற்றில் பேராதனை வைத்தியபீட மாணவன் கொலை.
90) 15.03.1988 - வடக்கந்தை தமிழர் படுகொலை.
91) 16.03.1988 - ஸ்கந்தபுரம் துப்பாக்கிச்சூடு.
92) 16.03.1988 - மட்டு தமிழ் இளைஞர் படுகொலை.
93) 16.03.1988 - வந்தாறுமூலையில் இளையோர் படுகொலை.
94) 22.03.1988 - ஹொரவபொத்தானை பேரூந்து பயணிகள் படுகொலை.
95) 22.03.1988 - பம்பைமடு தேடுதல் வேட்டை படுகொலை.
96) 05.04.1988 - இந்துக் கல்லூரி மாணவன் கொலை.
97) 21.04.1988 - பண்ணாகம் தேடுதல் வேட்டை.
98) 28.04.1988 - வட்டக்கச்சி கணபதிப்பிள்ளை படுகொலை.
99) 10.05.1988 - கெப்பிட்டிகொலாவ தாய் - சேய் படுகொலை.
100) 12.05.1988 - கிளிநொச்சியில் விவசாய ஆராய்ச்சி நிலைய ஊழியர் கொலை.
101) 13.05.1988 - மணலாறு தமிழர்கள் படுகொலை.
102) 13.05.1988 - விசாரணை முகாமில் மகாவித்தியாலய மாணவன் படுகொலை.
103) 13.05.1988 - நாசிவன்தீவு சரிபுதீன் மொகமட் சபீர் படுகொலை.
104) 14.05.1988 - திருகோணமலை பெண் திரைப்படத் தயாரிப்பாளர் கொலை (ஒட்டுக்குழு + IPKF).
105) 16.05.1988 - கிராம சேவையாளர் கடத்தல் (வெற்றிலைக்கேணி சேவையகம்).
106) 17.05.1988 - மல்லாவி விவசாயி படுகொலை.
107) 19.05.1988 - மதவாச்சிபாரவூர்திக்கு தீ வைப்பு.
108) 27.05.1988 - பிரசைகள் குழுத்தலைவர் படுகொலை (ஆரையம்பதி வீதி).
109) 01.06.1988 - உரும்பிராய் நாட்டுப்பற்றாளர் பாக்கியம் அக்கா படுகொலை (ஒட்டுக்குழு+ IPKF).
110) 01.06.1988 - நல்லூர் நாட்டுப்பற்றாளர் க.நடராசா படுகொலை (ஒட்டுக்குழு+ IPKF).
111) 11.06.1988 - கிரான்குளம் பொதுமகன் படுகொலை.
112) 01.07.1988 - பாவற்குளம் பொதுமகன் படுகொலை.
113) 06.06.1988 - அருட்திரு. சந்திரா பெர்னாண்டோ படுகொலை.
114) 03.07.1988 - நெடுங்கேணி தாய், மகள் வல்லுறவுப் படுகொலை.
115) 08.07.1988 - நவஜீவனம் தேடுதல் வேட்டைப் படுகொலை.
116) 09.07.1988 - இராமநாதபுரம் தேடுதல் வெட்டிப் படுகொலை.
117) 12.07.1988 - சில்லாலை நீர்ப்பாசன இலாகா அலுவலப் படுகொலை
118) 13.07.1988 - ஆரையம்பதி விசாரணை முகாம் இளைஞர் படுகொலை
119) 13.07.1988 - இன்பருட்டியில் சிற்றூர்தி மீதான தாக்குதல்.
120) 15.07.1988 - பரந்தன் சந்தி தேடுதல் வேட்டை.
121) 15.07.1988 - தமிழ்ப்பொதுமகன் படுகொலை (தள்ளாடி முகாம்).
122) 18.07.1988 - பரந்தன் தமிழ்ப்பொதுமகன் படுகொலை.
123) 18.07.1988 - கம்பர்மலை இளைஞர் கைது - படுகொலை.
124) 04.08.1988 - பரந்தன் குடியிருப்புப் பகுதி படுகொலை.
125) 15.08.1988 - யாழ் நாட்டுப்பற்றாளர் இரங்கநாதன் படுகொலை.
126) 16.08.1988 - திருகோணமலை வீதி துப்பாக்கிச்சூடு.
127) 18.08.1988 - பேராதனை பல்கலை., பொறியியல் பீடம் மீதான தாக்குதல்.
128) 24.08.1988 - நாட்டுப்பற்றாளர் துரைராசா படுகொலை (உரும்பிராய்).
129) 31.08.1988 - முல்லைத்தீவு மருத்துவமனை ஊழியர் சு ட்டுக்கொலை.
130) 05.09.1988 -மட்டக்களப்பு விசாரணை முகாம் படுகொலை.
131) 08.09.1988 - நுணா தேடுதல் வேட்டைப் படுகொலை.
132) 11.09.1988 - ஈச்சமோட்டை பொறியியலாளர் படுகொலை (நல்லூர் நாவலர் மண்டபம்).
133) 17.09.1988 - நல்லூர் வீதி தேடுதல் வேட்டை படுகொலை.
134) 23.09.1988 - செல்வக்குமார் படுகொலை (யாழ் வீதி).
135) 25.09.1988 - பட்டிருப்பு பொதுமக்கள் படுகொலை.
136) 29.09.1988 - யாழ்ப்பாணம் இராமலிங்கம் வீதி இளைஞர் படுகொலை.
137) 02.10.1988 - சிறுப்பிட்டி மாணவன் நந்தன் சுட்டுக்கொலை.
138) 04.10.1988 - கெருடாவில் தந்தை, மகன் படுகொலை.
139) 04.10.1988 - சாளம்பைக்குளம் படுகொலை.
140) 04.10.1988 - யாழ் மத்திய பேருந்து நிலைய படுகொலை
141) 04.10.1988 - பூநகரி மரத்தடி படுகொலை.
142) 05.10.1988 - மின்சாரம் பாய்ச்சிக்கொல்லப்பட்ட துரையம்மா (விசாரணை சித்ரவதை).
143) 05.10.1988 - இடைக்காடு தமிழர்கள் படுகொலை.
144) 06.10.1988 - மயிலங்காடு பொன்னம்பலம் சுட்டுக்கொலை.
145) 06.10.1988 - மட்டக்களப்பு உபதபாலதிபர் சுட்டுக்கொலை (காங்கேயன் ஓடை).
146) 09.10.1988 - இராணுவ முகாமில் மட்டக்களப்பு மாணவன் படுகொலை.
147) 11.10.1988 - திருமலை வீதி தேடுதல் வேட்டை.
148) 11.10.1988 - ஈரற் பெரியகுளம் பேருந்து படுகொலை.
148) 11.10.1988 - கட்டைபறிச்சான் படுகொலை.
148) 13.10.1988 - ரவி சுட்டுப்படுகொலை.



149) 13.10.1988 - தெல்லிப்பழை வீதி படுகொலை.
150) 13.10.1988 - இணுவில் வீதி படுகொலை.
151) 14.10.1988 - யாழ் கதிர்காமநாதன் படுகொலை.
152) 14.10.1988 - பொன்னையா சிறிதரன் படுகொலை.
153) 17.10.1988 - மங்களஓயா படுகொலை.
154) 18.10.1988 - குளிர்பான நிலையம் மானிப்பாய் சற்குணராசா படுகொலை.
155) 21.10.1988 - செல்வராசா விசாரணைப் படுகொலை.
156) 21.10.1988 - தமிழீழ மக்கள் மன்றத்தலைவர் சிவானந்த சுந்தரம் படுகொலை (வெலிங்டன் சந்தி).
157) 22.10.1988 - ஊர்காவற்றுறை புதுமணத் தம்பதியர் கொலை (பொன்னாச்சி கடைச்சந்தி).
158) 22.10.1988 - கிற்றார் கலைஞர் கி.செல்லையா படுகொலை (இசைக்கூடம்).
159) 22.10.1988 - பொன்னாச்சி இளம்தம்பதியார் படுகொலை (கடைச்சந்தி).
160) 25.10.1988 - விஞ்ஞான ஆசிரியர் படுகொலை (யாழ் மருத்துவமனை வீதி).
161) 25.10.1988 - சுகாதார அத்தியட்சகர் பணிமனை படுகொலை.
162) 25.10.1988 - மல்லாகம் வர்த்தகர்சங்கத் தலைவர் படுகொலை.
163) 25.10.1988 - வவுனியா சுகாதார பணிமனை படுகொலை.
164) 25.10.1988 - சங்கானை ஆசிரியர் படுகொலை.
165) 25.10.1988 - மல்லாகம் வர்த்தக சங்கத் தலைவர் சிவதாசபிள்ளை படுகொலை.
166) 26.10.1988 - கரடிக்குழி படுகொலை.
167) 26.10.1988 - மறிச்சுக்கட்டி படுகொலை.
168) 31.10.1988 - நெடுங்கேணி படுகொலை.
169) 31.10.1988 - யாஸ் பரியோவான் கல்லூரி மாணவர் சுட்டுக்கொலை.
170) 31.10.1988 - நுணாவில் தேடுதல் வேட்டை.
171) 31.10.1988 - மகாவித்தியாலய மாணவர்கள் படுகொலை
172) 02.11.1988 - நாட்டுப்பற்றாளர் வெள்ளையன் படுகொலை
173) 02.11.1988 - கனகராயன்குளம் படுகொலை
174) 02.11.1988 - சகோதரர்கள் உயிருடன் எரித்துக்கொலை.
175) 02.11.1988 - பண்டத்தரிப்பு தேடுதல் வேட்டைப் படுகொலை.
176) 03.11.1988 - சரசாலை நாட்டுப்பற்றாளர் சுந்தரம் படுகொலை.
177) 04.11.1988 - புங்குடுதீவு கடற்றொழிலாளர்கள் படுகொலை.
178) 04.11.1988 - பச்சனூர் படுகொலை.
179) 04.11.1988 - இணுவில் நாட்டுப்பற்றாளர் தனபாலசிங்கம் படுகொலை.
180) 04.11.1988 - புங்குடுதீவு படுகொலை.
181) 05.11.1988 - சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர் செல்வராசா படுகொலை.
182) 06.11.1988 - ஆனையிறவு குடியிருப்புப் பகுதி படுகொலை.
183) 07.11.1988 - மூதூர் 55ஆம் கட்டைபகுதி படுகொலை.
184) 07.11.1988 - மூதூர் நாட்டுப்பற்றாளர் ரகு படுகொலை.
185) 08.11.1988 - அளவெட்டி நாட்டுப்பற்றாளர் பிரேம்குமார் படுகொலை.
186) 08.11.1988 - சாவகச்சேரிதமிழ் மாணவன் படுகொலை.
187) 08.11.1988 - பண்டத்தரிப்பு பிரசைகள் குழுவினர் படுகொலை.
188) 09.11.1988 - வடமராட்சி அட்டூழியம்.
189) 11.11.1988 - மன்னார் உயர்வகுப்பு மாணவன் படுகொலை.
190) 11.11.1988 - ஆசிரியர் பாலகிருஷ்ண படுகொலை.
191) 12.11.1988 - பொருளியல் ஆசிரியர் கிருஷ்ணானந்தன் படுகொலை.
192) 12.11.1988 - சரசாலை தமிழ் இளைஞர் படுகொலை.
193) 13.11.1988 - மகேந்திரநாதன் படுகொலை.
194) 13.11.1988 -தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் படுகொலை (மாம்பழம் சந்தி - அரியாலை).
195) 13.11.1988 - ஊரிக்காடு தேடுதல் வேட்டைப் படுகொலை.
196) 13.11.1988 - திருநெல்வேலி நாட்டுப்பற்றாளர் வைகுந்தவாசன் படுகொலை.
197) 14.11.1988 - முல்லைத்தீவு நாட்டுப்பற்றாளர்கள் சங்கர்-கிளியன் கொலை.
198) 16.11.1988 - சங்கத்தானை நாட்டுப்பற்றாளர் குணாளன் படுகொலை.
199) 16.11.1988 - இருதயக்கல்லூரி தேடுதல் வேட்டை.
200) 17.11.1988 - பொத்துவில் படுகொலை.
201) 17.11.1988 - முல்லைத்தீவு குடியிருப்புப் படுகொலை.
202) 19.11.1988 - மகாவித்தியாலய மாணவன் படுகொலை.
203) 21.11.1988 - கோணாவில் நாட்டுப்பற்றாளர் சங்கரன் படுகொலை.
204) 22.11.1988 வவுனியா நாட்டுப்பற்றாளர் பூலோகசிங்கம் படுகொலை.
205) 22.11.1988 - பாவற்குளம் 4 ஆம் படிவம் படுகொலை.
206) 22.11.1988 - கல்முனை படுகொலை.
207) 23.11.1988 - யாழ் செயலக கணக்காளர் படுகொலை.
208) 23.11.1988 - திருகோணமலை தேடுதல் நடவடிக்கை.
209) 25.11.1988 - கடற்றொழிலாளி படுகொலை.
210) 26.11.1988 - வட்டக்கச்சி கட்சன் வீதி படுகொலை.
211) 27.11.1988 - வட்டகச்சி கண்ணிவெடி படுகொலை.
212) 27.11.1988 - யாழ் பேராலய இளைஞர் படுகொலை.
213) 28.11.1988 - நாவற்குழி நாட்டுப்பற்றாளர் மனோகரி படுகொலை.
214) 28.11.1988 - நாவற்குழி தேடுதல் வேட்டை படுகொலை.
215) 29.11.1988 - இணுவில் மருத்துவமனையில் நோயாளி இளம்பெண் படுகொலை.
216) 30.11.1988 - மூதூர் தமிழர்கள் படுகொலை.
217) 01.12.1988 - புத்தூர் புத்தெழில் ஆசிரியர் திருஞானம் படுகொலை (தேசவிரோதிகள் + IPKF).
218) 03.12.1988 - கருகம்பனை சிவதாசன் நிர்மலன் படுகொலை.
219) 03.12.1988 - பற்றிக்சுவீதி தமிழர் படுகொலை.
220) 04.12.1988 - ஆசிரியர் கருணானந்தசிவம் படுகொலை (தேசவிரோதிகள்+ IPKF).
221) 05.12.1988 - வவுனிக்குளம் படுகொலை.
222) 07.12.1988 - காணிக்கை மாதா கோயில் படுகொலை.
223) 08.12.1988 - யாழ் சிற்றூர்தி சங்கத்தலைவர் படுகொலை (தேசவிரோதிகள்+ IPKF).



224) 09.12.1988 - காங்கேசன்துறை மாணவன் படுகொலை.
225) 12.12.1988 - திருகோணமலை எறிகணைத்தாக்குதல்.
226) 15.12.1988 - ஊரெழு தேவதாசன் படுகொலை (கோப்பாய் முகாம், தேசவிரோதிகள் + IPKF).
227) 17.12.1988 - அக்கரைப்பற்று படுகொலை.
228) 17.12.1988 - ஆலையடிவேம்பு படுகொலை.
229) 19.12.1988 - சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவர் படுகொலை.
230) 19.12.1988 - ஆனைக்கோட்டை படுகொலை.
231) 19.12.1988 - அளவெட்டி நாட்டுப்பற்றாளர்கள் படுகொலை (தேசவிரோதிகள்+ IPKF).
232) 19.12.1988 - மன்னார் இளைஞர்கள் படுகொலை (தேசவிரோதிகள் + IPKF).
233) 21.12.1988 - அப்புத்தளை மலையகம் தமிழிளைஞர்கள் படுகொலை.
234) 23.12.1988 - மானிப்பாய் ஜெயதாசன் படுகொலை (தேசவிரோதிகள், ஜீமுகு)
235) 27.12.1988 - மட்டக்களப்பு அட்டூழியம்.
236) 02.01.1989 - ஒட்டிசுட்டான் துப்பாக்கிச்சூடு.
237) 07.01.1989 - கண்டாவளை தேடுதல் வேட்டை.
238) 08.01.1989 - இராமநாதபுரம் பழைய கண்டி வீதி கண்ணிவெடி வெடிப்பு.
239) 09.01.1989 - அக்கரைப்பற்று பேரூந்து நிலைய காவல் சோதனை படுகொலை.
240) 13.01.1989 - பண்டத்தரிப்பு தேடுதல் வேட்டை படுகொலை
241) 17.01.1989 - காத்தார் சின்னக்குளம் படுகொலை.
242) 20.01.1989 - மன்னார் காவல் நிலைய படுகொலை.
243) 26.01.1989 - இந்துக் கல்லூரி படுகொலை.
244) 28.01.1989 - அரியாலை பொதுமக்கள் படுகொலை.
245) 29.01.1989 - அளம்பில் தேடுதல் வேட்டை.
246) 30.01.1989 - ஆறுகால்மடம் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் படுகொலை.
247) 31.01.1989 - கரவெட்டி இராணுவ முற்றுகை படுகொலை.
248) 03.02.1989 - மிருசுவில் சிவரஞ்சன் சுட்டுக்கொலை
249) 08.02.1989 - பிறவுண்வீதி இளைஞர் படுகொலை (கிழக்கு கொக்குவில்)
250) 10.02.1989 - பேசாலை படுகொலை.
251)15.02.1989 - மாவிட்டபுரம் மின்சாரம் பாய்ச்சிக் கொல்லப்பட்ட இளைஞர்.
252) 15.02.1989 - முள்ளியவளை செல்வரட்ணம் சுதர்சன் படுகொலை.
253) 15.02.1989 - உடுப்பிட்டி முகாமில் யாழ் சகோதரிகள் சுட்டுக்கொலை.
254) 16.02.1989 - மொறக்கொட்டாஞ்சேனை படுகொலை (டெலோ + IPKF).
255) 22.02.1989 - நெல்லியடி மருத்துவமனைக் காவலாளி படுகொலை.
256) 23.02.1989 - துன்னாலை எறிகணைத் தாக்குதல்.
257) 23.02.1989 - திக்கம் மக்கள் படுகொலை.
258) 01.03.1989 - புத்தூர் தேடுதல் வேட்டை படுகொலை.
259) 14.03.1989 - பளை தேடுதல் வேட்டைப் படுகொலை.
260) 16.03.1989 - மட்டுவில் தேடுதல் வேட்டை.
261) 19.03.1989 - மணற்காட்டு தமிழ் இளைஞர்கள் படுகொலை.
262) 11.04.1989 - காட்டுமுறி தமிழ்ப்பொதுமகன் படுகொலை.
263) 14.04.1989 - கரம்பன் மேற்கு பக்தி கிராமம் கிராமசேவகர் படுகொலை.
264) 25.04.1989 - கட்டுவன்புலம் பள்ளி மாணவன் படுகொலை.
265) 01.05.1989 - நாட்டுப்பற்றாளர்கள் சிறி.முறிசெல்வம் ரூ செ.பாலேந்திரன் படுகொலை (வவுனியா சிறை).
266) 02.05.1989 - பருத்தித்துறை தேடுதல் வேட்டை.
267) 03.05.1989 - மல்லாகம் செல்லையா நிர்மலன் படுகொலை.



268) 03.05.1989 - புங்குடுதீவு முருகேசு குகதாஸ் படுகொலை.
269) 14.05.1989 - மிருசுவில் பேருந்து மீது தாக்குதல்.
270) 14.05.1989 - மணலாறு உணவு விடுதி படுகொலை.
271) 14.05.1989 - யாழ் மருத்துவமனையில், தமிழிளைஞரை சடமாக ஒப்படைத்தது.
272) 16.05.1989 - தரவத்தை விவசாயப் பெண் கூலித் தொழிலாளர் கடத்தல்.
273) 16.05.1989 - பால்நிலைய அதிபர் படுகொலை.
274) 16.05.1989 - புத்தூர் வாதரவத்தை படுகொலை.
275) 17.05.1989 - மல்லாவி பெண் படுகொலை.
276) 17.05.1989 - அத்தியாயர் கல்லூரி மாணவன் படுகொலை.
277) 17.05.1989 - புன்னாலைக்கட்டுவன் படுகொலை.
278) 18.05.1989 - புத்தூர் தேடுதல் வேட்டை படுகொலை.
279) 19.05.1989 - உரும்பிராய் தமிழ்ப்பொதுமகன் படுகொலை.
280) 20.05.1989 - சுதுமலை படுகொலை.
281) 20.05.1989 - நிலாவெளி கோயில் படுகொலை (ஈபிஆர்எல்எஃப் ஒட்டுக்குழு+ IPKF).
282) 23.05.1989 - கிளிநொச்சி பிரசைகள் குழுப்பிரமுகர் கொலை (கனகபுரம் - ஈபிஆர்எல்எஃப் ஒட்டுக்குழு+ IPKF).
283) 28.05.1989 - வந்தாறுமூலை இளைஞர்கள் படுகொலை (ஈபிஆர்எல்எஃப் ஒட்டுக்குழு + IPKF).
284) 28.05.1989 - தமிழ்ப்பொதுமகன் சுட்டுக்கொலை (சாவச்சேரி).
285) 28.05.1989 - வண்ணார்பண்ணை இருதமிழர் சுட்டுக்கொலை (நாகர்கோவில்).
286) 01.06.1989 - நாவாந்துறை தேடுதல் வேட்டைப் படுகொலை.
287) 01.06.1989 - திருநெல்வேலி தேடுதல் வேட்டைப் படுகொலை.
288) 01.06.1989 - மாணிக்கம் யோகேந்திரன் படுகொலை.
289) 01.06.1989 - ஏழாலை தேடுதல் வேட்டைப் படுகொலை
290) 01.06.1989 - வைத்தீஸ்வரா கல்லூரி மாணவர் ஆனந்தராசா படுகொலை.
291) 04.06.1989 - கட்டுடைச்சந்தி வணிகர் கணபதிப்பிள்ளை படுகொலை.
292) 04.06.1989 - பிராம்பத்தை கோடீஸ்வரி பத்மநாதன் படுகொலை.
293) 04.06.1989 - தபால்பெட்டிச்சந்தியில் அரியாலை தமிழ்ப்பொதுமகன் படுகொலை.
294) 05.06.1989 - வரணி எறிகுண்டுத் தாக்குதல்.
295) 05.06.1989 - கண்டிக்காடு படுகொலை.
296) 17.06.1989 - சங்கத்தானை தேடுதல் வேட்டை.
297) 19.06.1989 - கோப்பாய் சண் படுகொலை.
298)19.06.1989 - புதுக்குடியிருப்பு பேபி படுகொலை.
299)20.06.1989 - கந்தர்மடம் சண்முகம் உதயவர்மன் படுகொலை.
300) 20.06.1989 - மாவிட்டபுரம் கந்தையா குஞ்சுக்கிளி படுகொலை.
301) 20.06.1989 - முருகுசசிக்குமார் படுகொலை.
302) 20.06.1989 - யாழ் வைத்தியசாலையில் முகமாலை நாகேந்திரராசா படுகொலை.
303) 24.06.1989 - நாகர்கோவில் தேடுதல் வேட்டை.
304) 24.06.1989 - கந்தரோடை கணேசகுமார் படுகொலை.
305) 24.06.1989 - தாண்டிக்குளம் பெரியதம்பி படுகொலை.
306) 24.06.1989 - வேப்பங்குளம் மோகன்ராஜ் படுகொலை.
307) 24.06.1989 - வல்லிபுரம் முருகேசு படுகொலை.
308) 24.06.1989 - நெடுந்தீவு ஏரம்புநடராசா படுகொலை.
309) 26.06.1989 - அத்தாய் மகேந்திரராசா படுகொலை.
310) 28.06.1989 - அல்வாய் மாலிசந்தி தேடுதல் வேட்டைப் படுகொலை.
311) 28.06.1989 - நந்தாவில் அம்மன்கோவிலடி படுகொலை.
312) 28.06.1989 - பண்டத்தரிப்பில் இளைஞர் சடலம் மீட்பு.
313) 28.06.1989 - அளவெட்டி தேடுதல் வேட்டைப் படுகொலை.
314) 28.06.1989 - மிருசுவில் தேடுதல் வேட்டைப் படுகொலை ஆசைப்பிள்ளை ஏற்றம்.
315) 28.06.1989 - செல்வம் அக்கா சித்ரவதை படுகொலை (ஈஎன்டிஎல்எஃப் ஒட்டுக்குழு+ IPKF).
316) 28.06.1989 - புலோலிகந்த முருகேசனார் சிலை தமிழ்ப்பெண் சுட்டுப்படுகொலை.
317) 29.06.1989 - அளம்பில் துப்பாக்கிச்சூடு.
318) 29.06.1989 - நீர்வேலி பெண்கள் வன்படுகொலை.
319) 03.07.1989 - ஓமந்தை எறிகணைத் தாக்குதல்.
320) 03.07.1989 - கிளிநொச்சி துப்பாக்கிச்சூடு.
321) 18.07.1989 - திருகோணமலை தேடுதல் வேட்டை.
322) 19.07.1989 - பாரதிபுரம் தேடுதல் வேட்டை படுகொலை.
323) 24.07.1989 - உயரப்புலம் தமிழிளைஞர் சுட்டுப்படுகொலை.
324) 26.07.1989 - அல்வாய் ஆசிரியர் சின்னத்தம்பி படுகொலை.
325) 26.07.1989 - தெல்லிப்பளை ரவீந்திரன் படுகொலை.
326) 26.07.1989 - ஓராம்கட்டை இராணுவ நடவடிக்கை.
327) 02.08.1989 - தீருவில் தேடுதல் வேட்டைப் படுகொலை.
328) 02.08.1989 - அரியாலை இளைஞர் கைது.
329) 02.08.1989 - வல்வெட்டித்துறை படுகொலை (மருத்துவமனை, சமூக நிலையம், கோயில், குடியிருப்புப் பகுதி).



330) 02.08.1989 - வல்வை 15 பெண்கள் பாலியல் வன்படுகொலை.
331) 04.08.1989 - கீரிமலை தேடுதல் வேட்டைப் படுகொலை.
332) 07.08.1989 - புன்னாலைக்கட்டுவன் தேடுதல் படுகொலை.
333) 07.08.1989 - புன்னாலைக்கட்டுவன் எறிகணைத் தாக்குதல்.
334) 10.08.1989 - கோண்டாவில் இளைஞர் சடலமாக மீட்பு.
335) 14.08.1989 - பருத்தித்துறை வியாபாரி எரித்துப் படுகொலை.
336) 14.08.1989 - மூலை நடன ஆசிரியர் படுகொலை.
337) 14.08.1989 - யாக்கரை எறிகணைவீச்சு படுகொலை.
338) 17.08.1989 - நெடுங்கேணி தமிழ்க்குழந்தைகள் படுகொலை.
339) 17.08.1989 - கன்னியர்மட மாணவியர் வன்படுகொலை (எழுதுமட்டுவாள்).
340) 17.08.1989 - உடுப்பிட்டி இமையணனை படுகொலை (கரவெட்டி வதிரிச்சந்தி).
341) 18.08.1989 - ஐயன்குளம் படுகொலை.
342) 18.08.1989 - நுணா சிறுவன் சுட்டுக்கொலை.
343) 21.08.1989 - வடமராட்சி தேடுதல் வேட்டைப் படுகொலை (திக்கம், அல்வாய் பகுதிகளில்).
344) 21.08.1989 - மாணவன் அருளானந்தம் சுதாகரன் கொலை.
345) 21.08.1989 - கந்தளாய் படுகொலை.
346) 23.08.1989 - மன்னார் தேடுதல் வேட்டைப் படுகொலை.
347) 23.08.1989 - மாவிட்டபுரம் வியாபாரி படுகொலை.
348) 25.08.1989- ஆவரங்கால் இந்திரன் சுட்டுப்படுகொலை.
349) 27.08.1989 - பேசாலை எறிகணைத்தாக்குதல்.
350) 31.08.1989 - ஆவிரங்கால் விவசாயி சுட்டுக்கொலை.
351) 02.09.1989 - ஆண்டான்வளவு தேடுதல் வேட்டை.
352) 02.09.1989 - ஆண்டான் வளவுப் பகுதியில் தமிழ்ப் பொதுமகன் படுகொலை.
353) 08.09.1989 - பருத்தித்துறை பொதுமக்கள் படுகொலை.
354) 17.09.1989 - கிளிநொச்சி முகாம் படுகொலை.
355) 18.09.1989 - புற்றளை தேடுதல் வேட்டைப் படுகொலை.
356) 22.09.1989 - நமசிவாயம் தெய்வேந்திரன் படுகொலை.
357) 23.09.1989 - இயக்கச்சி நாட்டுப்பற்றாளர் தர்மகுலேந்திரன் படுகொலை.
358) 25.09.1989 - பண்டத்தரிப்பு தேடுதல் வேட்டைப் படுகொலை.
359) 26.10.1989 - கரடிக்குழி தேடுதல் வேட்டைப் படுகொலை.
360) 26.10.1989 - மறிச்சுக்கட்டி தேடுதல் வேட்டை.
361) 29.10.1989 - யாழ் நாட்டுப்பற்றாளர் ரவீந்திரன் படுகொலை.
362) 17.11.1989 - மானிப்பாய் செல்லத்தம்பி படுகொலை.
363) 26.11.1989 - கிளாலி நாட்டுப்பற்றாளர் பவுண் படுகொலை.
364) 10.12.1989 - மன்னார் பெண் குழந்தை படுகொலை.
365) 28.12.1989 - யாழ் நாட்டுப்பற்றாளர் பாலா படுகொலை.
366) 12.01.1990 - கோண்டாவில் நாட்டுப்பற்றாளர் சின்னத்துரை படுகொலை.
367) 24.05.1990 - வங்காலை முகாம் படுகொலை.
368) 14.03.1990 - கந்தளாய் பேருந்து பயணிகள் வெட்டிப்படுகொலை.
369) 14.03.1990 - மூதூர் பீரங்கித் தாக்குதல் ...

இந்தியப்படை வடகிழக்கில் 02.06.1987, தொடக்கம் 14.06.1990, வரை இப்பாவி பொதுமக்கள்மீது ஏறக்குறைய 369, தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

(இப்பட்டியல் The North-East Secretariat on Human Rights (NESoHR), Voice உலகத்தமிழர்கள் உரிமைகள் குரல் அமைப்பு, Tamil Nation, ஆகியவை வெளியிட்ட ஆவணங்கள் & நூல்களில் இருந்து.....பிரதி செய்யப்பட்டது)



# டெல்லியில் பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாடு: அமெரிக்காவுக்கு சொல்லும் முக்கிய செய்தி என்ன?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

15.09.2026

கடந்த வாரம் புது டெல்லியில் இந்தியா தலைமையில் நடைபெற்ற பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாடு, உலக அரசியலில் உருவாகி வரும் பலதுருவ மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ள நிலையில், அமெரிக்காவின் உலகளாவிய செல்வாக்குக்கு புதிய சவால்கள் உருவாகி வருவதை காணக்கூடியதாக உள்ளது.

2026 செப்டம்பர் 12 மற்றும் 13ஆம் தேதிகளில் டெல்லியில் நடைபெற்ற 18ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், பொருளாதாரம், சர்வதேச வர்த்தகம், நிதி அமைப்பு, செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் சர்வதேச அமைதி உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து உறுப்புநாடுகள் விவாதித்தன.

மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான கட்டமைப்பு (Building for Resilience, Innovation, Cooperation and Sustainability) என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற இந்த மாநாடு, பிரிக்ஸ் அமைப்பின் வளர்ந்து வரும் அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியது.




**உலக அரசியலில் உருவாகி வரும் பலதுருவ மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ள நிலையில், அமெரிக்காவின் உலகளாவிய செல்வாக்குக்கு புதிய சவால்கள் உருவாகி வருவதை காணக்கூடியதாக உள்ளது. சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளில் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு மாற்றாக, பலதுருவ உலக அமைப்பை உருவாக்கும் நோக்கம் பிரிக்ஸ் நாடுகளிடையே வலுப்பெற்று வருகிறது.**



## அமெரிக்கா மைய உலக அமைப்பில் மாற்றம்?

பிரிக்ஸ் நாடுகள், உலகளாவிய முடிவெடுப்புகளில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், உலக நிர்வாகம் மேலும் சமநிலையானதாக இருக்க வேண்டும் என்றும் டெல்லி பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதன் மூலம், சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளில் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு மாற்றாக, பலதுருவ உலக அமைப்பை உருவாக்கும் நோக்கம் பிரிக்ஸ் நாடுகளிடையே வலுப்பெற்று வருவதாக பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் பல்வேறு நாடுகளுக்கு விதித்து வரும் பொருளாதாரத் தடைகள் குறித்தும் பிரிக்ஸ் நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

குறிப்பாக ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் எதிர்கொள்ளும் பொருளாதாரத் தடைகள் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து பிரிக்ஸ் நாடுகள் கவனம் செலுத்தியுள்ளன. ஒரு தலைப்பட்சமான பொருளாதாரத் தடைகள் மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டை பிரிக்ஸ் நாடுகள் வெளிப்படுத்தியிருப்பது, அமெரிக்காவின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மறைமுகமான அரசியல் செய்தியாக பார்க்கப்படுகிறது.



## டாலருக்கு மாற்றான பாதை?

பிரிக்ஸ் நாடுகளின் மற்றொரு முக்கிய நோக்கம் சர்வதேச வர்த்தகம் மற்றும் நிதிப் பரிவர்த்தனைகளில் அமெரிக்க டாலரை மட்டுமே சார்ந்திருக்கும் நிலையை குறைப்பதாகும். உறுப்பு நாடுகளுக்கிடையே உள்ளூர் நாணயங்களில் வர்த்தகம் செய்வது, எல்லைத் தாண்டிய பணப்பரிவர்த்தனை முறைகளை மேம்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து பிரிக்ஸ் தொடர்ந்து ஆலோசித்து வருகிறது.

எனினும், பிரிக்ஸ் உடனடியாக அமெரிக்க டாலருக்கு மாற்றாக ஒரு புதிய பொது நாணயத்தை உருவாக்கும் நிலைக்கு சென்றுவிட்டதாகக் கூற முடியாது.

இந்தியாவின் அணுகுமுறை குறிப்பாக நடைமுறைக்கு ஏற்றதாக உள்ளது. டாலரை எதிர்ப்பதற்குப் பதிலாக, சர்வதேச நிதி அமைப்பில் நாடுகளுக்கு அதிகமான தேர்வுகள் இருக்க வேண்டும் என்பதையே இந்தியா வலியுறுத்தி வருகிறது. ஆனால் சீனா-ரஷ்யா கூட்டணியாக மட்டுமே பிரிக்ஸ் இல்லை என்று கூறலாம். உண்மையில் பிரிக்ஸ் அமைப்பை சீனா மற்றும் ரஷ்யாவின் அரசியல் கருவியாக மட்டும் பார்ப்பது சரியான அணுகுமுறை அல்ல என நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுடன், சமீபத்திய விரிவாக்கத்தின் மூலம் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளும் அமைப்பின் முக்கிய பங்காளிகளாகியுள்ளன. இந்த நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார நலன்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல. குறிப்பாக இந்தியா-சீனா போட்டி, ரஷ்யா-மேற்கு நாடுகளின் மோதல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையேயான வேறுபாடுகள் பிரிக்ஸின் உள்நிலை சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன.

## இந்தியாவின் தனித்துவ நிலைப்பாடு

இருப்பினும், இந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் பொதுவான பிரகடனத்தை வெளியிட முடிவது பிரிக்ஸ் அமைப்பின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக பார்க்கப்படுகிறது. இந்த மாநாட்டில் இந்தியாவின் தனித்துவமான நிலைப்பாடு வெளிப்பட்டது. டெல்லி மாநாட்டின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாக இந்தியாவின் சமநிலை அணுகுமுறை பார்க்கப்படுகிறது.

இந்தியா ஒருபுறம் அமெரிக்காவுடன் பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தி வருகிறது. மறுபுறம் ரஷ்யாவுடனான நீண்டகால உறவையும் தொடர்ந்து பேணி வருகிறது. சீனாவுடனான எல்லை மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் இருந்தாலும், மற்றும் பிற சர்வதேச அமைப்புகளில் சீனாவுடன் இந்தியா செயல்பட்டு வருகிறது.

இதனால், இந்தியாவின் கொள்கை அமெரிக்கா அல்லது பிரிக்ஸ் என்ற இரு தேர்வுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது அல்ல. மாறாக, தேசிய நலனுக்கு ஏற்ப பல்வேறு வல்லரசுகளுடன் உறவுகளை நிர்வகிக்கும் மூலோபாய சுயாட்சி என்ற அணுகுமுறையாக உள்ளது.




## மோதலுக்கு பதிலாக பலதுருவ உலகம்

டெல்லி பிரிக்ஸ் மாநாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு செல்லும் முக்கியமான செய்தி, பிரிக்ஸ் அமைப்பு அமெரிக்காவுக்கு எதிரான இராணுவ அல்லது அரசியல் கூட்டணியாக உருவாகிறது என்பதல்ல. அதற்கு பதிலாக, உலகளாவிய முடிவெடுப்புகளில் வளர்ந்து வரும் நாடுகள் அதிக அதிகாரத்தையும் பிரதிநிதித்துவத்தையும் கோருகின்றன என்பதே முக்கியமான செய்தியாகும்.

சர்வதேச நிதி அமைப்பு, வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் உலக நிர்வாகம் போன்ற துறைகளில் ஒரே ஒரு வல்லரசின் ஆதிக்கத்தை குறைத்து, பல்வேறு நாடுகளுக்கு அதிக இடம் வழங்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. மத்திய கிழக்கு மோதல்கள் உள்ளிட்ட சர்வதேச பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக வழிகளில் தீர்வு காண வேண்டும் என்பதையும் பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்தியுள்ளன. இதன் மூலம், இராணுவ சக்தி மற்றும் பொருளாதார அழுத்தம் மட்டுமே முன்வைத்துள்ளது.

டெல்லி பிரிக்ஸ் மாநாடு அமெரிக்காவுக்கு எதிரான நேரடி சவால் அல்ல. ஆனால், அமெரிக்கா மையமாக இருந்த உலக அமைப்பு படிப்படியாக பலதுருவ உலக அமைப்பாக மாறி வருகிறது என்பதை இந்த மாநாடு தெளிவுபடுத்தியுள்ளது.

தென் ஆசிய நாடுகள் இனி உலக அரசியலில் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் பார்வையாளர்களாக மட்டும் இருக்க விரும்பவில்லை. சர்வதேச முடிவுகளை உருவாக்குவதிலும் தங்களுக்கான முக்கிய இடத்தை கோருகின்றன.

இதனால், டெல்லி மாநாட்டின் முக்கிய அரசியல் செய்தி ஒன்றாகக் கருதப்படுவது, உலகம் மாறுகிறது் உலக முடிவுகளில் ஆச்சரியம் ஆசிய நாடுகளின் குரலும் இனி முக்கியமானதாக இருக்கும். இந்த மாற்றத்தை இந்தியா, அமெரிக்காவுக்கு எதிரான அணியாக அல்லாமல், அதிக சமநிலையும் பிரதிநிதித்துவமும் கொண்ட சர்வதேச அமைப்பை உருவாக்கும் முயற்சியாக முன்னெடுத்து வருகிறது.

# அரசுப் பல்கலைக்கழகங்கள் கடுமையான நெருக்கடியில்!

## கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

29.09.2026




அரசுப் பல்கலைக்கழகங்கள் கடுமையான மனிதவள பற்றாக்குறை, போதிய உள்கட்டமைப்பு வசதியின்மை மற்றும் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளால் மிக மோசமான நெருக்கடியைச் சந்தித்து வருவதாகக் கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் மு.ரவி தெரிவித்தார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் உபத் தலைவர் கா. பாலச்சந்திரன், செயலாளர் ரவிகுமார், நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சாந்தரூபன் ஆகியோருடன் இணைந்து கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே தலைவர் அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

எங்களுடைய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம், கடந்த காலங்களில் அரசாங்கத்துடன் பல தடவைகள் அவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, அதன் மூலமாக எங்களுக்கு எந்தவிதமான ஒரு சாதகமான பதிலும் நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்குத் தராததன் காரணமாக, நாங்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் தொடர்ந்து பல தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் நாங்கள் கடந்த 2 கிழமைக்கு முன்பதாக கருப்பு வாரம் ஒன்றை நாங்கள் அறிவித்து, அதன் மூலமாக எங்களுடைய அதிருப்தியை நாங்கள் தெரிவித்திருந்தோம். அதேபோல இந்த வாரம், அதாவது இன்றிலிருந்து இது பொது மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற ஒரு வாரமாகப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் பிரகடனம் செய்திருக்கின்றார்கள்.

ஆகவே இந்த வாரம் முழுவதும் நாங்கள் மக்களுக்குத் தற்போது இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் நிலவுகின்ற பிரச்சனைகள், அதேபோல இருக்கின்ற நெருக்கடிகள், விரிவுரையாளர் பற்றாக்குறை, உள்ளக வசதிகளினுடைய பற்றாக்குறை போன்ற சகல விடயங்களையும் நாங்கள் பொது மக்களுக்கு எடுத்துக்கூறி, அதன் மூலமாக இன்றைய கால கட்டத்தில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் நிலவுகின்ற பிரச்சனைகள் தொடர்பாக மக்களும் பொதுமக்களும் ஒரு தெளிவான ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நாங்கள் இந்த ஊடக சந்திப்பினை எங்களுடைய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் வேண்டுகோளுக்கினங்க, இன்று நாங்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு இன்றைய நாள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்காகத் தான் நாங்கள் இந்த இடத்தில் கூடியிருக்கின்றோம்.

பொதுவாக நாங்கள் கிட்டத்தட்ட ஏறத்தாழ நாங்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் 10 கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தார்கள். நாங்கள் சகோதர சங்கமும், நாங்கள் 17 பல்கலைக்கழகங்களிலும் இருக்கின்ற சகோதர சங்கங்களும் இதனை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக நாங்கள் இப்போதைக்கு நீங்கள் பொதுமக்களுக்குத் தெரிய வேண்டியது என்னவென்றால், பல்கலைக்கழகங்களில் நிலவுகின்ற குறிப்பாக இரண்டு பிரதானமான பிரச்சனைகள்:

பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப் பற்றாக்குறை இருப்பது. மாணவர்களுடைய நெருக்கடியின் காரணமாக மாணவர்களுக்குப் போதிய வசதிகள், வாய்ப்புகள் இல்லாதது. அதனால் ஒரு தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவது என்பது இப்போது ஒரு கேள்விக்குறியான நிலையில் தான் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் இருக்கின்றது என்பதைத் தான் நாங்கள் கூற வேண்டியதாக இருக்கின்றது.

அதேபோல நாங்கள் குறிப்பாக மாணவர்களை இங்கே ஏற்கனவே 4 தொகுதி மாணவர்கள்-பொதுக்கலை, பொதுப் பட்டதாரி மாணவர்களும், அதேபோல சிறப்புப் பட்டதாரி மாணவர்களுமாக 3, 4 (மருத்துவப் பீடத்திற்கு 5 வருடங்கள், ஏனைய பீடங்களுக்கு 4, 3 வருடங்கள்) ஆக இருக்கின்ற பட்டப்படிப்புக் காலம் இருக்கின்ற அதே நேரத்தில், மீண்டும் அரசாங்கம் எங்களுக்கு 2024-ஆம் ஆண்டு மாணவர்களை மட்டும் தான் நாங்கள் இப்போது அனுமதிக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் எங்களுக்கு மீண்டும் அரசாங்கத்திலிருந்து ஒரு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது, 2025-ஆம் ஆண்டு மாணவர்களையும் உடனடியாக உள்வாங்கும்படி. ஆனால் அது இயலாத காரியமாக இருக்கின்றது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம். உள்ளக வசதிக்கட்டமைப்புகள் என்பதைப் பற்றி அங்கேயும் பிரச்சனைகள் இருந்தபோதிலும் கூட, ஆசிரியர்களுடைய, விரிவுரையாளர்களுடைய பற்றாக்குறை, வகுப்பறை பற்றாக்குறை, ஆய்வுகூட வசதிகள் பற்றாக்குறையின் காரணமாக அவ்வாறான 2025-ஆம் ஆண்டு மாணவர்களை உள்வாங்குவது என்பது இப்போதைக்குச் சாத்தியமில்லை என்பதனை எங்களுடைய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் அரசாங்கத்திற்குத் தெளிவாகவே அறிவித்திருக்கின்றோம். ஆகவே அந்த வகையில் இங்கே இருக்கின்ற வசதி வாய்ப்புகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது.

அதனால் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கக் கூடிய ஒரு சூழ்நிலையில்லை. அதேபோல விரிவுரையாளர்களை நாங்கள் தக்க வைத்துக் கொள்வது, அவர்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்வது சம்பந்தமாக நிறையச் சவால் மிக்க ஒரு விடயமாக எங்களுக்கு இருக்கின்றது.

காரணம், தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் அல்லது தனியார் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் கிடைக்கப் பெறுகின்ற வேதனத்தை விட, அரச பல்கலைக்கழகங்களின் வேதனம் மிகவும் குறைவாக இருக்கின்றதன் காரணமாக, பயிற்றுவிக்கப்பட்ட அல்லது கலாநிதி பட்டம் பெற்ற விரிவுரையாளர்கள், பட்டதாரிகள் கூட பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக இணைந்துக் கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

அதேநேரம் அவர்களுக்கு அங்கே இருக்கின்ற வேதனப் பற்றாக்குறை, இந்த வரிச்சுமை, இதன் காரணமாக இருக்கின்றவர்களைத் தக்க வைத்துக் கொள்வதும், அவர்களும் தங்களுடைய பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு வெளிநாட்டிற்குச் செல்கின்றனர் அல்லது இலங்கையிலிருக்கின்ற பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அவர்கள் செல்வதனால் எங்களுக்கு விரிவுரையாளர் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருக்கின்றது.

அதனால் மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையேயான விகிதாசாரம் ஒன்று இருக்கின்றது. விஞ்ஞானப் பிரிவாக இருந்தால் ஒரு விரிவுரையாளருக்கு இத்தனை மாணவர்கள், சமூக விஞ்ஞானப் பிரிவாக இருந்தால் ஒரு விரிவுரையாளருக்கு இத்தனை மாணவர்கள் என்று. ஆனால் அந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இப்போது கற்று முழுமையாகவே மிகவும் கீழ்நிலையில் இருக்கின்றது. காரணம், விரிவுரையாளர்களை நாங்கள் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதும், புது விரிவுரையாளர்களை வெற்றிடத்திற்கு ஏற்ப நிரப்புவதும் சிரமமான காரியமாக இருக்கின்றது.

அதேபோல எங்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றது, ஆனால் வெற்றிடங்களை நிரப்பும்படியாக அரசாங்கம் எங்களுக்கு ஓரளவு அனுமதி அளித்திருந்தபோதிலும் கூட, வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருப்பதற்கு மிகப்பிரதான காரணம் பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற சம்பளப் பற்றாக்குறையின் காரணமாகவும், வரிச்சுமையின் காரணமாகவும் இங்கே கலாநிதி பட்டம் பெற்றவர்கள் வெளிநாடுகளிலிருந்து இங்கே வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.

அதேபோல இங்கிருந்து தங்களுடைய முதுகலைமானி மற்றும் கலாநிதி பட்டப்படிப்பிற்காக வெளிநாடு சென்ற விரிவுரையாளர்களும் திரும்பி வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர், சிலர் வராமலும் விடுகின்றனர். ஆகவே தொடர்ந்து வெற்றிடங்களை நிரப்புவது என்பதும் தரமான விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்புவது எங்களுக்குக் கஷ்டமாக இருக்கின்றது. அது மீண்டும் பல்கலைக்கழக மட்டத்திலான தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவது எவ்வாறு சாத்தியமாகும் என்ற கேள்வியை எழுப்புவதாக இருக்கின்றது. இது சம்பந்தமாக எங்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் சம்மேளனம் ஜனாதிபதியை இரண்டு தடவைகள் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர்களிடம் ஒரு 'Proposal' கேட்டிருந்தார்கள்.

அதனை அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் அனைத்துப் துணைவேந்தர்களையும் ஒன்றாக இணைந்து எங்களுடைய சம்மேளனம் கையளித்திருக்கின்றார்கள். ஆனால் இரண்டு வருடங்கள் ஆகியும் இதுவரை உரிய அமைச்சுக்கு அது கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அண்மையில் கூறப்பட்டது.

அது சம்மேளனத்திற்கு மிகவும் மனவேதனையை அளித்தது. காரணம், அவ்வளவு சிரமப்பட்டு நாங்கள் செய்தபோதிலும் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகின்றது என்ற வகையிலும், அதிருப்தியை வெளியிடுகின்ற வகையிலும் தான் இவ்வாறான செய்தியாளர் சந்திப்பை எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஏற்படுத்துமாறும், தனித்தனியாக இருக்கின்ற பிரச்சனைகளைப் பற்றியும் எடுத்துக்கூறுமாறு பணித்திருந்தார்கள்.

குறிப்பாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது இருக்கின்ற பிரதான பிரச்சனை மாணவர்களுடைய விடுதிப் பிரச்சனை. இரண்டாம் வருட மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்குவதில்லை என்ற கொள்கை முடிவெடுக்கப்பட்டதற்குக் காரணம் விடுதி வசதிகள் இங்கு போதுமானதாக இல்லை. வெளியிலும் மாணவர்கள் தங்கக்கூடிய வசதிகள் பல்கலைக்கழக சூழலில் இல்லை. நிறையப் பணம் கொடுக்க வேண்டியதாக உள்ளது.

ஆகவே கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் நலன் கருதி விடுதிகள் அமைக்கப்பட வேண்டும். அதேபோல தொலைவிலிருந்து வந்து கடமையாற்றும் விரிவுரையாளர்களுக்கும் குடும்ப விடுதிகள்/குவாட்டர்ஸ் வசதிகள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத் து தான் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை எடுத்திருக்கின்றோம். வரிச்சுமை காரணமாக அநேகமானோரை நாங்கள் இழக்க வேண்டியுள்ளது.

நியாயமான தீர்வைப் பெற்றுத்தருமாறு அரசாங்கத்தைக் கேட்டிருந்தோம். வெள்ளிக்கிழமை நாங்கள் மீண்டும் சந்தித்து, பெரிய செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருக்கின்றோம். எதிர்காலத்தில் எவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்துத் தீர்மானித்துச் செயற்படுத்துவோம்.

# அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழி வளர்ச்சி
# தமிழ் பாடசாலைகளும் எதிர்கால இளம் சந்ததியினரும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

15.09.2026

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களின் நீண்டகால மொழிப் பாதுகாப்பு மற்றும் அடுத்த தலைமுறையினரிடம் தமிழ் மொழியைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கான முயற்சிகளுக்கு புதிய ஊக்கம் கிடைத்துள்ளது. தமிழ் உள்ளிட்ட ஆசிய மொழிகளின் கல்வியை வலுப்படுத்தும் நோக்கில் அவுஸ்திரேலிய மத்திய அரசு மேற்கொண்டுள்ள புதிய நிதி முதலீடு, தமிழ்



சமூகத்தினரிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆளும் லேபர் கட்சியின் அல்பனீஸ் அரசாங்கம், சமூக மொழிப் பள்ளிகளின் மூலம் இளம் அவுஸ்திரேலியர்கள் தமது குடும்ப மொழிகளில் உயர்நிலைப் பள்ளி மட்டம் வரை தொடர்ந்து கல்வி கற்று, நடைமுறைப் பயன்பாட்டில் மொழித் திறனை வளர்த்துக்கொள்ளும் வகையில் பல்வேறு நிதித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, Fluency in Asian Languages திட்டத்தின் கீழ் தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம், பஞ்சாபி, குஜராத்தி, வங்காள, உருது உள்ளிட்ட பல மொழிகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது.

## தமிழ் மொழிக்கு முக்கிய வாய்ப்பு

2026 ஆகஸ்ட் 21 அன்று அவுஸ்திரேலிய அரசாங்கம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில், தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக Tamil Study Centre Homebush Inc மற்றும் NSW Federation of Tamil Schools Inc ஆகிய அமைப்புகள் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம், தமிழ் மொழித் திறனை மேம்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது. அதன் பின்னர் இந்தத் திட்டத்தை நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தவும், இணையவழிக் கற்றல் வளங்களை நாடு முழுவதும் பகிர்ந்து கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சிட்னியைத் தாண்டி அவுஸ்திரேலியாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மாணவர்களும் நவீன கற்றல் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

அதேவேளை, NSW Federation of Tamil Schools Inc, உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே தமிழ் மொழிக் கற்றலை வலுப்படுத்துவதற்காக புதிய கற்றல் வளங்களையும், தமிழ் மொழியை நிஜ வாழ்க்கைச் சூழல்களில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவுள்ளது. இது மிகவும் முக்கியமான முன்னேற்றமாகும்.

## 7 முதல் 12ஆம் ஆண்டு வரை தமிழ்



தமிழ் மொழிக் கல்வியில் மிகப்பெரிய சவால்களில் ஒன்று, ஆரம்பப் பள்ளி ஆண்டுகளில் ஆர்வத்துடன் தமிழ் கற்கத் தொடங்கும் மாணவர்கள், உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் போது தொடர்ந்து அந்தக் கல்வியை மேற்கொள்ளாமல் விடுவது ஆகும். இதனை மாற்றும் நோக்கிலேயே புதிய அரசாங்க முதலீட்டின் முக்கிய கவனம் அமைந்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் திட்டங்கள் ஆண்டு 7 முதல் 12 வரையிலான மாணவர்களைத் தொடர்ந்து மொழிக் கல்வியில் ஈடுபடுத்துவதையும், வெறுமனே மொழியைப் புரிந்துகொள் வதைத் தாண்டி நடைமுறைப் பயன்பாட்டில் சிறந்த மொழித் திறனை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. 2026 மே மாதத்தில் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஒன்பது அமைப்புகளுக்கு மொத்தம் 2.5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் ஆதரவு வழங்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது. இந்த முதலீடு பரந்த 25 மில்லியன் டொலர் சமூக மொழிப் பள்ளிகள் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

மேலும், 2026 ஆகஸ்ட் அறிவிப்பின்படி, 2025-26 முதல் நான்கு ஆண்டுகளுக்கான சமூக மொழிப் பள்ளிகளுக்கான மொத்த அரசாங்க முதலீடு 25.6 மில்லியன் அவுஸ்திரேலிய டொலராக உள்ளது. இதன் மூலம் 90,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் 80-க்கும் அதிகமான மொழிகளைக் கற்க உதவி கிடைக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## ஆசிரியர்களுக்கு நவீன பயிற்சி

மொழிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு மாணவர்களுக்கு மட்டும் வளங்களை வழங்குவது போதாது. திறமையான ஆசிரியர்களும் நவீன கற்பித்தல் முறைகளும் அவசியம். இதனை கருத்தில் கொண்டு ஆசிரியர் பயிற்சி, புதிய பாட வளங்கள், டிஜிட்டல் கற்றல் மற்றும் தொழில்முறை மேம்பாடு ஆகியவற்றுக்கும் இந்த நிதித் திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது.

அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் சமூக மொழி ஆசிரியர்களுக்கான இணைய மொழி மையங்களை (Digital Language Hubs) உருவாக்கவுள்ளது. அதேபோல் சிட்னி பல்கலைக்கழகம் அதேபோல் 7-12 வகுப்புகளை உருவாக்குதல், ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் நாடு முழுவதும் பயன்படுத்தக்கூடிய கற்றல் வளங்களை உருவாக்குதல் போன்ற பணிகளில் பங்களிக்கவுள்ளது.

இது தமிழ் மொழிக் கல்விக்கு மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. பாரம்பரிய முறையில் பாடப்புத்தகத்தை மட்டும் மையமாகக் கொண்ட கற்பித்தலைத் தாண்டி, இணையவழி காணொளிகள், ஊடாடும் கற்றல் கருவிகள், டிஜிட்டல் பாடப் பொருட்கள் மற்றும் மாணவர்களின் வயதுக்கும் திறமைக்கும் ஏற்ற கற்றல் முறைகள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.

## தமிழ்க் கல்வி நிலையங்களின் நீண்ட பயணம்

இந்த புதிய வாய்ப்பைப் புரிந்துகொள்ளும்போது ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து அறிய வேண்டும். 1987ஆம் ஆண்டு தமிழ் மொழியையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் இளம் தலைமுறையினருக்குக் கற்பிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையம், பல தசாப்தங்களாக சிட்னி தமிழ் சமூகத்தின் மொழிக் கல்வியில் முக்கிய பங்காற்றி வருகிறது. ஆரம்பத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் தொடங்கிய இந்தப் பயணம் பின்னர் விரிவடைந்தது.

தமிழ் பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களின் வளர்ச்சியிலும் இந்த நிலையம் பங்களித்துள்ளது. மேலும், NSW Federation of Tamil Schools உருவாக்கத்திலும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் முக்கிய பங்கு வகித்ததாக அதன் வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன. எனவே, இப்போது கிடைக்கும் புதிய அரசாங்க ஆதரவு பல ஆண்டுகளாக தமிழ் சமூகத்தின் தன்னார்வத் தொண்டர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கிடைத்த ஒரு முக்கிய அங்கீகாரமாகவும் பார்க்கப்படுகிறது.

## மொழி என்பது வெறும் பாடம் அல்ல

தமிழ் மொழியைப் பாதுகாப்பது என்பது ஒரு பாடத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல. அது ஒரு தலைமுறையின் வரலாறு, குடும்ப உறவு, பண்பாடு, இலக்கியம், கலை, நினைவகம் மற்றும் அடையாளத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியாகும். அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்கின்ற தமிழ் இளைய தலைமுறையினர், தமது பெற்றோர் மற்றும் பாட்டன்-பாட்டிமார்களுடன் தமிழில் உரையாடும் திறனைப்



பெறுவது குடும்ப உறவுகளையும் வலுப்படுத்துகிறது. அதே நேரத்தில், இருமொழி அல்லது பன்மொழித் திறன் மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கும் கூடுதல் வாய்ப்புகளைத் திறக்கக்கூடும்.

அவுஸ்திரேலிய அரசாங்கமும் மொழித் திறன் என்பது கலாச்சார அடையாளத்தை மட்டுமல்லாமல், கல்வி, வேலைவாய்ப்பு, பிராந்திய உறவுகள் மற்றும் நாட்டின் எதிர்கால பொருளாதாரத் தேவைகளுக்கும் பயனுள்ளதாக இருப்பதை வலியுறுத்துகிறது.

அரசாங்க நிதி கிடைப்பது மிகப்பெரிய வாய்ப்பாக இருந்தாலும், அது மட்டுமே தமிழ் மொழியின் எதிர்காலத்தை உறுதி செய்யாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தொடர்ந்து தமிழ் வகுப்புகளுக்கு அனுப்ப வேண்டும். மாணவர்கள் தமிழ் பேசுவதற்கும் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும். தமிழ் பள்ளிகளும் தங்களது கற்பித்தல் முறைகளை இன்றைய தலைமுறையின் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதேபோல், தமிழ் ஊடகங்கள், எழுத்தாளர்கள், பல்கலைக்கழகங்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து டிஜிட்டல் தமிழ் வளங்களை உருவாக்க வேண்டும். குறிப்பாக, தமிழ் மொழியை வெறும் சனிக்கிழமை அல்லது வார இறுதி வகுப்பின் பாடமாக மட்டும் பார்க்காமல், மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைக்க வேண்டியது அவசியம். தமிழ் விவாதங்கள், பேச்சுப் போட்டிகள், நாடகங்கள், இலக்கிய நிகழ்வுகள், திரைப்படம், இசை, பாட்காஸ்ட் மற்றும் சமூக ஊடக உள்ளடக்கங்கள் ஆகியவற்றின் மூலம் இளம் தலைமுறையினரிடம் தமிழைப் பயன்படுத்தும் ஆர்வத்தை உருவாக்க முடியும்.

## தமிழ் சமூக எதிர்கால பொறுப்பு

அவுஸ்திரேலிய மத்திய அரசின் புதிய முதலீடு, தமிழ் மொழிக் கல்விக்கு கிடைத்துள்ள முக்கியமான புதிய வாய்ப்பாகும். குறிப்பாக ஆண்டு 7-12 மாணவர்களைத் தொடர்ந்து தமிழ் கற்கச் செய்வது, ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துவது, டிஜிட்டல் கற்றல் வளங்களை உருவாக்குவது மற்றும் நியூ சவுத் வேல்ஸைத் தாண்டி தேசிய அளவில் வளங்களைப் பகிர்வது ஆகியவை எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

தமிழ் உலகின் தொன்மையான செம்மொழிகளில் ஒன்று. அவுஸ்திரேலியாவின் பன்முகக் கலாச்சார சமூகத்தில் தமிழ் இன்று ஒரு வாழும் மொழியாகத் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அந்த மொழி அடுத்த தலைமுறையினரின் நாவில், எழுத்தில், சிந்தனையில் மற்றும் படைப்பாற்றலில் தொடர்ந்து வாழ வேண்டுமெனில் அரசாங்க ஆதரவுடன் சமூகத்தின் உறுதியான பங்களிப்பும் தேவை.

எனவே, இந்த புதிய நிதி ஒதுக்கீடு ஒரு சாதாரண கல்வி மானியமாக மட்டும் பார்க்கப்படக் கூடாது. அது தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற உணர்வுடன் பல தசாப்தங்களாக உழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகத் தொண்டர்கள் மற்றும் தமிழ் கல்வி நிறுவனங்களின் முயற்சிகளுக்குக் கிடைத்த புதிய ஊக்கமாகும். அரசாங்கத்தின் நிதி ஆதரவும், சமூகத்தின் அர்ப்பணிப்பும், நவீன கல்வித் தொழில்நுட்பமும் ஒன்றிணைந்தால், அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழியின் எதிர்காலம் மேலும் வலுவாகும்.

இன்றைய தமிழ் மாணவர்கள் நாளைய தமிழ் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்களாக உருவாகும் பாதையை இந்த முயற்சி திறந்து வைக்கக்கூடும்.

தமிழை காப்பது என்பது கடந்த காலத்தை மட்டும் பாதுகாப்பதல்ல; எதிர்கால தலைமுறைக்கு ஒரு உயிருள்ள மொழியையும் பண்பாட்டு அடையாளத்தையும் கையளிப்பதாகும்.

# பெண்ணினத்தைப் பெருமையுறச் செய்யும்
# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்!



விடுதலைக்காய் விழித்தெழுந்த பெண்ணினம்




ஒப்டோபர் 10, இந்நாள் தமிழீழப் பெண்களை தலை நிமிர்த்தச் செய்யும் ஓர் உன்னத நாளாக அமைகிறது. உலகின் நான்காவது பெரிய வல்லரசு என வர்ணிக்கப்படும் இந்திய இராணுவத்தை எதிர்த்து ஆயுதமேந்தி நின்று போராடி - தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே முதல் முதல் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளான ஒக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

காலங்காலமாக நிலப்பிரபுத்தவ அமைப்பு முறையாலும் முதலாளித்துவ அமைப்ப முறையாலும் அடக்கப்பட்டும், இழிவுபடுத்தப்பட்டும் வந்த பெண்கள், உலகப் பெண்களுடன் ஒன்றினைந்து அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாளாகிய மார்ச் 08, அன்றே உரிமைக்குரல் எழுப்பி நின்றார்கள்.

ஆனால் ஒப்பீட்டளவில் உலகப்பெண்கள் எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத - தியாகத்தின் உச்சமான தற்கொடைத் தியாகத்தைப் புரிந்து வரும் பெண்களைப் பெற்ற எமது தமிழினம் முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளை எழச்சி நாளாக ஏற்றுக்கொள்வதில் பெருமையடைகிறது.

படைப்பியல் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் பாலியல் வேறுபாட்டை மட்டும் கருத்திற் கொண்ட பெண்ணுக்கு பாலியல் சமத்துவம் மறுக்கப்பட்டு வந்தது. பிறப்பிலிருந்தே ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் இடையே காட்டப்பட்ட பராமரிப்பு வளர்ப்பு முறைகள் பெண்கள் ஆண்களை விடவும் தாழ்ந்தவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற உணர்வினை ஊட்டின. பெண் என்பவள் ஒரு காட்சிப் பொருளாக, போதைப் பண்டமாக, இனப்பொருக்கம் செய்யும் ஓர் இயந்திரமாக மட்டுமே பார்க்கப்பட்டாள்.

மதங்கள், மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், இலங்கியங்கள், புராண இதிகாச கர்ணபரம்பரைக் கதைகள், திரைப்படத் தொடர்புச் சாதனங்கள் என எல்லாமே பெண்களை இழிவு படுத்தின. பெண்களிடையே தோன்றிய முன்னேற்றத்துக்கான, புரட்சிகரமான, சமூகமாற்றத்திற்கான முனைப்புகள் அனைத்தையும் கற்பு என்கின்ற பார்வை கருவறுத்தது. இன்று தமிழீழத்தைப் பொறுத்த வரை பெண்கள் தம் மீதான பல்வேற அடக்குமுறைகளைத் தகர்த்தெறிந்து புரட்சியின் உச்சத்தை தொட்டு நிற்கின்றார்கள். அதி உன்னதமான தியாகங்களைப் புரிகிறார்கள்.



2ம் லெப்.மாலதி

புற உலகம் தமிழீழத்துப் பெண்களை வியப்புடன், விழிகளை விரித்துப் பார்க்கின்றது. இந்தப் பெருமை மிகு நிலையை தமிழீழப் பெண்ணினத்திற்கு உண்டாக்கியவர் எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தான். அவரது வழிகாட்டலில் தான் தமிழினம் குறிப்பாக தமிழீழத்துப் பெண்கள் தலை நிமிர்த்தி நிற்கின்றார்கள். தலைவன் ஊட்டும் துணிவில், தன்னம்பிக்கையில் எத்தனையோ சாதனைகள் இம்மண்ணில் பிறப்பெடுக்கின்றன!

பெண்கள் அதீத திறமைகளையும், ஆளுமைகளையும் தம்முள்ளே தேக்கி வைத்திருந்த போதும் சீதனம் என்ற அம்சம் பெண்களை இம்சித்து வந்தது. ஆணை ஒத்த அறிவும் அந்தஸ்தும் கொண்டிருந்த போதும் சீதனம் பெண்ணை குறைந்தவளாகவே கணித்தது. ஆனால் இன்று பெண்ணை இழிவுபடுத்தி வந்த சீதனத்தை இல்லாதொழிக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் பெண்கள் தலைமைத்துவப் பண்பு மிக்கவர்களாகத் திகழ்கின்றார்கள். உலக சமுதாயம் உதாரணம் காட்டுமளவுக்கு பெண் இங்கே விழிப்புணர்வு பெற்றிருக்கின்றாள். பூரணமான வழிப்புணர்வு எனச் சொல்லமுடியா விட்டாலும் பல்வேறு விடயங்களில் பெண்ணின் விழிப்பு நிலை குறிப்பிடத்தக்கதாகவே அமைகின்றது.

பெண்ணின் விடுதலை என்பது ஆணாதிக்கக் கருத்தாதிக்கத்திலிருந்தும் ஏனைய அடக்கு ஒடுக்கு முறைகளில் இருந்தும் விடுபடுவதாகும். முதலில் பெண்கள் அக விடுதலை பெற்று புரட்சிக்குத் தயாரான தற்துணிவைப் பெற்றக் கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் சமூக உடற்கூறின் இரு அம்சங்கள். எனவே பரஸ்பர புரிந்துணர்வோடு விடுதலை முனைப்புப் பெற வேண்டும்.

உலகில் பெண்கள் விமானிகளாக, விஞ்ஞானிகளாக, நோபல் பரிசு பெற்ற இலக்கியவாதிகளாக சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், உலகின் எந்தவொரு பகுதியிலும் நடந்தேறாத தியாகம் தமிழீழத்திலே நடக்கின்றது. இதற்காக தமிழீழத்துப் பெண்ணினம் பெருமையடையவேண்டும். தேசிய விடுதலைப் பணியிலே கைகோர்த்து பணிபுரிந்து, எமது தேசத்தின் விடிவை விரைவுபடுத்த வேண்டும். பல்துறை சார் கல்வியறிவிலே உயர்ந்து, பொருளாதார ரீதியில் யாரையும் சாராது சொந்தக் காலூன்ற நின்று முன்னேற வேண்டும்.

தமிழீத்துப் பெண்கள் மிகவும் கொடூரமான இராணுவ ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றார்கள். எதிரியின் பாலியல் பலாத்காரம் எமது பெண்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது. எதிரி எம் மீது பிரயோகிக்கும் சகல வன்முறைகளுக்கும் எதிராக உறுதியுடன் போராட வேண்டியவளாகப் பெண் திகழ்கின்றாள். போராட்டத்தின் மூலமே தன் வாழ்வை உறுதி செய்துகொள்ள வேண்டியவறாகின்றாள்.

நன்றி – சுதந்திரக்கீற்று

# எத்தியோப்பியாவில் மீண்டும் உள்நாட்டுப் போர்!
# டிக்ரேயில் வெடித்துள்ள புதிய மோதல்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

27.09.2026




எத்தியோப்பியாவின் டிக்ரே பிராந்தியத்தில் மீண்டும் ஆயுத மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், அந்நாடு 2020 - 2022 காலகட்டத்தில் சந்தித்த பேரழிவான உள்நாட்டுப் போர் மீண்டும் உருவெடுக்குமா என்ற அச்சம் அதிகரித்துள்ளது. பிரதமர் அபி அகமது தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக பல்வேறு ஆயுதக் குழுக்கள் ஒன்றிணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியிருப்பது, எத்தியோப்பியாவின் அரசியல் மற்றும் பாதுகாப்புச் சூழலை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

டிக்ரே பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள புதிய பதற்றத்தை வெறுமனே ஒரு பிராந்திய மோதலாகப் பார்க்க முடியாது. எத்தியோப்பியாவின் கூட்டாட்சி அரசியல் அமைப்பு, இன அடையாள அரசியல், பிராந்திய அதிகாரப் போட்டிகள், எரித்திரியாவுடனான உறவு மற்றும் மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலான அதிகாரப் பிரச்சினைகள் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன.

## டிக்ரே ஏன் முக்கியமானது?

டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி அல்லது TPLF, பல தசாப்தங்களாக எத்தியோப்பிய அரசியலில் மிகப்பெரிய தாக்கத்தை செலுத்திய அமைப்பாக இருந்தது. எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணியின் கீழ் TPLF முக்கிய சக்தியாக இருந்து வந்தது. பின்னர் அபி அகமது பிரதமராகப் பொறுப்பேற்றபோது, பழைய அரசியல் கூட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முயன்றார்.

இதன் பின்னணியில் மத்திய அரசுக்கும் TPLF-க்கும் இடையே ஏற்பட்ட அதிகார மோதல் 2020இல் முழுமையான போருக்கு வழிவகுத்தது. அந்தப் போரில் எத்தியோப்பிய தேசிய பாதுகாப்புப் படைகளுடன் எரித்திரியப் படைகளும் இணைந்தன. டிக்ரேவில் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடி உருவானது.

2022இல் எத்தியோப்பிய அரசு மற்றும் TPLF இடையே பிரிட்டோரியா அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் பெரிய அளவிலான போர் நிறுத்தப்பட்டாலும், போருக்குக் காரணமான பல அடிப்படை அரசியல் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை.

## புதிய ஆயுதக் கூட்டணி

தற்போதைய நிலைமையில் கவலைக்குரிய அம்சமாக இருப்பது, பிரதமர் அபி அகமது அரசுக்கு எதிராக முன்னர் ஒன்றுக்கொன்று எதிராக இருந்த சில ஆயுத அமைப்புகள் ஒரே அணியில் திரள்வதாகக் கூறப்படுவதுதான். ஒரோமோ விடுதலை இராணுவம் (OLA), அம்ஹாரா பிராந்தியத்தில் செயல்படும் ஆயுதக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நடவடிக்கைகள் மத்திய அரசுக்கு பாதுகாப்புச் சவால்களை ஏற்படுத்தி வருகின்றன.

இக்குழுக்களின் அரசியல் இலக்குகள் ஒன்றாக இல்லாவிட்டாலும், மத்திய அரசின் அதிகாரத்தை எதிர்ப்பது என்ற பொதுவான காரணம் அவற்றுக்கிடையே தற்காலிக ஒத்துழைப்பை உருவாக்கக்கூடியதாக உள்ளது.

முன்னாள் எதிரிகள் கூட ஒரே அரசியல் அல்லது இராணுவக் கூட்டணியில் சேரும் சூழல் உருவாகும்போது, தனித்தனி பிராந்திய மோதல்கள் தேசிய அளவிலான பாதுகாப்பு நெருக்கடியாக மாறும் அபாயம் அதிகரிக்கிறது.

## எத்தியோப்பிய இன அரசியல்

எத்தியோப்பியாவில் சுமார் 80க்கும் மேற்பட்ட இனக்குழுக்கள் உள்ளன. ஒரோமோ, அம்ஹாரா, டிக்ரே மற்றும் சோமாலி உள்ளிட்ட பெரிய இனக்குழுக்கள் நாட்டின் அரசியலில் முக்கிய பங்காற்றுகின்றன.

எத்தியோப்பியாவின் கூட்டாட்சி அமைப்பு பெருமளவில் இன அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் பிராந்திய அதிகாரம், நில உரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை இன அரசியலுடன் நெருக்கமாக இணைந்துள்ளன.

அபி அகமது 2018இல் பிரதமராக வந்தபோது, அரசியல் சீர்திருத்தங்களையும் தேசிய ஒற்றுமையையும் முன்னிறுத்தினார். ஆனால் அவரது அரசாங்கத்துக்கும் பல பிராந்திய அரசியல் இயக்கங்களுக்கும் இடையிலான உறவுகள் பின்னர் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

## அம்ஹாரா மோதலும் மற்றொரு சவாலும்

டிக்ரே பிரச்சினைக்கு அப்பால் அம்ஹாரா பிராந்தியத்திலும் ஆயுத மோதல்கள் எத்தியோப்பிய அரசுக்கு பெரும் சவாலாக உள்ளன. அம்ஹாரா ஆயுதக் குழுக்களுக்கும் மத்திய அரசுப் படைகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் பல உயிரிழப்புகளையும் இடம்பெயர்வுகளையும் ஏற்படுத்தியுள்ளன.

ஒரோமியா பிராந்தியத்திலும் நீண்டகாலமாக ஆயுத வன்முறை தொடர்கிறது. இதனால் எத்தியோப்பிய அரசாங்கம் ஒரே நேரத்தில் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

2020-2022 டிக்ரே போரில் எரித்திரியப் படைகள் முக்கிய பங்காற்றின. பின்னர் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டாலும், எரித்திரியா-எத்தியோப்பியா உறவு முழுமையாக நிலைத்தன்மையை அடையவில்லை.

செங்கடல் அணுகல் தொடர்பான எத்தியோப்பியாவின் விருப்பங்களும் எரித்திரியாவின் பாதுகாப்பு கவலைகளும் பிராந்திய அரசியலில் புதிய பதற்றங்களை உருவாக்குகின்றன. இதனால் டிக்ரே பிரச்சினை எத்தியோப்பியாவின் உள்நாட்டு அரசியலைத் தாண்டி, ஹார்ன் ஆஃப் ஆபிரிக்கா பிராந்தியத்தின் அதிகாரப் போட்டியுடனும் இணைகிறது.

## மீண்டும் 2020 போன்ற போர் வருமா?

ஒன்று இணைந்தால், மத்திய அரசின் பாதுகாப்புத் திறனுக்கு மிகப்பெரிய அழுத்தம் ஏற்படலாம்.

முக்கியமாக, 2022 அமைதி ஒப்பந்தத்தின் கீழ் தீர்க்கப்பட வேண்டிய அரசியல் கேள்விகள் நீடிப்பதும் ஆபத்தானதாக இருக்கிறது. டிக்ரேவில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், சர்ச்சைக்குரிய பகுதிகளின் நிர்வாகம், ஆயுதக் குழுக்களின் எதிர்கால நிலை, அரசியல் அதிகாரப் பகிர்வு போன்ற பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வு தேவைப்படுகிறது.

## மனிதாபிமான விளைவுகள்

எத்தியோப்பியா மீண்டும் பெரிய அளவிலான போரை எதிர்கொண்டால், அதன் தாக்கம் அரசியல் எல்லைகளைத் தாண்டிச் செல்லும். ஏற்கனவே பல ஆண்டுகளாக மோதல்கள், வறட்சி, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் இடம்பெயர்வு போன்ற பிரச்சினைகளை சந்தித்துவரும் மக்களுக்கு புதிய போர் மிகப்பெரிய மனிதாபிமான பேரழிவை ஏற்படுத்தக்கூடும்.

டிக்ரே போரின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை, பாலியல் வன்முறை, உணவு மற்றும் மருத்துவப் பற்றாக்குறை, பெருமளவிலான இடம்பெயர்வு போன்ற குற்றச்சாட்டுகள் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்தன. மீண்டும் போர் தீவிரமடைந்தால், அதேபோன்ற மனிதாபிமான நெருக்கடி உருவாகும் அபாயம் உள்ளது.

> **எத்தியோப்பியாவின் டிக்ரே பிராந்தியத்தில் மீண்டும் ஆயுத மோதல்கள் வெடித்துள்ள நிலையில், நாடு மீண்டும் உள்நாட்டுப் போருக்குள் சிக்குமா என்ற அச்சம் அதிகரித்துள்ளது. பிரதமர் அபி அகமது தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக ஏழு ஆயுதக் குழுக்கள் ஒன்றிணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, முன்னர் ஒன்றுக்கொன்று எதிராகப் போரிட்ட அமைப்புகள் தற்போது பொதுவான எதிரியாக மத்திய அரசைக் கருதி ஒரே அணியில் திரள்வது நிலைமையின் தீவிரத்தை அதிகரித்துள்ளது.**



தற்போதைய மோதல்கள் 2020-2022 போரைப் போலவே முழுமையான உள்நாட்டுப் போராக மாறும் என்று உறுதியாகக் கூற முடியாது. அதற்குத் தேவையான அரசியல் மற்றும் இராணுவ சூழ்நிலைகள் இன்னும் வேறுபட்டிருக்கலாம்.

ஆனால் பல பிராந்தியங்களில் ஒரே நேரத்தில் ஆயுத எதிர்ப்பு அதிகரிப்பது கவலைக்குரியது. குறிப்பாக டிக்ரே, அம்ஹாரா மற்றும் ஒரோமியா போன்ற பகுதிகளில் வன்முறை ஒன்றுடன்

எத்தியோப்பியா தற்போது முழுமையான புதிய உள்நாட்டுப் போரில் நுழைந்துவிட்டது என்று கூறுவதற்கு முன்பாக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஆனால் டிக்ரேவில் மீண்டும் உருவாகும் ஆயுத மோதல், அம்ஹாரா மற்றும் ஒரோமியாவில் தொடரும் வன்முறை, மத்திய அரசுக்கு எதிராக பல்வேறு ஆயுதக் குழுக்களின் ஒத்துழைப்பு மற்றும் எரித்திரியாவுடனான பதற்றம் ஆகியவை நாட்டின் நிலைத்தன்மைக்கு தீவிரமான சவால்களாக உள்ளன.

2022 அமைதி ஒப்பந்தம் எத்தியோப்பியாவின் போரை நிறுத்தியது. ஆனால் அதன் அடிப்படைக் காரணங்களின் அனைத்தையும் தீர்க்கவில்லை. எனவே தற்போதைய நெருக்கடியின் முக்கியமான கேள்வி, மீண்டும் போர் வருமா என்பதைக் காட்டிலும், மீண்டும் பெரிய போர் உருவாகாமல் தடுப்பதற்கான அரசியல் பேச்சுவார்த்தையை எவ்வாறு உருவாக்குவது என்பதாகும்.

டிக்ரேவில் வெடித்துள்ள புதிய மோதல், எத்தியோப்பியாவின் எதிர்காலம் ஆயுத சக்தியால் தீர்மானிக்கப்படுமா அல்லது அரசியல் சமரசத்தின் மூலம் தீர்மானிக்கப்படுமா என்ற மிகப்பெரிய கேள்வியை மீண்டும் முன்வைக்கிறது.

# திருவிழாக்களில் திரளும் மக்களும் நீதிக்காகத் திரளாத மக்களும்?

19.09.2026

செம்மணிப் மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணையைக் கேட்டு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான “தமிழ்த் தேசியப் பேரவை” என்று அழைக்கப்படுகின்ற கட்சிகளின் கூட்டு யாழ்ப்பாணத்தில் ஒரு பேரணியை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை நோக்கி சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்கிலான ஒரு பேரணி அது.

யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள ஐநா மாவட்ட அலுவலகத்தில் இருந்து தொடங்கி கிட்டுப் பூங்காவரையும் அந்தப் பேரணி இடம்பெற்றது. பின்னர் ஒரு பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்த தலைவர்களும். ஒரு மதகுருவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடும் அமைப்பைச் சேர்ந்த ஓர் அம்மாவும் நிலமீட்புக்காக போராடும் அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் பேசினார்கள்.




ஊர்வலத்தில் 2000க்கும் குறையாதவர்கள் கலந்து கொண்டார்கள். பேரணியின் முன்னணியில் எலும்புக்கூடு போல ஆடை அணிந்த நான்கு பேர் காணப்பட்டார்கள். அந்த எலும்புக் கூட்டு ஆடை தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தினால் வெளி நாடு ஒன்றிலிருந்து தருவிக்கப்பட்டது. புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழர் ஒருவர் அதை வாங்கிக் கொடுத்திருக்கிறார். அண்மை மாதங்களாக செம்மணியை முன்னிறுத்தி தமிழ் மக்கள் நீதிகேட்டு முன்னெடுக்கும் போராட்டங்கள் பெரும்பாலானவற்றில் இவ்வாறாக கலையம்சங்கள் இணைக்கப்படுவது நல்ல விடயம்.

கடந்த 30ஆம் திகதி தந்தை செல்வா கலையரங்கில் நடந்த அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நினைவு நாள் நிகழ்விலும் சில ஏற்பாடுகள் கலைத்துவமாக இருந்தன. அதுபோலவே லண்டனில் நடந்த ஒரு போராட்டமும் கலைத்துவமாக சிந்திக்கப்பட்டிருந்தது. இது ஒரு நல்ல முன்னேற்றம். தமிழ் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை இயன்ற அளவுக்கு கலைப் பெறுமதி மிக்கவைகளாகத் திட்டமிடுவது.

சிங்கள மக்கள் சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய தன்னெழுச்சிப் போராட்டங்களில் குறிப்பாக காலிமுகத் திடலில் அமைத்த “கோட்டா கோ கம” கிராமத்தில் சிங்கள மக்களுடைய கலையுணர்வு அற்புதமாக வெளிப்பட்டது. ஒரு மக்கள் போராட்டத்தை; அரசுக்கு எதிரான போராட்டத்தை எப்படி கலையாக வெளிப்படுத்த முடியும் என்பதற்கு அது இந்த பிராந்தியத்திலேயே ஒரு முக்கிய முன்னுதாரணம்.




தமிழ் மக்களும் சளைத்தவர்கள் அல்ல. ஏற்கனவே சில தசாப்தங்களுக்கு அன்பு தமிழ் மக்களின் எழுச்சியை வெளிப்படுத்திய “பொங்கு தமிழ்” நிகழ்வுகள் கலையாம்சம் பொருந்தியவைதான். அவை “அரங்கச் செயற்பாட்டுக் குழு” என்று அழைக்கப்படுகின்ற ஓர் அமைப்பினால் பெருவெளி நாடகங்களாக திட்டமிடப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் உச்சம் எனலாம். அரங்கச் செயற்பாடாகத் தொடங்கி பின்னர் பெருந்திரள் வெகுஜன அரசியல் நடவடிக்கையாகப் பரிணமித்த ஒரு கலை, பண்பாட்டு, அரசியல் முன்னெடுப்பு அது.

எனினும் கடந்த 17ஆண்டுகளாக கட்சிகள் செயற்பாட்டாளர்கள் மக்கள் அமைப்புகள் போன்றவற்றின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் படைப்புத் திறன் ஒப்பிட்டுளவில் குறைவாக இருந்தது. குறிப்பாக அரசியல் கைதிகளுக்கான போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் போன்றவற்றில் ஒப்பீட்டளவில் கலையம்சங்கள் இருந்தன. கடந்த ஆண்டு செம்மணியில் நடந்த “அணையா விளக்கு” போராட்டத்திலும் கலை பண்பாட்டுணர்வு வெளிப்பட்டது.

அண்மைக் காலங்களில் போராட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் கலை வெளிப்பாடுகளாகச் சிந்திக்கும் ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. அதை வரவேற்க வேண்டும். கவன ஈர்ப்பு என்பது தெருக்களின் ஓரங்களில் நின்று அல்லது மக்கள் கூடும் சந்திகளில் நின்று சுலோக அட்டைகளை ஏந்தியபடி கோஷங்களை எழுப்புவது மட்டும்ல்ல. அதற்குமப்பால் எதிர்ப்பை எந்த அளவுக்கு காலியாக வெளிப்படுத்தலாம் என்பது முக்கியம். ஏனென்றால் கலைப் பெறுமதி மிக்க, படைப்புத்திறன் மிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் வெகு சனங்களைக் கவர்ந்து இழுக்கின்றன் ஊடகங்களின் கவனத்தையும் வெளிநாடுகளின் கவனத்தையும் கவர்ந்து இழுக்கின்றன. படைப்புத்திறன் மிக்க போராட்டங்களுக்கு வழமையான போராட்டங்களை விடவும் ஈர்ப்பு அதிகம்.

பாடசாலைகளுக்கு இடையிலான, நாடுகளுக்கு இடையிலான, விளையாட்டுப் போட்டிகளில் குறிப்பாக கிரிக்கெட்டில் “பிக் மட்ச்”களின் போது இரண்டு அணிகளையும் சேர்ந்த ரசிகர்கள் ஆடிப்பாடிக் கூத்தாடுவார்கள். அந்த ஆட்டம் பாட்டங்களில் தாளலயம் இருக்கும். மேளங்கள், இசைக் கருவிகள் இருக்கும். ரசிகர்களை இசை ஒரு மையத்தில் இணைத்து வைத்திருக்கும். அப்படித்தான் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் கலையம்சம் பொருந்திய நடவடிக்கைகள் போராட்டக்காரர்களை ஒரு மையத்தில் இணைக்கின்றன. வெளியில் இருந்து பார்க்கும் பார்வையாளர்களை தங்களின் நோக்கி ஈர்க்கின்றன.

இந்த அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கலையம்சங்கள் இணைக்கப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டும். அந்த பேரணியானது கைலாசப் பிள்ளையார் கோவிலில் இருந்து தொடங்கி நல்லூர் வீதி வழியாக கிட்டுப் பூங்காவை வந்தடைந்தது. அதற்கு முதல் நாள்தான் நல்லூர் திருவிழா முடிவடைந் திருந்தது. நல்லூர் சூழலில் பந்தல்களும் கடைகளும் அகற றப்பட்டிராத வீதிகளின் வழியே ஊர்வலம் நகர்ந்து வந்தது. இந்த இடத்தில் நல்லூர் தேர் திருவிழாவையொட்டி முகநூலில் பகிரப்பட்ட ஓர் ஒப்பீட்டை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் பிரம்மாண்டமான சனத்தொகையைத் திரட்டக் கூடிய சக்தி இரண்டு பேர்களுக்கு இருந்தது என்றும். “முதலாவதாக வேலை கையில் வைத்திருக்கும் முரகப் பெருமானுக்கும், இரண்டாவதாக வேலுப்பிள்ளையார் பெற்றெடுத்த மகனுக்கும் மட்டும்தான் இருந்தன” என்று அந்தப் பதிவு கூறுகிறது. அந்தப் பதிவின் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கோவிலின் ஒரு பகுதியைச் சுற்றிக் கொண்டு போன அந்த ஊர்வலமானது பிரம்மாண்டமானது இல்லைத்தான். அதில் இரண்டாயிரத்துக்கும் குறையாதவர்கள் பங்குபற்றினார்கள்.

கடந்த 17 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய சில நடவடிக்கைகளில் மட்டும்தான் மக்கள் அதிகமாகத் திரண்டிருக்கிறார்கள். குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிவண்டி வரையிலுமான பேரணியைச் சுட்டிக் காட்டலாம். அடுத்ததாக, இரண்டு “எழுக தமிழ்களைச்”சுட்டிக் காட்டலாம். இவைதவிர, தேர்தல் திருவிழாக்களின்போது கட்சிகள் காசைக் கொட்டி, வாகனங்களை விட்டு, ஜனங்களை அள்ளிக்கொண்டு வருகின்றன. அங்கேயும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவதுண்டு.

இவைதவிர,வழமையான கவன ஈர்ப்பு நடவடிக்கைகளின் போது அல்லது அரசுக்கு எதிரான பேரணிகளின்போது பெருந்திரள் மக்களைக் காண முடிவதில்லை, பெருந்திரள் மக்களை ஒரு மையத்துக்குக் கொண்டு வருவது என்று சொன்னால் முதலாவதாக மக்களோடு நேரடியாகத் தொடர்புடைய கட்டமைப்புகள் இருக்கவேண்டும். இரண்டாவதாக, அதற்கு ஒரு “பட்ஜெட்” உண்டு. காசு இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் காசு வேண்டும்.

ஒரு காலம் இருந்தது, தொழிற்சங்க உறுப்பினர்கள் சந்தாப் பணம் செலுத்தி தொழிற்சங்கத்தின் பொது நிதியை பலப்படுத்துவது என்ற ஒரு போக்கு. அல்லது தொண்டர்கள் தாமாக முன வந்து தங்களுடைய உழைப்பைத் தியாகம் செய்து அர்ப்பணிப்போடு வேலை நேரத்தில் போராட்டங்களில் ஈடுபடுவார்கள். போராட்டங்களில் ஈடுபட்டதாலேயே வேலைகளை இழப்பார்கள். அது ஒரு காலம். இப்பொழுது “வொலன்டியர்ஸ்”. தன்னார்வலர்கள் என்று வருபவர்களுக்குக் காசு கொடுக்க வேண்டும். தேர்தல் நடவடிக்கைகளின் போதும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் காசு கொடுக்க வேண்டும் சுவரொட்டிகளைக் கிழிப்பதற்கும் காசு கொடுக்க வேண்டும். இது உலகப் பொதுவான ஒரு போக்கு. அரச சார்பற்ற நிறுவனங்களின் எழுச்சிகளின் பின்னணியில் “வொலன்டியரிசம்” எனப்படுவது காசு கொடுத்துச் செய்வதாக மாறிவிட்டது.

இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள், ஊர்வலங்களுக்கு ஆட்களை அழைத்துக் கொண்டு வரும்போது முதலாவதாக பயண ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்பின் அவர்களுக்குச் சிற்றுண்டிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்குச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சிலசமயம் தங்குமிடத்துக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாமே செலவுதான். எல்லாமே காசுதான். காசு இல்லை என்றால் போராட்டம் இல்லை என்ற ஒரு நிலை. இதை மறுவளமாகத் திருப்பிக் கேட்டால், காசை அள்ளிவீசத் தயாராக இருப்பவர்கள் துணிந்து அரசியலில் இறங்கலாமா?

இப்படிப்பட்டதோர் சமூகப்பொருளாதார, அரசியல் பின்னணிக்குள், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியானது, பிரம்மாண்டமானது இல்லையென்றாலும் பொருத்தமான நேரத்தில், பொருத்தமான எதிர்ப்பை அது வெளிப்படுத்தியது என்பது உண்மை. இது ஜெனிவா கூட்டத் தொடரின் காலம். 63ஆவது ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணிகள் கடந்த சனிக்கிழமை ஜனநாயகத் தமிழ்க் தேசிய கூட்டமைப்பு சாவகச்சேரியில் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியது. இரண்டு ஆண்டு கால அனுர ஆட்சிக்கு எதிராக அந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதுவும் சிறிய அளவிலான ஒரு கவன ஈர்ப்புப் போராட்டம்தான். அங்கேயும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரளவில்லை.

அதுபோலவே அதே நாளில், வெடுக்கு நாறி மலையயில், பிக்குகள் தலைமையில் ஒரு வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பில் தமிழ் மக்கள் எதிர்ப்புக் காட்டக்கூடும் என்று எதிர்பார்ப்போடு போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் அங்கே காணப்பட்டார்கள்.

தமது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தமது தலைமுறைகளின் எதிர்கால வாழ்வையும் தீர்மானிக்கக்கூடிய தமது அரசியலைக் குறித்து தமிழ் மக்கள் உணர்திறன் குறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதனை இவை காட்டுகின்றன. பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலும் கழிப்பூட்டும் நிகழ்வுகளிலும் ஆயிரக்கணக்கில் திரளும் தமிழ் மக்கள், பெருந் திருவிழாக்களில் இலட்சக்கணக்கில் திரழும் தமிழ்மக்கள், ஏன் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அரசியல் நடவடிக்கைகளில் சிலசமயம் நூற்றுக்கணத்தில் கூடத் திரள்வதில்லை? முரகனும் வேலுப்பிள்ளையாரின் மகனும்தான் இந்த மக்களைத் திரட்டலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டாமல், தமிழ் மக்கள் ஓர் அரசுபோல சிந்தித்துச் செயற்படாமல், நீதிக்கான போராடத்தில் உலக அரசுகளை எப்படித் திரட்டுவது?

நன்றி: நிலாந்தன்



# தமிழீழ விடுதலை வரலாற்றில் அக்டோபர்



### மாவீரன் பண்டாரவன்னியன் நினைவுக்கல் – 31.10.1803








ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து இறுதிவரை போராடி வீரச்சாவடைந்த வன்னிக் குறுநில மன்னன் பண்டாரவன்னியனுக்கு ஆங்கிலேத் தளதபியே இறுதி மரியாதை செலுத்தி உள்ளான். கப்டன் வொன் றிபேக் என்ற தளபதி பண்டாரவன்னியனைத் தோற்கடித்த நிகழ்சியினை இந்நடுகல் நாட்டுகின்றது. இவ் நடுகல் கற்சிலைமடுவில் உள்ளது. தற்போது சிங்ள படைகளால் உடைத்து அழிக்கப்பட்டுள்ளது.

### சிங்கள இராணுவத்தின் மீதான முதல் தாக்குதல்



15.10.1981 அன்று யாழ். காங்கேசன்துறை வீதியில் வைத்து சிறீலங்காத் தரைப்படை மீது முதல் முதலாக விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது இரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லெப். கேணல் விக்டர் அவர்களின் 40ஆவது ஆண்டு வீரவணக்கம்



விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லெப். கேணல் விக்டர் (மருசலீன் பியூஸ்லஸ், பனங்கட்டிக்கொட்டு - மன்னார், பிறப்பு: 24.11.1963). இயக்கத்தின் தலைசிந்த போர்த் தளபதிகளில் ஒருவராவார், மன்னார் பிராந்திய தளபதியகாக பணியாற்றிய அவர், அடம்பனில் சிறீலங்கா சிங்களப் படையினருடன் ஒரு வரலாற்றுச் சண்டையின் போது 12.10.1986 அன்று வீரச்சாவடைந்தார்.

### இந்தியா – சிறீலங்கா கூட்டுச் சதியில் பன்னிரு வேங்கைகள் வீரச்சாவு



இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், நிராயுத பாணிகளாக தமிழீழத்தின் வடகடற் பிராந்தியத்தில் பயணம் செய்த யாழ். மாவட்டத்த தளபதி லெப். கேணல் குமரப்பா (பாலசுதந்தரம் இரத்தினபாலன், வல்வெட்டித்துறை, பிறப்பு: 27.05.1957), திருமலை மாவட்டத் தளபதி லெப். கேணல் புலேந்திரன் (குணநாயகம் தருமராஜா, திருகோணமலை, பிறப்பு: 07.06.1961), மேஜர் அப்துல்லா, கப்டன் நளன், கப்டன் மிரேஸ், கப்டன் பழனி, கப்டன் கரன், கப்டன் ரகு, லெப்டினன்ட் அன்பழகன், லெப்டினன்ட் தவக்குமார், 2ம் லெப்டினன்ட் ஆனந்தகுமார், 2ம் லெப்டினன்ட் ரெஜினோல்ட் உட்பட 12 வேங்கைகளை 03.10.1987 அன்று சிறீலங்காக் கடற்படை கோழைத் தனமான வகையில் கைது செய்தது. ஒப்பந்தத்திற்கு முரணாக சிங்கள அரசு இந்திய அரசின் ஒத்துழைப்போடு இவர்களை விசாரணை செய்ய முற்பட்ட வேளையில் 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரகாவியம் படைத்தனர்.

### இந்திய இராணுவத்திற்கெதிரான புலிகளின் முதற் தாக்குதல்



தமது ஆதிக்க நலன்களுக்காக ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழீழத்தினை ஆக்கிரமித்த இந்தியப்படைகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் 10.10.1987 அன்று முதற் தாக்குதலைத் தொடுத்தனர்.

### தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதி அவர்கள் வீரச்சாவு – 10.10.1987



இந்திய இராணுவத்தை எதிர்த்து கோப்பாயில் இடம்பெற்ற சமரின் போது 2ஆம் லெப். மாலதி (சகாயசீலி பேதுரு, ஆட்காட்டிவெளி – மன்னார், பிறப்பு: 01.01.1967) வீரச்சாவடைந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தல் முதன் முதல் வீரச்சாவடைந்த பெண்புலி இவராவார். இவரது நினைவு நாள் 10.10.1987 ஆகும்.

### இந்தியப் படைகளினால் கொக்குவில் பிரம்படிப் படுகொலை




ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டத்தில் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 12.10.1987 அன்று தரை இறங்கிய இந்திய இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து பொது மக்களை சுட்டும் யுத்த ராங்கியினால் ஏற்றியும் படுகொலை செய்தனர். இதில் 40 பொது மக்கள் பலியாகினர்.

### இந்திய அதிகாரி கேணல் பிரார் மேற்பார்வையில் யாழ். போதனா வைத்திய சாலைப் படுகொலை



ஜே. ஆர். ஜெயர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள், தாதிமார்கள், பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் இந்திய அமைதிப் படையால் 21 - 22.10.1987 ஆகிய திகதிகளில் கண்மூடித்தனமாக சுடப்பட்டனர். இந்திய அமைதிப்படைகளின் கேணல் பிரார் என்ற இந்திய அதிகாரியின் மேற்பார்வையில் இப் படுகொலை நடந்தது. இதில் ஊழியர்கள் உட்பட 68 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

### ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் சாவகச்சேரிப் புதிய சந்தைப் படுகொலை:



ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 27.10.1987 அன்று இந்திய அமைதிப்படையால் யுத்த உலங்குவானூர்திகளில் சாவகச்சேரி புதிய சந்தைப் பகுதிக்குச் சென்று அங்கு கூடியிருந்த அப்பாவி தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் முப்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 76ற்கு மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

### ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் சாவகச்சேரி படுகொலை:



ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 28.10.1987 அன்று சிறிய பேருந்து ஒன்றில் பயணம் செய்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டை நடத்தியது. இதில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 16 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

### லெப். கேணல் சந்தோசம் அவர்களின் 39ஆம் ஆண்டு வீரவணக்கம்



விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லெப். கேணல் சந்தோசம் மாஸ்டர் (கணபதிப்பிள்ளை உமைநேசன், அரியாலை - யாழ்., பிறப்பு: 04.01.1959), திருகோணமலை பிராந்தியத் தளபதியாகப் பணியாற்றினார். திருகோணமலையில் புலிகள் இயக்கம் வேரூன்றி வளர மூல காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர். கோண்டாவில் பகுதியில் இந்தியப் படைக்கொதிரான சண்டையின் போது 21.10.1987 அன்று வீரச்சாவடைந்தார்.

### லெப். கேணல் நாதன் மற்றும் கப்டன் கஜன் பிரான்ஸ் நாட்டில் சிறீலங்கா அரசு சூழ்ச்சியால் படுகொலை



லெப். கேணல் நாதன் (கந்தையா பேரின்பநாதன், அரியாலை - யாழ்., பிறப்பு: 17.11.1964) எமது விடுதலை இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவராவர். நேர்மையும், கண்ணியமும் மிக்க இவர், விடுதலை இலட்சியத்தில் அசையாத உறுதி கொண்டவர். நீண்டகாலமாக அனைத்துலக நிதிதிரட்டும் பெரும் பொறுப்பைச் சுமந்து உலகெங்கும் உழைத்தார். சிறீலங்கா ஆட்சியாளரின் சூழ்ச்சியால் அரச பயங்கரவாத அரூபகரங்களின் செயலால் பாரிசில் "ஈழமுரசு" பத்திரிகை ஆசிரியர் கப்டன் கஜனும் இவரும் 26.10.1994 அன்று வீரச்சாவடைந்தனர்.

## கடற் கரும்புலிகளான மேஜர் அருமை, கப்டன் தணிகை ஆகிய மாவீரர்களின் 31ஆம் ஆண்டு வீரவணக்கம்







02.10.1995 அன்று மூன்று தரையிறங்கு கப்பல்கள், மூன்று "டோறா" அதிவேக பீரங்கிப் படகுகள் ஆகியவற்றின் துணையுடன் சிங்களக் கடற்படை மேற்கொண்ட விநியோக நடவடிக்கை மீது தாக்குதல் மேற்கொண்டனர் கடற்கரும்புலிகள். இத்தாக்குதலின் போது "டோறா" அதிவேக பீரங்கிப் படகொன்றினை மூழ்கடித்து மேஜர் அருமை (செல்லத்துரை விஜயானந்தன், கிளிநொச்சி, பிறப்பு: 23.12. 1972), கப்டன் தணிகை (கணபதிப்பிள்ளை வதனா, சுண்டுக்குழி - யாழ், பிறப்பு: 13.07.1976) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

## லெப். கேணல் ஜீவன் [ஆசிம்] அவர்களின் 31ஆம் ஆண்டு வீரவணக்கம்




03.10.1995 அன்று விடுதலைப்புலிகளின் முதன்நிலை உறுப்பினர்களில் ஒருவரான மருத்துவத் துறைப் பொறுப்பில் சிறப்பாக பணியாற்றியவர் லெப். கேணல் ஜீவன் (அருளப்பு ஜேம்ஸ் குருஸ், பெரியபண்டிவிரிச்சான, வங்காலை - மன்னார், பிறப்பு: 09.11.1965) வலிகாமம் மேற்கில், சிங் களப் படையினரின் இடிமுழக்கம் தாக்குதலுக்கு எதிரான தாக்குதல் அச்சுவேலிப் பகுதியில் முன்னகர்ந்து நிலைகொண்டிருந்த சிறீலங்காப் படையினர் மீதான ஊடறுப்புத் தாக்குதலின் போது 03.10.1995 அன்று வீரச் சாவடைந்தார்.

## தமிழர்களக்கு எதிரான சிங்கள இராணுவத்தின் சூரியக்கதிர் நடவடிக்கை ஆரம்பநாள் – 17.10.1995



தமிழர்களக்கு எதிரான சிங்கள இராணுவத்தின் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் ஆரம்பநாள் (17.10.1995) யாழ். நகரைக் கைப்பற்றும் இலக்கைக் கொண்ட இந்த நடவடிக்கையின் போது வலிகிழக்கில் உக்கிரமான பெரும் சமரில் (70 சிறீலங்காப் படையினர் பலி, 7 அதிகாரிகள் உட்பட 150 பேர் காயம். ஒரு டாங்கி, இரண்டு கவச வாகனங்கள் அழிப்பு).

## திருகோணமலை துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல்










சிங்களக் கடற்படைக்கு பெரும் பலமாக விளங்கிய போர்க் கப்பல்கள் உச்சப்பாதுகாப்புடன் விளங்கும் திருகோணமலை துறைமுகத்தில் வைத்து 17.10.1995 அன்று கடற்கரும் புலிகளால் சிதறடிக்கப்பட்டன. மேஜர் சிவசுந்தர் (சித்திரவேல் இராமச்சந்திரன், உப்புவெளி - திருமலை, பிறப்பு: 12.12.1974) டோறாப் படகினையும், கப்டன் ரூபன் (சுப்பிரமணியம் சுதர்சன், செங்கலடி - மட்டு, பிறப்பு:09.07.1973) தரையிறக்கும் கப்பலையும், கப்டன் சிவகாமி (இராஜகுமாரி சண்முகலிங்கம், மயிலிட்டி - யாழ்., பிறப்பு: 01.01.1975) அதிவேக துரப்புக்காவி கப்பலையும் ஒரே நேரத்தில் மூழ்கடித்து ஒரு பெரும் தடை நீக்கி வீரவரலாறாகினர்.

## சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இணுவில் படுகொலை



சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டத்தின் இணுவில் பகுதியில் இடம்பெயர்ந்து முகாம்களில் இருந்த பொதுமக்கள் 18.10.1995 அன்று சிறீலங்கா இராணுவத்தின் விமானக் குண்டுவீச்சுக்கு அஞ்சி பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்திருந்த வேளை இராணுவத்தின் புக்காரா விமானம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 09 சிறுவர்கள் உட்பட 11 பேர் பதுங்கு குழியிலேயே பலியாகினர்.

## லெப். கேணல் சந்திரகாந்தன் அவர்களின் 29ஆம் ஆண்டு வீரவணக்கம்



தமிழீழம் மீதான பெரும் படையெடுப்பான ஜெயசிக்குறு சமர்களத்தில் எதிரிக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த லெப். கேணல் சந்திரகாந்தன் (அழகிப்போடி, சிவா, அரசடித்தீவு, கொக்கொட்டிச்சோலை - மட்டக்களப்பு, பிறப்பு: 22.05.1971), சமரின் ஆரம்பகாலம் தொட்டு புலிகள் சேனையில் சிறந்த தள பதியாகக் களத்தில் செயலாற்றினார். 13.10.1997 அன்று பெரியமடுப் பகுதியில் ஜெயசிக்குறு நட வடிக்கையில் சிறீலங்கா படையினரால் அமைக்கப்பட்டிருந்த படை முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.



## சிறீலங்கா கொழும்பு கொலன்னாவ எண்ணெய் குதம் மீது தாக்குதல் – 25.10.1995



சிறீலங்காவின் கொலன்னாவ எண்ணெய் குதங்களில் கொழும்பை திகிலூட்டிய பெரும் தீ. 10 விமானப் படையினர் உட்பட 2 ஆயுதப் படையினர் பலியாகினர்.

## 14.10.1999 அன்று கொக்கிளாய் கடற்பரப்பில் சிங்களக் கடற்படையினருடனான மோதலின்போது ஏற்பட்ட விபத்தில் கடற்கரும்புலி லெப். கேணல் அருந்தவன், கடற்கரும்புலி லெப். கேணல் புவனேஸ் உட்பட 6 கடற்கரும் புலிகளின் 27ஆவது ஆண்டு வீரவணக்கம்.



















14.10.1999 அன்று கொக்கிளாய் கடற்பரப்பில் சிங்களக் கடற்படையினருடனான மோதலின்போது ஏற்பட்ட விபத்தில் கடற்கரும்புலி அருந்தவன் (கிருஸ்ணபிள்ளை உதயகுமார், பெண்டகள் சேனை, கிரான் - மட்டு, பிறப்பு: 09.11.1974), கடற்கரும்புலி லெப். கேணல் புவனேஸ் (ரெங்கையா யோகேந்திரன், பாவற்குளம் - வவுனியா, பிறப்பு: 10.08. 1971) உட்பட கடற்கரும்புலிகளான மேஜர் பரணி (சூரியயோகானந்தன் அமர்நாத், மயிலிட்டி - யாழ்., பிறப்பு: 14.11.1982), மேஜர் கலைமகள் (அரியகுட்டி கலைமதி, அச்சுவேலி தெற்கு - யாழ்,, பிறப்பு: 26.07. 1972), மேஜர் சூரியப்பிரபா (அல்போன்ராஜா ஜான்சிராணி, இளவாலை - யாழ்., பிறப்பு: 01.04. 1972), கப்டன் சுதாகரன் (இராசநாயகம் பிரசன்னா, முத்துவிநாயகர் வீதி, நல்லூர் - யாழ்., பிறப்பு: 28.01.1980) ஆகியோர் வீரச்சாவதைத் தழுவிக்கொண்டார்கள்.

## புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் ரோறா அதிவேகப் பீரங்கிப்படகு மீதான கடற்கரும்புலித் தாக்குதல்







18.10.1999 அன்று புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் டோறா அதிவேகப் பீரங்கிப்படகு மீதான கடற்கரும்புலித் தாக்குதலினை மேற்கொண்டு மேஜர் திருமாறன்/சிறி (கணேசப்பிள்ளை ரவிச் சந்திரன், காரைநகர் - யாழ்., பிறப்பு: 05.09.1970) கப்டன் சின்னவன் (நந்தகோபலன் சுரேஸ், கொக்கு வில் கிழக்கு - யாழ்., பிறப்பு: 25.06.1979) ஆகிய கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர். மேஜர் திருமாறன் ஓர் போராளி கலைஞர் ஆவார். "ஒளி படைத்த கண்" என்னும் குறும்படத்தில் முக்கிய பத்திரம் ஏற்று நடித்தவர். நிதர்சனம் ஆவணப் பிரிவுப் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர்.

## சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இனவெறிப் படுகொலை!



சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கையின் பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துநுவேவ தடுப்பு முகாமினுள் 25.10.2000 அன்று கத்தி, பொல்லு, துப்பாக்கிகளுடன் நுழைந்த 1500 க்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் முகாமினுள் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களை அடித்தும், வெட்டியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் தாக்கினர். இதில் 29 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40 இளைஞர்கள் படுகாயம் அடைந்தனர்.

## சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அரியாலைப் படுகொலை!



சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் அரியாலைப்பகுதியில் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த தமிழ்ப் பொதுமக்கள் மீது 26.10.1996 அன்று சிறீலங்கா விமானப்படையின் மிகை ஒலி வேக விமானங்கள் தாக்கியதில் 10 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் அவர்களின் வீடுகள், உடமைகள் அழிக்கப்பட்டன.

## ஈழ வரலாறு காணாத யாழ் இடப்பெயர்வு:



30.10.1995 அன்று யாழ் மாவட்டத்தின் வலிகாமப் பகுதியில் இருந்து தென்மராட்சி பகுதி நோக்கி பல இலட்சக்கணக்கான மக்கள் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிற்கு அஞ்சி இரவு பகலாக உணவு, நீர் எதுவுமின்றி, தமது உடமைகள் சிலவற்றுடன் இடம்பெயர்ந்தனர். இவ்விடப்பெயர்வு ஈழத்தின் வரலாறு காணாத ஒன்றாகக் கருதப்படுகிறது.

## 29.10.1995 அன்று யாழ். அளவெட்டிப் பகுதியில் அமைந்திருந்த சிறீலங்கா படையினரின் ஆட்டிலறி ஏவுதளங்களை இலங்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 11 தரைக் கரும்புலிகள் வீரச்சாவு

யாழ். அளவெட்டி பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆட்டிலறி ஏவதளநினைகள் மீது ஊடுருவி நடத்திய கரும்புலித் தாக்குதலில் கப்டன் ஈழவன் (திருச்செல்வம் றொபேட்சன், நவாலி தெற்கு - யாழ்., பிறப்பு: 23.07.1973), கப்டன் தினகரன் (கணபதிப்பிள்ளை இராமணேஜ்வரன், திராய்மடுக்கொலனி - மட்டு, பிறப்பு: 01.01.1971), கப்டன் அகத்தி (இராமநாதன் நடராசா, கல்முனை - அம்பாறை, பிறப்பு: 25.10.1970), கப்டன் சிறைவாசன் (நாராயணப்பிள்ளை விக்கினேஸ்வரன், கொக்குவில் - மட்டு, பிறப்பு: 19.09.1974), லெப். கலைச்செல்வன் ஆறுமுகம் சந்திரகுமார், அவிசாவளை - மட்டு, பிறப்பு: 13.08.1974), லெப். வேணுதாஸ் (கந்தப்பொடி, தர்மன், கொக்கட்டிச்சோலை - மட்டு, பிறப்பு: 22.01.1973), லெப். நளினன் (திசநாயகம் உதயதாசன், தம்புலுவில் - அம்பாறை, பிறப்பு: 27.11.1976), லெப். தொண்டன் (இராசரத்தினம் கிருஷ்ணராஜ், சாவகச்சோரி - யாழ்., பிறப்பு: 16.04.1976), லெப். சசிக்குமாரன் (செல்வராசா றொபின்சன், ஆனந்தபுரம் - கிளிநொச்சி, பிறப்பு: 06.05.1977), லெப். தங்கத்துரை (விவரத்தினம் காந்தரூபன், வசாவிளான் - யாழ்., பிறப்பு: 02.08.1976), 2ஆம் லெப். இசைச் செல் வன் (நாகராசா சண்முக சீலன், பண்டத்தரிப்பு - யாழ்., பிறப்பு: 01.01.1978) உட்பட 11 கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.


































## திருகோணமலை துறைமுக நுழைவாயிலில் டோறா அதிவேகப் பீரங்கிப் படகு மூழ்கடிப்பு







25.10.1996 அன்று திருகோணமலைத் துறைமுகக் கடற்பரப்பின் நுழைவாயிலில் சிறீலங்கா கடற்படையின் டோறா அதிவேகப் பீரங்கிப் படகினை மூழ்கடித்து மேஜர் நளினன் (தெய்வேந்திரம் யோகேஸ்வரன், மூதூர் - திருமலை, பிறப்பு: 12.12.1975), கப்டன் ஜெயராஜ் (கந்தசாமி கோபாலகிருஷ்ணன், காரைநகர் - யாழ்., பிறப்பு: 07.04.1975) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

## லெப். கேணல் அகிலா அவர்களின் 31ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் முதன்நிலை உறுப்பினர்களில் ஒருவரான லெப். கேணல் அகிலா (சோமசேகரம் சத்தியதேவி, கோப்பாய் - யாழ்., பிறப்பு: 25.12.1969). இயக்கப் புலனாய்வுத்துறையின் மகளிர்பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றினவர். சூரியக்கதிர் சிறீலங்காப் படையெடுப்புக்கெதிரான சமரில் பங் கேற்று நீர்வேலிச் சமர்முனையில் 30.10.1995 அன்று வீரச்சாவடைந்தார்.

## கரும்புலி மேஜர் செங்கதிர்வாணன் அவர்களின் 27ஆம் ஆண்டு வீரவணக்கம்




29.10.1999 அன்று மணலாறுப் பகுதியில் சிறீலங்கா படையினருடான திடீர் நேரடி மோதலில் மேஜர் செங்கதிர்வாணன் (நடராசா நடேஸ்வரன், சிவபுரி - திருகோணமலை, பிறப்பு: 23.12.1973) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

## கரும்புலி மேஜர் நிலவன் அவர்களின் 28ஆம் ஆண்டு வீரவணக்கம்




கடற்கரும்புலிகளின் வரலாற்றில் புதியதொரு இராணுவப் பரிமானத்தை வெளிக்காட்டிய கரும்புலி மேஜர் நிலவன் (சூரியகுமார் திலீபன், கோப்பாய் – யாழ்., பிறப்பு: 20.11.1976) தன் உள்ளத்து நெருப்பை நெருப்பு வார்த்தைகளால் கொட்டும் கவிஞனுமாவார். இவர் சீனங்குடா, ஆனையிறவுத் தளங்கள் மீதான கரும்புலித் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியவர். ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது 14.10.1998 அன்று வீரச்சாவடைந்தார்.

## லெப். கேணல் அக்பர் அவர்களின் 20ஆவது ஆண்டு வீரவணக்கம்



லெப். கேணல் விக்டர் விசேட கவச எதிர்ப்புப் பிரிவின் தளபதியும், தமிழீழ தேசியத் துணைப்படையின் வடபோர்முனைக் கட்டளைத் தளபதியுமான லெப். கேணல் அக்பர் (அல்பா -1 குறியீட்டுப்பெயர்) (வீரபத்திரன் பேரின்பராசா, கதிரவெளி - மட்டு, பிறப்பு: 30.03.1973) அவர்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றில் எதிரியை அழிக்கும் பல தாக்குதல்களைத் தலைமை தாங்கி நடத்தியவர். எதிரியின் கவசப் படையணியை உடைத்தெறியும் பணியில் பல சாதனைகள் படைத்தவர். 07.10.2006 அன்று வட போர்முனைப் பகுதியில் (முகமாலை) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

## 22.10.2007 அன்று அநுராதபுரம் விமானத் தளம் மீதான எல்லாளன் நடவடிக்கை: முதல் வான், தரை இருமுனைத் தாக்குதல்



தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் வான், தரைத் தாக்குதல் இது. சிறீலங்கா இராணுவத்தின் வடக்குப் படை நடவடிக்கைகளுக்கான பிரதான பின்தளமாக விளங்கிய அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீது சிறப்பு தரைக்கரும்புலிகள் அணியும், வான்புலிகளும் இணைந்து நடாத்திய இத் தாக்குதலில் 10 வான்கலங்கள் அழிக்கப்பட்டு, 16 வான்கலங்கள் சேதமாக்கப்பட்டன. 18ற்கு மேற்பட்ட வான்படையினர் கொல்லப்பட்டதோடு, 680 கோடி ரூபாய்களுக்கு மேல் பொருளாதார இழப்பு ஏற்பட்டு சிறீலங்கா படைத்துறைக்குப் பேரதிர்ச்சியையும், பேரழிவையும் ஏற்படுத்தியது.

இவ் வெற்றிகரத் தாக்குதலில் 21 சிறப்பு கரும்புலிகள்: லெப். கேணல் இளங்கோ (இராசதுரை பகீரதன், மீசாலை மேற்கு, சாவகச்சேரி), லெப்.கேணல் வீமன் (கோபாலபிள்ளை பிரதீபன், 5ஆம் வட்டாரம், சோலை, திரியாய், திருகோணமலை), மேஜர் மதிவதனன் (5ஆம் வட்டாரம், வேலணை-யாழ்.), மேஜர் சுபன் (கதிரவன் ஜீவகாந்தன், யாழ்ப்பாணம்), மேஜர் கனிக்கீதன் (இராசன் கந்தசாமி, மட்டு), மேஜர் இளம்புலி (துரைரத்தினம் கலைராஜ், யாழ்ப்பாணம்), மேஜர் காவலன் (சண்முகம் சத்தியன், 4ஆம் கட்டை, பூநகரி, கிளிநொச்சி), மேஜர் எழிலின்பன் (விமலநாதன் பிரபாகரன், யாழ்ப்பாணம்), கப்டன் தர்மினி / திருமகள் (கணேஸ் நிர்மலா, 3ஆம் வாய்க்கால், கிளிநொச்சி), கப்டன் புரட்சி (செல்வராசா தனுசன், யாழ்ப்பாணம்), கப்டன் கருவேந்தன் (மயில்வாகனம் சதீஸ்குமார், வட்டக்கச்சி, கிளிநொச்சி), கப்டன் புகழ்மணி (தர்மலிங்கம் புவனேஸ்வரன், யாழ்ப்பாணம்), கப்டன் புலிமன்னன் (கணபதி நந்தகுமார், யாழ்ப்பாணம்), கப்டன் அன்புக்கதிர் (வில்சன் திலீப்குமார், பெரியசாலம்பன், ஒட்டுசுட்டான்,முல்லைத்தீவு), கப்டன் சுபேசன் (நாகராசா மகாராஜ், முருங்கன் மன்னார்), கப்டன் செந்தூரன் (கணேசநாதன் தினேஸ், யாழ்ப்பாணம்), கப்டன் பஞ்சீலன் (சிவானந்தன் கஜேந்திரன், மட்டக்களப்பு), கப்டன் ஈழப்பிரியா (கந்தையா கீதாஞ்சலி, யாழ்ப்பாணம்), கப்டன் அருள்மலர் (சேவியர் உதயா, யாழ்ப்பாணம்), கப்டன் ஈழத்தேவன் (துங்கராசா மோசிகரன், யாழ்ப்பாணம்), லெப். அருணன் (பத்மநாதன் திவாகரன், யாழ்ப்பாணம்) ஆகிய கரும்புலி மாவீரர்கள் வீரச்சாவடைத்தழுவிக்கொண்டனர்.

**புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்கள் நான் பாராட்டுகின்றேன்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**




கரும்புலி
லெப் கேணல் இளங்கோ


கரும்புலி
லெப் கேணல் விமன்


கரும்புலி
மேஜர் மதிவதனன்


கரும்புலி
மேஜர் சுபன்


கரும்புலி
மேஜர் இளம்புலி


கரும்புலி
மேஜர் கனிக்கீதன்


கரும்புலி
மேஜர் காவலன்


கரும்புலி
மேஜர் எழிலின்பன்


கரும்புலி
கப்டன் அன்புக்கதிர்


கரும்புலி
கப்டன் அறிவுமலர்


கரும்புலி
கப்டன் ஈழப்பிரியா


கரும்புலி
கப்டன் ஈழத்தேவன்


கரும்புலி
கப்டன் கருவேந்தன்


கரும்புலி
கப்டன் புகழ்மணி


கரும்புலி
கப்டன் புலிமன்னனன்


கரும்புலி
கப்டன் செந்தூரன்


கரும்புலி
கப்டன் சுபேசன்


கரும்புலி
கப்டன் திருமகள்


கரும்புலி
கப்டன் பஞ்சீலன்


கரும்புலி
கப்டன் புரட்சி


கரும்புலி
லெப். அருண்

## லெப். கேணல் அன்பரசன் அவர்களின் 18ஆம் ஆண்டு வீரவணக்கம்



மணலாறு மவாட்டப் பகுதியில் 13.10.2008 அன்று சிறீலங்கா படையினருடனான நேரடி மோதலில் வீரச் சாவைத் தழுவிக்கொண்ட பெல். கேணல் அன்பரசன் (சின்னத்துரை விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம்) அவர்களின் 18ஆம் ஆண்டு வீரவணக்கம்.




**எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையில் தொடர்ந்து போராடுவோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-


39ஆம் ஆண்டு
வீரவணக்கம்
கப்டன் கரன்
கப்டன் பழனி
கப்டன் நளன்
கப்டன் ரகு
மேஜர் அப்துல்லா
கப்டன் மிரேஸ்
லெப். தவக்குமார்
லெப். அன்பழகன்
2ஆம் லெப். றெஜினோல்ட்
2ஆம் லெப். ஆனந்தகுமார்
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
ராஜீவ் காந்தியின் நம்பிக்கைத் துரோகத்தால்
பலியான தமிழீழக் காவல் தெய்வங்கள்
இந்திய – சிறீலங்கா அரசுகளின் கூட்டுச்சதியினை முறியடிக்க புறப்பட்ட தளபதிகளை
சிறீலங்கா சிங்கள கடற்படை கைது செய்து யாழ். பலாலி படைத்தளத்தில் தடுத்து
வைக்கப்பட்டபோது 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத்
தழுவிக் கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன்
உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 39ஆம் ஆண்டு வீரவணக்கம்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்